வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

அவர்கள் இயற்றிய

நூற்றொகுதி



இரண்டாம் பகுதி

4

நாடகவியல்

பொருளடக்கம்

௧. உரிமையுரை
௨. முகவுரை
௩. முன்னுரை
௪. நாடகவியல்
1. *பாயிரம்*
2. *பொதுவியல்பு*
3. *சிறப்பியல்பு*
4. *உறுப்பியல்பு*
5. *நடிப்பியல்பு*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உ ரி மை யு ரை

செந்தமிழ்த்தீம் பாலூட்டிச் சீராட்டி நாளுமெமை
விந்தைநலங் கூர மிகவளர்த்த—வெந்த
மருமைச் சபாபதிக்கெ மன்பின்குறி யாவிஃ
துரிமை புகுத்துகின்றோ மோர்ந்து.
—நூலாசிரியர்

உரிமையுரை: அஃதாவது ஒருவர் தாஞ் செய்ததோர் நூலைத் தக்க பெரியோர்க்கு உரிமை செய்துவிட்டதாகக் கூறுங்கூற்று. இது வசனமாகவேனுஞ் செய்யுளாகவேனு மிருக்கலாம். முன்னதே பெரும்பான்மே. உரிமை செய்தல், உரிமையாக்கல், உரிமை புகுதல், உரிமைகொள்ளுதல், உரிமையுறுத்தல் என்றுங் கூறுப. இதனை அங்கிதஞ் செய்தல், அர்ப்பணஞ் செய்தல் என்று முரைக்கலாம்; ஆங்கில நூலார் Dedication என்பர்.

உரை:—செம்மை தமிழ் தீம் பால் ஊட்டி - செவ்விய தமிழென்னும் இனிய பாற்கடலைப் புகட்டி, சீராட்டி - சிறப்புச் செய்து, நாளும் - தினந்தோறும், எமை - எம்மை, விந்தை நலம் கூர - விந்தையாகிய நன்மை மிகுதியுமுண்டாக, மிக வளர்த்த - பேரன்புடன் வளர்த்த, எம் தம் அருமை சபாபதிக்கு - எமது அருமை மிக்க சபாபதிப்பெயருடைய ஆசிரியனுக்கு, எம் அன்பின் குறியா - அன்னோன் மாட்டெமக்குள அன்பிற்கு அறிகுறியாக, இஃது - நாடகவியலென்னு மிந்நூலை, ஓர்ந்து உரிமை புகுத்துகின்றோம் - நன்றாக ஆராய்ந்து உரிமையாக்குகின்றோம்.

குறிப்பு:—இச்செய்யுள், தமது தமிழ் நூற் போதகாசிரியராகிய மதுரையம்பதி மகாவித்துவான் சபாபதி முதலியாரவர்கட்கு இந்நூலையுரிமை புகுத்தியதனைத் தெரிவிப்பான் எழுந்தது. தமதாசிரியரை நடராஜப் பெருமானாகத் தொடர்புருவகமாகக் கூறியதற்கேற்பச் செந்தமிழைப் பாற்கடலாகவும் தம்மை உபமன்னியுவாகவும் ஈண்டுக் கூறுமையின் இஃது ஏகதேசவுருவகவணியாம். வியாக்கிரபாதர் தம் புதல்வராகிய உபமன்னியு முனிவர் இளங்குழவிப் பருவத்தில், தமது மூதாதையாகிய வசிட்டருடைய ஆச்சிரமத்தில் வளரும்போழ்து காமதேனுவின் இன்சுவைப் பாலையுண்டு வளர்ந்தமையின், பின்னர்த் தமது தாதையார் வதியுந்தில்லை வனஞ் சார்ந்துழி ஆண்டு அப்பால் பெறாமற் பசியாலழ, கூடியார்க்கெளியனும் நடராஜப் பெருமான் மனமிரங்கி பாற்கடலை யுண்ணவளித்த கதையினை யீண்டறிக. பாலுண்டார் நலம் பெறுதல் ஒரு தலையாதலின் 'விந்தை நலங்கூர' என்றார். விந்தை: வித்தையென்பதன் மெலித்தல் விகாரம். இனி, விந்தை வியப்புடைமையுமாம், பாலூட்டி

வளர்த்த நன்றியறிவினை அறிந்ததுடன் நாடகவியலினை நடிக்குந்தொழில் செய்யும் நடராசருக்கே உரிமையாக்குதல் தகவுடைத்தாமென்று ஆராய்ந்துஞ் செய்தமையின் 'ஓர்ந்து' என்றுரைத்தார். இனி, மகற்குத் தாயினிடத்து அன்பு பெருகுமாறுபோலத் தமக்குத் தம்மாசிரியர் மாட்டுப் பெருகிய அன்பினைப் புனைந்துரைத்ததூஉமாம். 'அன்பின்குறி:' இச்சீரில்'ன்' அலகு பெறாமை காண்க, 'வேங்கடவா சத்திருபான் மேற்பத்தியுள்ளசனர், தாங்கடவா நிற்பர் பவசாகரத்தை,' என்றவிடத்தில் 'ர்' அலகு பெறாதவாறுபோல.

* முகவுரை

உலகின்கண்ணுள்ள மக்களனைவர்க்கும் உள்ளத்து உவகை பயப்பன நூல்களேயாம். அவை கேள்விநூலென்றும், காட்சிநூலென்றும், இருதிறத்தனவாம். சிந்தாமணி, கம்பராமாயண மாதிய முற்றிறத்திற்கும், கலாவதி, ரூபாவதி முதலியன பிற்றிறத்திற்கும், உதாரணங்களாம்.

இவ்வாறு பின்னர்க்கூறிய காட்சிநூலாகிய நாடகங்களின் இலக்கணங்களை ஒருசேரத் தொகுத்துக் கூறுதலின் இந்நூல் நாடகவியலென்னும் பெயர்த்தாயிற்று அற்றேல், வடநூலார் ரூபகங்களென்று கூறுவனவற்றையெல்லாம், நீவிர் நாடகமென்றுரைத்தல் எங்ஙனமெனில், கூறுதும். சிலப்பதிகாரவுரை வகுத்த அடியார்க்கு நல்லாரும் வீரசோழியவுரைப் பெருந்தேவனாரும், தண்டியலங்காரவுரைச் சுப்பிரமணிய தேசிகரும், ஏனைய தொல்லை நூலாசிரியரும், வடமொழியாளர் கூறிய வுருவகங்களெல்லாம், நாடகச் சாதியெனக் கூறுபவாதலான், யாம் அவ்வுருவகங்க ளனைத்தையும் நாடகத்தின்பாற்படுத்து, நாடகவியலெனப் பொதுப்படக் கூறுதற்கண், யாதோ ரிழுக்குமின்றாமென விடுக்க. அன்றியும், மேற்கூறிய உருவகங்கள் யாவற்றினும் நாடகமே சிறப்புடைத்தாமாதலானும், நாடகத்தின் இலக்கணங்களுட் சில, ஏனையவுருவகங்களினும் ஓராற்றாற் பயின்று வருதலானுஞ் சிறப்புப்பற்றி நாடகவியலென்றா மெனினுமமையும். இஃதிவ்வாறாக, நாடகத்தோற்ற முதலாயின பற்றிச் சில கூறப்புகுவாம்.

நாடகத்தோற்றம்:—உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளியிட்டுரைக்க வேண்டுமென்னு மவாவை மனிதரியல்பினின்றும் வேறுபடுத்தல் இயலாது. ஆகவே மனிதர் தமது எண்ணங்களையும் மனோவிகாரங்களையும் அவிநயங்களானுஞ் சொற்களானும் அல்லது அவையிரண்டானும் வெளிப் படுத்துகின்றனர்; இவ்வெளிப்பாட்டு முறைகளை ஆடல் பாடல்களுக்குத் தக்கவாறு இயைத்தும் வேறுபடுத்துங் கோடனெறியைப் பிற மக்கள் குழூஉவினின்றும் பற்பல அமையங்களினும் பயின்று அறிகின்றனர். குழவிப் பருவந் தொட்டுப் பிறர்செய்வன தாமுஞ்செய்தல் மனிதருக்கு இயற்கையாகவே அமைந்துளது; இவ்வமைதியினான் மாந்தரனைவரும் மகிழ்ச்சியடைதலியல்பே. பிறர்போல் நடிக்குமிடத்து அவிநயமுந்

* இது மிகவும் விசேஷமாகக் கூறப்பட்டுளது. இதன் கண்ணே நூலாசிரியர் தாம் ஆராய்ச்சிசெய்துள பல்வகைய இரகசியங்களையும் எடுத்துரைத்திருக்கின்றனர். அவ்வயனைத்தும் படித்து அறிந்துகொண்டு இன்புறத்தக்கன. இம் முகவுரையின் நடை தெளிவாயிருத்தலால் அதிலே ஆங்காங்குக் காணக்கூடிய சிற்சில திரிசொற்களுக்குமட்டிற் பொருளெழுதுதல் அத்துணைச் சிறப்பிற்றன்றென்று விடுத்தனம்.

நாளுமே மக்களாயினோர் யாவர்க்கும் பொதுக்கருவிகளாம்; பெரும்பாலும் உடைபணிகளின் உதவிகளும் இளஞ்சிறார்க்கே யன்றி மக்கள் குழாத்தின் இளமைப் பருவத்தும் இயல்வனவாம். ஆதலான் உளரும் இலருமாம் பாத்திரங்களை மேற்கொண்டாடலே நாடகத் தோற்றத்தின் முதற்படியாம்; எனினும் அது பிறிதொரு மேற்படிக்குத் துணையாகுமட்டில் உதவுமன்றி வேறன்று; அன்றியும் அவிநயச் சால்பு நிகழுங்காலும் அது நாடக நிலையை யெய்திற்றிலதென்க. மனிதர் தம்மைப்போன்ற மற்ற மனிதர்களுந் தாம் உண்மைப் பொருளென நினைத்து அப்பொருள் பேராற்றலும் உடைத்தென நம்புங் கடவுள் அல்லது கடவுளருமாகிய இவர்கட்கே அவிநயம் உரித்தெனக் கூறுப. அஃது ஏனையோரெவர்க்கும் இலக்கண வகையானன்றி நேரே உரியதெனச் சொல்லப்படுவதில்லை. அந்தகை யவிநயம் மனத்தின்கண் வேட்கை நிகழ்ச்சியினையும் தன் காரியம் முற்றினும் முற்றாதொழியினும் அவ்வேட்கையின் உறுதிப்பாடு வேட்டதற்குரிய செயல்களைச் செய்தே தீருமென்பதனையுங் குறிப்பிக்கின்றது; இது காரணத்தினின்றுங் காரியத்திற்கு ஏகுமாற்றை விளக்குதல் காண்க. ஆதலான் அவிநயம் மனிதருக்குரிய வேட்கையானாதல் கடவுட்குரிய விருப்பினானாதல் வெளிப்பட்டியலுவதாக மனிதர் மனத்திற்படுதல் வேண்டும். ·ஒரு பொருட் செய்கை போற் செய்யப்படும் பிறிதொரு செய்கையும் உண்மைவழியான் நோக்குமிடத்து ஒருவகை நாடகமேயாம்; ஆனால் உலகத்தின்கணுள்ள சாதியாரனைவரும் ஒருங்கே இந்நிலையை எய்தினாரல்லர்.

நாடகக்கலை:—இந்நிலை யெய்திய பின்னர் அன்னணந் தோன்றிய நாடகம் கலைநலத்தால் ஒழுங்குறல் வேண்டுவதொன்றே எஞ்சி நிற்கின்றது. ஆகவே இன்னணம் ஒழுங்குறப் புகுந்தநாடகம் அக்கலையின் ஒரு பிரிவாகி ஓங்குகின்றது. இவ்வாறோங்கிய பின்னரே நாம் நாடகக்கலை யென்பதைப் பற்றிப் பேசலாகும். ஆனால் இக்கலையைச் சில சாதியாரே யடைந்திருக்கின்றனர். [இவர்களுள் நந்தமிழரும் ஒருவரென்னலாம்.] ஆயினும் ஒரு சாதியார் நாடகக் கலையென்பதின்றி நாடகமட்டிலே உடையராயிருத்தலுங் கூடும். சிலர் நாடகக்கலையிற் பயில்வதை விடுத்த பின்னரும் நாடகத்தின் மட்டும் பயின்று கொண்டிருத்தலும் இயலும். இவ்வாறன்றி ஒரு தேசத்தாரது நாடகம் ஒருவகைக் கலையாக வரைந்து கொள்ளப்படுவதற்கு முன்னும் பின்னும் அன்னார் அந்நாடகத்தின் இடையீடுகளான இசை, கூத்து, அணியென்னும் உபகரணங்களுள் ஒன்றும் பலவும் மற்றையவற்றினும் மிகும்படி விடுதலுமுண்டு; அது காரணமாய் இறுதியிற் புதியனவும் அன்றி வழக்காறற்றுப் போயினவுமாகிய நாடகவினங்கள் தலைப்பட்டுக் கிளைத்தலும் இயல்பே. ஆனாற் கலைகளுள் ஒன்றெனக் கருதுழி, நாடகம் தன் பாவனை வழிகளிற் பேச்சையும் ஒருறுப்பாகக் கொண்டுளது. அன்றியும் நாமுணர்ந்த பிறபாஷைச் சரித்திரங்களினும் உற்றுநோக்குழி இயற்றொடர்நிலைச் செய்யுட்

களும் இசைத் தொடர்நிலைச் செய்யுட்களுமாகிய பாமுறைகளின் தொடக்கங்கள் ஒருங்கேனுந் தனித்தேனும் நாடகக்கலையின் தொடக்கங்களுக்கு முன்னரேயிருந்துள வென்பது மலையிலக்கே. இவ்விரண்டுஞ் சேர்ந்துழியே நாடகமானது நாகரிகமுள்ள நாடுகளனைத்தினுங் கலைகளுளொன்றெனக் கருதத் தக்கவாறு தோன்றி வளர்கின்றது. [இம்முறைக்கு இணங்கியே நந்தம் தமிழ்மொழியின்கண்ணும் இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத் தமிழிற்கு முற்படுவனவாயின; அன்றியும் மேற்கூறியவாற்றான் இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடிய வழியே நாடகத்தமிழ் பிறந்ததென்பதூஉம் பெற்றாம். இது பற்றியன்றே தமிழ் மொழியை இயலிசை நாடகமென முப்பகுதியாக்கி முறைப்படுத்தோதியதூஉமென்க.]

நாடகக்கலை அவிநயக்கலைகளினியைபு:—நாடகத்தைநடித்துக் காட்டுதல் அதனை இயற்றுவோர்க்கு இன்றியமையாத துணைக்கருவியாகும். இஃதொழிந்த மற்றையவற்றின் உதவி அற்றன்று, இங்ஙனம் நாடகக்கலையும் அவிநயக்கலையுமாகிய இவ்விரண்டும் உண்மையிற் பிரிபடுவனவல்லவேனும் நாடகக்கலையின் இயக்கமும் அவிநயக்கலையின் இயக்கமும் எல்லாக்காலத்தும் ஒருவழிப்படுவனவல்ல. நாடகப்புலவனது தொழில்களுட் சிலவற்றைச் சிற்சில வேளைகளில் தானே செய்துமுடிக்க நேரினும் நடிப்போன் நாடகப் புலவன் கருத்தை அவ்வவ் வேளையில் விளக்கிக் காட்டுவோனே ஆகின்றான். இவ்வாறே நாடகப்புலவனும் நடிப்போனது விளக்கத்தை நூனெறிப்படி வேண்டுவோனெனினும் வழக்கத்தில் வேண்டாதவனாகலாம். ஆயினும் இங்ஙனம் நடித்தற்கருத்தின்றி வரையப்பட்டுள நூல்கட்கு 'நாடகநூல்' என ஒரோவழிப் பெயர்வழங்குவ துண்டெனினும் உள்ளவாறே நோக்குமிடத்து அவை நடிக்கப்படினன்றி அப்பெயரின ஆகாவாதலின் அஃது உண்மையிற் பொருத்தமில் பெயரேயாம்.

நாடகவிதிமுறை:—நாடகவிதிமுறையனைத்தும் முடிவு பெற எழுதப்படுமேயாயின் அவை அக்கலையினுக்கு உரிய பயன்களைக் கூறுவதுடனே அவற்றை அஃதடைதல் இவ்வாற்றான் இயலுமென்பதையுந் தெரிக்கும். ஆயினும் வடமொழி யொழிந்த பிறபாஷைகளில் நாடகம் காட்டினவுங் காட்டக் கூடியனவுமான வழிகளை நாடகவிதி வகுத்தபெரும் புலவர்கள் யாரும் முற்றவிளக்கினாரல்லர். நந்தமிழ் மொழியிலோ நாடகத் தமிழிலக்கணங்களெல்லாம் இறந்தனவாதலின் ஒன்றுஞ் சொல்லல் இயலாது. இது நிற்க, நாடக விதிமுறையைப் பயனுடைத்தாமாறு செய்தற்கு நாடகப்புலவன்மாட்டுப் படைத்துரையாற்றல் அமைந்து கிடக்கினன்றி நாடகவிலக்கணங் கற்ற வளவில் எற்றை ஞான்றினும் நின்று நிலவத்தக்க பயனுடையதோர் நாடகமெதுவும் எக்காலத்தும் உண்டாதலில்லையென்பது அங்கையின் நெல்லியங்கனியே. இனி ஒவ்வொரு நாடகமும் முடிவு பெற்ற செயல் ஒன்றனது இன்றியமையாத பகுதிகளின் முறைகள் பலவற்றையும் அதற்

கேற்ப அடைவே காட்டல் வேண்டும். அஃதாவது, இம்முடிபு முறை நாடக
மியற்றும் வகை அனைத்தினுக்கும் ஆதாரமாயுளதென்பதாம்.

அவிநயக்கலை:—அவிநயக்கலை யென்பது தனிக்கலையாகாது நாடகக்
கலையைச் சார்ந்துளதாம்; மேலும் அஃது உயர்நிலையுற்றுழியும் அற்றேயாம்;
எனினும் அதனைத் தக்கவாவழங்கலின்கண் ஒருவகைப் படைத்தியல் வன்மை
உளதென்றலில் ஐயப்பாடு எட்டுணையுமில்லை. நாடகத்தின்கண் ஒரு பாத்திர
வமைதி, நடிப்போன் செயல்களுக்குட்படாத சிலமுற்படு முறைகளால்
வரைந்து சுட்டப்படுகின்றது; அதனைப் புதுமை வாய்ந்ததோர் தனிக்கலை
யென்றல் பிறிதினியைபு பொருளிற் பொருந்துவதாமேயன்றி வேறன்று.
நடிப்போனை அவன்றன் படிப்பும் நினைப்பும் அநுபவத்துடனும் இயற்கை
யினுண்டாய் அநுபவத்தான் வளர்வதுமாகிய அறிவுடனுங் கலந்து நாடகப்
புலவன் தந்தனவற்றை விளக்கவும் பிணைக்கவும் கூட்டிமுடிக்கவும் வல்லனாக்
குகின்றன. ஆயின் தானுளங்கொண்ட அமைதிவன்மையினால் நடிப்போன்
பாத்திரமாக மாறுகின்றான்; அங்ஙனம் மாறுதற்கண் நடிப்போனது தொழில்
உண்மையிற் படைத்தியல்வன்மை வாய்ந்ததே, நடிப்போன் தன்றொழிலுக்கே
உரிய நெறிகளால் தான் மேற்கொண்ட பாத்திரமே ஆகின்றானாதலினென்க.
தான் நடிக்கும் பாத்திரத்திற்கு இன்றியமையாதன வென்றறிந்த அவிநயங்
களை அடிப்படையாக்கி நடிப்பதனால் அதற்குத்தானளிக்கும் விளக்கமும்,
அவ்வடிப்படையும் அதன் விரிவுகளும் வேறுபடாதவாறு இயைத்துக்
காட்டும் ஒருமைப்பாடும், அபிநயமுறைக்கும் நடிக்கப்புகுந்த பாத்திரத்தின்
செயலுக்கும் ஏற்ப ஒரு நெறிப்படத் தெரிக்குந் தகுதியும் ஆகிய இன்னோ
ரன்னவையெல்லாம் நாடகப் புலவன் புனைந்து தந்தனவற்றின் அடியாக
எழூஉம் எண்ணத்தினால் தோற்றுவனவேனும் நடிப்போனாலேயே இயல்வன
வாம்.

நாடகத்தமிழ்:—தமிழ்நாடகம் முதலிலுண்டானது மதவிடயமாகவே
என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல்
பாடல்க ளிரண்டையுஞ் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில
காலத்தின் பின்னர்க்கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின;
அதன்மேல் முதலிற் பாடலாயுள்ள சம்பாஷணைகளும் பின்னர் வசனமா
யுள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற்பாடு நாடகத்
தமிழ் வேத்தியல் பொதுவியல் என்ற இருபிரிவினதாகி அரசர்களானும்
ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. கி. மு. மூன்று நூற்றாண்டி
னாதல் அல்லாக்கால் அதனினுஞ்சற்று முற்காலத்தினாதல் நாடகத்தமிழ்
உயர்நிலை உற்றிருத்தல்வேண்டும், நாமுணர்ந்துள பழமையான நாடகத்தமிழ்
நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவினவாதலினென்க. ஆகவே
அது குற்றங்குறைவு இல்லாது உண்டானதொரு தொழிலென்றே ஆதியின்
மதிக்கப்பட்டது. இனி நாடகத்தமிழ் உயர்நிலை, வீழ்நிலை, அழிநிலை என்று

மூவகை நிலையும் அடைந்து உருக்குலைந்துபோன பின்னரே யாம் அதனைக் கண்ணுறுகின்றனம்.

"இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார்ச் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல்நடு இறுதிகாணாமையின் அவையும் இறந்தனபோலும்" என்று சிலப்பதிகாரத்திற்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லாரே கூறுதலின் அந்நூல்களைப் பற்றிய முயற்சிகளை அறவே ஒழித்துவிடலாம்.

பின்னர் அடியார்க்கு நல்லார், "இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல்வோன் திலோத்தமை யென்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத் தோன்றினமையிற் சார குமாரன் என, அப்பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும், பாரசவ முனிவருள் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கம் இரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூலுமென ஐந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களல்லவேனும் ஒருபுடை யொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க," என்றுகூறிப் புகுதலின் அவர் காலத்து வழங்குவனவாயிருந்த இந்நூல்கள் காரணமாகப் பெரிதும் முயன்றக்கால் ஒருவேளை மிக்க பயன் விளையினும் விளையலாம் என்பது தோன்றுகின்றது. மேலும் தாளவகையோத்து என்னும் இசைத்தமிழ் நூலும் கூத்தநூல், நூல் என்னும் நாடகத் தமிழ் நூல்களுமாகிய இவையிற்றினைப் பற்றிய வரலாறுகளுள் ஒன்றும் புலப்படவில்லை.

இனி, நாட்டிய நூலானது தேவர்களாயினார்க்குக் களிப்பு விளைத்தற் பொருட்டு, நான்முகக் கடவுளாற் படைக்கப்பட்டதென்று பரத முனிவர் கூறுகின்றனர். அதன் வரலாறு:—ஒருகால் தேவர்கள் புடைசூழ வீற்றிருந்த இந்திரன் பங்கயக் கடவுளை வேண்டி, 'காட்சிக்கு இனிதாயும் கேள்விக்கு அமுதாயும் உள்ளதோர் ஆட்டம் பொழுதுபோக்கின் நிமித்தம் படைத்து எம்போலியருக்கு ஈந்தருளுவீர்' என்று கேட்டவளவில், அம் மலர்மிசைத் தேவன், நாட்டிய வேதமென்னும் ஒரு புதுமறை படைத்து அதற்குறுப்புக்களாக, இருக்கினின்றும் பாட்டியங் (உரை) களையும், சாமத்

தினின்றுங் கீதங் (இசையுருக்) கலையும், யசுவினின்றும் அவிநயங்களை யும், அதருவணத்தினின்றுஞ் சுவைகளையும் எடுத்து அமைத்தனன். இதற்கு முன்னுறுப்பாக நாந்தியை (பாயிரத்தை)யுஞ் சேர்த்தனன். இங்ஙனஞ் சேர்த்துச் செய்யப்பட்ட நாட்டியவேதத்தினை, இந்திரனாதியோர்க்கு வாணி காதலன் ஈந்தவளவிற், கடவுளரனைவருங் கழிபெருங் களியாட்டயர்ந்தனர். அப்போழ்தத்து, இந்திரவிழா வெடுக்குங்காலம் போந்தது. அவ்விழாவைச் சிறப்பிக்கும் நிமித்தம் பரதமுனிவர், பிரமன் வகுத்த நாட்டிய விலக்கணத்திற் கிசைய ஒரு நாட்டியநூல் செய்து, அதனைத் தேவ சபையில் தேவராசன் முன்னர் நடித்துக்காட்டி யரங்கேற்றினர். அது கண்ட புத்தேளிரெல்லாம், மிகப்பேருவகை பூத்தனர்.

இங்ஙனம், நடித்துக் காட்டப்பெற்றுத் தேவர்களுடைய அங்கீகார மும் அடைந்த சமுத்திர மதனம் என்னும் அந்நாட்டிய நூலைச் சிவபெரு மான் முன்னரும், நடித்துக்காட்ட விரும்பிக் கைலைக்குச் சென்று, அங்ங னமே செய்தனர். அதுகண்ட கண்ணுதலார், அவ்வாறு தேவர்கள் நடித்தற் கண் புரைபல நிகழ்ந்தமை யறிந்து, உமையிருந்த நந்தியங் கடவுளை விளித் துப் பரதமுனிவர்க்கு நாட்டிய சாத்திரத்தை விளக்கி அறிவுறுத்தும்படி ஏவினர். அங்ஙனம் நந்திதேவரால் தெருட்டப்பட்ட பரதமுனிவர் திரிபுர தாகம் என்னும் நூலொன்று புனைந்து சிவபெருமான் முன்னர் நடித்துக் காட்டி அவரைக் களிப்பித்தனர். முதலிற்செய்த சமுத்திர மதனமென்பது நாடகச்சாதியுட் சமவகாரமும், பின்னர்ச் செய்தது இடிமமுமாம். எனவே, இவ்விரண்டு சாதியுமே முதன்முதலில் ஏற்பட்டனவாமாறு காண்க. அதன் பின்னர் ஈகாமிருக சாதியும் வியாயோக சாதியும், வகுக்கப்பட்டன. இவற் றின் பின்னர், வீதி, அங்கம், பிரகசனம் பாணம், என்னுஞ் சாதிகள் தோன் றின. இவற்றிற்கும் பின்னர் முடிந்த இலக்கணமுடைய நாடகமும் பிர கரணமுந் தோன்றின. இவை மட்டிலே தச ரூபகம் என்னும் பெயரிய தனஞ்சயகவி செய்த நூலிலே கூறப்பட்டன. உபசாதிகளைப் பற்றி முதன் முதல், அக்கினிபுராணத்தில் ஙஙஅ-ஆம் அத்தியாயத்திற் காண்கின்றும். பின்னர் விசுவநாதகவி மிகவும் விரித்து எழுதிய சாகித்திய தருப்பணத்தில் இவை யனைத்தும் நன்கு காட்டப்பட்டன.

இதுநிற்க. இந்நூல் யாத்தற்கண் எமக்குப் பேருதவியாயிருந்த தமிழ் நூல்களும் வட நூல்களும் பின் வருவனவேயாம்.

தமிழ்நூல்கள்:—

க. தொல்காப்பியப் பொருளதிகார நச்சினர்க்கினியம்
உ. சிலப்பதிகார வரும்பதவுரை
ஙு. சிலப்பதிகார வடியார்க்குநல்லாருரை
ச. வீரசோழியப் பெருந்தேவனுருரை
ரு. சுத்தாநந்தப் பிரகாசம்

௬. அரபத்தகாவலர் பரதசாத்திரம்

௭. தண்டியலங்காரவுரை

௮. இலக்கண விளக்கவுரை

முதலியனவாம்.

வடநூல்கள்:—

௧. அக்கினிபுராணம்

௨. இரசகங்காதரம்

௩. இரசமஞ்சரி

௪. இரசதரங்கிணி

௫. காவியாதரிசம்

௬. சாகித்தியதருப்பணம்

௭. சாகித்தியரத்நாகரம்

௮. தசரூபகம்

௯. தொனி

௧௦. பரதமுனிவர் நாட்டியசரித்திரம்

௧௧. பிரதாபருத்திரயசோபூடணம்

௧௨. உலோசனம்

என்பனவும் பிறவுமாம்.

ஈண்டுக்கூறிய வடநூல்களை யாம் படித்தறிதற்குப் பேருதவிபுரிந் தார் எமது கலாசாலை வடமொழித் தலைமைப் புலவர் பிரமஸ்ரீ வேதம் - வேங்கடராய சாஸ்திரியாரவர்களும், சென்னை உயர்நீதிசாலை நியாயவக்தாக் களுள் ஒருவரும் எமது நண்பருமாகிய பிரமஸ்ரீ த. ச. நாராயண சாஸ்திரி யாரவர்களுமாவர். அவர்கள் செய்த நன்றியை யாம் ஒரு பொழுதும் மறக்கற்பாலெமல்லேம்.

இனி ஆங்கில மொழியின்கண்ணே யாம் பார்த்துக் குறித்து மேற் கொண்ட நூல்கள் பல. அவற்றின் பெயர் முறையை எடுத்துக் கூறப்புகு மிடத்து விரிந்து பெருகுமென்று எண்ணி அங்ஙனஞ் செய்யாது விடுத்தனம்.

இந்நூலானது 1897 - ஆம் வருடத் தொடக்கத்தில் முதன் முதல் அச்சிட்டு வெளிப்போந்தது. அஃது எம்மை யடுத்துத் தமிழ்க்கலை பயிலுநரா உம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத்தமிழும் அறிவுறுத்தல்கருதி ஒருவாறு எழுதி வெளியிடப்பட்டது. அப்பதிப்புப் பிரதிகளனைத்தும் பெரும்பாலும் தமிழ்ப் புலவர்கட்கும், தமிழபிமானிகட்கும், தமிழ் மாணாக்கருக்கும், பிறர்க் கும் அன்னார் கருத்துக்கள் இவையென அறிந்துகோடற் பொருட்டுச் செலவிடப்பட்டன. அதன்மேல் அவர்களனைவரும் எம்மைத் தூண்டிய தன் நிமித்தம் இதனைச் சின்னாண் முன்னரே உரையொடும் வெளியிட விரும்பிய யாம், இன்னுஞ் சிலவிடயங்களை விரித்தும் விளக்கியுங் காட்டியி

ருத்தலின் நூல் எதிர்பாராத வண்ணம் பெரிதும் விரிந்துளது. ஆகவே உரை யெழுதுதற்கருத்து இப்போழ்தத்தின் அறவே யொழிக்கப்பட்டது. இந் நூலினைப் பயன்படுத்துநர் உரையின் இன்றியமையாமை காண்பரேல் அதனை எமக்கு அறிவிப்பாராக. அங்ஙனம் அன்னார் செய்வரேல் நூற்கு உரை கடிதின் எழுதி வெளிப்படுத்தத் துணிவாம்.

இனி இந்நூல் பற்பல தொழில்கள் புரியுங்கால் இடையிடைக் கிடைத்த அவகாசங்களில் எழுதியாதலிற் பிழைகள் பல மலிந்து கிடத்தலுங் கூடும். அற்றேல் நல்லிசைப் புலவராயினோர் அவையிற்றைத் திருத்தி எம்மீது அருள்புரிவாராக.

'நாடகவியல்' எனத் தலைக்குறியிட்டு ஒரு நூல் செய்வான் புகுந்த இந்நன்முயற்சியின்கண் எம்மை ஊக்கிக் கடை போகுமட்டுந் தோன்றாத் துணையாய் உதவிபுரிந்து நின்ற எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாய நடராசப் பெருமானை மனமொழிமெய்களில் தொழுகின்றனம்.

சார்வரிஸு மார்கழி 13௳
சென்னை.

வி. கோ. சூ.

முன்னுரை

பண்டைக் காலத்தில் இயல் இசை நாடகமென்னும் முப்பகுதித்தாய் விளங்கிய செந்தமிழின்கண் தற்காலத்தில் நாடகத் தமிழின் இலக்கிய இலக்கணங்கள் காணப்பெறாத குறையை நீக்குவான் புகுந்த ஆசிரியர் செந்தமிழிற் சீரிய சில நாடகங் குயிற்றியதேயன்றி முக்கியமான நாடக விலக்கணங்களை யும் ஒரு சேரத் தொகுத்து நாடகவிய லென்னு மிவ்விலக்கண நூலினையு மியற்றித் தமிழுலகிற்கு உபகரித்தருளினர். ஆசிரியர் இந்நூலினை வகுக்குங் கால், உயர்நிலையுற்று விளங்கும் வடமொழி நாடக விலக்கணங்களையும் பழந் தமிழ் நூல்களினும் அவற்றின் உரைகளினும் ஆங்காங்குக் காணக் கிடக்கும் தமிழ் நாடக விலக்கணங்களையும் செகப்பிரியாரதியர் இயற்றிய ஆங்கில நாட கங்களின்கண் அமைந்து கிடக்கும் இலக்கணங்களையும் நுனித்தாராய்ந்து அவற்றின்கண் ஏற்பனவற்றை எடுத்துக்கொண்டு காலதேய வேற்றுமைக் கேற்ப இன்றியமையாத இலக்கணங்களையும் தமது மதிநுட்பத்தாற் கூட்டி முறைப்படுத்திச் செவ்விய திட்ப நுட்பஞ் செறிந்த சூத்திரங்களான் இயற்றி யருளினர். 1897-ம் வருடத் தொடக்கத்தில் முதன்முதல் ஆசிரியர் தம்மாட் டுக் கல்வியயின்ற 'இயற்றமிழ் மாணவர்'க்கு நாடகத்தமிழும் அறிவுறுத்தற் பொருட்டு முக்கியமான சில இலக்கணங்களை மட்டும் தொகுத்துச் சற்றேறக் குறைய எழுபது சூத்திரங்களாக வகுத்து வெளியிட்டனர். பின்னர் இதனை முற்றிலக்கண நூலாக இயற்றக் கருதி மற்றைய நாடக இலக்கணங்களையுஞ் சேர்த்து இருநூற் றெழுபத்திரண்டு சூத்திரங்களாக யாத்து இந்நூலினை 1901ஆ அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

இந்நூலின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த சென்னைச் சருவ கலாசங்கத்துத் திராவிட பாட சபையார் இதன் முதலிரண்டியல்களை 1903ஆ பி. ஏ. பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தினார்கள். ஆசிரியர்பாற் கல்வியயின்ற இயற்றமிழ் மாணவருள் ஒருவனாகிய யான் இந்நூல் முழு வதிற்குமே யோருரை யெழுதி வெளியிட அவாக்கொண்டிருந்தமையின், அதுவே தக்க சமயமென்று பாடமாக ஏற்படுத்தியுள்ள முதலிரண்டு இயல் களுக்கும் மாணவர்களுக்குப் பயன்படுமாறு ஓர் உரை வரைந்து வெளியிட்ட னன். பின்னர்ப் பல காரணங்களான் பின்னிரண்டியல்கட்கும் உரையெழுத வியலவில்லை. ஆசிரியர்தங் குமாரராகிய சிரஞ்சீவி வி. சூ. சுவாமிநாதன் அவர்கள் என்னை யண்மி இந்நூல் முழுமைக்குமே யுரையெழுதி வெளியிடின் நூல் படிப்பவர்க்கு எளிதிற் புலனாமென்று கூறினமையின் யான் பின்னுள்ள இயல்கட்கும் உரையொருவாறு எழுதி முடித்தனன்.

36

ஆசிரியர் தமது நூலினை யச்சிட்டு முடித்த பின்னர் நூலின்கட் செய்ய வேண்டுமென்று கருதியிருந்த சில திருத்தங்களையும் பாட பேதங்களையும் இப்புதுப் பதிப்பில் உரிய இடங்களில் செய்து அவற்றிற்கேற்ப உரையும் வரைந்துள்ளேன். இந்நூல் வகுத்த காலத்து ஆசிரியரோடு உடனுறைந்து அண்மிப் பழகும் பாக்கியம் பெற்றதோடன்றி இந்நூலை யவர் வாயிலாகப் பாடங் கேட்டுளேனுயினும் பல்லாண்டுகட்குப்பின்னர் உரையெழுதப் புகுந்தமையின் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனவொழிய நெஞ்செனுந் துணைவன் நிறுத்தியனகொண்டு உரையினையொருவாறு எழுதிமுடித்தனன். ஆதலின் புரைபலதுன்னியிருத்தலுங் கூடும்; பெரியார் பொறுத்தருள்க.

இந் நாடகவியலுக்கு உரை வரைவான் புகுந்த நன்முயற்சிக்கண் கால இடையீடுபட்டும் ஒன்றிற்கும் பற்றாத சிறியேனையும் ஊக்கிக் கடைபோகும் மட்டும் தோன்றாத் துணையாய் உதவி புரிந்துநின்ற எல்லாம் வல்ல முழுமுதற் பெருமானாகிய நடராஜ மூர்த்தியை மனமொழி மெய்களான் வணங்குகின்றேன்.

23—12—1934
கோயமுத்தூர்

ந. பலராம ஐயர்

திருச்சிற்றம்பலம்

நாடக வியல்

நாடகவியல் என்னுஞ் சொற்றொடர் நாடகத்திற்கு இலக்கணஞ் சொல்லும் நூல் என்னும் பொருளுடையது. இனி நாடகத்தினது இலக்கணத்தைக்கூறும் நூல் என விரித்தலுமாம். முன்னதாயின் நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயராய் நூலுக்காயிற்று. பின்னதாயின் ஆறும்வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்து அவ்வாறாயிற்று. இன்னும் இந்நூலின் பெயர்க்காரணத்தை ஆசிரியர் தமது முகவுரையின் முதற் பக்கத்திலேயே தெளிவுபெற விளக்கி யிருத்தல் காண்க.

* பாயிரம்

வாழ்த்து

"தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையு, மீசனென வேயுளத்து ளெண்," என்று கூறியாங்கு, கடவுள் வாழ்த்துக் கூறுவார் தமது தேசிகர்களாகிய ஞானகுருவையும் தமிழ் வித்தியா குருவையும் உடன் வணங்குவாராயினர். எடுத்துக்கொண்ட நூல் இடையூறு நீங்கி யினிது முடிதற் பொருட்டு முதற்கண் விநாயகரையும், தமிழ்க் கடவுளென்னும் உரிமை பற்றியும் விநாயகர்க் கிளவலென்பது பற்றியும் பின்னர் முருகனையும், அவர் அருள்வழி நிற்கும் வாக்கின் துணைவியாதல்பற்றிப் பின்னர் நாமகளையும், நாடகலக்கணத்திற்கெல்லாம் ஒரு காட்டாகி நிற்கு முரிமைபற்றி நடராஜரையும் ஒரு முறைபற்றி வணங்கினரென்க. அன்றியும் விநாயகரும் முருகரும் முகத்தாற் சிறப்பும், நாமகள் நாவாற் சிறப்பும், நடராஜர் தாளாற் சிறப்பு முடையராய் விளங்குதலின் அம்முறை பற்றியே வணக்கமுறையு மேற்பட்டதென்க.

---

* பாயிரமாவது ஒருவர் தாம் செய்யப்புகுந்த நூலுக்கு முன்னே தாம் கடவுளைவேண்டி வணங்கினமையும், அவையடக்கமும், தாம் செய்யும் நூலாவது இதுவென்பதும், அது செய்தற் காரணமும் முதலாயின கூறுவதாம். இதனைத் தற்சிறப்புப் பாயிரம் என்பதுமுண்டு. "தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு, மெய்த வுரைப்பது தற்சிறப்பாகும்" என்றாராதலி னென்க.

விநாயகர் வணக்கம்

1. பூவளர் கொன்றைப் பொன்முடி விநாயகன்
சேவடித் தாமரை சென்னிசேர்த் திடுவாம்.

பூவளர் கொன்றை - அழகு மேன்மேலும் வளர்கின்ற கொன்றைப்பூ மாலையினைச் சூடிய, பொன்முடி விநாயகன் - பொன்னாலியன்ற கிரீடத்தை யணிந்த விநாயகக் கடவுளுடைய, செம்மை அடி தாமரை - சிவந்த பாததாமரைகளை, சென்னி சேர்த்திடுவாம் - (அணியாகத்) தலையிற் சூடிக் கொள்வாம்.

குறிப்பு: — தெய்வத்தன்மை வாய்ந்த கொன்றையாதலின் ஏனைய மலர்களைப்போல வாடாதென்பதைக் குறிப்பிப்பான், 'பூவளர் கொன்றை' யென்று அடைகொடுத் தோதினர். செந்நிறத்தானும் மென்மைத் தன்மையானும் பாதங்கட்குச் செந்தாமரை யுவமையாயிற்று. சேவடியினைத் தாமரையாக்கியதற்கேற்ப அதனைச் சிரத்திலணிந்தார்; அந்தணர் சூடுவதும் அரவிந்தமாத லுய்த்துணர்க. (க)

முருகக்கடவுள் வணக்கம்

2. கமழுறு வெட்சி கடம்பலர் மிலைந்தமுத்
தமிழ்முதற் குரவன் றாண்மலர் பணிவாம்.

கமழ் உறு வெட்சி கடம்பு அலர் மிலைந்த - (எத்திக்கினும்) மணம் வீசுகின்ற வெட்சி மலரினையுஞ் செங்கடப்பம் பூவினையுஞ் சூடிய, மூன்று தமிழ் முதல் குரவன் - மூவகைத் தமிழினுக்கும் பரமாசிரியனாகிய முருகபிரானை, தாள் மலர்பணிவாம் - பாதகமலங்களிற் பணிந்து வணங்குவாம்.

குறிப்பு:—'கமழுறு' என்பதனைக் கடம்பிற்குங் கூட்டுக, வெட்சி, கடம்பு இரண்டும் முருகபிரானுக்கு மாலையாதலை, "செங்கால் வெட்சிச் சீறிதழிடையிடுபு," "இருள்படப் பொதுளிய பாரரை மராஅத், துருள்பூந் தண்டார் புரளுமார்பினன்" என்னுந் திருமுருகாற்றுப்படை யடிகளானறிக. முத்தமிழ்: இயல், இசை, நாடகம்; இவையிற்றினிலக்கணங்களை நாடகவியலின் முகவுரையானுணர்க. முருகபிரான், அகத்தியன் முதலாயினர்க்கு முத்தமிழாசிரியரா யிருந்தமையானும், உருத்திரசன்மராய் வந்து இறையனாரகப்பொருட்கு உரை தெளித்தமையானும், ஞானசம்பந்தராய்த் தேனினுமினிய தேவாரமீந்து முத்தமிழ்விரகர் என்று பல்லோரானுஞ் சிறப்பித்துக் கொண்டாடப் பெற்றமையானும் அறுமுகக்கடவுள் 'முத்தமிழ் முதற்குரவ'னெனப்பட்டார். "நூல் அறிபுலவ" என்று நக்கீரருரைத்ததூம் இதுபற்றியன்றோ? குரவன்: மேலோன். முத்தமிழினுள் ஒன்றாயநாடகத் தமிழிற்கு மாத்திரம் இலக்கணம் வகுப்பான் புகுந்த ஆசிரியர் 'முத்தமிழ்க் குரவனை' வணங்கிய தெற்றிற்கோ வெனின், இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடியவழியே நாடகத்தமிழ் பிறக்குமென்பதனை யறிவுறுத்தற்கென்க. (உ)

நாமகள் வணக்கம்

3. மாணமர் ஞான வளரெழி னற்கலை
வாணியெ மம்மையை வணக்கஞ் செய்வாம்.

மாண் அமர் - மாட்சிமை பொருந்திய, ஞானம் - ஞானவுருவினளும், எழில் வளர் நன்மைகலை - அழகு வளர்கின்ற நல்ல கலையுருவினளுமாகிய, வாணி - சரஸ்வதியென்னும், எம்அம்மையை வணக்கம் செய்வாம் - எமது தாயை வணங்குவாம்.

குறிப்பு:—இனி 'ஞானம்' என்பதைக் கலையொடுங்கூட்டிப் பொருள் கூறினு மமையும். (௩)

நடராசர் வணக்கம்

4. ஆடக மன்றினு ளாடகக் கூத்தனை
நாடி யுரைக்குது நாடக வியலே.

ஆடகம் மன்றினுள் - கனக சபையில், அகம் நாடு கூத்தனை - சிந்தையால் நாடுதற்குரிய கூத்தினையுடைய நடராஜ மூர்த்தியை, நாடி - மனத்தான் வணங்கி, நாடகவியல் உரைக்குதும் - நாடகவியலினைக் கூறுவாம்.

குறிப்பு:—ஆடகம் : பொன். இனி 'நாடகக்கூத்தனை' யென்பதற்குச் சீவராசிகளனைத்தையும் உலகமாகிய அரங்கின்கண் நடிக்கும்படி செய்கின்ற கூத்தாட்டினையுடைய நடராசப் பெருமானை யென்றும் பொருள் கூறலாம். நாடி : விரும்பி யென்றும் பொருள்படும். ஏகாரம் ஈற்றசை. இனிநாடகக் கூத்தென ஒரு பொருட் பன்மொழியாகக்கொண்டு உரைப்பினும் அமையும். (௪)

ஞானகுரு வணக்கம்

5. முந்தைநற் றவத்தி னெந்தையாய்ப் போந்துபி
னறிவுநூற் புலமை முறைபெற நிகழ்த்தி
யுரையள வமையாப் புரைசா றோற்றத்து
மன்றலங் கழலெம் புன்றலைச் சூட்டிப்
பூவந்த கடவு ளன்ன
கோவிந்த சிவனடி குறிக்கொண் டுய்வாம்.

முந்தை நன்மைதவத்தின் - முற்பிறப்பில் யாஞ் செய்தநல்ல தவத்தின் பயனாய், எந்தையாய் போந்து - எமது தந்தையாய் அவதரித்து, பின் அறிவு நூல் புலமை முறைபெற நிகழ்த்தி - பிறகு ஞான நூல்களின் அறிவினை முறைப்படி நடாத்தி, உரை அளவு அமையா - எத்தகைய சொல்லினாலும் அளவிட்டுரைக்க வொண்ணாத, புரை சால் தோற்றத்து - உயர்வு மிகுந்த தோற்றத்தினை யுடையவரும், மன்றல் அம்கழல் - நறுமணங் கமழும் பாதகமலங்களை, எம் புன்மைதலை சூட்டி - எமது அற்பமாகிய

தலையினுஞ் சூட்டி யலங்கரித்து, பூ வந்த கடவுள் அன்ன - தாமரைப் பூவின்கட் டோன்றிய நான்முகக்கடவுளை யொத்தவருமாகிய, கோவிந்த சிவன் அடி குறி கொண்டு உய்வாம்-கோவிந்த சிவனாரது அடிகளைச் சிந்தித்து நற்கதியடைவோம்.

குறிப்பு:—"புரையே யுயர்வு" என்பதை யீண்டறிக. கழல்; தானியாகு பெயராய்ப் பாதங்களை யுணர்த்தி நின்றது. பூ வந்த கடவுள்: நாரணன் றன் நாபிக்கமலத்துதித்தமையிற் பிரமனுக்கு இப்பெயர் போந்தது; நான்கு வேதங்களிலும் நஞ்சிவனார் வல்லுநரென்பதை யிவ்வுவமையால் தெரித்தார். இது நேரிசையாசிரியப்பா வாதலின் ஈற்றயலடி முச்சீர்கொண்டது. (ரு)

தமிழ்வித்தியாதாநு வணக்கம்

6. மதுரைமா நகரிற் புதுமையிற் றோன்றி
மாவித்து வானெனப் பாவித் துலகம்
புகழ்ந்து போற்றத் திகழ்ந்து விளங்கிச்
சதுரப் பாடுறு தமிழ்க்கட லாகிய
பீடுசால் சபாபதிப் பெரியனை வாழ்த்தி
நாடக வியலினை நனியியம் புதுமே.

மதுரை மா நகரில்—, புதுமையின் தோன்றி - யாவரும்வியக்குமாறு வந்துசேர்ந்து, உலகம் மா வித்துவான் எனபாவித்து புகழ்ந்து போற்ற-மகா வித்துவானென்று மேலோர்கருதித்துதித்து வணங்காநிற்க, திகழ்ந்து விளங்கி-மிக்க விளக்கத்தை யடைந்து, சதுரப்பாடு உறு தமிழ் கடல் ஆகிய -வன்மை நனிவிளங்குஞ் செந்தமிழ்க் கடலினை யொத்த, பீடுசால் சபாபதி பெரியனை - பெருமை மிகுந்த சபாபதியென்னும் பெயரினையுடைய பெரியோனை, வாழ்த்தி—, நாடகவியலினை நனி இயம்புதும் - நாடகவியலினை இடையூறின்றி இனிது கூறி முடிப்பாம்.

குறிப்பு:—'உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே' யாதலின் மேலோர் எனப்பொருள் கூறினும். ஏகாரம்; ஈற்றசை. நமது நூலாசிரியர்க்குத் தமிழ் நூற் போதகாசிரியராகிய இப்புலவர்பிரான் பல நூல்கள் இயற்றி யிருக்கின்றனர். அவை, திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரை மாலை திருப்பரங்குன்றத் தியமகவந்தாதி முதலியனவாம். இவர் ஆங்கிலமும் வடமொழியு மொருங்குணர்ந்தவர்; 1898-ஆம்ஆண்டு காலஞ் சென்றனர். (சு)

அவையடக்கம்

7. கலைஞர் நிரம்பிய கற்பகச் சோலைபுக்
கலைவது மெவனோ வளிய நெஞ்சமே
கருணை மலர்ந்தெமைக் காத்த லவர்கடன்.

அளிய நெஞ்சமே - எளிய நெஞ்சமே, கலைஞர் நிரம்பிய - வித்துவான்களாகிய தருக்கள் நிறைந்த, கற்பகம் சோலைபுக்கு - கற்பகச் சோலையுட் புகுந்

தும், அலைவதும் எவனோ - அலைதலும் யாது காரணத்தாலோ? (அலைய வேண்டாம், ஏனென்றால்), கருணை மலர்ந்து - கருணை கூர்ந்து, எமை காத்தல் அவர் கடன் - எம்மைக்காத்து அருள் செய்தல்அவர்தமது கடமையாமாதலின்.

குறிப்பு:—கலைஞர்; ஞ் - பெயரிடைநிலை. புலவர்சபையினைக் கற்பகக் காவாகவும் கருணையை மலராகவு முருவகித்ததற்கேற்பக் கலைஞரைக் கற்பகத் தருக்களெனக் கொள்க. அளிய நெஞ்சம்: ஈண்டு நெஞ்சினை வண்டின் றன்மையுடையதாகக் குறிப்பித்த உள்ளுறை நயத்தினை யுய்த்துணர்க; அளி: வண்டு. பொன்மலர் பூக்குங் கற்பகக்காவினில் வண்டுகள் தேனினை நாடலடாதெனின், இவைகள் அத்தருவினைக்கேட்ட மாத்திரையிற் றேனினைத்தந்துதவுமாதலின் உவமை பொருத்தமுள்ளுவமை யென்பதை நன்னரறிக. இது பற்றியன்றே 'காத்தலவர்கடன்' என்றும் பின்னர் வலியுறுத்துக் கூறினர். கற்பகம்: மந்தாரம், பாரிஜாதம், சந்தனம்,அரிசந்தனம், கற்பகம் என்னு மைவகைத் தேவ தருக்களையுமுணர்த்திற்றெனக் கொள்க. இனிச்சைநர் கூறும்வண்ணம் பத்துவகைக் கற்பகமெனினுமமையும். பத்துவகைக் கற்பகங்களாவன: (க) மத்தியாங்கம் (உ) தூரியாங்கம் (ங) பூஷணாங்கம் (ச) மாலியாங்கம் (ரு) தீபாங்கம் (சு) கிருகாங்கம் (எ) சோதிரங்கம் (அ) போசனாங்கம் (கூ) பாசனாங்கம்(க0)வஸ்திராங்கம் என்பனவாம். இவை முறையே திவ்யசாரமாகிய நானாவித பானங்களையும், பலவித வாத்தியங்களையும், அநேகவித ஆபரணங்களையும், பல்விதமாலைகளையும், பற்பலவிதமான இரத்தின தீபங்களையும் பிரஸாத மண்டபாதிகளையும், மதியிரவியினொளியையு மாய்க்கும் ஒளியினையும், பல வேறு வகைச் சுவையினவாகிய நால்வகை யுணவினையும், வேண்டிய கலங்களையும், விசித்திர வஸ்திரங்களையுங் கொடுக்கும் என்று சைநர்கூறுப. இதனைச் சீபுராணத்தானறிக. (எ)

இந்நூலியற்றற்காரணம்

8. ஆதியி னியன்ற வருந்தமிழ்க் கலையு
ணாடகத் தமிழி னல்லிலக் கணம்பல
காணப் பெறுமை கருத்தினிற் றேறி
யிந்நா ணிலைமைக் கேற்ப வடநூற்
பாற்படு மியல்பினு மேற்புலப் புலவோர்
கூறு மியல்பினுங் கொள்ளற் பாலன
கொண்டுரைத் தாமிதைக் கொள்ளுப பெரியோர்.

ஆதியின் இயன்ற - முற்காலத்து வழங்கிய, அருமை தமிழ் கலையுள் - அரிய தமிழ் நூல்களுள், நாடகம் தமிழின் நன்மை இலக்கணம் பல காணா பெறுமை கருத்தினில் தேறி - நாடகத் தமிழின் நல்ல இலக்கணங்கள் பல்வுங் காணப்பெறாத உண்மையை யுளத்திற் சிந்தித்து, இ நாள் நிலைமைக்கு ஏற்ப -

இக்காலத்து நிலைமைக்குப் பொருந்த, வடநூல்பால் படும் இயல்பினும்-வட நூல் நாடக விலக்கணங்களினும், மேற்கு புலம் புலவோர் கூறும் இயல்பினும் - மேற்றிசைப் புலவர்கள் கூற்றினும், கொள்ளல் பாலன கொண்டு உரைத்தாம் - ஏற்பனவற்றைத் தழுவியுரைத்தனம்; இதை பெரியோர் கொள்ளுப - இந்நூலை யறிவிற் சிறந்த மேலோர் கொள்ளுவார்கள்.

குறிப்பு:— முறுவல், சயந்தம், குணநூலாதிய நாடகத் தமிழ் நூல்கள் இறந்துபட்டனவா மாதலின் வரம்பின்றி யொழுகும் நாடகத் தமிழினுக்கு வரம்பு ஏற்படுத்துவான் கருதி வகுத்த இந்நூலைப் பெரியோர் ஏற்றுக்கொள்வதொரு தலையென்னுந் துணிவுபற்றி இன்னணமுரைத்தார். புலவோர்: அறிவுடையோர்; புலம் - அறிவு. மேற்புலம்: மேற்றிசை. மேற்புலப்புலவோர்: The Western Scholars. (அ)

ஆக்கியோன் பெயர்

[ஒருவிகற்பவின்னிசைவெண்பா]

9. பாரியலும் பைந்தமிழிற் பாவாண வோதிமமே
வேரியசெந் தாமரையா மேலோ ருளமலர்த்துஞ்
சூரியநா ராயணவேள் சொன்ன டகவியலாஞ்
சீரியதீம் பாற்கடலைச் சேர்.

பார் இயலும் - உலகில் நடைபெறும், பசுமை தமிழில் பாவாணன் ஓதிமமே - பசிய செந்தமிழ்க் கவிஞனாகிய அன்னமே, வேரிய - தேமணமுடைய, செம்மை தாமரை ஆம்மேலோர் உளம் மலர்த்தும் - மேலோருடைய இதயகமலங்களை விகசிக்கச்செய்யும், சூரிய நாராயண வேள் சொல் நாடகவியல் ஆம் - முருகவேளை நிகர்த்த சூரிய நாராயண னென்னும் பெயருடைய கவிஞர் சொற்ற நாடகவிய லாகிய, சீரிய தீம் பால் கடலை சேர் - சிறப்புமிக்க இனிய பாற்கடலை யடைவாயாக.

குறிப்பு:—'இயலும்' என்பதனைத் 'தமி' ழொடுங்கூட்டுக. வேரி: மணம்; தேனுமாம். 'வாழ்நன்' என்பது 'வாண' னென்றாயது என்பர் வீரசோழிய நாலுடையார். இதனை "ஐம்மூன்றதாம்" என்னுந் தொடக்கத்துக் கட்டளைக் கலித்துறையில் "மெய்ம்மாண்ப தாநவ் வரின்முன் னழிந்துபின் மிக்கணவ்வாம்" என்னும் அடியானுணர்க. மேலோருடைய இதயகமலத்தை ஆசிரியனாகிய சூரியன் மலர்த்தல் இயல்பாதலின் இது தன்மையணியை யங்கமாகப் பெற்ற தகுதியணியாம். முத்தமிழ்க் குரவராதலின் ஆசிரியர்க்கு முருக வேளுவமை கூறப்பட்டது. ஓதிமமன்றி வேறெதுவும் பாலி னுறுசுவையுணராதாதலின் இன்னணம் அதனை விளித்துக் கூறினர். "ஆக்கியோன் பெயர்" என்பது ஓராற்றான் உய்த்து நோக்குமிடத்துப் பிற்காலத்துக் கூறப்படுஞ் 'சிறப்புப் பாயிரம்' என்றதன்க ணடங்கும். நூற்குச் சிறப்புப்பாயிரம் உரைத்தற்குரியார், தன்னாசிரியன், தன்னொடு கற்றோன், தன் மாணாக்கன்,

தகுமுரைகாரன் என்ற இந்நால்வருமே யாவார். அங்ஙனமாக, இந்நூலுக்கு 'ஆக்கியோன் பெயர்' என்னுஞ் சிறப்புப்பாயிரஞ் செய்தார் யாவர்? மேற் கூறிய நால்வருளொருவரோ? அன்றிப் பிறரோ? இனி வடநூலார் வழக்குப் பற்றிப் பிரயோக விவேகம் வகுத்த சுப்பிரமணிய தீக்ஷிதர் தம்மைப் பிறர் போலும் வைத்து நாந்தி கூறினாற்போல நமது நூலாசிரியரும் கூறினரோ? எவ்வாறு கொள்ளினும் அமைவுடைத்தேயாம்.

ஒருவிகற்ப வின்னிசை வெண்பாவாவது நான்கடியினும் ஒரெதுகையே யுடையதாய்த் தனிச்சீர் பெறாது முடியும் வெண்பாவாம். அகவற்பாவானுஞ் சூத்திரப்பாவானு மியலும் நூலினுள் வெண்பா விரவி வருதலுமுண்டு. இதனை நன்னூலிற் பொதுப் பாயிரத்திற் காண்க. (கூ)

நூல்

"நூல்போறலின் ஒப்பினாகுபெயர்" என்பர் நச்சினார்க்கினியர். நூலாவது இன்னதென்பதை, "நூலெனப்படுவது நுவலுங் காலை, முதலு முடிவு மாறுகோ ளின்றித், தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி, யுண்ணிறை யகன்ற வுரையொடு பொருந்தித், திண்ணிதின் விளக்கலதுவதன் பண்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானும், "முதனடு விறுதி மறுதலைப் படாது, தொகைவகை விரியிற் றற்பொரு டோற்ற, வுரையொடு புணர்ந்த வொழுக்கிற் றாகிச், சூத்திர மோத்துப் படலம் பிண்டமென்றி, யாப்புறத் தமைத்த வவயவத் தாகி, நடப்பது" என யாப்பருங் கல விருத்திப்பாயிர வுரையுட் கூறுமாற்றானும் அறிக. "பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச், செஞ்சொற் புலவனே சேயிழையா—வெஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு" எனவும், "உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப், புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர், மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு" எனவும் ஆசிரியர் பவணந்தியார் கூறுமாற்றானும் உணர்க.

10. இன்பமு மறிவு மியைவுறப் பயக்கு
மகப்புறத் திணைக்க ணிகப்பின் றடங்குங்
காட்சிநூ லென்னு மாட்சி சான்ற
நாடகத் தின்னிய னயந்து கிளப்பிற்
பொதுவுஞ் சிறப்பு முறுப்பு நடிப்புமா
நால்வகை யியல்பி னடக்கு மென்ப.

இன்பமும்-(செவிப்புலனிற்கே யன்றிக் கட்புலனுக்கும்) இன்பமும், அறிவும் - (உலகவறிவேயன்றி உண்மை) அறிவும், இயைவு உற - (ஒருங்கு) பொருந்துமாறு, பயக்கும்-(ஆன்மாக்கட்கு) அளிக்குந் தன்மையதும், அகம் புறம் திணைக்கண் - அகப்புறத்திணையின்கண், இகப்பு இன்று அடங்கும் - மாறுபாடின்றியடங்குவதும், காட்சி நூல் என்னும் மாட்சி சான்ற - காட்சி

நூலென்று யாவரானுங் கொண்டாடப்படும் பெருமை வாய்ந்ததுமாகிய, நாடகத்தின் இயல் - நாடகத்தின் இலக்கணத்தை, நயந்து கிளப்பின் - விரும்பிக் கூறுமிடத்து, (அது), பொதுவும் சிறப்பும் உறுப்பும் நடிப்பும் ஆம் நான்கு வகை இயல்பின் - பொது சிறப்பு உறுப்பு நடிப்பு ஆகிய இந்நால்வகைப் பாகுபாட்டினை யுடையதாய், நடக்கும் என்ப - உலகில் நடந்தேறி வருமென்று ஆன்றோர் கூறுவார்கள்.

குறிப்பு:—அகமும் புறமும் முற்றாத வாராமல், ஒரோவோரிடத்து அகமும் ஒரோவோரிடத்துப் புறமுமாய் விரவிவருந் தன்மையதாதலின் நாடகத்தினை அகப்புறத்திணையின்பாற் படுத்தார். இன்னும் அன்புடைக்காமம் பயின்று வருதலான் அகத்திணையின்பாலும், கைக்கிளையும் பொருந்தாக்காமமும் பயின்று வருதலாற் புறத்திணையின்பாலும் நாடகம் அடங்குதலின் மூன்றும் பயிலுங் காரணத்தாலிதனை அகப்புறத்திணையி னடக்கினர். இன்னணம் பயிலுமென்பதைப் பொதுவியல்பு உச - ஆம் சூத்திரத்தானுணர்க. இக்காரணம் பற்றியன்றே "அறனும் வாட்கையும் ஒரு தலைக் காமமும், பொதுவியல் பாடா ணயநிலைப் படலமென், றிவைக ளனைத்து மகப்புறமாகும்" என்று கூறியவாறென்றறிக. நயநிலைப்படலம் - நாடகம், கூத்தமார்க்கமுமாம். இனிப் 'பயக்கும்', 'அடங்கும்', 'சான்ற', என்ற மூன்று பெயரெச்சமும் நாடகம் என்ற சொல்லையே தழுவுதலின் முன்னருள்ள இரண்டனையும் முறையே 'பயந்து', 'அடங்கி', என வினையெச்சமாக்கிச் 'சான்ற' என்றதனொடு முடித்துக் கோடலுமாம். இதன்கண்ணே நாடகத்தின் பயனும் நிலையும் இயல்பும், வகையுங் கூறியவாறு காண்க. 'நாடகத்தின்னியல்' என்ற தொடரில் 'ன்'-விரித்தல் விகாரமாம்; அன்றி 'நாடகத்து இன் இயல்' எனப்பிரித்து, 'நாடகத்தின் இனிய இலக்கணங்க' ளெனக்கூறினு மமையும். 'இகப்பின்றி' எனற்பாலது 'இகப்பின்று' எனப்போந்தது, "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்" என்னுஞ் சூத்திரத்தின் உடம்பொடு புணர்த்தலானென்க. (க)

க. போதுவியல்பு

11\. பொதுவியல் பென்பது பொருந்தக் கூறின்
முத்திறக் கதையினு ளொருதிறக் கதைகொளீஇ
நாற்பொரு ளோடுமைஞ் சந்தியுந் தழீவி
யொன்பான் சுவையு ளுரைத்தன வுடைத்தாய்
மூவகைப் பொருத்தமு முன்னுமந் நடையு
மேவிக் கவிக்கூற் றின்றிப் பாத்திர
வாயிலாப் பகரு மாண்புடைத் தாயிரு
வகைக்கதாந் தத்தினு ளொன்றினி தேய்ந்து
மக்க ளியல்பினை யொக்க வுணர்தற்
கேற்ற செவ்விக ளாற்ற வியைந்து

பல்வகைப் பட்ட பாத்தி ரங்களின்
சிறப்பியல் பணைத்து முறப்பொலிந் தோங்கி
முகஞ்செய்து கிடக்கு முறைகண் மலிதர
வியலு மென்ப வியல்புணர்ந் தோரே.

பொது இயல்பு என்பது பொருந்த கூறின் - பொது வியல்பு இத் தன்மையது என்று இனிது தெரிக்குமிடத்து, மூன்று திறம் கதையினுள் ஒருதிறம் கதை கொளீஇ - மூவகைக் கதைகளின் ஒன்றைத் தன்னகத்துக் கொண்ட தாய், நான்கு பொருளோடும் - நால்வகைப்பட்ட பொருளுடனும், ஐந்து சந்தியும் தழுவி - ஐவகைப்பட்ட சந்திகளையும் உடையதாய், ஒன்பான் சுவையுள் - ஒன்பது வகைப்பட்ட சுவைகளுள், உரைத்தன உடைத் தாய் - இவ்விச்சாதிகளுக்கு இன்னின்னவென்று உரைத்தசுவைகளையே யுடையதாய், மூன்றுவகை பொருத்தமும் - மூன்று விதமான பொருத்தங் களும், முன்னும் - (பொருத்தத்திற் கிணங்க) நினைத்துச்செய்யப்படுகின்ற, அந்நடையும் - அந்த அளவுடைய (மூன்று விதமான) நடைகளும், மேவி - பொருந்தி, கவி கூற்று இன்றி - கவிஞன் தானாகக் கூறுங் கூற்றுக்களுள் ஒன்றுமில்லாமல், பாத்திரம் வாயிலா பகரும் மாண்பு உடைத்தாய் - நாடக பாத்திரங்களின் வாய்மொழியாகவே யெப்பொருளையுங் கூறுமியல்பிற்றாய், இரண்டு வகை கதாந்தத்தினுள் - இரண்டு வகைப்பட்ட கதைமுடிவினுள், ஒன்று இனிது ஏய்ந்து - யாதானும் ஒன்றினைச் செவ்வையாக வாய்க்கப் பெற்று, மக்கள் இயல்பினை ஒக்க உணர்தற்கு - நாடகபாத்திரங்களின் இயல் பினை நன்றாக அறிந்துகோடற்கு, ஏற்ற செவ்விகள் ஆற்ற இயைந்து - தகுந்த அமயங்கள் மிகுதியும் பொருந்தி, பலவகைப்பட்ட - பலவிதமாய்ப் பகுக் கப்பட்டிருக்கும், பாத்திரங்களின் சிறப்பு இயல்பு அனைத்தும் - நாடக பாத்திரங்களின் சிறப்பியல்புகள் யாவும், உற பொலிந்து ஓங்கி - இனிது பொருந்தி நன்றாக விளங்கி வளர்ந்து, முகம்செய்து கிடக்கும் முறைகள் மலிதர - தெளிவுபெற வெளிப்படையாய் முற்பட்டுக் கிடக்கும் ஒழுங்கு கள் நிரம்பி, இயலும் என்ப இயல்பு உணர்ந்தோர் - நாடகத்தினியல்பினை நன்குணர்ந்த அறிஞர்கள் நடைபெறுமென்று நவில்வார்கள்.

குறிப்பு:—மேற்கூறிய முத்திறக்கதை முதலியவற்றை யினிவருஞ் சூத்திரங்களிற் கூறுப. கொளீஇ - வினைப்பகுதி வினையெச்சப்பொருடரு மாறு அளபெடுத்து நிற்றலிற் சொல்லிசையளபெடையாம். அந்நடை; 'அ' என்பது மூவகை யென்பதைச் சுட்டி நிற்றலின் நடையும் மூவகை யாமென்பது பெற்றாம். 'இனிதேய்ந்து' என்றதன் பொருளையுய்த்து நோக்குக. இருவகைக் கதாந்தத்தினுள் முற்றிலும் ஒன்றேயாகாது ஒன்று மிகுந்தும் பிறிதொன்று குறைந்தும் ஒரே நாடகத்தினுள்ளே வரப்பெறு மென்பது பெற்றாம். செவ்விகள்: Occasions. நாடக-பாத்திரங்கள் - Dramatis Personae. சிறப்பியல்பு: Individual characteristics. (க)

(க) கதை

12. கதையெனப் படுவது கழறுங் காலை
பலதலைப் பட்ட பண்புடைத் தாகிப்
பொய்யுரை மெய்யுரை புனைந்துரை யெனாஅ
முத்திறப் படுமென மொழிந்தனர் புலவர்.

கதை எனப்படுவது கழறுங்காலை - கதையின் இலக்கணம் இஃ்றென்று குறிப்பிக்குமிடத்து, (அது) பல தலைப்பட்ட பண்பு உடைத்தாகி - பல்விதமாய்ப் பிரிந்து விரிந்து கிடக்குந் தன்மையுடையதாகி, பொய்யுரை மெய்யுரை புனைந்துரை எனாஅ - பொய்யுரை மெய்யுரை புனைந்துரை என்று, புலவர் மூன்று திறம் படும் என மொழிந்தனர் - அறிஞர்கள் மூவிதமான பகுப்பினையுடையதென்று கூறினர்கள்.

குறிப்பு:—பல் + தலை = பஃறலை; "குறில்வழி லளத்தவ்வணையி னாய்தம்" என்னுஞ் சூத்திரத்தா னமைக்க. எனாஅ - செய்யுளிசை யளபெடை. திறம் - வகை. பஃறலைப்பட்ட பண்பு: Complicated nature. (உ)

13. அவற்றை,
ஆக்கம் பல்லோ ரறிவு கலப்பென
வுரையா நிற்ப ரோரோவழிப் புலவர்.

அவற்றை - மேற்குறித்த பொய்யுரையாதிய மூன்று பாகுபாட்டினையும், முறையே ஆக்கம் பல்லோர் அறிவு கலப்பு என - ஆக்கக் கதையென்றும் பலரறிந்திட்ட கதையென்றும் கலப்புக் கதையென்றும், ஓரோவழி புலவர் உரையா நிற்பர் - ஒரு சாராராகிய வித்துவான்கள் கூறுவார்கள்.

குறிப்பு:—'ஓரோவழிப் புலவர்' என்ற குறிப்பினானே ஆசிரியர்க்கு மேற் சூத்திரத்திற் கூறியதே மேலான பாகுபாடென்பது போதரும் இவற்றை முறையே வடநூலார் உத்பாத்தியம், பிரக்கியாதம், மிசிரம் எனக் கூறுப. இச்சூத்திரத்தில் 'அவற்றை' என்பது 'கூன்' அல்லது 'சொற்சீரடி' என்று கூறப்படும். (ங)

பொய்யுரை

14. பொய்யுரை யென்பது புதுவ தோர்கதை
படைத்து மொழியும் பண்பிற் றாகும்.

பொய்யுரை என்பது - புதுவது ஒன்று கதை படைத்து மொழியும் பண்பிற்று ஆகும் - (உலகத்தினிகழ்ந்திராததாய்) நாடகப் புலவன் றன்னாற்றலினன் மெய்போற் படைத்துக் கூறப்படுந் தன்மையுடைய கதையாகும்.

குறிப்பு:—இத்தகைய கதையுடைய நாடகங்கள் 'கலாவதி,' 'ரூபாவதி' முதலியனவாம். பொய்யுரையை ஆங்கிலர் Original Plot என்பர். (ச)

மெய்யுரை

15. உண்மையா யுலகி னிகழ்ந்தியா வர்க்குந்
தெரிந்த காதை தெளிப்பது மெய்யுரை.

உண்மையாய் உலகில் நிகழ்ந்து - உண்மையாக இவ்வுலகின்கட் சம்ப வித்ததாய், யாவர்க்கும் தெரிந்த காதை - அனைவர்க்குந்தெரிந்த கதையினை, தெளிப்பது மெய்யுரை - தெளிவு பொருந்த வுரைப்பது மெய்யுரைக் கதையாம்.

குறிப்பு: — இத்தகைய கதையுடைய நாடகங்கள் 'மானவிஜயம்', 'தசரதன் தவறு' முதலியனவாம். மெய்யுரையை ஆங்கிலர் Historical Plot என்பர். காதை என்ற சொல்லே மெய்யுரையென்பதை விளக்கி நிற்றல் காண்க. (ரு)

புனைந்துரை

16. மெய்யுரை தன்னொடு வேற்றுமை சிறிதுறப்
பொய்யுரை கலந்து புனைந்துரைப் பதனைப்
புனைந்துரை யாகப் பொறித்தன ரான்றோர்.

மெய்யுரை தன்னொடு வேற்றுமை சிறிது உற - மெய்யுரைக் கதையி னின்றுஞ் சிறிது விலகி வேறுபட்டு நிற்க, பொய்யுரை கலந்து புனைந்து உரைப்பதனை - சிறிது பொய்யுரையினைச் சேர்த்து (நாடகப்புலவன் தன் னுற்றலினுல்) அழகுபெற உரைக்குங் கதையினை, ஆன்றோர் - மேலோர், புனைந்துரை ஆக பொறித்தனர்-புனைந்துரை யென்று வரைந்தனர்.

குறிப்பு:—இத்தகைய கதையுடைய நாடகங்கள் 'உஷாபரிணயம்', 'தமயந்தி' முதலியனவாம். புனைந்துரையை ஆங்கிலர் Mixed Plot என்பர். (சா)

யோனி

17. உள்ளோன் றலைவனு வுள்ள துரைத்தலு
மில்லோன் றலைவனு வில்ல திசைத்தலு
முள்ளோன் றலைவனு வில்ல துரைத்தலு
மில்லோன் றலைவனு வுள்ள தியம்பலும்
பெருமைசால் யோனிப் பெயரின வாகும்.

உள்ளோன் தலைவனு - உலகில் உண்மையாக இருந்த வொருவனைத் தலைவனகக்கொண்டு, உள்ளது உரைத்தலும் - உலகில் நிகழ்ந்த விடயத்தி னைக் கூறுதலும்; இல்லோன் தலைவனு இல்லது இசைத்தலும் - உலகி லில்லாத வொருவனைத் தலைவனுக்கொண்டு உலகில் நிகழாதவொரு விட யத்தைக் கூறுதலும்; உள்ளோன் தலைவனு இல்லது உரைத்தலும் - உளனு மொருவனைத் தலைவனுகக் கொண்டு உலகினிகழாத கதையினைத் தெரி வித்தலும்; இல்லோன் தலைவனு உள்ளது இயம்பலும் - இலனும் ஒருவ னைத் தலைமகனுகக் கொண்டு உண்மையாய் நிகழ்ந்த கதையினைச் செப்ப

னும்; பெருமைசால் யோனி பெயரின ஆகும் - பெருமை மிகுந்த யோனி யென்னும் பெயர் பெறுவனவாம்.

குறிப்பு:—இவற்றை 'நால்வகை யோனி' யென்றலும் வழக்கு. இவ் யோனிப் பாகுபாடுகளைச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதை அடியார்க்கு நல்லாருரையானு முணர்க.

'உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது
முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது
மென்னா துரைத்தல் யோனி யாகும்.'

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். (எ)

18. ஒளியும் யோனியு மொருபொருட் கிளவி.

ஒளியும் யோனியும் - ஒளி, யோனி என்ற சொற்கள், ஒன்று பொருள் கிளவி - ஒருபொருளைக் குறிக்குஞ் சொற்களாம்.

குறிப்பு:—ஒளி: கதாப்பிரகாச வஸ்து. "ஒளியாவது, சத்திருதை யும், அகிருதையும், சத்தியாகிருதையும், என மூன்று. அதுவே, உள் ளோன் றலைமகனுக வுள்பொருளு மிகைப்பொருளு மில்பொருளும் விர வுப்பொருளுமென்றும், இல்லோன் றலைமகனுக இல்பொருளென்று மைந்து வகைப்படும்" என்று கூறுவர் வீரசோழியவுரையாசிரியர். (அ)

19. அவற்றுள்,
முன்னது மெய்யுரை பின்னது பொய்யுரை
யிறுதி யிரண்டு மிசைத்த புனைந்துரை.

அவற்றுள் - மேற்கூறிய நால்வகை யோனியுள், முன்னது மெய் யுரை - முதற்கட்கூறியது மெய்யுரையாம், பின்னது பொய்யுரை - அதன் பிறகு கூறியது பொய்யுரையாம், இறுதி இரண்டும் இசைத்த புனைந் துரை - கடையிற் கூறிய இரண்டும் புலவனிசைத்த புனைந்துரையாம்.

குறிப்பு:—நால்வகை யோனியும் முத்திறக் கதையினுள் அடங்கு மாறு காட்டப்பட்டது. (கூ)

(உ) நாற்பொருள்

20. அறம்பொரு ளின்பம் வீடெனக் கூறு
மவையே யரிய நாற்பொரு ளாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என கூறும் அவையே-அறம் பொருள் இன்பம் வீடு என்று பெரியோர் கூறும் அந்நான்குமே, அரிய நான்கு பொ ருள் ஆகும் - பெறுதற்கரிய நால்வகைப் பொருளாம்.

குறிப்பு:—இந்நான்கினையும் வடநூலார் தருமார்த்த காமமோக்ஷ மென்ப. இவற்றுள் முதன்மூன்றும் நீதிநூல்களில்விரித்துக்கூறப்பட்டன.(௧௦)

21. அவைதாம்,
மக்கட் குறுதியா வழங்கலு முண்டே.

அவைதாம் - மேற்குறித்த நாற்பொருளும், மக்கட்கு - மாந்தர்கட்கு, உறுதியா வழங்கலும் உண்டு - உறுதிபயப்பனவாகக் கூறுதலும் வழக்காறும்.

குறிப்பு:—ஈண்டு உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாம். 'மக்களுறுதிப்பொருள்' என்றபெயரும் இந்நாற்பொருளுக்குண்டாம். 'சதுர்வித புருஷார்த்தம்' என்ற வடநூல் வழக்கையுங் காண்க. ஏகாரம் ஈற்றசை. (கக)

அறம்

22. நல்லொழுக் கத்தை நனிவிரித் துரைத்தலு
நல்லொழுக் கமுளார் நன்மை யெய்தலுந்
தீயொழுக் கத்தின் றீமையைச் செப்பலுந்
தீயொழுக் கமுளார் தீதுற் றழிதலுந்
தீயர்தந் தீமையைச் சிறப்பித் துரைப்பினுஞ்
செம்மையோ ரதனைச் சினந்துரை யாடலு
மரியநாற் பொருளினு ளறத்தின் பாலவாம்.

நன்மை ஒழுக்கத்தை - நல்ல ஒழுக்கத்தை, நனிவிரித்து உரைத்தலும் - மிகுதியும் விரிவாக எடுத்துக்காட்டலும், நன்மை ஒழுக்கம் உளார்- நல்ல ஒழுக்கத்தினை யுடையவர், நன்மை எய்தலும் - நன்மையினை இறுதியில் அடைதலும், தீமை ஒழுக்கத்தின் தீமையை செப்பலும் - தீய ஒழுக்கத்தினுடைய கேட்டினைக் கூறலும், தீமை ஒழுக்கம் உளார் தீது உற்று அழிதலும்-தீய ஒழுக்கத்தினை யுடையார் கேட்டினை யடைந்து அழிந்தொழிதலும், தீயர் தம் தீமையை சிறப்பித்து உரைப்பினுஞ் செம்மையோர் அதனை சினந்து உரையாடலும் - தீயோர் தமது தீயசெயல்களையெடுத்துச் சிறப்பாக வுரைத்தவிடத்தும் நல்லகுண முடையோர் அச்சொற் செயல்களுக்காக வெகுண்டு தெழித்தலும், அரிய நான்கு பொருளினுள் - அருமையாகிய நால்வகைப் பொருளில், அறத்தின் பாலவாம் - அறத்தின் பகுதியனவாம்.

குறிப்பு:—நாமகள் சிலம்பின் இரண்டாம் பரலாகிய கலாவதியின்கண், சத்தியப்பிரியன் முதலியோர் தம்நல்லொழுக்கத்தினை நனிவிரித்துரைத்ததையும், விகடவசநன் சிதாநந்தனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துவதையும் உய்த்துணர்க. நாமகள் சிலம்பின் முதற்பரலாகிய ரூபாவதியிற் சற்குணவழுதி முதலிய நல்லொழுக்கமுளார் இறுதியில் நன்மையடைந்ததைக்காண்க கலாவதியிற் சுகசரீரனுக்குக் கலாவதியை மணஞ்செய்து கொடுப்பதைப் பற்றி மநோமோகிநி ஆராய்வுழி, அவள்

"மின்னனை யாளையிவ் வீணனுக் களித்தல்
பொன்னெழின் மானைப் புலியின் வாயினு
மருமையாய் வளர்ந்த வொருபெருங் கிளியைப்
பூனையின் வாயினுந் தானே பிடித்துத்
திணிப்பது போன்மென வெணப்படு மன்றே?"

என்று அத்தீயொழுக்கத்தின் தீமையினை யெடுத்துக் கூறிய தறிக. இன்னும் அந்நூலின்கண் மனோமோகினி சுகசரீரன் முதலிய தீயர் தீதுற்றழி தலையோர்ந்துணர்க. மூன்றும் பரலாகிய சரசாங்கியின்கண் அழகாநந்தனுந் துன்மதியும் வார்த்தையாடுங்கால், தீயனாகிய துன்மதி "உமது அழகிய நேசமனையாட்டியையும் மயக்கும்படி பேச வல்லவனென்றறி யீரோ?" என்று தன்தீமையைச் சிறப்பித்துரைத்தபோழ்து அழகாநந்தன் சினந்துரையாடலையு முய்த்துணர்க. (உஉ)

பொருள்

23. அரச னீதியு மங்கத்தி னியல்பு
முரைசெயி னவையே பொருட்பகு தியவாம்.

அரசன் நீதியும் அங்கத்தின் இயல்பும் உரை செயின் - அரசனது செங்கோன் முறையையும் இராஜாங்கத்தின் தன்மையினையும் எடுத்துக்கூறின், அவையே பொருள் பகுதிய ஆம் - அவை பொருளென்னும் பிரிவின்பாற் படுவனவாம்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சுகேசன் முதலிய மன்னர்தம் நீதியையும் மேதாநிதி முதலிய அமைச்சர்தம் மியல்பினையும் எடுத்துக்கூறுதல் பொருட்பகுதியவாமாறுணர்க. (உ௩)

இன்பம்

24. கைக்கிளை யன்பி னைந்திணை பெருந்திணை
மெய்ப்படக் கிளந்த வின்ப மாகும்.

கைக்கிளை - ஒருதலைக்காமம், அன்பின் ஐந்திணை - அன்புடைக் காமம், பெருந்திணை - பொருந்தாக் காமம், (என்னுமிவை) மெய் படகிளந்த இன்பம் ஆகும் - உண்மை பொருந்தக் கூறிய இன்பத்தின் பகுதியவாம்.

குறிப்பு:—கைக்கிளை; "கையென்பது சிறுமை; கிளை யென்பது உறவு; ஆகலின், சிறுமையுறவென்பது கைக்கிளை யென்னும் பெயர்த்தாயிற்று. கைக்குடை, கைவாய்க்கால், கையரிவாள் எனவழக்கிடத்துஞ் சிறுமைபற்றி வருதல் காண்க. அஃதென்னையெனின், ஒருதலைக் காமமென்னப் பட்டுத் தலைமகன் கூற்றாய் நிகழ்தலினென்க" என்று தஞ்சவாணன் கோவை யுரையாசிரியராகிய சொக்கப்பநாவலர் கூறுவர். எனினும் இலக்கண விளக்கநூலார் பின்வருமாறு கூறுவதையுற்று நோக்குக. "கைக்குடை, கையேடு, கைவாய்க்கால் எனப் பெருமை யில்லாதனவற்றை வழங்குப வாகலிற் கையென்பது சிறுமைபற்றி வந்ததோர் இடைச்சொல்லென்றுங் கிளை யென்பது உறவென்றும் பொருள் கொண்டு, கைக்கிளை யென்பதற்குப் பெருமையில்லாத தலை மக்கள் கிளைமையென்று பொருள்கூறுவாருமுளர். அற்றன்று. மேற் கைக்கிளை யொருதலைக்காமமென்பதற்கு இயைய அதற்குயாம் ஒருமருங்குபற்றிய கேண்மையென்றே பொருள் கூறுதும்." இச்சூத்திரத் திற்கு,

"கைக்கிளை யைந்திணை பெருந்திணை முறையே,
ஒருதலைக் காமமும் அன்புடைக் காமமும்,
பொருந்தாக் காமமும் பொருந்துத லுடைய" (இலக். விள. 377)

என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரத்திற் கிணங்கப் பொருளுரைத்தாம். ஐந்திணையைக்,

"குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே" (இலக். விள. 379)

என்னுஞ் சூத்திரத்தானறிக. மேற்கூறிய கைக்கிளை ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை யென இருவகைப்படும். பெருந்திணை: எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாகலிற் பெருந்திணையாயிற்று. என்னை? எண்வகை மணத்தினுள்ளும் கைக்கிளை முதல் ஆறு திணையும் நான்கு மணம் பெறத் தான் ஒன்றுமே நான்கு மணம் பெற்று நடத்தலானென்க. எண்வகை மணம் யாவெனிற் கூறுதும். அவை பிராமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம். இவற்றுள் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் இம்மூன்றும் கைக்கிளையின் பாற்படும்; காந்தருவ மொன்றே யைந்திணையின் பாலதாம்; ஏனைய நான்கும் பெருந்திணையாகும். இம்மணங்களி னிலக்கணங்களைத் தொல்காப்பியம் இலக்கணவிளக்க முதலிய நூல்களிற் பரக்கக் காண்க. இனிக் கைக்கிளை பெருந்திணையி னியல்பினை இலக்கண விளக்கம் 589, 590-ஆஞ் சூத்திரங்களானும், தோல்காப்பியம் அகத்திணையியல் 50-57-ஆஞ் சூத்திரங்களானுமறிக. இனி யிவையிற்றினுக் கிலக்கியங் காட்டுவாம். நாமகள் சிலம்பின் நான்காம்பரலாகிய சுகுண சுகேசர் என்னும் நாடகத்தின்கண், மல்லிகை காதலின்றியிருந்தும் சுகேசன் அவள்மாட்டுக் காதல் கொண்டது ஆண்பாற் கைக்கிளையின்பாற்படும். ரூபாவதி நாடகத்துள் ரூபாவதியும் சுந்தரானந்தனுங் கொண்ட மனமொத்த காதல் அன்பினைந்திணைக் குதாரணமாம். கலாவதியிற் சிதாநந்தனுங் கலாவதியுங்கொண்ட காதலும் அற்றே. நாமகள் சிலம்பின் ஏழாம்பரலாகிய சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்துட் சூர்ப்பணகை இராமபிரான்மேற் கொண்ட காதல் பெருந்திணையின்பாற்படும். (கச)

25. உளத்தோ டுளஞ்சென் றொன்றுங் காதலு
மைந்திணை யவற்று ளடங்குமா ராய்ந்திடின்.

உளத்தோடு உளம் சென்று ஒன்றும் காதலும் - மனத்தோடு மனம் ஒன்றுபட்டு நிற்குங்காதலும், ஆராய்ந்திடின் - ஆராய்ந்து பார்க்கின், ஐந்திணை அவற்றுள் அடங்கும் - அன்புடைக் காமத்தின்பாற்படும்.

குறிப்பு:—காந்தருவ மணத்தின் பாற்படுமாதலின் இன்னணங் கூறினார். இதனை வேறு பிரித்தோதியது இதுவே மிக்க சிறப்புடைத்தெனக் கூறுதற்குப்போலும். (கரு)

வீடு

26. ஊழ்வலி யுரைத்தலு முத்தம பத்தியும்
வீட்டின் பகுதிய விளம்புங் காலே.

ஊழ்வலி உரைத்தலும் - விதியின் வலியினை யெடுத்துக் கூறுதலும், உத்தம பத்தியும் - கடவுளிடத்து மேலான அன்பு காட்டுதலும், விளம்புங் கால் - கூறுமிடத்து, வீட்டின் பகுதிய - வீட்டின் பகுதியனவாய் நிற்கும்.

குறிப்பு:—ஊழ்: முறை; ஈண்டு நல்வினை தீவினைப் பயன்கள் முறைப்படி வரும் விதியினை யுணர்த்தி நின்றது; பண்பாகு பெயர். நாமகள் சிலம்பு ஐந் தாம்பரலாகிய தசரதன் தவற்றின் இறுதியில் தசரதன் ஊழ்வலியினை யெடுத் துரைத்தலும் ஈசன் மாட்டுள பத்தியினைத் தெரித்தலும், சுரோசனன் கடவு ளைத் துதித்தலும் இவ்வீட்டின் பகுதிக் கிலக்கியமாம். (கசு)

27. ஊழ்வலி யுரைத்த லொவ்வார் சிலரே.

சிலர்—, ஊழ்வலி உரைத்தல் ஒவ்வார் - விதிவலியை யெடுத்துக் கூறு தலை வீட்டின் பகுதியாய்க் கொள்ளமாட்டார்கள்.

குறிப்பு:—இனிச் சிலர் ஊழ்வலியுரைத்தலையே நேரிதென்று ஒப்புக் கொள்ளார் என்றுங் கூறுப. இனி இதன் கண் ஆசிரியர்தம் மெய்க்கொள்கை யின்னதென்பது அன்னார் செய்துள பாவலர் விருந்தில் எட்டாவதாகிய பட் டினக் காட்சியினாற் புலனாம். ஆண்டுக் கண்டுணர்க. (கஎ)

வதப்பு

28. உற்றநாற் பொருளு மொன்பான் சுவையும்
பெற்ற நாடகம் பிராமணர் வருப்பே.

உற்ற நான்கு பொருளும் - மேற் கூறலுற்ற நான்கு பொருளும், ஒன்பான் சுவையும் - ஒன்பது சுவைகளும், பெற்ற நாடகம்—, பிராமணர் வகுப்பு - அந்தணர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. அறம் பொருள் இன்பம் வீடு என்னு நாற்பொருளும் ஆன்மாக்கட்கு உறுதிபயப்பப் பொருந்தினவாதலின் 'உற்ற' என்னும் அடைமொழி கொடுத்தோதினு ரென்றலுமாம். ஒன்பான் சுவை யினையும் பின்னர்க் கூறியுள சுவை வகையிற் காண்க. உதாரணங் கலாவதி நாடகம். (கஅ)

29. அறம்பொரு ளின்ப மடைவினிற் காட்டி
யிழிப்புச் சமநிலை யிவையொழி சுவைத்தா
யறையப் படுவதரசர் வகுப்பாம்.

அறம் பொருள் இன்பம் அடைவினில் காட்டி - (நாற்பொருளினும் வீடு நீக்கிய) அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையுமே முறைப்படி தெரித்து, இழிப்பு சமநிலை இவை ஒழி சுவைத்தாய் - இழிப்புச் சுவையும் சமநிலைச் சுவையுமின்றி ஏனைய சுவைகளை யுடையதாய், அறையப்படுவது - கூறப்படும் நாடகம், அரசர் வகுப்பாம் - க்ஷத்திரியர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—அறம் பொருள் இன்பமென்னு மூவகைப் பொருளினையே பெற்று, உவகை, பெருமிதம், நகை, வெகுளி, வியப்பு, அவலம், அச்சம் என்னும் எழுவகைச் சுவையினையுமே யுடையதாயியலு நாடகம் அரசர் வகுப்பாம். நாமகள் சிலம்பின் நான்காம் பாலாகிய சுகுண சுகேசர் என்னும் நாடகம் இவ்வகைக் குதாரணமாம். (கக)

30. சமநிலை யொழிசுவை யமைவர மேவி
யறம்பொரு ளிவற்றைத் திறம்பெற வுரைப்பது
வணிகர் வகுப்பென வழங்க லாகும்.

சமநிலை ஒழிசுவை - சமநிலை யொழிந்த ஏனைய எண்வகைச் சுவைகளும், அமைவரமேவி - நன்றாகப் பொருந்தி, அறம் பொருள் இவற்றை - அறமும் பொருளுமாகிய இரண்டு பொருள்களையே, திறம்பெற உரைப்பது - இனிது வெளிப்படுத்த் தோன்றுமாறு கூறும் நாடகம், வணிகர் வகுப்பு என வழங்கல் ஆகும் - வணிகர் வகுப்பினைச் சார்ந்த நாடகம் என்று கூறுதற் குரியது.

குறிப்பு:—வைசிய ஜாதி நாடகமென்று கூறப்படுவது மிதுவே. இதற்கும் இனி வரும் வேளாண் வகுப்பிற்கும் நாடகங்கள் வந்துழிக் காண்க. (உ0)

31. பெருமிதஞ் சமநிலை பேணு தாகி
மேலற முரைப்பது வேளாண் வகுப்பாம்.

பெருமிதம் சமநிலை பேணுதாகி-பெருமிதச் சுவையினையும் சமநிலைச் சுவையினையுங் கொள்ளாததாகி, மேல் அறம் உரைப்பது - மேலான அறப் பொருளையே யெடுத்துக் கூறுவது, வேளாண் வகுப்பாம் - வேளாளர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—சூத்திர ஜாதி நாடகம் என்று கூறப்படுவது மிதுவே. (உக)

(ங) சந்தி

32. இடைப்பொரு ளுடனே யெடுத்த கதையின்
றலைப்பொருள் சார்ந்து தழைத்து முதிர்வது
நாட்டியக் கட்டுரைச் சந்தியா மதுதான்
முகமே பிரதி முகமே கருப்பம்
விளைவு துய்த்தலோ டைவகை யாகும்.

எடுத்த கதையின் - நாடகத்திற்காக ஆசிரியன் எடுத்த கதையினுடைய, இடை பொருள் உடனே - இடையில் நிகழ்ந்த பொருள்களுடன், தலை பொருள் சார்ந்து - ஆரம்பத்திற் சம்பவித்த விடயங்கள் பொருந்தி, தழைத்து முதிர்வது - வளர்ந்து முதிர்ச்சி பெறுவது, நாட்டியம் கட்டுரை சந்தி ஆம் - நாட்டியக் கட்டுரையாகிய சந்தியென்று சொல்லப்படும். அது

தான் - அச்சந்தியும், முகமே பிரதி முகமே கருப்பம் விளைவு துய்த்தலோடு ஐந்து வகை ஆகும் - முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்று ஐவகைப்பட்டதாகும்.

குறிப்பு:—ஏகாரம் எண்ணுப் பொருள. 'இவை ஐந்து சந்தியும் நாடகக் கட்டுரை' யென்று சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையுரையின்கண் அடியார்க்கு நல்லார் கூறுதலையுமுற்று நோக்குக. இவை யாவற்றினுக்கும் அங்கந்தோறு மொருசந்தியைப் பெற்ற ஐயங்க நாடகங்களினின்று முதாரண மெடுத்துக் கூறுதல் எளிதாமாதலின் அதைவிடுத்து ஏழங்க நாடகமாகிய கலாவதியினின்றுமே யுதாரண மெடுத்துக் கூறுவாம். அவற்றை வருஞ் சூத்திரங்களிற் காண்க. இனி வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனுர் "சந்தியாவது சந்தியுஞ் சந்தியங்கமுமென விரண்டு வகைப்படும். அவற்றிற் சந்தி யைந்து வகைப்படும். அவை முகமும், பயிர் முகமும், கர்ப்பமுகமும், வைரிமுகமும், நிருவாணமுமென விவை. சந்தியங்கமாவன அறுபத்து நான்கு. அவற்றுள் உவகேபம், பரிகரம், பரிநியாசம், விலோவணம், யுக்தி, பிராத்தி, சமாதானம், விதானம், பரிபாவனை, உச்சிரம், உற்பேதம், கரணபேத மென முகத்தி லங்கம் பன்னிரண்டு. விலாசம், பரிசர்ப்பம், விதூதம், சமம், நாபம், நமதூதி, பிரகமம், நிரோதம், பரியுபாசனம், வச்சிரம், புட்பம், உபநியாசம், வருண சங்கார மிவை பயிர் முகத்தி லங்கம் பதின்மூன்று. அபூதாரணம், மார்க்கம், உருவம், உதாயிருதி, கிரமம், சங்கிரகம், அநுமானம், தோடகம், அதிபலம், உதேகம், சம்பிரமம், ஆகேவமெனப் பன்னிரண்டுங் கர்ப்பமுகத்தின் பேதம். அபவாதம், சம்பேடம், வித்திரவம், திரவம், சத்தி, துதி, பிரசங்கம், சலனம், விவசாயம், நிரோதனம், பிரரோசனம், விசலனம், ஆதானம் இவை பதின்மூன்றும் வைரிமுகத்தின் அங்கங்கள். சந்தி, விரோதம், கிரதனம், நிண்ணயம், பரிபாடணம், பிரசாதம், ஆனந்தம், சமயம், கிருதி, ஆபாடணம், உபகூகனம், பிரசத்தி, பிரசனம், சங்காரம் இவைபதினன்கும் நிருவாண முகத்தின் அங்கங்கள்" என்று கூறியிருத்தலையுங் காண்க. (௨௨)

முகம்

33. எடுத்துரை கதைதா னினிமையிற் றொடங்கி
யுழவினுற் சமைந்த பூழியு ளிடுவிதை
முளைத்துத் தோன்றுதல் போல்வது முகமே.

எடுத்து உரை கதை தான் - நாடகத்தின்கண் எடுத்துச் சொல்லப்பட்ட கதையானது, இனிமையில் தொடங்கி - செவ்விதாகத் தொடங்கப்பட்டு, உழவினுல் சமைந்த பூழியுள் இடு விதை - உழவு காரணமாக உண்டான குழை சேற்றுள் இடப்பட்ட ஒரு விதை, முளைத்து தோன்றுதல் போல்வது முகம் - முளைத்து வெளிப்படுதல் போல்வது முகம் என்று சொல்லப்படும்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. பின்னர் வளர்ந்து கதிராகிய பெரும் பயனளிக்கும் முளையானது திடீரென்று உழவு தொழி லியன்ற நிலத்தின் கண் நுட்பமாய்க் காணப்படுதல் போல, நாடகத்திற் பின்னர் நடக்கும் விடயங்கள் யாவற்றினுக்கும் உற்பத்தித்தானமா யுண்டாகி நுட்பமாய்க் காணப்படும் சம்பவமே இம்முகமாம். இன்னணம் உழவினின்றும் போந்த உபமான முகத்தான் இவ்வைந்து சந்தியையும் விளக்கவேண்டிய தென்னை யெனிற் குற்றமற்றதாய்ப் பெரும் பயன்றருவதாய் நிற்கும் தொழில் அதுவேயாதலி னென்க. இது பற்றியன்றே,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்றார் திருவள்ளுவனாரும். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங் களத்துள், வயந்தச்சோலையின்கட் சிதாநந்தனுங் கலாவதியுஞ் சந்திக்குமாறு நேர்ந்ததே பின்வரும் விஷயங்கள் யாவற்றினுக்கும் முளைபோல் நின்று திகழ்கின்றமையின் முகமாதல் உய்த்துணர்க. "முகமாவது உழவுப்புழுதியினின்று முளைத்தாற்போலக் கூத்தின் முகத்தினுள்ளே பொருடோன்றுவது" என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றையு மீண்டுய்த்துணர்க. இம்முகம் பன்னிரு பகுதியினை யுடையதென்று கூறுவர் வட நூலார். * முகத்தின் வகை 12: அவை உவக்ஷேபம் பரிகரம் முதலியனவாம். இப் பாகுபாட்டாற் பெரும்பய னின்மைதலின் நாடகவியலாசிரியர் கூறிற்றிலர் போலும். (உரு)

பிரதிமுகம்

34. முளைத்தன் முதலா விலையும் பெற்று
நாற்றென நிற்பது பிரதி முகமே.

முளைத்தல் முதலா - முளைதோன்றியது முதல், இலையும் பெற்று - இலைகளுந் தழையப்பெற்று, நாற்று என நிற்பது - நாற்று என்று சொல்லும் படி திகழ்வது, பிரதிமுகம் - பிரதிமுகமாம்.

குறிப்பு:—ஏகாரம் - ஈற்றசை. முளைத்த பிறகு இலைகள் பெற்றுத் தழைத்துத் தோன்றுந் தன்மைபோல, முகமாகத் தோன்றிய விடயம் முதிர்வது பிரதிமுகமாம். முளைகளுடன் களைகளிருப்பினும் இச்சமயத்திற் கட்புலனுக்குப் புலப்படாவாதலின் அவையிற்றினை யீண்டுக் குறிப்பித்திலர். கலாவதி நாடகம் மூன்று மங்கமுதல் நான்காமங்கம் முதற்களமளவும் சிதாநந்தன் கலாவதி யிவர்தங் காதல் முதிர்தலும், இதற்கு இடையூறாங் களைகளாகிய சுகசரீரன், மநோமோகினி, குலாந்தகன் முதலியவர்கள் இருந்தும் இடையூறுகள் உண்டாகாதிருக்குந் தன்மையினையும் அறிக. இது பிரதி

* முகத்தின் வகை 12. உவக்ஷேபம், பரிகரம், பரிந்யாஸம், விலோபநம், யுக்தி, ப்ராப்தி, ஸமாதாநம், விதாநம், பரிபாவநம், உத்பேதம், கரணம், பேதம் என்பனவாம்.

முகமாம். வடநூலார் இதன்கட் பன்னிரண்டு உட்பிரிவுகள் கூறுவர். *அவை விலாசம் முதலியனவாம். இதனைப் பயிர்முகம் என்றுரைத்தலு மொன்று. "பயிர்முகமாவது முளைத்த வங்குர மோங்கி மூத்தாற்போலத் தலைமக்கள் சொன்ன பொருளைப் பொலியுமாற்றால் விரிவாற் சொல்வது" என்று வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூறியிருத்தலையு முணர்க. (உச)

கருப்பம்

35. நாற்று முதலாக் கருவு முதிர்ந்துழிக்
கனைபல செறியக் கட்டவை யொழிதலும்
பொருணனி பொதிந்து நிற்பது போல்வது
கருப்ப மென்னக் கழறினர் பெரியோர்.

நாற்று முதலா - நாற்றாக நின்றது முதல், *கருவு முதிர்ந்துழி* - பின் முதிர்ந்தவிடத்து, *களைபல செறிய* - (பக்கங்களிற்) களையும் பலவாகி முதிர்ந்து அடர, *கட்டு* — களையப்பெற்று, *அவை ஒழிதலும்* - அவை நீங்கலும், *பொருள் நனி பொதிந்து நிற்பது போல்வது* - உள்ளீடு நன்றாக வாய்ந்து நிற்பதனை யொப்பது, *பெரியோர்*—, *கருப்பம் என்ன கழறினர்* - கருப்பசந்தியாமென்று கூறினர்.

குறிப்பு:—பயிரினுக்கு விரோதமாகக் களைகள் தோன்றுதலும் அவைகள் களையப்பட்டொழிதலும் உள்ளீடு நன்றாகப் பொருந்துதலும் போல, விடயம் முதிர்ந்துழி இடையூறுகள் வெளிப்பட்டுத் தோன்றுதலும் அவைகள் ஒழிதலும் அதன் பின்னர் விடயத்தினின்றும் பயன் சிறிது தோன்றலுமே கருப்பமாம். இதன்கட் † பதின்மூன்று உட்பிரிவுகள் உள என்று கூறுவர் வடநூலார். இவையிற்றாற் பெரும்பய னின்மையின் ஆசிரியர் கூறாது மேற் சென்றார். "கருப்பமாவது களத்திற் கருவுதிரண்டோங்கிக் குடைபோகிய வாறுபோல நலந்தரும் பொருளைத் திரளச் சொல்லுவது" என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றையு மீண்டுக் காண்க. கலாவதி நாடகத்துள் நான்காமங்கம் இரண்டாங்கள முதல் ஆறுமங்கம் இரண்டாங்களம் அளவும் இக்கருப்ப சந்தியைக்காணலாம். குலாந்தகன் சிதாநந்தன் உடை தரித்துச் சென்றதும், சுகசரீரன் சட்டியெடுத்துச் சிதாநந்தனைக்கொல்ல வெளிப்போந்ததும் மநோமோகினி சன்னியாசி வேடம் பூண்டு சிதாநந்தற்கு மயக்கு மருந்தைக் கொடுத்தலு மாதிய களையனைய இடையூறுகள் சம்பவிக்

* பிரதிமுகத்தின் வகை 12: விலாஸம், பரிஸர்ப்பம், விதூதம், தாபநம், நர்மம், (நர்மத்யுதி), ப்ரகமநம், விரோதம், பர்யுபாஸநம், புஷ்பம், வஜ்ரம், உபந்யாஸம், வர்ண ஸம்ஹாரம் என்பனவாம்.

† கருப்பத்தின் வகை 13:—அபூதாஹரணம், மார்க்கம், ரூபம், உதாஹரணம், க்ரமம், ஸங்க்ரஹம், அநுமாநம், ப்ரார்த்தநா, க்ஷிப்தி, த்ரோடகம், அதிபலம், உத்வேகம், வித்ரவம் என்பனவாம்.

கின்றன. அவை ஒன்றன்பி னொன்றாய்க் களையுண்டுபோகச் சிதாநந்தன் ஒரு விதத் தீங்குமின்றி யொளிர்தல் பொருணனிபொதிந்து நிற்பது போலுமாம். இனிமேற் செல்வாம். (உரு)

விளைவு

36. முற்றி நின்ற கதிர்திரண் டிடுதலு
மிலங்குங் கதிர்கறி விலங்கு கடிந்தபின்
காய்த்துத் தாழ்வது போல்வது விளைவு.

முற்றி நின்ற கதிர் திரண்டிடுதலும் - முதிர்ந்து நின்ற கதிர்கள் செவ்விதாகவளர்ந்து மிளிர்தலும், இலங்கும் கதிர் - பிரகாசிக்கின்ற கதிர்களை, கறி விலங்கு - கடிக்குந் தன்மை யனவான மிருகங்களை, கடிந்தபின் - ஓட்டித் துரத்தியபிறகு, காய்த்து தாழ்வது போல்வது விளைவு - கதிர்கள் நன்றாய்ப் பழுத்துத் தலைசாய்வது போல்வது விளைவாகும்.

குறிப்பு:—இதனை விமரிசம் என்று கூறுவர் வடநூலார். கதிர் பழுத்துத் தலைசாயும் அமயத்து விலங்குகள் வருமாதலின் அவைகளைத் தடுத்தலும், கதிர்கள் அறுக்கும் பருவத்தை யடைந்து நிற்றலும் போலக், கலாவதி சிதாநந்தர்கட்குட் காதல் முதிர்ந்து பக்குவமடைந்ததும், இருவரும் ஒருவரை யொருவர் இறந்தனரென மருண்டு உயிர்துறப்பத் தீர்மானித்ததும், பிறகு இவ்வெதிர்பாராத துன்பமும் நீங்கி அவர்கள் மகிழ்சிறந்து நின்றதும், மனோமோகினி ஓடிப்போதலும், அவர்களுடைய காதல் முதிர்ந்ததை யாவரு மறிதலும் இவ்விளைவெனுஞ் சந்தியின் பாலவாம். இதன்கட் *பதின்மூன்று பாகுபாடுகள்உளவென்று வடநூலார் கூறுப. "விமரிசமாவது தோடு விரித்துக் கதிர்போந்தாற்பாலவு மேயது வளைத்தாற்போலவு நாடகப்பொருள் நன்குவிளிக்கப் பயன்படுவது. விமரிசமெனினும் வைரிமுகமெனினு மொக்கும்" என்ற வீரசோழியவுரையாசிரியர் பெருந்தேவனர் கூற்றையு முய்த்துணர்க. (உசு)

துய்த்தல்

37. காய்த்த கதிரினை யறுத்து நற்பொலி
செய்து கொண்டுபோ யுண்டு மகிழ்வது
போல்வது துய்த்தல் புகலுங் காலே.

காய்த்த கதிரினை அறுத்து - முற்றிய கதிர்களை யறுத்து, நன்மை பொலி செய்து - நல்ல நெற்குவைகள் செய்து, கொண்டு போய் - களத்தினின்றும் வீட்டிற்குக் கொண்டுபோய், உண்டு மகிழ்வது போல்வது - தாமும் தம்மினத்தாரும் அனுபவித்து மகிழ்ச்சியடைவதுபோல விளங்குவது,

* விமரிசத்தின் வகை 13:—அபவாதம், ஸம்பேடம், வ்யவஸாயம், த்ரவம், த்யுதி, சக்தி, ப்ரஸங்கம், கேதம், ப்ரதிச்சேதம், விரோதநம், ப்ரரோசநம், ஆதாரம், ஸாதநம் என்பனவாம்.

புகலுங்கால் - எடுத்துச் சொல்லுமிடத்து; துய்த்தல் - துய்த்தல் என்னுஞ் சந்தியாம்.

குறிப்பு:—இச்சந்தியினை நிருவகணம் என்பர் வடநூலார். "நிருவாணமாவது விளைந்த போகம் விதிவரையா லறுத்துப் படுத்துவைத்துத் துகளுநுங்களைந்து கொண்டுண்டு மகிழ்ந்தாற்போலக் கொள்வது" என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றையுமறிக. இவ்வுவமானத்தாற் போதரும் உவமேயத்தினை யாங் கூறுமலே யாவருமுணர்கிற்பார் எளிதாதலின். சிதாநந்தன் கலாவதியை மணந்ததும், சோழபாண்டிய மன்னர்கள் மனமகிழ்ந்ததும், சிதாநந்தன் சோழபாண்டிய நாடுகட்கு இறைவனாய் மகுடம்புனைந்தது மாதியவை துய்த்தல் என்னுஞ் சந்திக் கிலக்கியமாம். இது * பதினான்கு வகைத்தென்ப வடநூலார். (உள)

(ச) சுவை

38. கால வரையறைக் கட்படா தாகித்
தானே விளங்குந் தன்மைத் தாகி
யுள்ள மலர்ச்சியி னுற்றெழுஞ் சுவையே
யநுதா பத்தினஃ தறிய லாகுமற்
றதற்குயிர் போல்வது வியப்பென மொழிப
முந்தை நூலின் முறையுணர்ந் தோரே.

காலம் வரையறைக்கண் படாதாகி - இவ்விக்காலங்களிலின்னின்ன சுவை நிகழுமென்னும் வரையறையின்கண் அகப்படாததாகி (பிறர் தூண்டலின்றி இயற்கையிலேயே ஒருவனுக்குண்டாகும் இயல்பினையுடையதாய்); உள்ளம் மலர்ச்சியின் - மனத்தினுண்டாகும் கிளர்ச்சியினால், உற்று சுவை எழும் - பொருந்திச் சுவை யுண்டாகும்; அஃது - அச்சுவை, அநுதாபத்தின் அறியல் ஆகும் - பிறர்மனத்தின் கண் உடனெழு முணர்ச்சியால் வெளிப்படும்; அதற்கு உயிர் போல்வது - அச்சுவையினுக்கு உயிர் போன்றது, வியப்பு என மொழிப - வியப்பு என்று கூறுவார்கள், (யாரெனின்) முந்தை நூலின் முறை உணர்ந்தோர் - முதன்மையாகிய நூல்களை வரலாற்று முறையினுணர்ந்த அறிஞர்கள்.

குறிப்பு:--ஏகாரம் - ஈற்றசை. இச்சூத்திரத்தானே வியப்பினடியாகச் சுவையெழு மென்பதூஉம் அநுதாபத்தான் அது வெளிப்படு மென்பதூஉம் பெற்றும். அநுதாபம்: Sympathy வியப்பு: Wonder. சுவையெனினுங் குறிப்பெனினு மொக்கும்; வடநூலார் ரஸமென்ப. இன்னணம் வியப்பும் அநுதாபமுங் கூடியவழியே சுவை நிகழுமென்பதை முந்தை நாடக

* நிர்வகணத்தின் வகை 14:—ஸந்தி, விபோதம், க்ரதநம், நிர்ணயம், பரிபாஷணம், க்ருதி, ப்ரஸாதம், ஆநந்தம், ஸமயம், உபகூஹநம், பாஷணம், பூர்வவாக்யம், காவ்யஸம்ஹாரம் ப்ரசஸ்தி.

நூலாசிரியரும் "இருவகை நிலத்தி னியல்வது சுவையே" யென்று கூறினர். ஆசிரியர் நச்சினார்க்கினியருந் தொல்காப்பிய மெய்ப்பாட் டியலின்கண், "இனி இருவகை நிலனென்பன உய்ப்போன்செய்தது காண்போர்க்கு எய்துத லன்றோ வெனின், சுவையென்பது ஒப்பினாகிய பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினாற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர்வினான் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒருபொருள் கண்டஞ்சி யோடிவருகின்றா னொருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலியன கண்டு அஞ்சினானென் றறிவதல்லது, வள்ளெயிற் றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானாயின், அதுவுஞ் சுவையெனவே படும். ஆகவே அஞ்சினானைக்கண்டு நகுதலுங் கருணைசெய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போ னுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின், இருவகை நிலமெனப்படு வன சுவைப் பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென் பதே பொருளாதல் வேண்டும்" என்று கூறியதையும் ஈண்டுய்த்துணர்க. இன்னும் வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனாரும் இரத வசனஞ் சுவை யாம்; "நவைதீ ரொன்பஃ தாகு முட்பொருள், சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப" என்று கூறியதையு மிங்ஙன் உணர்க. (உஅ)

சுவைவகை

39. மனனிகழ் பெற்றி வெளியிற் றோன்றுமா
றியலுஞ் சுவையஃ துவகை பெருமிதம்
நகைசமம் வெகுளி வியப்பிழிப் பவல
மச்ச மென்மனா ராரியப் புலவோர்.

மனன் நிகழ் பெற்றி - மனத்தின்க ணுண்டாகுந் தன்மையாகிய உள்ள நிகழ்ச்சி, வெளியில் தோன்றுமாறு - வெளிப்பட்டுத் தோன்றும் வண்ணம், சுவை இயலும் - சுவை நடக்கும்; அஃது - அச்சுவை, உவகை—, பெருமிதம்—, நகை—, சமம் - சமநிலை, வெகுளி—, வியப்பு—, இழிப்பு—, அவலம்—, அச்சம்—, என்மனார் - என்று கூறுவார்கள், ஆரியம் புலவோர் - வடநூற் புலவர்கள்.

குறிப்பு:—மனன்: மனம்; மொழியிறுதிப் போலி. தமிழ் நூலார் சம நிலை யொழிந்த ஏனைய எண்வகைச் சுவைகளையுமே யெடுத்துக்கொண்டிருப்ப இவ்வாசிரியர் வடநூலார் மதம்பற்றி யொன்பான் சுவை கூறவேண்டிய தென்னையெனின், நாடகத்திற்கு ஒன்பான் சுவையும் வேண்டுமாதலி னென்க. இஃதே தொல்காப்பியனார்க்கும் இலக்கணவிளக்க முடையார்க்குங் கருத்தாத லறிக. செயிற்றியனாரு மின்னணமே யொன்பான் சுவை கூறியிருக் கின்றனர். உலகியனீங்கினர் பெற்றித்தாஞ் சமநிலையினை யுலகவழக்குட்

கூறவேண்டா வாதலின் ஏனையோர் ஒரீஇயினரெனினும், நாடகத்தின்கண் அதற்கும் விகாரமுண்மையின் ஈண்டெடுத் தாளப்பட்டதென்க. இதுபற்றி யன்றே வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனாரும் "இனிச் சுவையானது சிருங்கார முதலாகவுடைய நாடகச் சுவை யென்பது மெனக் கொள்க" என்று கூறியதூஉ மென்க. உவகை யென்பது காமமுதலிய மகிழ்ச்சி; பெருமிதம் என்பது வீரம்; நகை யென்பது சிரிப்பு; சமநிலை யென்பது சாந்தம்; வெகுளி யென்பது கோபம்; வியப்பு என்பது அதிசயம்; இழிப்பு என்பது இளிவரல்; அவலம் என்பது அழுகை; அச்சம் என்பது பயம். இவற்றினை முறையே சிங்காரம், வீரம், ஆசியம், சாந்தம், ரௌத்திரம், அற்புதம், குச்சை, சோகம், பயானகம் என்பர் வடநூலார். (உகூ)

உவகை

40. புலனே செல்வம் புணர்வுவிளை யாட்டே
யிளமை வனப்பிவை களனுக் காமுறுந்
தலைவனுந் தலைவியு நலப்பட் டின்புற
லுவகைச் சுவையென் றுரைத்தன ருயர்ந்தோர்.

புலனே - அறிவும், செல்வம் புணர்வு விளையாட்டே - செல்வமும் புணர்ச்சியும் விளையாட்டும், இளமை வனப்பு-இளமையும் அழகும், (ஆகிய), இவை களனு - இவை காரணமாக, காமுறும் தலைவனும் தலைவியும் - அன்புடைக் காமமுடைய தலைவனுந் தலைவியும், நலம் பட்டு இன்புறல் - நன்மையடைந்து களித்தல், உவகை சுவை என்று—, உயர்ந்தோர் உரைத்தனர் - மேலோர் கூறினர்கள்.

குறிப்பு:—புலன்: கல்விப் பயனாகிய அறிவுடைமை. செல்வம்: இன்ப நுகர்ச்சிக்கு இன்றியமையாத் துணைக் கருவியாயுள்ள பொருள்கள். புணர்வு: காமப்புணர்ச்சி முதலியன. விளையாட்டு: யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து வருதன் முதலாயின. இளமை: இன்ப நுகர்ச்சிக்குரிய செவ்வி வாய்ந்த மைந்துடையபருவம். வனப்பு: 1 "எல்லாநலனு மினிமையிற் கலந்து, கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்திட், டெண்டகு மாசை யெளிதிற் கொளுத்தித், தன் வயப்படுக்குந் தன்மை வனப்பாம்" என்றார் பரிதிமாற் கலைஞர். 1 "இன்பஞ் செயல்வல செவ்வியுமஃதே" யாதலின் இதனையும் ஆசிரியர் உவகைச் சுவையுளடக்கினர். (cf. A thing of beauty is a joy for ever–Keats). கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்திற் கலாவதி சிதாநந்தன்றன் அறிவினை வியந்து,

"கலையெலா நிறைந்தென் மனமெனுங் குமுதங்
கவினின்பத் தேனினைத் துளித்து
மலர்தரப் பகைவர் நெஞ்செனுங் கமலம்
வாடிபு குவிதரத் தோன்று

1. தனிப்பாசுரத் தொகை 15.

மஃப்பிர காச மதியமே யெழுந்து
மாரனல் வருதுயர் நிசிபைத்
தொலைதரச் செய்தே யென்னையாண் டருள்வாய்
தோமிலாக் காமர்நா யகனே''

என்று கிதாமிர்தம் பொழிந்தது புலன்களனு வுண்டானவுவகையாம். கலாவதி நாடகத்துள் இரண்டாமங்கம் மூன்றாங்களத்தினுட் சிதாநந்தன், கலாவதி யணிந்திருந்த வைரச் சுட்டியினை வியந்து முகத்தினை வருணித்த

''வானி றத்த வயிர மணிச்சுட்டி
தான ணிந்தொளிர் தண்ணளி யொண்முகம்
வான கத்து வயங்குறு மீனெலா
மேனி ரல்வளை வெண்மதி மானுமே''

என்னுஞ் செய்யுள் செல்வங்களனு வுதித்த வுவகை மேலீட்டாற் கூறியதாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்துட் சிதாநந்தன் கலாவதியை நோக்கித்

''துன்பமெலா மறவெறிந்தேன் றேகையர்சி ரோமணியே தூய நின்ற
னன்புமதி கண்டுபொங்கு மாநந்த சாகரத்தி னுழ்ந்திட் டேனே''

என்று கூறியது புணர்வுகளனு வுதித்த வுவகையாம். கலாவதி நாடகம்நான்காமங்கம் இரண்டாங்களத்துள்

''மாரவேள் போனுமென் வள்ள லணைய
மகிழ்ச்சி யடைந்தேனடி - அம்மா
மகிழ்ச்சி யடைந்தேனடி''

என்று கலாவதிகூறியதும் புணர்வுகளனு வுதித்த வுவகையின்பாலதாம். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங்களத்துள், தமது பதியிகந்து யாறுங் குளனுங் காவுமாடிவந்த சிதாநந்த சத்தியப்பிரியரிருவரும், காஞ்சிமாநகரைக் கண்டுழிச்சத்தியப்பிரியன் கூறிய ''கானமர் கூந்தல் வானர மகளிர்'' என்று தொடங்கும் நேரிசையாசிரியப்பா விளையாடல்களனு நிகழ்ந்த வுவகையாம்.

''கன்னிய ரெல்லா
நளியார் மாடத்து நனிபந் தாடுத
லாடவ ரயனின் றகமகிழ் வுற்று
நாடிக் காணலு நல்லார் வடிக்கண்வே
லோடி யன்னவ ருரத்திற் றைத்தலும்
பாண்டியர் திலக! பரிவுடன் பாராய்''

என்றவடிகளே மேற்குறித்த விளையாட்டுவகையு ளடங்கும். கலாவதி நாடகத்துட் கலாவதி சிதாநந்தன்றன் இளமையிலீடுபட்டு

''குன்றொத்திடு வரகு கொண்டமா
லென் றன் னுருயி ரின்ப வள்ளறு
னின் றிக்குற லாயி னுனதாற்,
றென் றற் றேருறு தீய சேறியால்''

என்று மன்மதோபாலம்பனஞ் செய்தது இளமைகளனு நிகழ்ந்தவுவகை யாம். அந் நாடகத்திலேயே சிதாநந்தன் கலாவதியைக் கண்டவுடன் அவள் வனப்பினை வியந்து சத்தியப்பிரியனிடங் கூறும்போழ்து,

"தாமரையே நல்வதனந் தையலுக்குத் தாவுமிள
மாமரையே கண்ணிணைகள் வண்பவள மேயதரங்
காமனையும் வாட்டுகின்ற கட்டழகார் கன்னிகைசேர்க்
கோமகளிப் பெண்ணரசி கூந்தலினை யென்சொல்கேன்"

என்றது வனப்புக்களனு வுண்டான வுவகையாம். களன்: களம்; மொழியிறு திப்போலி. உவகைச் சுவையினை ஆதிரஸ மென்றுங் கூறுப. (௩0)

41. உடனுறை யின்பம் பிரிந்துறை யின்பமென்
றிருவகை யாகு மியம்பிய வுவகை.

உடன் உறை இன்பம் - உடன் உறைதலால் உண்டாகும் இன்பம், பிரிந்து உறை இன்பம் - பிரிந்துறைதலால் உண்டாகும் இன்பம், என்று இரண்டு வகை ஆகும் இயம்பிய உவகை - என்று இருவகையப்பட்டு வழங் கும் மேற் சூத்திரத்துட் கூறி உவகைச்சுவை.

குறிப்பு:—இவையிற்றினை வடநூலார் சம்போக சிங்காரம், விப்பிர லம்ப சிங்கார மெனக்கூறுப. உடனுறையின்பமாவது தலைவனுந் தலைவியுங் கூடியவழிப் பிறக்குமின்பமாம். கலாவதிநாடகத்துள், சிதாநந்தன் கலாவயுட னிருப்புழி,

"விதவிதமாய்க் கருப்புவிலின் மலர்க்கணைக
டொடுத் தென்னை விரைந்து வாட்டு
மதவிடனு மொருபகைவன் மறைந்தனனீ
யென்று ணையாய்வதிந லானே"

என்றுகூறியது சம்போக சிங்காரமென்னும் உடனுறையின்பத்தின் பால தாம். பிரிந்துறையின்பமாவது தலைவனுந் தலைவியும் பிரிந்துழி நேரு மின்பம். பிரிந்துழி, இன்பமும் நேருமோ வென்று சிலர் ஐயுறுவார். அற்றன்று; பிரிந்த வர் கூடுவரென்னு மெண்ணத்தா னிகழுங்களிப்பே யிதற்குச் சான்றாகும். வரவு காத்திருக்கையானும் நம்பிக்கையானு முண்டாகுமின்பம் இற்றென அறியாரே யையுறுவாரெனவிடுக்க. (cf. "Hope is sweeter than the reward.") கலாவதி நாடகத்துட்சிதாநந்தன் சயதுங்கனுடன் மற்போர் செய்யப்பிரிந்துழிக் கலாவதி சிதாநந்தன் செயங்கொண்டு மீண்டு தன்னை யணுகுவான் என்ற நம்பிக்கையான் மலர் மரங்களை நோக்கித் தன்னுயகற்கு அணியமலர்கள் தரவேண்டிக் கொய்தலையுற்று நோக்குவார்க்கு இதனுண்மை வெளிப்படும்.

"என்ற னுடனிறத்தை யெய்தியதிச் சம்பகப்பூ
வென்று நமைத்துதிக்கு மேந்தல் களிகூரத்
துன்றுமன்றற் சம்பகங்கா டேயமலர் தாரீரோ !";

"வீசுமிளந் தென்றல்வளர் மென்பொழிற்க ணுற்றிலங்கும்
வாச மிருபவள மல்லிகைகா ளென்னருமை
நேசத் தலைவனுக்கு நீவிர்மலர் தாரீரோ!";
"தள்ளரிய முல்லைகளே சம்பங்கிப் பூங்கொடியே
கள்ளவிழு மாதவியே காதலன்சி தாநந்த
வள்ள-றனக்கணிய வண்மலர்நீர் தாரீரோ!"

என்ற பாடல்கள் விப்பிரலம்பசிங்கார மென்னும் பிரிந்துறை யின்பத்தின் பாலவாம். உவகைச் சுவையின் நலப்பாடெல்லாம் பிரிந்துறை யின்பத்தா னேயே. பிரிந்துறையின்பமே யுவகைச்சுவைக்கு அழகு பயப்பது. (௩௧)

42. உழுவ லன்புமா னம்பிர வாசஞ்
சோக மென்னச் சொல்லு நான்கும்
பிரிந்துறை யின்பப் பிரிவுக ளாகும்.

உழுவல் அன்பு - மிகுந்த அன்பு-, மானம், பிரவாசம்–, சோகம்–, என்ன சொல்லும் நான்கும் - என்று சொல்லப்பட்ட நான்கும், பிரிந்து உறை இன்பம் பிரிவுகள் ஆகும் - விப்பிரலம்பசிங்கார மென்னும் பிரிந்துறை யின்பத்தின் பாகுபாடுகளாம்.

குறிப்பு:—உழுவலன்பு : எழுமை யெழுபிறப்புந் தொடர்ந்துவரும் அன்பு. இதனைப் பூருவராகமென்ப வடநூலார். பூருவராகம்: முதல் அன்பு. முற்பிறப்பிற் செய்வினையின் பயனும் இம்மையில் தலைவன்றலை வியர்தம்முள் ஒருவரை யொருவர் கனவிற்கண்டு அன்பு கூர்தலும் ஒற்றர் கள் கொணர்ந்த படங்களைக்கண்டு நேசமீக்கூர்தலும் பிறகு ஒருவரை யொருவர் காணவிரும்பி மனத்திலடங்காக் கவலை யடைதலும் உழுவலன் பாம். மனோன்மணீயத்தில் மனோன்மணியும் புருடோத்தமவர்மனும் ஒரு வரையொருவர் கனமாத் திரையிற்கண்டு காமுற்று வருந்தலும், கலாவதியிற் கலாவதி, சிதாநந்தனுடைய படத்தைக்கண்டு காமுற்று வருந்தி,

"வென்றி விளங்கும் வேலுறு கையாய்
குன்றுறழ் தோளாய் கோதறு செய்யாய்
மன்றினி லெல்லா மாநுடர் முன்னு
மென்றனை மேய்கா னின்புறு கேனோ?";
"கையினிற் போந்தி ருந்த காமரு மணியே யென்ற
னையனே நின்னை நேரி லடியனே னென்று காண்பேன்
றய்யனே யென்று காண்பேன் சுந்தரா வென்று காண்பேன்
செய்யனே யென்று காண்பேன் செல்வமே யென்று காண்பேன்"

என்று ஆற்றாது கூறியதும் உழுவலன்பினடியா வெழுந்த பிரிந்துறையின்ப மாம். இவ்வுழுவலன்பினை, நீலி, குசும்பை, மஞ்சிஷ்டையென மூவகையாகப் பிரிக்குநருமுளர். அப்பாகுபாட்டினாற் பெரும்பயனின்மையான் விடுக்க.

மானம்: தலைவன்றலைவியர் தம்முள் ஒருவர்க்கொருவர் கொண்ட பேரன்பின் காரணத்தானும் பொறாமை காரணத்தானும் எழூஉம் ஒருவகைச் சிறு கோபத்திற்கு மானமென்று பெயர் கூறுப. இது பிரணயமானமென்றும், இருடியமான மென்றும் இருவகைப்படும். பிரணயமானம்: காரணமின்றிப் பேரன்பின் மேலீட்டால் உண்டாகுஞ் சிறுகோபம். இஃது ஊடல் என்றும் பெயர் பெறும். இக்கோபத்தானும் உவகை யின்பம் உண்டாகுமோ வெனின் உண்டாகும்;

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்"

என்ற வள்ளுவர் வாக்கினை யுய்த்துணர்க. இதற்குதாரணமாக ரூபாவதி நாடகம் நான்காமங்கம் ஐந்தாங் களத்திற் சுந்தரசுரூபர் என்று மறுபெயர் பூண்டு மாறுவேடந் தரித்திருந்த சுந்தராநந்தனும் ரூபாவதியும் ஒருவர்க்கொருவர் விநோதமாக வாதாடியது பிரணயமானமென்னும் ஊடலின் பாலதாம். இருடியமானம்: தனது தலைவன் மற்றொரு நாயகியினிடத்தில் இச்சைகொண்டானென்று தெரிந்த போழ்தும் அன்னணம் ஆசங்கைகொண்ட போழ்தும் உண்டாகும் பொறாமையானெழுந்த கோபமாம்.

"ஒடிவி னுயகன் பரத்தைபா லொழுகுவ துணர்ந்த
வடிவி லாமகன் மனமென வெதும்பி"

என்று தாமரை நாண்மலரிற் கூறியவண்ணம் இக்காரணத்தாலெழுங் கோபமுந் துக்கமும் முன்னர்க்குறித்த பிரணயமானத்தா லுண்டாகுங் கோபத்தினும் மேம்பட்டவாம். நாமகள் சிலம்பின் நான்காம் பரலாகிய சுகுண சுகேசர் என்னும் நாடகம் நான்கா மங்கம் இரண்டாங்களத்துள், சுகேசன் மல்லிகையின்மேற் காதல்கொண்டதை யுணர்ந்த அவன் மனைவியாகிய விஜயை யென்பாள் ஆற்றுது,

"சொற்றநின்ற றைசைமொழி சுருதியென நம்பியென்ற
னுற்றவரை விட்டேகி யுனையடைந்தேன் பற்றுடைய
நற்றலைவன் கற்புடைய நங்கையர்க்குப் பற்றென்று
சற்றுமென்மீ திரக்கமிலாத் தலைவாவென் றலைவாவோ"

என்று கூறியதும், கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் முதற் களத்தில் விகடவசன னென்னும் விதூடகன், சிதாநந்தன் வேறிருமாதர்களை மணந்துளான் என்று கூறியதைக் கேட்ட கலாவதி யடைந்த மனவருத்தமுங் கோபமும் இருடியமானமாம். பிரவாசம்: கல்விவயினுதல், பொருள்வயினுதல், துணைவயினுதல், போர்வயினுதல் பிரிந்த தலைமகன் குறித்தகாலத்து வாராது தாழ்த்தமையான் வருந்திய தலைவியடைந்த துயரமாம். தன்னுட்கையாறெய்திடு கிளவி, கழிக்கரைப் புலம்பல், தூது ஆதியவை இதனுளடங்கும். சுகுண சுகேசர் நாடகம் மூன்றுமங்கம் நான்காங் களத்துள் தற்பிரிந்து சென்ற சுகேசனை நினைத்து விஜயை, பத்மாவதி யென்னுந் தோழியை நோக்கி,

"என்ற னிதயத்தி னின்பங் கவர்ந்தவனை
யென்றையான் காண்பலோ வென்செய்கோ தோழி!
இருதிங்க ளாயினவே யென்செய்கோ தோழி!!
எப்போதென் னுத னெஞ்சையணைப்பானிவ்விடத்தே
தப்பாமல் வந்திடுவான் சாற்றுயென் றேழி!
தமியனேன் செல்லவிடை சாற்றுயென் றேழி!!
என்னுதன் வந்திடுவா னென்றே யிதுகாறுங்
கொன்னே யிருந்தனெனே கூறுயென் றேழி!
குறுகே லவன்கணென் று கூறுயென் றேழி!!"

என்று இரங்கியதும், கலாவதி நாடகத்துள் இரண்டாமங்கம் மூன்றுங் களத்தில், வாசந்திகை யென்பாள் தற்பிரிந்து சென்ற தலைவனிடங் குயிலினைத் தூதுவிடுப்பான் கருதி அதனை நோக்கி,

"கறையொன்றிய வேற்படைக் காவலனென்
னிறைதன்னிட மேகியெ னேக்கமெலா
மறைதந்து புரந்திடெ னுருயிரைக்
குறையொன்று மிலாக்கருங் கோகிலமே"

என்று கூறியதும், பிரவாச விப்பிரலம்பமாம். சோகம்: தலைவன்றலைவியர் தம்முள் ஒருவர் மற்றொருவரை விரும்பவும் பிற்கூறியவர் முற்கூறியவரிடத்துக் காதல் கொள்ளாதிருக்கவும் மையல் மாறுபாடுற்றுழிக் காதல் புறக்கணிக்கப்பட்டவர் கொள்ளும் அளவற்ற மனத்துயரஞ் சோகமாம். சுகுணசுகேசர் நாடகத்தில் விஜயை சுகேசனை விரும்பவும் சுகேசன் அவளை விரும்பாதவனுய் மல்லிகையின்மேற் காதல் கொண்டதுமன்றி விஜயையினையே மல்லிகையினிடம் தூதனுப்பி விஜயை தனக்குக் கொடுத்த மோதிரத்தை மல்லிகையினிடங் கொடுக்கச்சொன்ன போழ்து அவள் மனமாழ்கித் துன்பமீக்கூர்ந்து,

"ஏனேவிவ் வேவ லியற்றுகிற்ப லின்னவெலாம்
யானு வனுபவிப்பா னீண்டைப் பிறந்தேனைத்
தானுகக் கோலைத் தலைவற் கெடுத்துதவுங்
கானுர் களியென்று கற்றோர் கழறுவரால்"

"கொட்டியளக் கினுமென்றுங் குறுணிபதக் காகாத கொள்கை போல
மட்டின்றி யவன்செயலின் கொடுமையினை யுன்னியுன்னி வருந்தி னுலு
மெட்டிமரம் பழுத்திட்ட பயன்போலா மன்பினெனை யினிப்பா ராட்டிற்
பட்டமரந் தளிர்விடுதற் பான்மையெனத் துணிவுகொடு பகர லாமே"

என்று புலம்பியது சோகவிப்பிரலம்பமாம். (௬௨)

பெருமிதம்

43. கல்வி தறுக ணிசைகொடை யடியா
வெஞ்சா வுரனு மஞ்சா முரணும்
விஞ்சா நிற்பது விளையும் பெருமிதம்.

கல்வி—, தறுகண் - அஞ்சாமை, இசை - புகழ், கொடை - தானம், (இவைகளின்) அடியா - காரணமாக, எஞ்சா உரனும் - குறைவுபடாத வலிமையும், அஞ்சா முரணும் - பயப்படாத மனவுறுதியும், விஞ்சா நிற்பது - மிகுதியும் பொருந்திநிற்பது, விளையும் பெருமிதம் - மேன்மேலும் உண்டாகும் பெருமிதச் சுவையாம்.

குறிப்பு:—இச்சுவையினை வீரமென்றுங் கூறுப. 'விளையும் பெருமித' மென்றதனானே காமம்பற்றியும் பெருமிதம் பிறக்கு மென்று கொள்க.

"பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே,"

என்பது காமம்பற்றிய பெருமிதம். (புறம். 73)

பெருமிதம்: எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்பது. கல்வி: பன்னூல் பயின்றதனா னுண்டாகும் பேரறிவு, தவ முதலாகிய விச்சை யிவையிற்றினைக் குறித்து நிற்கும். தறுகண்: அஞ்சத்தக்கன கண்டும், அஞ்சாமை. இசை: இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடை: உயிரும் உடம்பும் உறுப்பும் முதலிய வெல்லாப் பொருளுங் கொடுத்தல். நாமகள் சிலம்பின் முதற்பரலாகிய ரூபாவதி நாடகம் மூன்றாமங்கம் முதற்களத்துள், கல்விக்கடலாகிய வித்தியாசாகரப் புலவர் சூரசேக வர்மனிடத்துப் பரிசில்பெறச் சென்றபொழுது மன்னனை நோக்கி,

"சுகபோக சுகுணமன் மதரூப மகாராஜ சூரசேநவர்மர் சமுகத்திற்கு, அடியேம் ககன மூதண்ட வேதண்ட பிரமாண்ட மெங்கணுங் கனபுகழ் படைத்த வரவேம், இமயமுத லீழம்வரை யிவர்க்குநிக ரெவருமிலை யென்றுசொலப்பெற்றதகையேம், கவிமதக் குஞ்சரங் கல்விக்களஞ்சியம், ஆதல்பற்றி வித்தியா சாகரப் புலவரெனு மேலான வபிதானமுடையராவேம், வந்தனந் தந்தனந் தந்தனம் பெற்றேகவே" என்று கூறியது கல்வியானெழுந்த பெருமிதமாம். புலவர்கள் அரசவைக்கு எழுதுஞ் சீட்டுக் கவிகளினும் இது காண்க. கலாவதி நாடகம் நான்காமங்கம் நான்காங்களத்துள் மல்லயுத்தத்திற்கு வருமாறு அறைகூவிய சயதுங்கசோழனை நோக்கிச் சிதாநந்தன்,

"மல்லயுத்த மாவீர வள்ளால் சயதுங்க
வல்லவனே வண்சோழ மன்னவனே—சொல்லுதும்யா
மெப்பொழுது போர்க்கெழு மென்றிருப்பே மாதலினு
மிப்பொழுதுஞ் சன்னத்த மே"

என்று கூறியது தறுகண்காரணமாக வெழுந்த பெருமிதத்தின் பாலதாம். கலாவதி நாடகம் முதலங்கம் இரண்டாங்களத்திற் சிதாநந்தன் தனது தந்தையை நோக்கி,

'அரசர்மரபிற் பிறந்தவர்களும் பிறர்க்கஞ்சுவார்களோ?'

"நீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை''

என்று கூறியது இசையாலெழுந்த பெருமிதத்தின் கண்ணதாம். மகாபார தத்தில், முதிர்ந்த வேதியன் வடிவுகொடு தான புண்ணியத்தை யாசிப் பான் வந்த கண்ணனை நோக்கி,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் பயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையா
லோவிலா தியான்செய் புண்ணிய மனைத்து
முதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வா ழயனு நிகரில னென்றாற்
புண்ணிய மதனினும் பெரிதோ''

என்று கர்ணன் கூறியது கொடையாலெழுந்த வீரமாம். இனி உரை யிற்கோடலென்னு முத்தியால் தயாவீரமுங் கொள்க. இதற்குதாரணம் புத்த தேவன் செயல்களிற் காண்க. (௩௩)

நகை

44. எள்ளல் பகைமை மயக்க மடியாச்
சிரிப்பினை விளைக்குஞ் செயலுங் கிளவியு
நண்ணி நிற்பது நகையெனுஞ் சுவையே.

எள்ளல் - இகழ்ச்சி, பகைமை - விரோதம், மயக்கம் - மயங்குதல், (இவை), அடியா - காரணமாக, சிரிப்பினை விளைக்கும் செயலும் கிளவி யும் - சிரிப்பினை யுண்டாக்குஞ் செய்கையுஞ் சொல்லும், நண்ணி நிற்பது - பொருந்தி யிருப்பது, நகை எனும் சுவை - நகையென்று சொல்லப்பட்ட சுவையாம்.

குறிப்பு:—ஏகாரம் - ஈற்றசை. தோல்காப்பியம் முதலாய நூல்களுள் எள்ளல் இளமை பேதைமை மடன் என்று நகைச்சுவையினைப் பாகுபடுத்தி யிருப்ப இவ்வாசிரியர் பிறிதொடுபடாஅன் றன்மதங்கொளல் என்னும் மதம்பற்றி எள்ளல் பகைமை மயக்கம் என்னும் பாகுபாடு கூறிய தெற் றிற்கோ வெனின், இளமை பேதைமை மடன் என்னும் மூன்றும் ஒரு வாறு எள்ளலின்கண் அடங்குதலானும், எள்ளல்போற் பகைமையும் மயக்க மும் நகையினுக்கு அடியாக நிற்றலானுமென்க. கலாவதி நாடகம் இரண்டா மங்கம் இரண்டாங் களத்துள் விகடவசநன், சுகசரீரனை இகழ்ந்து,

"யார்க்குமிப் பெரியர் பார்க்கப் பூனையைப்
போலிருந் தானுஞ் சிலமார் சுகத்தை
நாடுகிற் பதினும் பிடிசால் பூசையைப்
போன்றவ ரென்றே யான்றோ ருரைப்பார்
வினைவலி யானே விமல நற்றுணை
மனைவியை யிழந்த மாயிருந் துயராற்
பிறனில் விழையா மயங்கி யுழல்பவர்
மறனுர் தொழில்பல மாண்புறச் செய்தவர்
அரைசர்க் குறவென் றுரைசெய் திறப்பவர்
காமக் கணிகைய ரேமமன் றறிபார்
பூதரத் தினும்பெரும் புந்தி யுடையவர்
மாதரார் பழிச்சுமன் மதனுறு வடிவினர்
இவரை மணந்துறு மேர்திழைக் கெய்துந்
தவறரு மின்ப மன்றியுஞ் சாந்த
மொழியுந் தன்மைய ருத்தமச் செல்வரே"

என்று கூறியது எள்ளலா னிகழ்ந்த நகையாம். நாமகள் சிலம்பிற் பத்தாம் பரலாகிய முத்திராராட்சசம் முதல் அங்கம் முதற் களத்திற் சாணக்கியன் தன் குஞ்சியை விரித்துக் கையினலதை யுருவிக்கொண்டு,

"நந்தர் தங்குலத் திற்குமா விடஞ்செறி நாக
நந்து கோபச்செந் தீவளர் நற்புகைக் கொடியென்
விந்தை யார்சிகை விரிந்திடல் விழைதர வின்றிப்
புந்தி யற்றுத்த னுயிரினைப் போக்குவோன் யாரே"

என்று கூறியது பகைமையினுலுண்டான நகையின் பாலதாம். நாமகள் சிலம்பின் ஏழாம்பரலாகிய சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்துள், சூர்ப்பணகை தனக்குப் பேரழகுவாய்ந்த நாயகன் கிடைப்பானேவென்று சோதிடங் கேட்க ஒரு முனிவன்பாற் செல்ல அவன் இவளைக் கண்டு பயந்தோடிக் கீழே வீழ்ந்தபோழ்து சூர்ப்பணகை நகைத்தது மயக்கத்தினடியாப் பிறந்தது; இனிப் பித்தன் கட்குடியன் முதலியோர்க்குக் காரணமின்றித் தோன்றும் நகையும் மயக்கத்தினடியாப் பிறந்ததாம். இந்நகைச் சுவையினை ஆசியமென்ப வடநூலார். (௫௪)

45. நகையெனப் படுவ தறுவகைத் தாமவை
புன்னகை வெளிநகை பெருநகை யிடிநகை
யழுநகை வலிநகை யாமென் றறைப.

நகை எனப்படுவது ஆறு வகைத்து ஆம் - மேற்சூத்திரத்திற் கூறிய நகைச்சுவை ஆறுவகைப்படும்; அவை—, புன்னகை—, வெளிநகை—, பெருநகை—, இடிநகை—, அழுநகை—, வலிநகை—, ஆம் - என்னும் பெயருடையனவாம், என்று அறைப - என்று கூறுவார்கள்.

குறிப்பு:—இவையிற்றினை வடநூலார் ஸ்மிதம், ஹசிதம் விஹசிதம், அபஹசிதம் (Abahasita), அபஹசிதம் (Apahasita) அதிஹசிதம் என்று கூறுப. இவையிற்றினுக்குதாரணம் கலாவதி முதலான நாடகங்களுள் வந்துழிவந்துழிக் காண்க. (ருடு)

சமம்

46. புலங்களிற் பற்றறப் பொலிந்தநன் னிலையே
சமநிலைச் சுவையெனச் சாற்ற லாகும்.

புலங்களில் பற்று அற பொலிந்த நன்மை நிலையே—ஐம்புலங்களினும் பற்றின்றி விளங்கும் நல்ல நிலைமையினையே, சமநிலை சுவை என - சமநிலைச் சுவையென்று, சாற்றல் ஆகும் - சொல்லலாம்.

குறிப்பு:—இதனைச் சாந்தரஸமென்ப வடநூலார். நாமகள் சிலம்பின் எட்டாம் பரலாகிய மானவிஜயம் என்னுமங்கத்தில் கோச்செங்கணாற் சிறைக்கோட்டத் திடப்பட்ட சேரமான் கணைக்காலிரும்பொறை உலக வாழ்க்கையிற் பற்றற்றவனாய்,

"என்னே யுலகம்! என்னே வாழ்க்கை!
என்னே யரசியல்! என்னே மாந்தர்!
தீமையே நன்மையாத் திரிந்து நின்றவிந்
நாமநீ ருலகின் ஞாயமு முண்டோ?
நீதியு மறமு மோதியு முணராப்
பேதை மாக்கள் பெருகிய துலகம்"

என்று கூறியது சமநிலைச்சுவை வாய்ந்ததாம். (ருசு)

47. தயைபொறை தயங்கு தன்மைத் தாதலு
மியையுமிச் சுவைக்க ணென்றலும் வழக்காம்.

தயை பொறை தயங்கு தன்மைத்து ஆதலும் - தயையும் பொறுமையும் விளங்குகின்ற தன்மையுடையதா யிருத்தலும், இயையும் இ சுவைக்கண் - இச்சம நிலைச்சுவையின் பாற்படும், என்றலும் வழக்கு ஆம் - என்று கூறுதலும் வழக்கின் பாலதாம்.

குறிப்பு:—உம்மை இழிவு சிறப்பாம். சுகுணசுகேசர் நாடகத்திற் சுகேசனது வஞ்சனையையும் தீயவெண்ணத்தையும் நன்குணர்ந்த பின்னர் அவன் வேண்டச் சுகுணன் தயையுடன் பொறுத்து,

இப்பொழுதன்றே முன்னினும் பதின்மடங்கு பெரியமுள்ள நண்பனாயினாய்!

"இருநில மாந்தர்க் கெல்லா
மிறையென மிளிரு மூர்த்தி
பொருவரு வலியெண் ணமற்
பொருதுதன் வலியி ழந்து

பெருமைசால் பரசு ராமன்
பிழைபொறுத் தருள்கென் றேங்கக்
கருநிறத் தண்ணன் மிக்க
கமைபுட னருளி னானே''

என்று அருள்செய்தது இச்சூத்திரத்திற்குக் காட்டாம். (௩எ)

வெகுளி

48. உறுப்பறை குடிகோ ளலைகொலை யடியாச்
சினமீக் கூர்ந்து தன்னை மறந்து
குறிப்பின் றெழுந்து செய்தலுஞ் சொல்லலும்
வெகுளிச் சுவையென விளம்புதன் மரபே.

உறுப்பு அறை - அவயவங்களைக் குறைத்தலும், குடிகோள் - தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடுசூழ்தலும், அலை - கோல் கொண்டலைத்தன் முதலாயினவும், கொலை - அறிவு புகழ் முதலியவற்றைக் கொன்றுரைத்தலும், அடியா - காரணமாக, சினம் மீக்கூர்ந்து - கோபம் முதிர்ந்து, தன்னை மறந்து - தன்னிலையை மறந்து, குறிப்பு இன்று - நியதி யில்லாமல், எழுந்து—, செய்தலும் சொல்லலும் - ஒருவினையினைச் செய்த லும் கடுமொழியினைப் பேசலும், வெகுளி சுவை என விளம்புதல் மரபு - வெகுளிச்சுவையென்று விளம்புதல் வழக்காம்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. உறுப்பறை: கை கால் குறைத்தலுங் கண் சூலுதலும் முதலாயின. குடிகோள்: பந்துக்கள் நண்பர்கள் மனைவி மக்கள் முதலாயினர்க்குக் கேடுசூழ்தல். அலை: மன்னன் கொடுங்கோலனுய்ப் பிரசை களை வருத்தல். கொலை: பழிமொழிபிதற்றி ஒருவனது அறிவு புகழ் முதலிய வற்றை யிழித்துரைத்தல். சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்தில், இலக்கு மணர், சூர்ப்பணகையின் முலை மூக்குகளை அறுத்துவிட, அவள் அதுகாரண மாகக் கோபத்துடன் முறையிட்டது உறுப்பறையான் வந்தவெகுளியாம். சுகுண சுகேசர் நாடகத்துள், சுகேசன், மல்லிகையின் கற்பினுக்குக் கேடிழைக்கத் தொடங்க அவள்,

"வெவ்வரவின் வாய்ப்பட்ட தமயந்தி மின்னளை மீட்ட வேட
னெவ்வுமவள் கற்பரணை யழிக்கவெணங் கொடுசெய்த வுதவி போலும்
வெளவுதொழிற் றிருடனினின் றெனைமீட்ட நின்செயலும் வஞ்சனே நீ
யெவ்விதத்து மத்திருடன் றன்னினுமா கொடியனென வியம்ப லாமே"

என்று சினந்துரையாடியதும், நண்பனுகிய தனக்குக் கேடு சூழ்ந்ததை யுணர்ந்த சுகுணன் வெகுண்டு, "அடே பாதகா! ஏ! துரோகி! நெருங்கலை!" என்று சுகேசன்மீது வாளையோச்சியதும், குடிகோளினடியாப் பிறந்த வெகுளி யாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் மூன்றுங் களத்துள், கலாவதி மனோமோகினி தனக்குக் கேடிழைக்கத் துணிந்ததைச் சிதாநந்தன்பாற் கூறிய வளவில் அவன் வெகுண்டு,

"தாதவிழ் மாமலர் தாம்புனை வாசக்
கோதை நலஞ்செறி கோமள வல்லீ!
மூதைய வன்மனொ மோகினி நாமப்
பாதகி சென்னி பறந்திடு மின்னே"

என்று கூறியதுங் குடிகோள் அடியாப் பிறந்ததாம். ரூபாவதி நாடகம் நான் காமங்கம் மூன்றாங்களத்துள் நயவசநர் என்பார், சூரசேநவர்மன் வழுதி மகனாகிய சுந்தராநந்தனைக் கொன்றுவிட்டதாகக் கூறியவளவில் மூன்றாங் கனவான் வெகுண்டு "அப்படியா செய்தான்? இனிமேல் ஒரு நிமிஷமாவது தாமதியேன்! இதோ! பாருங்கள்! அந்தப் பாதகனை நான் கொன்று விடுகின் றேன்! உங்கள் பேச்சையினிக் கேட்கவே மாட்டேன்! இந்தச் சூரசேநவர்ம னைத் தொலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்" என்றுரைத்தெழுந்தது அலையானெழுந்த வெகுளியாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் நான்காங் களத்துட் சுகசரீரன்,

"பாண்டிநாட்டாரெலாம் பரமதுட்டர்கள்"

என்று சிதாநந்தனைக் குறிப்பாயிகழ்ந்த வளவிற் சிதாநந்தன்சினந்து "என் சொனாய்? தீயோய்! எம்மையின்னர் இத்தகையரென்று அறிகிலாது இவ்வாறு தூஷித்த வுன்றன் சிரத்தை வீரபத்திரக் கடவுள் சிவபெருமானைப் பழித்த தக்கன்றலையைக் கொய்தாங்குக் கொய்கின்றேன்! பார்!" என்று வாளோச்சி, அவன்மீது பாய்ந்தது கொலையா னெழுந்த வெகுளியாம். (௩அ)

வியப்பு

49\. புதுமை பெருமை சிறுமை யாக்க
மென்ற வின்னன காரண மாக
வெதிர்பா ராச்செய லெய்திய போது
முயற்சி யின்றி முன்னிய தன்றொழின்
முற்றிய போதும் விரும்பு மதற்குமேன்
மிகவுமெய் துழியுங் கருவிக ளுறுவான்
முயலுழிப் பயனே முடிந்திடு போது
நிகழுஞ் சுவையினை நீள்வியப் பென்ப.

புதுமை - புதிதாகக் கண்டனவும், பெருமை-மிகப் பெரியவாயினவும், சிறுமை - இறப்பச் சிறியனவும், ஆக்கம் - ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவும், என்ற இன்னன காரணம் ஆக - என்று கூறப்பட்ட இவைகாரணமாக, எதிர் பாரா செயல் எய்திய போதும் - தான் எதிர்பாராத செய்கையொன்று நடந் தேறியபொழுதும், முயற்சி இன்றி - முயற்சியில்லாமல், முன்னிய தன் தொழில் - தான் நினைத்தகாரியம், முற்றிய போதும் - முடிந்தபொழுதும், விரும்பும் அதற்குமேல் மிகவும் எய்துழியும் - தான் விரும்பியதற்கு அதிக மாகக்கிடைத்தபொழுதும், கருவிகள் உறுவான் முயலுழி - உபகரணங்க ளைப் பெறும்பொருட்டு முயற்சி செய்யும்பொழுது, பயனே முடிந்திடு

போதும் - நினைத்ததொழிலின் பிரயோசனமே சித்தித்தவிடத்தும், நிகழும் சுவையினை நீள்வியப்பு என்ப - உண்டாகுஞ் சுவையினை நீண்டவியப்புச் சுவையென்று கூறுவார்கள்.

குறிப்பு:—புதுமை பெருமை சிறுமை ஆக்கம் இவையிற்றினடியாகவியப் புண்டாவது யாவர்க்குந் தெரிந்ததாதலின் உதாரணங்கூறிற்றிலம். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங்களத்துட் கலாவதியின் கையினின்று கீழேவிழுந்திருந்த சித்திரத்தைப்பார்த்த சிதாநந்தன், அதுதன்னுடைய உருவம் பொறித்த படமென்பதைக் கண்டபோழ்து,

"இப்படித்திரும்பி யிப்படம் யாரதென்
றுற்று நீதான் சற்றே பார்த்தி"

என்று சத்தியப்பிரியனை நோக்கிக் கூறியது எதிர்பாராச் செயலெய்தியதனு னுண்டான வியாப்பாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்தில், சிதாநந்தனைப் பெறவேண்டுமென்ற விருப்பமாத்திரையிற் கொண்ட கலாவதி தற்செயலாய் நந்தவனம்வர, ஆண்டுத் துயிலும் சிதாநந்தனை நோக்கி, "யான் படத்திற் பார்த்தவண்ணமே காணப்படுகின்றனனே! இஃதென்னை யாச்சரி யம்!" என்று வியந்தது முயற்சியின்றி முன்னிய தன்றொழின் முற்றியதனு னுண்டான வியப்பாம். கலாவதி நாடகத்தில், சயதுங்கன் சிதாநந்தனைச் சாதாரணமான வீரன் என்றே மதித்துத் தன்புதல்வி கலாவதியைக் கொடுக்க ஒருப்பட்டபோழ்து, அவன் பாண்டி நாட்டிறைவன் புதல்வன் என்றும் புலப்பட்டபோழ்து அவனடைந்த வியப்பு, விரும்பு மதற்குமேன் மிகவு மெய்துழி விளைந்தது. சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்தில், சூர்ப்பணகை தனக்குச் சிறந்த நாயகன் கிடைப்பனோவென்று ஜோதிடங்கேட்ப வொரு முனிவன்பாற் செல்லுழி, ஆண்டுப் பன்னசாலையில் இராமபிரானையே கண்டபோழ்து அவள் அடைந்த வியப்பு, கருவிக ளுறுவான் முயலுழிப் பயனே முடிந்ததனு னுண்டாயது. (நகூ)

இழிப்பு

50. மூப்பே பிணியே வருத்த மடியா
வெறுப்பினை விளைக்கும் வீண்செயன் மொழிகளை
வழங்கிக் காட்டுஞ் சுவையிழிப் பாகும்.

மூப்பே - மூப்பும், பிணியே - பிணியும், வருத்தம் - வருத்தமும், அடியா - காரணமாக, வெறுப்பினை விளைக்கும் வீண் செயல் மொழிகளை - வெறுப்பினையுண்டாக்கும் பயனற்ற செயல்களையும் மொழிகளையும், வழங்கி காட்டும் சுவை இழிப்பு ஆகும் - எடுத்துரைக்குஞ் சுவை இழிப்பாகும்.

குறிப்பு:—இழிப்பு எனினும் இளிவரல் எனினும் ஒக்கும். முயற்சியும் மென்மையும் வருத்தத்தினு ளடங்குமாதலின், மென்மை யென்பதனையுந் தொல்காப்பியனுர் தனியே கொண்டதற் கிணங்க நம்மாசிரியர் கூறாது விடுத்

தனர். காமகள் சிலம்பின் ஐந்தாம்பாலாகிய தசரதன்தவறு என்னும் அங்கத்தினுள், சலபோசனர்.

"பற்கழன்று கண்ணிரண்டும் பஞ்சடைய மெய்ந்நடுங்கிச்
சொற்குழறு மூப்பிற் றுயர்நரகும் வேறுளதோ?"

என்றுகூறியது மூப்பினடியாப்பிறந்த இளிவரலாம். மணிமேகலையில் மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய காதையில் சுதமதியென்பாள் உதய குமரனுக்குத்தான் மணிமேகலையுடன் உவவனஞ்சார்ந்த காரணமுரைப்புழித் தன்பிதாவின் வயிற்றினை ஆவொன்று பாய்ந்து கிழித்ததைக் கூறுங்கால்,

"ஒருநாட் புனிற்றுப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிரி மாலை கைக்கொண் டென்ன
நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி"

என்றுகூறிய தன்கட் பிணியினடியாப்போந்த இழிப்புச்சுவை கிடத்தலை யுணர்க. தசரதன் தவறு என்னு மங்கத்தில் தசரதன் சுரோசனனைக் கொன்றதற்காக வருந்தி,

"நாடு வேண்டேன் நகர்வேண்டே
னன்னு மாடந் தான்வேண்டேன்
றேடற் கரிய பொருள்வேண்டேன்
சிவிகை முதலா யினவேண்டே
ஞடு மினிய வழகுடைய
நங்கைமா ரின்பமும் வேண்டேன்
வீடு மற்றும் விழைவதொன்றும்
வேண்டேன் வேண்டேன் வேண்டேனால்"

என்று வெறுத்துக்கூறியது வருத்தத்தி னடியா வுதித்த இளிவரலின் பாலதாம். (௪0)

அவலம்

51. இளிவிழ வசைவு வறுமை யடியாத்
துக்கமுந் துன்பமுந் தோன்றிய காலை
மிக்கநீ ருகுத்தலும் விம்மலு மேங்கலு
மரற்றலு மழுதலு மயர்ந்து வீழலு
மவலச் சுவையென் றறைந்தனர் புலவர்.

இளிவு இழவு அசைவு வறுமை அடியா - இளிவு முதலாகிய நான்கி னடியாகவும், துக்கமும் - துயரமும், துன்பமும் - வருத்தமும், தோன்றிய காலை - உண்டாய விடத்து, மிக்க நீர் உகுத்தலும் - மிகுதியுங் கண்ணீர் விடுத்தலும், விம்மலும் ஏங்கலும் - விம்முதலும் ஏங்குதலும், அரற்றலும் - புலம்புதலும், அழுதலும் —, அயர்ந்து—மயங்கி, வீழலும் - தரைமிசை வீழ்தலும், புலவர் அவலம் சுவை என்று அறைந்தனர் - அறிவுடையோர் அவலச் சுவையாமென்று கூறினர்கள்.

குறிப்பு:—இளிவென்பது பிறரான் இகழப்பட்டு எளியனாதல். இழவு என்பது தந்தையுந் தாயுமுதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறொருவனாகி வருந்துதல். வறுமையென்பது போகந்துய்ப்பப் பெறாத பற்றுள்ளம். அவலச்சுவையினை அழுகை யென்றுங்கூறுப. அழுகைக் கண்ணீர்போல உவகைக்கண்ணீர் வீழ்தலுமுண்டு. அதற்கும் இதற்கும் வேறுபாடுவருஞ் சூத்திரத்திற் காண்க. தசரதன்தவறு என்னு மங்கத்தில் சுரோசனன், தன்னைச் சப்தவேதியா னெய்த தசரதனை நோக்கி,

"உண்மைநிலை கோடா துலகம் பொதுநீக்கித்
தண்மையுட னானுந் தகைமை யிதுவேயோ?"

என்று இகழ்ந்தது இளிவினடியாப் பிறந்த அவலமாம். தசரதன்தவறு என்னு மங்கத்தில், மகனாகிய சுரோசனனிறப்பத் தாய் சுசீலையென்பாள் ஆற்றாது,

"முன்னா னாற்று முதுமா தவத்தின் முளையா யுதித்த கதிரே
மின்னா திடித்தோர் கருமேக மூடி வினையேமி னின்று னொளியை
யன்னே பிரித்த வதிமாய மென்கொ லறியாம லிங்ங னிருளிற்
கொன்னே யிறப்ப விதயத்தி னம்பு குறிவைத்து விட்ட பரிசோ?"

என்று புலம்பியதும், கலாவதி நாடகத்துட் சிதாநந்தன் இறந்தானென்று கலாவதி சிறிது மாற்றாது,

"பெண்ணைப் பிறப்பா னுடவரும் பெரிது விரும்பும் பேரழகு
நண்ணு மெனது பெருமானே நவையில் பாண்டிக் குலதிலகா
மண்ணும் விண்ணு மொருங்காளு மன்னே யருமை மணாளவென்றன்
கண்ணே யனைய காதலனே கையற் றயர்ந்தேன் காணுதியோ!"

என்று புலம்பி நைந்ததும் இழவினடியாவுதித்த அவலமாம். இவ்வவலச் சுவையினைப் பாவலர் விருந்து முதனூலின்கண் இருக்கும் கையறுநிலையிற் பெரிதுங்காணலாம். கலாவதி நாடகத்திற் சயதுங்கசோழன் றன்னிலை தவறி மனோமோகினி யென்னும் மாயக்கணிகையின் வலையிற்சிக்குண்டு தவித்தலை யோர்ந்த அவன் மகள் கலாவதி கையற்று,

"ஆகம் பலமருவு மன்பில் பொதுமாதர்
மோகம் பிடித்தெந்தை மூதறி வெலாமிழந்தா
ரேகம்பத் தெம்மானே யென்னைவந்து காவாயோ?"

என்று இரங்கியது அசைவின் காரணமாவுண்டான அவலமாம். கலாவதி நாடகத்தில், கலாவதி யிறந்தாளென்று நினைத்த சிதாநந்தன்,

"பாடகச் சீறடிப் பாவை யேமணிச்
சூடகக் கையினாய் சுகுண நாரிநா
மூடியுங் கூடியு முற்ற வின்பெலா
நாடக மாயின நங்கை நாயகி!"

என்று அழுதிரங்கியது வறுமைபடியாகத் தோன்றிய அவலமாம். சசியினை மருவப்பெறாது வருந்திய இந்திரன்,

"போந்திடு காலையிற் புலோ மசைப்பெய
ரேந்திழை காமநோ யெரியின் றப்பினாற்
காந்திய வுளத்தினன் கனலும் யாக்கைய
னேய்ந்தனன் றட்பமே லுளம்வைத் தேகினான்,"

(கந். பு. குமா. 33)

என்ற கவியும் அதுவாம். (சுக)

52. பொருந்துறு மாசை புகுந்துள தாதலிற்
பிரிந்துறை யின்பச் சோகம்வே றாகு
மவலச் சுவையி னடைந்தசோ கத்தின்.

பொருந்து உறும் ஆசை - இதயத்தின்கண் எக்காலத்தும் தங்கப் பெற்ற ஆசை, புகுந்து உளது ஆதலில் - பொருந்திய காரணத்தால், பிரிந்து உறை இன்பம் சோகம் - விப்பிரலம்ப சிங்காரமென்னும் பிரிந்துறையின் பத்தினுண்டாகும் சோகமானது, அவலம் சுவையின் அடைந்த சோகத்தின் - அழுகைச் சுவையினாலுண்டான சோகத்தினின்றும், வேறு ஆகும் - வேறுபாடுற்றதாகும்.

குறிப்பு:—உழுவலன்பு, மானம், பிரவாசம், சோகமென்னும் பிரிந்துறையின்பப்பகுதி நான்கனுள்ளுந் சிறிதுதுயர் காணப்படுமாதலின் அந் நான்கினுக்கும் அவலத்தின் பாலதாய சோகத்தினுக்கு முண்டாம் வேற்றுமையினை யாசிரியர் இச்சூத்திரத்தாற் றெரித்தார். கலாவதி நாடகத்தில் வாசந்திகை பாடிய,

"ஞாலமி சைத்தமியேன் சீலமிலா மதவே
ளாவிட ரார்தலெமான் பாலுரை பைங்கிளியே!"

என்ற செய்யுளின்கட் போந்த பிரிந்துறையின்பச் சோகத்தினுக்கும், தசரதன் தவறு என்னு மங்கத்தினிற் புதல்வனிறப்பத் தாயாகிய சுசீலை புலம்பிய,

"செய்யாய் நீயுன் னுளமதனிற் சிந்தித் திருந்த தென்னைகொலோ
வையா வென்னக் கூயினையோ வம்மா வென்ன விளித்தனையோ
பொய்யா மிந்தப் புவியதனிற் பொருந்தி வாழப் பொறுக்ககிலே
னையோ வினிமே லுயிர்தரியே னரசே யரசே யரசேயோ!"

என்ற இரங்கலின்கட் போந்த அவலத்தின் பாலதாய சோகத்தினுக்கும் உற்ற வேற்றுமையினை யோர்ந்து அறிக. இன்னும் விரிப்பிற் பெருகும். (சுஉ)

அச்சம்.

53. அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையே
யாதிய காரண மாகத் தம்முடை
யுயிர்க்கும் பொருட்கு முலப்பின் றேதம்

வருங்கொ லென்று பயந்து நடுங்கி
மாழ்க லச்சமா வகுத்தனர் வல்லோர்.

அணங்கே - தெய்வமும், விலங்கே - மிருகங்களும், கள்வர் - கள்வரும், தம் இறையே - தமக்கு இறைவராயினரும், ஆதியா - காரணமாக, தம்முடை உயிர்க்கும் - தமது உயிரினுக்கும், பொருட்கும் - பொருளினுக்கும், உலப்பு இன்று ஏதம் வருங்கொல் என்று - தவறுதலின்றித் துன்பம் உண்டாகுமென்று, பயந்து நடுங்கி - மனத்திற் பயந்து உடல் நடுங்கி, மாழ்கல் - கலங்குதலை, வல்லோர் - அறிவான்மிக்கோர், அச்சமா வகுத்தனர் - அச்சச்சுவை யெனக்கூறினர்.

குறிப்பு:—பயானகம் என்பதும் இஃதே. அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறுகிய பதினெண்கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற் றொழிலராகிய சவந்தின்பெண்டிர் இடாகினி மோகினி முதலாயினரும் உருமிசைத் தொடக்கத்தனவு மெனப்படும். பாம்பினை நாகசாதியின்கட்கொண்டு அணங்கின்பாற் படுத்தாது பிற்காலத்தார் விலங்கின்பாற் படுத்துமுரைப்பர். எனினு மஃதிழுக்கன்று. விலங்கென்பன அரிமா கொடுவரி யாதிய அஞ்சத்தக்கன. கள்வர் என்பார் தீத்தொழில் புரிவார். இறையெனப் படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினர். ரூபாவதி நாடகம் இரண்டாமங்கம் முதற்களத்தில், ரூபாவதி சுந்தராகந்தனை நினைந்து கண்ணீர்வடிப்ப அதைக்கண்ணுற்ற கநகமாலை யென்னுந் தோழி அம்புஜாட்சி யென்னும் மற்றொரு தோழியை நோக்கி "அம்புஜாட்சி! இந்தச் சோலையிலே ஒரு வனதேவதை யுண்டென்று சொல்லக் கேட்டிருக்கிறோமே! எங்கே அதுதான் ஒருவேளை யிவள் தனியாயிருக்கும்போது வந்து பயமுறுத்திவிட்டுப் போயிற்றோ? என்னவோ?" என்று கூறியது அணங்கினுண்டான அச்சத்தின்பாலதாம். மணிமேகலைச் சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையிற் சார்ங்கலனென்பான் சுடுகாட்டுக் கோட்டத்தின் வழியாவர ஆண்டுப்,

"பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்னா திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி
விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்தீங்

கெம்மனை காணு யீமச் சுடலையின்
வெம்முது பேய்க்கென் னுயிர்கொடுத் தேனென''த்

தன் தாயெதிர் வீழ்ந் துயிர்துறந்தது அணங்கின் காரணமாவுதித்த அச்சத்தின்பாலதாம். தசரதன் தவறு என்னும் அங்கத்தில் தசரதனுடன் வேட்டைக்குச் சென்ற ஏமநாதன் என்பான், காட்டிலுள்ள புலி கரடிகளி னொலியினைக் கேட்டுப் பயந்து "போதும் போதும் மகாராஜா! என்ன செய்துவிட்டீர்கள்! எனக்குப் பயமாயிருக்கின்றதே! புலி கரடி வசிக்குங் கொடுங் காட்டில் என்னைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டீர்களே! நானென்ன செய்வேன்?" என்று தசரதனை நோக்கிக் குழறியது விலங்கின்காரணமா வுண்டான அச்சத்தின்பாற்படும். ரூபாவதி நாடகம் மூன்றுமங்கம் முதற்களத்திற் சூரசேனவர்மன், வித்தியாசாகரப் புலவரை நோக்கி, "ஏ! புலவரே! என்ன மடமடவென்று உம்பாட்டிற்கு அடித்துக்கொண்டு போகிறீரே!" என்று கூறிய மொழிகளைக் கேட்டவுடன் புலவர் நடுநடுங்கி வாய்குழறி "என்ன! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரியவில்லையே! எமது பாட்டிற்காக எம்மை அடிக்கிறதா? தெரியாது வந்துவிட்டேன்! மகாராஜாவே! மன்னிக்கவேண்டும்! மன்னிக்க வேண்டும்" என்று இரங்கியது இறையினானுண்டான அச்சத்தின்பாலதாம். மேற்குறித்த ஒன்பான் சுவையினுக்குந் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிற் கொடுத்துள உதாரணங்களைக் கொடுத்தால் அவ்வுதாரணங்களுக்கும் உரையெழுதவேண்டி வருமாதலானும் அன்னணஞ் செய்தால் உரைமிகப் பெருகுவதனோடு வேண்டா கூறலின் பாற்படுமாதலானும், அவ்வுதாரணங்களினும் பல்வகையினுந் தெளிவுற்று விளங்கு முதாரணங்கள் பிற்காலத்துத் தோன்றிய பற்பல நாடகங்களினும் பொதுளி யிருத்தலானும், நாடகவியற் சூத்திரங்கட்கு நாடகங்களினின்றுமே யுதாரணங் கொடுத்தல் சிறப்பாமாதலானும், இன்னணம் பல நாடகங்களி னின்றுமே பெரும்பாலுமுதாரணங்க ளெடுத்துரைத்தாம். (சங)

நிலைக்கருத்து

54. நாடக நூலு ணலம்பெறக் காட்டுஞ்
செய்திறத் தானுஞ் சொற்றிறத் தானுந்
தூண்டப் படூஉந் தொடர்பின் றிண்மையாற்
றமவே போல நுகர்ச்சி நிலையிற்
போந்து காணுநர்க் கின்பம் புகட்டி
நிற்றலாற் சுவையை நிலைக்கருத் தென்ப.

நாடகம் நூலுள்—, நலம் பெறக்காட்டும் - நன்மைபொருந்தக் காட்டும், செய் திறத்தானும் - ஒரு வினையினைச் செய்து முடிக்குஞ் சக்தியினானும், சொல் திறத்தானும் - சொல்லின் வன்மையானும், தூண்டப்படூஉம் - மனத்தின்கண் எழுப்பப்படும், தொடர்பின் திண்மையால் - சம்பந்தத்தின் பலத்தால், தமவே போல - அவை தம்முடையன வேயென்று சொல்லும்படி,

நுகர்ச்சி நிலையில் போந்து - அநுபவ நிலையின்கண் ஈடுபட்டு, காணுநர்க்கு இன்பம் புகட்டி - பார்ப்பவர்கட்கு இன்பத்தினை யளித்து, நிற்றலால் - நிற்குங் காரணத்தால், சுவையினை நிலைக்கருத்து என்ப - சுவையினை நிலைக்கருத்தென்று சொல்லுவார்கள்.

குறிப்பு:—படுஉம்: இன்னிசையளபெடை; ஈண்டுச் செய்யுளிசை நிறைக்குமாறுமுணர்க. காணுநர்: Audience நிலை. க்கருத்தினை ஸ்தாயிபாவமென்பர் வடநூலார். நிலைக்கருத்தின் காரணத்தை விபாவமெனவும், துணைக் கருவிகளினைச் சஞ்சாரிபாவமென்றுங் கூறுப. அன்றியும் இவைகளாலே யுண்டாகி இச்சுவைகளை வெளிப்படுத்தி நிற்குஞ் சில பாவங்களைச் சாத்துவிகபாவமென்று கூறுப.

விபாவம்: வடிவம், யௌவநம், யௌவநத்தினுண்டாகிய ஹாவபாவங்கள், சிலம்பு முதலிய ஆபரண மணிதல், தென்றல், சந்திரன் முதலியனவாம்.

அநுபாவம்: கண்ணோக்கம், மயிர்க்கூச்செறிதல், புருவம் வளைத்தல், முதலியன.

வியபிசாரிபாவம்: (1) வெறுப்பு, (2) பலக்குறைவு, (3) கெடுதியின் வரவை யூகித்தல், (4) பிறர்தம் மேன்மையைப்பொறாமை, (5) மது முதலியவற்றை உண்டலால் உளதாம் மயக்கம், (6) கலவி முதலியவற்றாலுண்டாஞ் சோர்வு, (7) செய்ய வேண்டுந் தொழில்களில் முயற்சியின்மை, (8) பலக் குறைவாலுண்டாம் வணக்கம், (9) இஷ்டங் கிடையாமையாலுண்டாங்கருதுதல், (10) பயம் முதலியவற்றாலுண்டாம் மதிமயக்கம், (11) முன்னநுபவித்ததை நினைத்தல், (12) இஷ்டபூர்த்தி முதலியவற்றாலுளதாம் மகிழ்ச்சி, (13) மனக்குவிவு, (14) ஆசை முதலியவற்றானேற்படும் நிலையின்மை, (15) நாயகன் வரவு முதலியவற்றாலுண்டாம் மதிவிளக்கம், (16) இஷ்டம், இஷ்டக் குறைவு இவ்விரண்டினாலுண்டாம் மனத்தின் பரபரப்பு, (17) இஷ்டம், அநிஷ்டங்களில் இவ்விதம் செய்யவேண்டுமென்ற அறிவின்மை, (18) பலம் முதலியவற்றால் பிறரை அவமானப்படுத்தித் தான் மேன்மையாக இருத்தல், (19) உபாயந் தோன்றாமையாலுண்டாம் மனமுறிவு, (20) காலவிளம்பநத்தைப் பொறாமை, (21) யாதுந் தோன்றாமை, (22) துக்க முதலியவற்றாலேற்படும் ஆவேசம், (2·) அதிநித்திரை, (24) விழித்தல், (25) குற்றமுள்ளவர்களிடங் குரூரமான செய்கை, (26) ஸந்தோஷ முதலியவைகளை மறைத்தல், (27) குற்றத்தைக் கண்டுமிகக் கோபித்தல், (28) உண்மையைத் தெரிந்து பொருளைத் தீர்மானித்தல், (29) அவமான முதலியவற்றாலுண்டாம் மன வருத்தம், (30) அஃறிணையினும் உயர்திணையினும் ஓரேவிதமான எண்ணங் கோடல், (31) உயிர் நீங்குவதற்குச் செய்யுந்தொழில், (32) காரணமின்றி நேரிடுகின்ற பயத்தாலுளதாம் மனக்கலக்கம், (33) ஐயத்தினாற் பலவித மூகித்தல் என முப்பத்து மூன்று பிரிவினதாம்.

ஈண்டுக் கூறிய விபாவ அநுபாவ வியபிசாரி பாவங்களாலுண்டாம் மனச் செய்கை சுவை அல்லது ரஸமென்பர். இவை (1) ஸம்போக விஷயமான விருப்பம், (2) விகார வடிவத்தைக் காண்பது முதலியவற்றாலுண்டாம் மநோவிகாரம், (3) இஷ்டஜனப் பிரிவாற்றாமையாலுண்டாம் மனவெப்பம், (4) சத்துருவினாற் செய்யப்படுங் குற்றத்தினாலேற்படும் மனவெப்பம், (5) மேன்மையான காரியங்களி லுறுதியான முயற்சி, (6) குரூரமானவைகளைப் பார்ப்பது முதலியவற்றாலாம் கெடுதியினாகித்தல், (7) குற்றமான பொருள்களைப்பார்த்தன் முதலியவற்றாலுண்டாம் மனக்குவிவு, (8) முன்காணாத பொருள்களைக் கண்டதனாலுண்டா மனப்பெருக்கு, (9) வைராக்கியத்தினாற் சித்தம் விகாரமடையாமலிருத்தல் என்றொன்பது வகைப்படும். இவற்றை முறையே சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயாநகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் என்று கூறுப. இவை வடநூலார் கூறும் முறை.

அநுபாவத்தினையுஞ் சாத்துவிகபாவத்தினையும் முறையே மெய்ப்பாடென்றும் விறல் என்றுந் தமிழ் நூலார் கூறுப. இவையிற்றினிலக்கணங்களை நடிப்பியல்பின்கட் பரக்கக் காண்க. எனவே, விபாவங்களாற் றோன்றி, அநுபாவங்களால் வெளிப்பட்டுச் சஞ்சாரிபாவங்களாற் புஷ்டியடைந்து நிற்கும் ஸ்தாயிபாவம் சுவை யென்னப்படும். (௫௪)

சுவைத்துணை

55. உவகைச் சுவையினுக் குறுதுணை மகிழ்ச்சி
பெருமிதச் சுவைக்குப் பேசுஞ் செற்றஞ்
சமநிலைச் சுவைக்குச் சாற்றும் வெறுப்பு
மற்றைய வற்றை மதித்தனர் கொளலே.

உவகை சுவையினுக்கு—, உறு துணை - பொருந்திய சுவைத்துணையாவது, மகிழ்ச்சி - களிப்பாம்; பெருமிதம் சுவைக்கு - வீரச்சுவையினுக்கு, பேசும் செற்றம் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற சிறகோபமாம்; சமநிலை சுவைக்கு - சாந்தரஸத்தினுக்கு, சாற்றும் வெறுப்பு - தக்கதென்று சொல்லப்படுகின்ற வெறுப்பாம்; மற்றையவற்றை - ஏனைய சுவைகட்கு, மதித்தனர் - ஆராய்ந்து, கொளல் - எளிதிற்கண்டுகொள்க.

குறிப்பு:—ஏனைய சுவைத்துணைகளை யாராய்வார் எளிதிற் கண்டறியலாமாதலின் இன்னணங்கூறி விடுத்தார். கொளல் என்னுந் தொழிற்பெயர் ஈண்டு வியங்கோட்பொருட்டாதலறிக. (௫௫)

56. சுவையை மேன்மே லோங்கச் செய்யுந
வவிநயச் சால்பு மமைந்த களங்களுங்
காலமு மென்னக் கட்டுரைத் தனரே.

சுவையை - சுவையினை, மேல் மேல் ஓங்க செய்யும் - மேன்மேலும் ஓங்குமாறு செய்பவைகள், அவிநயம் சால்பும் - அவிநயப் பெருமையும்,

அமைந்த களங்களும் - காட்சி நலஞ்சான்ற களங்களும், (அமைந்த) காலமும் - பொருந்திய காலமும், என்ன கட்டுரைத்தனர்-ஆம் என்று புலவர்கள் நிச்சயமாகக் கூறினார்கள்.

குறிப்பு:—அவிநயச்சால்பும் காலங்களங்களினமைவும் இனிது பொருந்தாவிடிற் சுவை ஓங்கிவிளங்கா தென்ப திதனுனே பெறப்பட்டது. (சசு)

57. ஈண்டைச் சுவைசில விணைந்து மியலும்.

ஈண்டை சுவை சில இணைந்தும் இயலும் - ஈண்டுக்கூறப்பட்ட சுவைகளுட் சில சேர்ந்து மோரிடத்தில் நடக்கும்.

குறிப்பு:—சில விடங்களிற் பெருமிதமும் வெகுளியுமிணைந்தும், வியப்பும் அச்சமுஞ் சேர்ந்தும், அவலமும் அச்சமுமிணைந்தும், உவகையும் நகையுமிணைந்தும் வருமென்றறிக. இவ்வாறே இவைபோல்வன பிறவுமெனக் கொள்க. உதாரணங்கள் வந்துழிவந்துழிக் காண்க. (சஎ)

இரதி

58. இரதி யென்ப தன்பென லாகுங்
கடவுளர் குரவ ரிடமாத் தோன்றிற்
பத்தியா மிளமகார் பால்வெளிப் படினது
வாற்சலிய மென்ப வறிஞ ராதிய
ரிடமாக் காணி னிரக்க மெனப்படும்.

இரதி என்பது - இரதியென்று சொல்லப்படுவதனை, அன்பு எனல் ஆகும் - அன்பென்று சொல்லலாம்; (அது), கடவுளர் குரவர் இடமா தோன்றில் - தேவர்களையும் ஐங்குரவர்களையும் கண்டபோழ்துண்டாயின், பத்தியாம்-பக்தியென்று சொல்லப்படும்; இளமை மகார்பால் வெளிப்படின்- இளமைத்தன்மை வாய்ந்த குழந்தைகளைக் கண்டபோழ்து உண்டாயின், அது வாற்சலியம் என்ப - அதனைவாற்சலிய மென்று கூறுவார்கள்; வறிஞர் ஆதியர் இடமா காணின் - தரித்திரர் முதலாயினோர்களைக் கண்டபொழுதுண்டாயின், இரக்கம் எனப்படும் - இரக்கமென்று சொல்லப்படும்.

குறிப்பு:—ஐங்குரவர்: "அரச னுவாத்தியான் றாய் தந்தைதம்முன்". தசரதன் தவறு என்னுமங்கத்தில், சுரோசனன், தனது தாய்தந்தை தடுப்பவுங்கேளாது ஈசனைப்பாடியது பத்தியானெழுந்ததாம். சலபோசனருஞ் சுசீலையும் தமது புதல்வனுகிய சுரோசனனை நீர்கொண்டுவரப் போகவேண்டாமென்று தடுத்துரைத்தது அவன்பா லுண்டான வாற்சலியமாம். புதல்வனையிழந்த சலபோசனரையுஞ் சுசீலையையுங்கண்ட தசரதன் அவர்கள்பாற் கொண்ட அன்பு இரக்கத்தின் பாலதாம். (சஅ)

சுவைப்பாதுபாடு

59. உவகையு மவலமு மோங்கிய மென்சுவை
வெகுளியு மிழிப்பும் விளைந்த வன்சுவை

நகைசமம் வியப்பு மென்சுவைப் பால
பெருமித மச்சம் வன்சுவைப் பால.

உவகையும் அவலமும் ஓங்கிய மென்மை சுவை - உவகை அவலம் என்னுமிரண்டு சுவையும் மிகுதியும் மென்மையான சுவையாம்; வெகுளியும் இழிப்பும் விளைந்தவன்மை சுவை-வெகுளியும் இழிப்பும் மிகுதியும் வன்மை யானசுவையாம்; நகை சமம் வியப்பு - நகை சமநிலை வியப்பு என்னும் மூன்றும், மென்மை சுவை பால - மென்மையான சுவையுட் சேர்க்கப்படுவன வாம்; பெருமிதம் அச்சம் - பெருமிதமும் அச்சமும், வன்மை சுவை பால - வலியசுவையுளடங்குவனவாம்.

குறிப்பு:—உவகை அவலமிரண்டும் மிகுதியும் மென்சுவையென்றும், நகை சமநிலை வியப்புச் சிறிது மென்சுவையென்றும், வெகுளியும் இழிப்பும் மிகுதியும் வன்மையான சுவையென்றும், பெருமிதமும் அச்சமுஞ் சிறிது வன்சுவையென்றுங் கூறினர். ஓங்கிய விளைந்த வென்னுஞ் சொற்கள் மிகுதிப் பொருட்கண் வந்தன. (சகூ)

60. மென்சுவைப் பாலவும் வன்சுவைப் பாலவு
நடுநிலைச் சுவையென நயந்தனர் கொளலே.

மென்மை சுவை பாலவும் வன்மை சுவை பாலவும் - மென்சுவைப் பாற்படுவனவென்றும் வன்சுவைப் பாற்படுவனவென்றும் மேற்கூறப்பட்ட சுவைகளை, நடுநிலை சுவை என - நடுநிலைச்சுவையென்று, நயந்தனர் கொளல்- (அன்னணங் கூற) விரும்பியோர் கொள்வாராக.

குறிப்பு:—ஏகாரம்-ஈற்றசை. ஒரு சுவை இருவகையின் கண்ணும் பயின்று வருமாயின் அதனை நடுநிலைச் சுவையெனக்கூற விரும்புவோர் கொள்ளினிழுக்கன்று என்று கூறியமையானே, எச்சுவை எவ்வமையத்தில் எவ்வகையின்கட் பயினுமோ அவ்வமையத்தில் அச்சுவையினை அவ்வகை யின் கண்ணதாக் கோடலே ஏற்புடைத்தாமென்பது ஆசிரியர் தங்கருத் தென்றறிக. (௬0)

(௫) பொருத்தம்

61. பொருத்த மென்ப தொற்றுமை யுடைமையஃ
திடனுங் காலமுஞ் செயலு மெனமூ
விதப்படு மென்பர் மேற்றிசை வாணர்.

பொருத்தம் என்பது - பொருத்தம் என்று சொல்லப்படுவது யாதெனின், ஒற்றுமை உடைமை - ஒற்றுமை பொருந்தியிருக்குந் தன்மை யாம்; அஃது - அப்பொருத்தம், இடனும் - இடப்பொருத்தமும், காலமும்- காலப்பொருத்தமும், செயலும் - செயற்பொருத்தமும், என - என்று, மூன்று விதப்படும் என்பர் - மூன்றுவகைப்படும் என்று கூறுவார்கள், மேற்கு திசை வாணர் - மேற்குத் திசையினராகிய யவனர்.

குறிப்பு:—பொருத்தம்; Unity. இடப் பொருத்தம்: Unity of Place. காலப்பொருத்தம்: Unity of Tims. செயற் பொருத்தம்: Unity of Action யவனராவார் கிரேக்கர். (ருக)

இடப்பொருத்தம்

62. பயனின்று பல்காற் கதைநிகழ் விடத்தினைத்
தோற்றிய வாறெலா மாற்றுத லின்றிக்
கதையின் போக்கினைக் காண்டக வுய்த்த
விடத்தின் பொருத்தமென் றியம்புதல் வழக்கே.

பயன் இன்று - பிரயோசன மில்லாமல், பல்கால் - பல தடவையும், கதை நிகழ்வு இடத்தினை - நாடகக்கதை, நிகழ்தற் பாலதாகிய இடத்தினை தோற்றிய ஆறு எலாம் - மனத்திற்குத் தோன்றியபடியெல்லாம், மாற்றுதல் இன்றி - மாற்றாமல், கதையின் போக்கினை - நாடகக்கதைப் போக்கின் ஒழுங்கினை, காண் தக உய்த்தல் - சிறப்புப் பொருந்தச் செலுத்துதல், இடத்தின் பொருத்தம் என்று இயம்புதல் வழக்கு - இடப்பொருத்தமென்று கூறுதல் வழக்கமாம்.

குறிப்பு: — ஏகாரம் ஈற்றசை. இன்று:

"அன்றி இன்றி யென் வினையெஞ்சிகரம்"

என்னுந் தொடக்கத்துச் சூத்திரத்து உடம்பொடு புணர்த்தலானமைக்க. ஓரிடத்தில் நடக்கும் விடயங்கள் யாவற்றினையும் ஒரு படித்தாக ஒருங்கே கூறிவிடுதல் இடப்பொருத்தமெனினும், காலப்பொருத்தம் செயற்பொருத்தம் இவற்றோடும் முரணுமாதலானும், கதைபோற்றோன்றி, நாடகத்தின் காட்சியமைதியினைக் கெடுக்கு மாதலானும், காலப்பொருத்தம் செயற் பொருத்த மிவற்றுடன்கூடிய இடப்பொருத்தமே நன்றெனவறிக. (ருஉ)

காலப்பொருத்தம்

63. வீணே காலநீட் டித்தலு மிடையீ
டுறத்தலு மின்றி யுயர்ந்துசெல் கதையினைக்
கட்டுரைப் பதுவே காலப் பொருத்தம்.

வீணே - பயனில்லாமல், காலம் நீட்டித்தலும் - காலதாமத முண்டாக்குதலும், இடையீடு உறுத்தலும் - நடுவிற் பயனில்லாத தடைகளை யுண்டாக்குதலும், இன்றி-இல்லாமல், உயர்ந்து செல் கதையினை—, கட்டுரைப்பதுவே-இனி துரைத்தலே, காலம் பொருத்தம் - காலப்பொருத்தமாம்.

குறிப்பு:—இடப்பொருத்தம்பெற விடயத்தைக் கூறுவதனினும் காலக்கிரமப்படி கூறுதல் மேலாமாதலின், காலப்பொருத்தத்தைப் பின்னர் வைத்து, இவ்விரு பொருத்தத்தினுஞ் செயற்பொருத்தமே சிறப்புடைத் தாதலின் இவையிற்றின் பின்னர் அதனை வைத்தனர். மூவகைப் பொருத்தமும் ஒன்றோடொன்று முரணுமிடத்துச் செயற்பொருத்தத்தையே பெரிதுங் கவனித்த லேற்புடைத்தாம். (ருங)

செயற்பொருத்தம்

64. காரண காரிய முறைப்பட் டியங்கி
யருவிக ளாங்காங் கடைந்து கலக்கப்
பெற்ற யாறுபோ லுற்று விரீஇ
யெல்லாப் பகுதியு மெடுத்துரை தொழிலினுக்
குட்பட் டொழுகலு முலக வியல்பொடு
மாறு படாமலு நம்புத லரிய
விடய முறுமலும் விளைந்து நிற்பது
செயலின் பொருத்தமாச் செப்பினர் தெளிந்தோர்.

காரணம் காரியம் முறை பட்டு இயங்கி - காரண காரியங்களின் கிரமப்படி நடந்து, ஆங்கு ஆங்கு - இடை யிடையில், அருவிகள் கலக்க பெற்ற யாறு போல் - சிற்றாறுகள் கலக்கப் பெற்ற யாற்றினைப் போல, உற்று விரீஇ - விரிந்து பொருந்தி, எல்லாம் பகுதியும் - நாடகக் கதையின் எல்லாப் பாகங்களும், எடுத்து உரை தொழிலினுக்கு - முக்கியமாக எடுத்துக் கூறப்பட்ட தொழிலிற்கு, உட்பட்டு ஒழுகலும் - அடங்கிச் செல்லுதலும், உலகம் இயல்பொடு மாறுபடாமலும் - உலகத்திற் சம்பவிக்கக் கூடிய விடயங்களுக்கு விரோதப்படாமலும், நம்புதல் அரிய விடயம் உறுமலும் - நம்பத் தகாத விடயங்கள் சம்பவித்தனவாக்காமலும், விளைந்து நிற்பது - எடுத்தவிடயம் முதிர்ந்து நிற்பது, செயலின் பொருத்தமா - செயற் பொருத்தமென்று, தெளிந்தோர் செப்பினர் - அறிவிற்றெளிந்த பெரியோர் கூறினர்.

குறிப்பு:—காரணம்: Cause காரியம்: Effect. சிற்றாறுகள் பல பேரியாற்றுடன் கலந்து ஒரு முகமாக அடங்கிச் சேறல்போல, நாடகக் கதையின் பல பிரிவுகளும் பிரதானமான கதைத்தொடர்ச்சியுடன் மரீஇ நடத்தல் வேண்டும். உவமையணி. 'உறுமலும்' என்ற தன்வினைக்கு, 'உறுத்தாமலும்' எனப் பிறவினைப் பொருளுரைத்தாம், "குடிபொன்றி" யென்புழிப்போல. (௬௪)

(௬) நடை

65. கதையினைப் பெய்து கழறிடு மாறே
நடையா மதுதான் வாசகஞ் செய்யு
ளிசைப்பாட் டோடு மியலு மென்ப.

கதையினை - நாடகக்கதையினை, பெய்து - பொருத்தி, கழறிடும் ஆறே - கூறும் விதமே, நடை ஆம் - நடை யென்று பெயர்பெறும்; அது தான் - அந்நடைதான், வாசகம் செய்யுள் இசைப்பாட்டோடும் இயலும் என்ப - வசனம் செய்யுள் இசைப்பாட்டென்னும் முத்திறத்தோடும் நடை பெறும் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—இம்முத்திறத்திற்கும் உதாரணங்கள் ஆங்காங்குக் காட்டுதும். நூல் நடக்குந் தன்மையே நடையாம்; ஈண்டுப் புலவன் செயலாகச் சூத்திரிக்கப்பட்டமை காண்க. (௫௫)

வாசகம்

66. பேசுந் தமிழிற் பிழையினை யொரீஇப்
பேசுநர்க் கேற்ற விகற்பஞ் செறித்துப்
பெய்துரை வசனமே வாசக மாகும்.

பேசும் தமிழில் - பாத்திரங்கள் பேசுந் தமிழின்கண், பிழையினை - குற்றத்தினை, ஒரீஇ - நீக்கி, பேசுநர்க்கு ஏற்ற விகற்பம் செறித்து - பேசுநருடைய ஏற்றத் தாழ்விற்கு இயைந்த நடை வேறுபாட்டினைப் பொருத்தி, பெய்து உரை வசனமே - விடயங்களைத் தந்துரைக்கிற வசனந்தான், வாசகம் ஆகும் - வாசகமென்று பெயர் பெறும்.

குறிப்பு:—ஏகாரம்: தேற்றம். இழிந்தோர் பாத்திரமாயிருப்பின் இழிசினர் வழக்குரையே நேரிது. வாசகத்தை யுரைநடையென்றலுமாம். சுகுண சுகேசர் நாடகம் நான்காமங்கம் முதற்களமே யிதற்குப் போதுமான சான்று பகரும்.

"தம்பீ! நூறு பயண்டாலும் வரட்டும். அவுகெல்லாருக்கும் நான் ஒருத்தன்போது மில்லே" என்னும் வாக்கியம் இயற்றமிழிற் பிழைபாடுடையதெனினும் நாடகத் தமிழில் நேரிதென்றறிக. (௫௬)

செய்யுள்

67. "பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்."

பல்வகை தாதுவின் உயிர்க்கு உடல் போல் - தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்புபோல, பல சொல்லால் பொருட்கு இடன் ஆக - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னு நால்வகைச் சொற்களாற் பொருளுக்கு இடமாக, உணர்வினின் வல்லோர் அணிபெற செய்வன செய்யுள் - கல்வியறிவினாற் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுளாம்.

குறிப்பு:—இது மேற்கோட் சூத்திரம். மேற்கோளாக நன்னூலினின்றும் ஆசிரியரான் எடுத்தாளப்பட்டது. எழுத்தாலானது சொல்லாதலால் எழுத்துச் சொற்பொருள் அணியென்னும் நான்கினாலும் இயற்றப்படுவது செய்யுளாம். பொருள்: அகம் புறம் என்னும் இரண்டனையும். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங்களம்,

"திடத்தொடு செவ்வணி செறிந்து சேடியர்
கடித்திரப் பரத்தையர் காவல் புக்கபோன்

முடித்தலைச் சிவப்புற முளைக்கு மீர்ந்தளி
ரடித்தலத் தளித்ததில் வசோக மென்கொலோ!"

இக் கலிவிருத்தம் செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல் என்னும் அகப்பொருட்டுறையின் பாலதாய்த் தன்மை யுவமை மயக்கங் கருத்துடை முதலிய பொருளணிகட் கிடனாய் முதலடி முற்றுமோனையும் பிறவு முடைத்தாய் வருதல் காண்க. (௬எ)

68\. பண்ணொடு கலந்து பாடலா னன்றே
பாடலென் றவற்றைப் பகர்ந்தனர் புலவர்.

பண்ணொடு கலந்து பாடலான் அன்றே - இராகத்துடனியைத்துப் பாடப்பெறுவதனாற்றான், அவற்றை - அச்செய் யுட்களை, புலவர் - அறிஞர்கள், பாடல் என்று பகர்ந்தனர் - பாடல்கள் என்று பெயரிட்டழைத்தனர்.

குறிப்பு:—பாடப்பெறுங் காரணத்தாற்றான் பாடல் என்று அறிஞர் பகர்ந்தனர் என்பது இச்சூத்திரத்தின் கருத்து. வெண்பாவிற்குச் சங்கராபரணமும், கட்டளைக் கலித்துறை விருத்தமாதியவற்றிற்கு முறையே பைரவியும் தோடியும் என்று இக்காலத்தும் சிலர் வழங்குவதனை யீண்டறிக. இனிப் பண் என்பதற்கு நட்டபாடை சாதாரி பழம்பஞ்சரம் குறிஞ்சி இந்தளம் தக்கராகம் சீகாமரம் ஆதியபண்கள் என்றும் பொருள் கூறலாம். எனவே பாடல்களெல்லாம் நடிப்புழிப் பாடப்படல் வேண்டுமென்பது பெற்றாம். (௬அ)

செய்யுளியக்கம்

69\. மிகவுந் தாழ்ந்து சென்முத னடையுஞ்
சொல்லிசை யொழுக்க முடைய வாரமுஞ்
சொல்லிசைச் செறிவுக ளுடைய கூடையுந்
துன்றி முடுகிய நடையுறு திரளு
மென்றநான் கியக்கமு மொன்றுமச் செய்யுள்.

மிகவும் தாழ்ந்து செல் முதனடையும் - மிருதியுந் தாழ்ந்து செல்லும் இயக்கத்தினையுடைய முதனடையும், சொல் இசை ஒழுக்கம் உடைய வாரமும் - சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடைய வாரமும், சொல் இசை செறிவுகள் உடைய கூடையும் - சொற்செறிவு இசைச் செறிவுகளையுடைய கூடையும், துன்றி முடுகிய நடை உறுதிரளும் - நெருங்கி மிக முடுகிய செலவினையுடைய திரளும், என்ற நான்கு இயக்கமும் - என்று கூறப்பட்ட நால்வகை இயக்கமும், அ செய்யுள் ஒன்றும் - மேற் கூறியசெய்யுள் அடையும்.

குறிப்பு:—இந்நால்வகைச் செய்யுளியக்கத்தி னிலக்கணங்களைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையினும் அரும்பதவுரையினுங் குறிப்பித்திருத்தலை யுற்றுநோக்குக. கலாவதி நான்காமங்கம் முதற்களம்,

"வாரார் கொங்கை மாதே கேளாய் சோரா நின்றேன் றேகாய் நிற்கண்
டோரார் மானே யென்னே டோர்சொற் பேரார் தேவீ பேசாய்! பேசாய்!"
என்ற செய்யுள் முதனடைக் குதாரணமாதலை யுய்த்துணர்க. கலாவதி நாடகம் மூன்றாமங்கம் இரண்டாங்களம்:

"மின்னேரு கின்ற விடையாரு மென்றன்
விமலாய்நி னுதன் விழையு
மனோமோகி னிக்க ணிகைதான்வி ரித்த
வலையிற் கிடந்து கதறி
யுனையே நினைந்து மனநாணி னைந்து
முருகா வுடைந்து தனியா
யளியேநி னைசை மகளா யிருந்த
வடியேன் வருந்த லழகோ?"

இது வாரவியக்கத்திறுக் குதாரணமாதல் காண்க. கலாவதி நாடகம் மூன்றாமங்கம் மூன்றாங்களம்:

"இரவி தன்னொளி மிகவு மெய்திநன்
கிலகு கின்றத னினிய சோமநின்
கரவு நின்விட குணமு மோர்ந்தனென்
கனியுமன்பொடு கனவி நாடொறும்
விரவு காதலி யெனமொ ழிந்திடும்
விமல பத்மினி தனையி ழுத்தனை
பரவு கன்னியர் நினையி கழ்ந்தனர்
பழியுமுற்றனை யொழிக தீயனே"

என்ற செய்யுள் கூடையியக்கத்துக் குற்றவுதாரணமாம். கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் முதற்களம்:

"சுந்தரக லாவதியென் றாயசுகு மாரி
கந்தரமெ னுங்குழலி காமரச வல்லி
பந்தினைநி கர்த்திடு பயோதரி யியம்பா
யிந்துவத னேயென வியற்றிடுதல் வேண்டும்"

என்னுஞ் செய்யுளும், இறுதியிற் சுயம்பிரகாச முனிவர் கூறிய வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவின்கண் வரும்,

"விதுநிகர் முகனுடை விமலசு குணவள
மதுரையெ னகர்தனில் வளர்தரு மரசனே!;
உவகையொ டறுதிற முயர்வினி நகர்வதி
பவமகிழ் புரிகுவை பரசுறு சரசனே"

என்னு மாரகங்களும் திரளியக்கத்திறுக் குதாரணங்களாம். (௬௯)

70. கீழ்மக்க ளியல்பிற் கிளக்குஞ் சொற்செறி
பாவுமுண் டவற்றை யாவருங் கொள்ப.

கீழ் மக்கள் இயல்பில் கிளக்கும் சொல் செறி பாரும் உண்டு - இழிசினர் இயல்பாக வழங்குஞ் சொற்களினாலாய பாடல்களும் நாடகத்தின்கண் உளவாம், அவற்றை யாரும் கொள்ப - அப்பாடல்களைப் பிழையெனக் கொள்ளாது யாவரும் அங்கீகாரஞ் செய்வார்கள்.

குறிப்பு:—ஈதிங்ஙனமாதல் இழிசினர்வழக்குரை வரையறை யென்னு நூலிற் பரக்கக்காண்க. கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்தில், சோமதத்த னென்னுஞ் சேவகன்.

"ராசா மகளை யிவனுங் கட்ட,
ஆசை வைச்சான்! ஐயோ! பாவம்!
மோசஞ் செய்ய முன்னே சொன்னன்,
தோசமிண்டோ சும்மா விட்டேன்"
"நோண்டிப் போட்ட நுங்குக் கண்ணி
காண்டு கத்துங் கழுதைப் பாட்டு
வேண்டமட்டும் பாடிக் கிட்டு
நாண்டிக் குலுக்கி நடந்துக் கிட்டே;"
"ஏச்சுக் கிட்டுத் திரியு முண்டை
பேச்சுக் கேட்டுக் கெட்டுப் போனன்
சீச்சீச் சீச்சீ யிந்தப் பாவி
பேச்சை யின்னிக் கேட்க மாட்டேன்."

என்று பாடிய பாடல்கள் நாடகத்தின்கண் அமைவுடையனவாதல் காண்க. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாம்.　　　　(௬0)

இசைப்பாட்டு

71. பண்ணுந் திறமும் பயின்றனவாகிக்
குழலொடும் யாழொடும் விழுமிதிற் றுவன்றித்
தாள வொத்தொடுந் தண்ணுமை முழவொடுங்
கூடிநின் றிசைக்குங் கொள்கைத் தாகிப்
பொருள்பொதி சொற்கள் பொலிய விசைப்ப
தின்னிசைப் பாட்டென வியம்பப் படுமிதைக்
கீத வுருவெனக் கிளத்தலு முண்டே.

பண்ணும் - இராகமும், திறமும் - இராகவகைகளும், பயின்றன ஆகி - தன்மாட்டுப் பொருந்தினவாய், குழலொடும் - இசைக்குழலாகிய வங்கியத்தோடும், யாழொடும் - யாழ்களினோடும், விழுமிதில் துவன்றி - மேம்பாடுறப் பொருந்தி, தாளம் ஒத்தொடும் - தாளவிகற்பங்களினோடும், தண்ணுமை முழவொடும் - மத்தளம் முழவாதிய கொட்டுங் கருவிகளொடும், கூடி நின்று - சேர்ந்துநின்று, இசைக்கும் கொள்கைத்து ஆகி-பொருத்திப் பாடப்பெறுந் தன்மையதாய், பொருள் பொதி சொற்கள் பொலிய - நற்பொருள் ஆழ்ந்து செறிந்த சொற்கள் விளங்க, இசைப்பது - பாடப்படுவது, இனிமை

இசைப்பாட்டு என இயம்பப்படும்-இனிய இசைப், பாட்டென்று கூறப்படு; இதை - இவ்விசைப் பாட்டினைகீத உரு என கிளத்தலும் உண்டு - கீதவுரு வென்று கூறுதலும் வழக்காம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. பண்:

"பாலோ டணைத விசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்—பாவா
யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்."

பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம். பெருந்தான மெட்டினும் கிரியைகளெட்டானும் பண்ணிப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று. பெருந்தான மெட்டாவன: நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணுக்கும் உதடும்பல்லும் தலையு மெனவிவை. கிரியைகள் எட்டாவன: எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு எனவிவை. திறம்: பண்வகை. பாலை குறிஞ்சி மருதம் செவ்வழி யென்னு நால்வகைப் பண்ணின் திறங்களைக்கூறுங்கால் ஒவ்வொன்றும் புறம் அருகு பெருகு என்னு முத்திறத்ததாம். பாலைக்குப்புறம்: தேவாளி; அருகு சீர்கோடிகம்; பெருகு - நாகராகம். குறிஞ்சிக்குப் புறம் - செந்து; அருகு-மண்டிலம்; பெருகு - அரி. மருதத்திற்குப்புறம் - ஆகரி; அருகு- சாயவேளா கொல்லி; பெருகு - கின்னரம். செவ்வழிக்குப் புறம் - வேளாவளி; அருகு-சீராகம்; பெருகு - சந்தி. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. குழல்: வங்கியம்; மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி கருங்காலி என்னுமைந்தானுஞ் செய்யப்படுந் தொளைக் கருவி. இதனை,

"ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ண னுவந்த குழைக்கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து"

மூங்கில் உத்தமம், வெண்கலம் மத்திமம், ஏனைய அதமம். இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற்பெருகவளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லையா மாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி யொரு புருடாயு புக்க பெரியமரத்தைவெட்டி ஒருபுருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே யாற இட்டுவைத்துத்திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதல் செய்கை யறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கண வகையான் வங்கியஞ்செய்யப்படும். இதனை

"உயர்ந்த சமதலத் தோங்கிக்கா லுன்கின்
மயங்காமை நின்ற மரத்தின்—மயங்காமே
முற்றி யமர்மரந் தன்னை முதறடித்து
குற்றமிலோ ராண்டிற் கொளல்"

என்னும்வெண்பாவானறிக.பிண்டி தொளை யள வாதியவற்றினிலக் கணங் களைச் சிலப்பாதிகார அடியார்க்கு நல்லாருரையிற் காண்க. யாழ் நால்வகைப் படும்; அவை பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என்பன. இவை நான்குமே சிறப்புடையன. இதனைப்,

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர்—தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற"

என்றாராகலின். இந்நால்வகையாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேரியா ழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப்பதினேழும் சகோடயாழிற்குப் பதினாறும், செங்கோட்டியாழிற்கு ஏழுங்கொள்ளப்படும்.

"ஒன்று மிருபது மோரேழ்மேற் பத்துடனே
நின்றபதினாறேழு நேடுங்கால்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி"

என்னும் வெண்பாவானிதனையறிக. இதனுறுப்பமைதிகளைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற்கண்டுதெளிக. தாளவொத்து: பாணி;

"கொட்டு மசையுந் தூக்கு மளவு
மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்"

கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கியெழுதல்; தூக்காவது தாக்கித்தூக்குதால்; அளவாவது தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல்; இவையிற்றினுக்கு முறையே அரைமாத்திரை ஒரு மாத்திரை இரண்டுமாத்திரை மூன்றுமாத்திரை கொள்க.

"ககரங் கொட்டே யெகர மசையே
யுகரந் தூக்கே யளவே யாய்தம்"

என்னுஞ் சூத்திரத்தா னிவையிற்றினுக்கு வடிவமுமறிக. அரைமாத்திரை யுடைய ஏகதாள முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசன மீறாகச் சொன்ன நாற்பத்தொரு தாளமும் புறக்கூத்திற்குரிய. ஆறன்மட்ட மென்பனவும் எட்டன் மட்டமென்பனவும் தாளவொரியல் என்பனவும் தனிநிலையொரியல் என்பனவும் ஒன்றன்பாணி முதலாக எண்கூத்துப்பாணி யீறாகக்கிடந்த பதினொருபாணி விகற்பங்களும் முதனடைவார முதலாயின வும் அகக்கூத்திற் குரிய வென்க. இன்னும்விரிப்பிற்பெருகுமாதலின் இவை யிற்றின் விரியினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் காண்க. தண்ணு மைத்தொழிலின்கூறு இரண்டென்ப. முழவு எழுவகைப்படும். இவ்வகை யினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையினும் சுத்தாநந்தப்பிரகாசத் தினுங் காண்க. பொருள்: அகம் புறம் என்னு மிருவகையுமாம். கீதவுரு மூன்றென்பர் சுத்தாநந்தப்பிரகாசமுடையார். அவை உக்கிரம் துருவை

ஆபோகம் என்பனவாம். பண்ணுந்திறமும் பயின்றனவாகி விழுமிதிற்று வன்றிக் கூடி நின்றிசைக்கும், கொள்கைத்தா யிசைப்பது இசைப்பாட் டென்று முடிக்க. தேவாரப்பாசுரங்கள் யாவும் இசைப்பாட்டின்கண் அடங்கும். இதனானே தேவாரம் இசைத்தமிழ் இலக்கியநூ லென்பதை யீண்டுணர்க. (௬௧)

72. கீர்த்தனந் தானு மிசைப்பாட் டாகும்.

கீர்த்தனம் தானும் இசைப்பாட்டு ஆகும் - கீர்த்தனங்களும் இசைப் பாட்டின்கணடங்கும்.

குறிப்பு:—கீர்த்தனம் - வடசொல். இவ்வகை பிற்காலத்தார் உண் டாக்கியது. இதனைக 'கீர்த்தனை' யென்றும் வழங்குப. (௬௨)

கீர்த்தனம்

73. பல்லவி யோடனு பல்லவி சரணந்
தழுவி யெடுத்த தானமு முறையும்
வழுவா திராக தாளமோ டிசைய
வியற்றுந் தூக்கே யிசைக்கீர்த் தனமாம்.

பல்லவியோடு - பல்லவியுடன், அநுபல்லவி சரணம் தழுவி - அநு பல்லவியுஞ் சரணமும் பொருந்தி, எடுத்த தானமும் முறையும் - அவ்வவ் விராகத்திற்கென்று எடுத்துக் கூறப்பட்ட தானமும் பாடுமுறையும், வழு வாது - கெடாது, இராகம் தாளமோடு இசைய - இராகதாளங்களுடன் நன்கு பொருந்த, இயற்றும் தூக்கே - இன்னிசைநூல் வல்லுநரான் இயற் றப்படும் பாட்டே, இசை கீர்த்தனமாம் - இசை வாய்ந்த கீர்த்தனமாம்.

குறிப்பு:—ஏகாரம் தேற்றம். கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்கள த்தில், ஆதிதாளம்பெற்ற மலயமாருத கீர்த்தனை இதற்குதாரணமாம். (௬௩)

74. இஃதனு பல்லவி யின்றியு மியலு
மென்று வகுத்தன ரிசைநூல் வல்லோர்

இஃது - இக்கீர்த்தனம், அநுபல்லவி இன்றியும் இயலும் என்று - அநுபல்லவி பெறுமலும் நடக்கும் என்று, இசை நூல் வல்லோர் வகுத் தனர் - இசைநூலில் வல்லவர்கள் வகுத்துரைத்தனர்.

குறிப்பு:—ரூபாவதிநாடகம் முதலங்கம் முதற்களத்தில் இந்துஸ்தான் காபிராகத்தில் ஆதிதாளமமைந்த கீர்த்தனம் இதற்கு உதாரணமாம். (௬௪)

75. வரிப்பாட் டும்மிசைப் பாட்டின் பாற்படும்.

வரிப்பாட்டும் - வரிப்பாடல்களும், இசைப்பாட்டின் பால் படும் - இசைப்பாட்டின்கணடங்கும். (௬௫)

வரிப்பாட்டு

76. அகப்பொருட் கருத்தி னமைதி மேவி
மிகப்பே ருவகைச் சுவைபுலப் படுத்துப்

பண்ணுந் திறமுஞ் செயலும் பாணியு
மொருநெறி யன்றி மயங்கிச் சொலப்படு
மெட்ட னியல்பு மாற னியல்பும்
பெறீஇத்தன் முதலு மிறுதியுங் கெட்டுமற்
றியல்பு முடமு மாக முடிந்து
கருதிய சந்தியுஞ் சார்த்தும் பெற்றும்
பெருது மியங்கித் தெய்வஞ் சுட்டியு
மக்கட் பழிச்சியு மிக்க வினிமையிற்
பாடப் படுவது வரிப்பாட் டென்ப.

அகம் பொருள் கருத்தின் அமைதி மேவி - அகப்பொருட்டுறைக் கருத்துப்பொருந்தி, மிக பெருமை உவகை சுவை புலப்படுத்து - மிகவு மதிகப்பட்ட உவகைச் சுவையினைத் தெரித்து, பண்ணும் திறமும் செயலும் பாணியும் - இராகமும் அதனுட்பிரிவும் செயன்முறையும் தாளமும், ஒரு நெறி அன்றி - ஒரு வழிப்பட்டு நில்லாமல், மயங்கி - கலந்து, சொல்லப்படும் - கூறப்படும், எட்டன் இயல்பும் ஆறன் இயல்பும் பெறீஇ - எட்டியல்பும் ஆறியல்பும் பெற்று, தன் முதலும் இறுதியும் கெட்டும் - பாட்டின் முதலடியு மிறுதியடியுஞ் சீர்குறைந்தும், மற்று - அன்னணங்குறையாது, இயல்பும் ஆக - இயல்பாகவெனினும், முடமும் ஆக - சீர்குறைந்த குறைபாட்டெனினும், முடிந்து - நிரம்பி, கருதிய சந்தியும் - அகப்பொருளிற் கருதப்பட்ட சந்தியும், சார்த்தும் - சார்த்துக்களும், பெற்றும் - பொருத்தப்பட்டும், பெருதும் - மேற்கூறியவற்றுட் சில பெருமலும், இயங்கி - நடந்து, தெய்வம் சுட்டியும் - தெய்வத்தினைக் குறித்தும், மக்கள் பழிச்சியும் - மனிதர்களைத் துதித்தும், மிக்க இனிமையில் - மிக இனிமையுடன், பாடப்படுவது—,வரிப்பாட்டு என்ப - வரிப்பாட்டு என்று கூறுவார்கள்.

குறிப்பு:—

"அழலணங்கு தாமரையா ரருளாழி யுடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கி முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்,
நிழலணங்கி முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்று மாயிற் [றே"
றெழலணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்களிப்புஞ் சொல்லா வன்
(சூளாமணி - கல்யாண - 213)

என்ற செய்யுள் தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டாம். கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் மூன்றுங்களத்தில், கலாவதி,

"ஒளியாகி யுலகாகி யுயிராகி நிற்குமுனை,
யளியாருங் கோமானென் றுகமங்க ளறைந்திடுமே!
யளியாருங் கோமானென் றுகமங்க ளறைந்துமெனைக்
களியாரச் செய்கிற்பான் கருதாம் லிருப்பதெனே?"

என்று பாடியதுஞ் செய்வதுசுட்டிய வரிப்பாட்டாம். எட்டன் இயல்பு, ஆறன் இயல்பு: இவைதாள விகற்பங்கள்; சிலப்பதிகார உரை நோக்குக. ஏனையவற்றிற் குதாரணம் வரிப்பாட்டு வகையுட் காண்க. (௬௬)

வரிப்பாட்டு வகை

77. இழுமென மோதையி னெழுகுவண் ணத்திற்
றன்னுட் கையா றெய்திடு கிளவியை
யாற்றின்மேல் வைத்திசை யாற்று வரியு
முகமுரி கொச்சக மென்றமுப் பாற்படூஉத்
தன்கோட் செல்வன் சார்ந்தவூர் பெயரொடுஞ்
சார்த்தி யிசைக்குஞ் சார்த்து வரியு
மடர்ப்புறு காமநோய் கடற்கரைக் கானலின்
மிக்குழி நல்லுறுப் பொக்க நோக்குபு
காதன் மலிந்திசை கானல் வரியு
முகமு முரியுந் தன்னொடு முடிதர
நினைத்த பொருளே நேர்ந்துதன் னலிதர
வுருவந் திரிந்திவ ணுற்று நின்று
நிலைத்தது போல மலைத்துள மழுங்கிப்
பொருட்பெயர் பெயர்த்து மிசைக்குநிலை வரியு
மஃறிணைப் பொருள்களை யாற்றுது விளித்துத்
தன்னலி யுறுப்பிவை யென்னச் சாற்றி
யுருட்டு வண்ணத் தோங்குமுரி வரியு
மைந்திணை கட்கு மடைவின் வகுத்த
வுரிப்பொரு ளியல்பிசை திணைநிலை வரியுங்
கருப்பொருண் மயங்கக் காட்டி யுரிப்பொரு
டெரிக்கு மயங்கு திணைநிலை வரியு
முள்ளச் செறுவி லுயரிய காதல்
வித்தினர் பொருட்டா மிகவு மவர்தஞ்
சாயலை நினைத்திட் டோரடி மேல்வைத்
தியற்று கின்ற வெழிற்சாயல் வரியும்
மூன்றடி முதலா வேழடி யிறுவாச்
சிந்து நெடிலுஞ் சேர்ந்துஞ் சேராதும்
வந்து முகம்பெறு முகமுடை வரியும்
புள்ளொடு மாவொடும் புலம்பு மக்கட
முள்ளநோய் பிரிந்தார்க் குரைப்பான் வேண்டி
மும்முறை யடுக்கிசை முகமில் வரியு

மொன்றே யானும் பலவே யானும்
வெள்ளை யானு மாசிரிய மானுங்
கொச்சகம் பெற்றும் பெறாதும்வே றாகிய
வுறுப்பெலா முடைய படைப்பு வரியு
மின்னன பிறவு மின்னிசை நாடக
நூலோர் மிகவு மேலாக் கொள்ப.

இழும் எனும் ஓசையின் - இழும் என்னும் இனிய ஓசையுடன், ஒழுகு வண்ணத்தில் - ஒழுகுவண்ணப் பாட்டில், தன்னுள் கையாறு எய்திடு கிளவியை - தன்னுட்கையா றெய்திடுகிளவி யென்னும் அகப்பொருட் டுறையினை, யாற்றின் மேல் வைத்து இசை - யாற்றின்மேல் வைத்துப் பாடப் படும், யாற்றுவரியும்—; முகம் முரி கொச்சகம் என்ற மூன்றுபால் படூஉ - முகம் முரி கொச்சகம் என்ற மூன்று பகுதிப்பட்டு, தன்கோள் - தனது உள்ளக் கிடக்கையை, செல்வன் - தன்னையாட் கொண்ட தலைவன், சார்ந்த ஊர் பெயரொடும் - பொருந்திய ஊர் பெயர்களுடன், சார்த்தி இசைக்கும் - பொருத்திப் பாடப்படும், சார்த்துவரியும்—; அடர்ப்பு உறு - வருத்துகின்ற, காமம் நோய் - காம நோயானது, கடல் கரை கானலில் - கடற்கரையாகிய நெய்தனிலத்துள்ள சோலையில், மிக்குழி - மிகுந்தபொழுது, நன்மை உறுப்பு ஒக்க நோக்குபு - தலைவன் றலைவியர்தமுள் ஒருவர் மற்றொருவர்தம் நல்ல அவயவங்களைப் பொருந்த நோக்கி, காதல் மலிந்து இசை - ஆசைமிக்குப் பாடப்படும், கானல் வரியும்—; முகமும் முரியும் தன்னொடு முடிதர - முகமும் முரியுந் தன்னுடன் முடிவு பெறநின்று, நினைத்த பொருளை நேர்ந்து தான் மனதினினைத்த பொருளை யெதிரிற்றோன்றி, தன்நலிதர - தன்னை வருத்த, உருவம் திரிந்து - உருமாறி, இவண் உற்று நின்று நிலைத்தது போல - இவ்விடத்திற் பொருந்தி நின்று நிலைபெற்றது போல, மலைத்து உளம் அழுங்கி-மயங்கி உள்ளம் வருந்தி, பொருள் பெயர் பெயர்த்தும் இசைக்கும் - அப்பொருளினது பெயரினை மீண்டுங் கூறும், நிலைவரியும்—; அஃறிணைப் பொருள்களை—, ஆற்றாது விளித்து-துன்பஞ் சகியாது அழைத்து, தன் நலி உறுப்பு இவை என்ன சாற்றி - தன்னை வருத்துகின்ற பொருள்கள் இன்னவை யென்று கூறி, உருட்டு வண்ணத்து ஓங்கு முரிவரியும் - உருட்டு வண்ணப் பாவி னியைந்து விளங்கிய முரிவரியும்—; ஐந்து திணைகட்கும் - (முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலையென்னும்) ஐந்து திணைகட்கும், அடைவின் வகுத்த - முறைப்படி வகுத்துக் காட்டிய, உரிப்பொருள் இயல்பு இசை - உரிப்பொருள்களின் இயல்பினைத் தெரித்துப் பாடும், திணைநிலை வரியும்—; கருப்பொருள் மயங்க காட்டி - ஐந்திணைகளின் கருப்பொருள்களும் ஒன்றோடொன்று தலைமயங்குமாறு காட்டி, உரிப்பொருள் தெரிக்கும் - உரிப்பொருளைக் காட்டும், மயங்குதிணைநிலை வரியும்—; உள்ளம் செறுவில் - மனமாகிய நிலத்தில், உயரிய காதல் - மேலான அன்புடைக் காம

மாகிய விதையினை, வித்தினர் பொருட்டா-விதைத்த தலைவர்களின் பொருட்டாக, மிகவும் அவர்தம் சாயலை நினைத்திட்டு - மிகுதியும் அன்னோருடைய பேரழகினை நினைத்து, ஒரு அடி மேல் வைத்து - ஓரடியிடைமடக்கி வருமாறு, இயற்றுகின்ற - இயற்றப்படும், எழில் சாயல் வரியும் - அழகிய சாயல் வரியும்; மூன்று அடி முதலா - மூன்றடிச் சிறுமை பெற்றதுமுதல், ஏழு அடி இறுவா - ஏழடிப் பெருமையிறுதியாக, சிந்தும் நெடிலும் - நாற்சீரி லொன்று குறைந்த சிந்தும் நாற்சீரிலொன்று மிகுந்த நெடிலும், சேர்ந்தும் சேராதும்-பொருந்தியும் பொருந்தாமலும், வந்து முகம்பெறும் - பொருந்தி முகமென்னு முறுப்புப்பெறும், முகமுடை வரியும்—; புள்ளொடும் மாவொடும் - பறவைகளொடும் மிருகங்களொடும், புலம்பும் - கையற்றுப் புலம்பும், மக்கள் - தலைவன் றலைவியர், தம் உள்ளம் நோய் பிரிந்தார்க்கு உரைப்பான் வேண்டி - தமது உள்ளத்திலுள்ள நோயினைத் தம்மினின்றும் பிரிந்தவர்க்குக் கூறும்படி, மூன்று முறை அடுக்கு இசை - ஓர் அடி மூன்றுமுறை யடுக்கி வருமாறு செய்யப்பட்ட, முகமில் வரியும்—; ஒன்றேயானும் - ஒன்றாக வேனும், பலவேயானும் - பலவாகவேனும், வெள்ளையானும் - வெண்பாவினுனும், ஆசிரியமானும் - ஆசிரியத்தானும், கொச்சகம் பெற்றும் பெறாதும் வேறு ஆகிய - கொச்சகத்தினைப் பெற்றும் பெறாதும் வேறுபட்டு, உறுப்பு எலாம் உடைய - பல்வித உறுப்பும் பெற்றுவரும், படைப்பு வரியும்—; இன்னன பிறவும்-இவை போல்வன பிறவும், இனிமை இசை நாடகம் நூலோர் - இனிய இசைநூ லுணர்ந்த நாடகநூலறிஞர்கள், மிகவும் மேலா கொள்ப - மிக மேம்பாடுடையனவாகக் கொள்வார்கள்.

குறிப்பு:—ஒழுகு வண்ணமாவது ஓசையான் ஒழுகிநடக்கும்,

"ஒழுகு வண்ண மோசையி னொழுகும்" (தொல். செய். 226)

என்றாராகலின். தன்னுட்கையா றெய்திடுகிளவி: தலைவனுதல் தலைவியாதல் தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன் மேலிட்டுச் சொல்லுஞ் சொல். இதைத் தலைவி கூற்றாகவே பெரும்பாலும் அகப்பொருணூலோர் வழங்குவர். இதைத்தலைவன் கூற்றாக வழங்கின் அஃது அகத்திணைக்குப் புறத்ததாம்; எனினும் நாடகம் அகப்புறத்திணைத் தாதலின் இதனைத் தலைவன் கூற்றாக வழங்குதலும் நாடகத்தி லேற்புடைத்தாமாறு காண்க.

"விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே"

என்ற திருக்கோவையார்ச் செய்யுள் தலைவி தன்னுட்கையாறெய்திடு கிளவியாம்.

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவா

யரவகற்று மென்போல வார்கலியே மாதை
யிரவகற்றி வந்தாய்கொ லென்று''

என்ற நளவெண்பாச் செய்யுள் தலைவன் தன்னுட்கையாறெய்திடு கிளவியாம். ஐந்திணைகட்கு முரிய வுரிப்பொருள் கருப்பொருளினைத் தொல்காப்பியம், நம்பிய கப்பொருளாதிய நூல்களிற் பரக்கக் காண்க. "உள்ளச்செறுவி...... பொருட்டா': ஏகதேசவுருவகவணி.

ரூபாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றுங் களம்:

"இன்ப வனப்பு மிகவுடையா னினிது செங்கோ லதுவோச்சத்
துன்ப மொழித லுண்டுகொலோசொல்லாய் வாழி வையையே
துன்ப மொழித லுண்டுகொலோ சொல்லா தொழித றுடியிடையா
யன்பி லாமை யென்றன்றே வறிவேன் வாழி வையையே."

இஃது யாற்றுவரியாமாறு காண்க. சார்த்துவரி:

"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடுஞ்
சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே."

இஃது, முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச் சார்த்தென மூவகைப்படும். முகம்: வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமெனப்படும்;

"நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு
முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே,"

என்றாராகலின். முகமுடைவரி மூன்றடி முதலாக ஏழடியீறாக வரும். முகமில்வரி முகமொழிந்து ஏனையுறுப்புக்களான் வருவது. முகச்சார்த்து மூன்றடி முதல் ஆறடி யீறாகவரும்; இடை நான்கடியானும் ஐந்தடியானும் வரும். முரிச்சார்த்து: முரியாவது,

"எடுத்த வியலு மிசையுந் தம்மின்
முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே."

முரிச்சார்த்தின்கண்,

"குற்றெழுத் தியலாற் குறுகிய நடையாற்
பெற்ற வடித்தொகை மூன்று மிரண்டுங்
குற்ற மில்லெனக் கூறினர் புலவர்."

கொச்சகச்சார்த்து கொச்சகம்போன்று முடியும். முக்கிலே முரிகளாற் பயந்த வேறுபடு பொருண்மை யெல்லாம் தன்ன கத்தடக்கி ஒருநெறிப்படுத்தலாற் கொச்சக மெனப்படும். இது வெள்ளையானும் அகவலானும் முடியும். இவற்றின் விரிவுகளைச் சிலப்பதிகார உரைகளிற் காண்க. சிலப்பதிகாரம், கானல் வரி:

"மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்க
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப் புகாரே யெம்மூர்"

இது சார்த்துவரிக் குதாரணமா மாறுகாண்க.

"துறைமேய் வலம்புரி தோய்ந்து மணைஅழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்குங் கான
னிறைமதி வாண்முகத்து நேர்கயற் கண் செய்த
வுறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்":

இது கானல்வரிக்குதாரணமாம்.

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
யங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே";

இது நிலைவரிக்குதாரணமாம். ரூபாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றுங் களம்:

"வனப்புடையா னின்புடையான் வழுதியர்தங் கோமான்
மனத்தினிலே நோய்விளைத்தான் மாரனோ காணீர்
மாரனோ காணீர் வளமதுரை யிற்றென்றற்
றேரினையே நீங்கித் திரிகின்ற காவலனே"

இதுவும் நிலைவரியாம். உருட்டு வண்ணமாவது, அராகந் தொடுக்கும்;

"உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்" (தொல். செய். 232)

என்றாராகலின். ரூபாவதி நாடகம் இரண்டா மங்கம் மூன்றுங்களம்:

"ஒழுகுறு நிணமுடைய வொருதனி வேலவனு
முழுமதி யுறழ்முகனு முகமலர் வுடனுறையப்
பழுதறு தமிழ்மொழியா லழுதனை பரியுமெனை
யெழிலுறு மினியவனே யெவனிடர் செய்தனையே";

இது முரிவரியாம். சிலப்பதிகாரம். கானல்வரி:

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னைய
ருடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பார
மிடர்புக் குகுமின் னிடையிழவல் கண்டாய்";

இது திணைநிலைவரிக் குதாரணமாம்.

"புண்கொண்ட வேலினுயிர் போக்குவா னுன்றந்தை
கண்கொண்ட வேலினுயிர் போக்குவை மன்னீயும்
பண்கொண்ட சொல்லுடையாய் பார வளகத்தா
லெண்கொண்ட நொய்ய விடையிழவல் கண்டாய்"

என்ற ரூபாவதிச் செய்யுளும் திணைநிலைவரியாம்.

"நன்னித் திலத்தின் பூணணிந்து நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந் திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண் கொடியோ னெய்த புதுப்புண்க
ளென்னைக் காணு வகைமறைத்தா லன்னை காணினென்செய்கோ?"

இது மயங்குதிணைநிலைவரிக் குதாரணமாம்.

“ மறந்து தம்மை மதுமயக்கான் மள்ளப் பெண்கள் மலையசுணம்
பறந்து மகிழப் பாணிசைக்கும் பழனஞ் சூழ்ந்த நன்னுடா
திறந்த வாத கழைவளைத்துத் தீய மார னுடற்றுமலர்
செறிந்த புண்ணின் புழைநுழைந்து தென்ற லோடித் திளைக்குமரோ”

என்ற ஜோதிமாலைச் செய்யுளும் மயங்குதிணைநிலைவரிக் குதாரணமாமாறு காண்க. ரூபாவதி இரண்டாமங்கம் மூன்றாங்களம்:

“சோலை தன்னிற் றனியுற் றேங்கி மாலை வருந்திச் சென்று ளொருவன்
மாலை வருந்திச்சென்று னவனென் மானுமனம்விட் டகல்வா னல்லன்”;

இது சாயல்வரியாம். சிலப்பதிகாரம், கானல்வரி:

“ திங்கண் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி ”;

இது முகமுடைவரியாம்.

“ அடையல் குருகே யடையலெங் கானல்
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல்”;

இது முகமில்வரியாம்.

“ வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வார முடையாட்கென் மைய லுரைத்திலையால்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம்”

என்ற ரூபாவதிச் செய்யுளும் முகமில்வரியாம். ஏனையவற்றிற்கு தாரணம் வந்துழி வந்துழிக் காண்க. (எஎ)

78. சிந்துமா னந்தக் களிப்புங் கும்மியும்
வந்திசைப் பாட்டென வழங்கலு முண்டு.

சிந்தும்—, ஆனந்தக்களிப்பும்—, கும்மியும்—, வந்து - நாடகத்தின் கட்பொருந்தி, இசைப்பாட்டு என - இசைப்பாட்டென்று, வழங்கலும் உண்டு—.

குறிப்பு:—நாமகள் சிலம்பின் பதினேழாம் பாலாகிய ஜோதிமாலை யென்னு நாடிகையில் வள்ளியென்னுங் குறத்திமுதலிற் பாடியது நொண்டிச் சிந்தாம்;

“ அம்மேயென் சொலைக்கேட்டி - செய்ய
வருந்தமிழ்க் கடலினை யறக்குடித்த

வகத்திய முனிவாழும் - பா
மலையெங்கண் மலையென மதித்திடுவாய்.''

பின்னர்ப்பாடிய,

" அம்மேயுன் செங்கையினின் - மிக வற்புத ரேகை செறிந்திடுமா
லம்மா னிடத்துதித்த - வள்ளி யம்மையி னல்லருள் பெற்றிடுவாய்
சோதிமாலையுன் றன்பெயரா - மிவண் றுற்ற கடுஞ்சிறை யுற்றபினர்
மாதுகாளி யாகாயவணி - யிவர் மன்னு மருள்கொடு வாழ்ந்திருப்பாய்
வேலையொத்த விழியுடையோய்-மதவேளனு நாணெழில் வேந்தனுக்கே
மாலைசூட்டி மகிழ்ந்துநனி - குண வானெனு மோர்மக னைப்பெறுவாய்''

என்னும் பாடல் சிந்திற் குதாரணம். ஜோதிமாலை யென்னு நாடிகையில் அபி ராமன் என்னும் விதூஷகன் பாடிய,

"மங்கல மங்கலந் தோழீ - மட
மானினி யேமகிழ் வாய்ந்திடு மங்காய் - (மங்கல);
என்னுத னென்று வருவா - னிவ
னின்ப மளித்தெனை யேற்றருள் வானோ
வென்னு மயங்கி யிணைந்த - நம்
ஏந்திழை மன்னை யிணைந்தனள் வாழி, (மங்கல)''

என்னும் பாட்டு ஆனந்தக்களிப்பாம். ஜோதிமாலை யென்னுநாடிகையில், ஜோதிமாலை,

"வருவர் கொலருள் புரிவர் கொலெனக்
கொருதி டஞ்சொல்லு சகியே !
வண்டுளருந் தண்டுளவ மாலையது தினமும்
மாணடிசேர்ந் தன்பினொடு மகிழுமன முடையான்
கொண்டலென வழங்குகையான் குவலயத்தைத் தனது
குவவுபுயத் தணிபெறக்கொள் கோமகனென் னுள்ளம்
வளைதருபு மிகநலிய
மதராஜனு மெனதாவியை
மந்தாநிலத் துந்தான்செலத்
தாழாதெனைத் தானணைய - (வருவர்கொல்)

என்று பாடியாடியது கும்மியாம்.

"என்றென் றலைவனைக் காண்பலென் றேங்கிய
வேந்திழை யேயெழி லின்பவல்லீ!
நன்றிவ னுன்றனை நாடி யடைந்தனன்
நாதன் மதிவாண நாயகனே'';
"ஆகையின் மாதே யகங்கரை யேலினி
யானந்த முன்னை யடுத்ததுகாண்

தேக மிளைத்துத் தியங்க லவன்வருந்
திக்கினை நோக்கித் திகையாதே'';
"ஆடன் மறந்திட் டனந்துறந் தேதமிழ்ப்
பாடன் மறந்த பணிமொழியே!
கூடல் கருதிக் குறுகினன் காணினிக்
கூட லிழைத்துக் குறையாதே'';

என்ற கும்மிகள் மதிவாணன் கதையினும் வருதல் காண்க. (சுஅ)

(எ) கவிகூற்று

79. கவிகூற் றென்பது கழறப் புக்குழி
நூனவில் புலவ னுவலு நூலுட்
டன்கூற் றுச்சில சாற்ற லென்ப.

கவிகூற்று என்பது கழற புக்குழி - கவிகூற் றென்பது இன்ன தென் றுரைக்கு மிடத்து, நூல் நவில் புலவன் - ஒரு நூலைக் கூறு மாசிரியன், நுவ லும் நூலுள் — தான் கூறும் நூலின்கண், தன் கூற்று - தான் கூறுவனவாக, சில சாற்றல் என்ப - சிலமொழிகளைக் கூறுதல் என்று அறிஞர் சொல்லு வார்கள்.

குறிப்பு:—இக்கவிகூற்று நாடகத்துட் பயிலாதென்பது முன்னர்க் கூறிய பொதுவியல்பு முதற்சூத்திரத்தா னறிக. எனினும் நாடகக் காபிப் யத்தின்கட் பயிலுறும். (சுகூ)

நடிப்போர் குறிப்பு

80. நாடகப் புலவன் விளக்கங் கருதிக்
கதையினு ளன்றிப் புறத்துரை செய்வன
நடிப்போர் குறிப்பென நயந்து கொள்ப.

நாடகம் புலவன் - நாடக வாசிரியன், விளக்கம் கருதி — நடிப்போர்க் குக் கதை விளங்குதற் பொருட்டு நினைத்து, கதையினுள் அன்றி - நாடகக் கதையின்கட் பெய்த லின்றி, புறத்து உரை செய்வன - கதைக்கு வெளிப் புறத்துக் கூறுவன, நடிப்போர் குறிப்பு என—, நயந்து கொள்ப — விரும்பிக் கொள்ளுவார்கள்.

குறிப்பு:—நடிப்போர் குறிப்பு: Stage directions. நடிக்கின்ற நடர்களுக்கு உதவியாகக் கூறப்படுதலின் இப்பெயர்த்தாயிற்று. (எ0)

(அ) பாத்திரம்

81. கதையி னிகழ்ச்சியிற் கலந்தவர் யாவரும்
பாத்திர மென்று பகரப் படுவர்.

கதையின் நிகழ்ச்சியில்-நாடகக் கதையின் நிகழ்ச்சியில், கலந்தவர் யாவரும்-சம்பந்தப்பட்டவர்கள் யாவரும், பாத்திரம் என்று - நாடக பாத் திரங்கள் என்று, பகரப்படுவர் - கூறப்படுவார்கள்.

குறிப்பு:—நடர்களாவார் பாத்திரங்களை மேற்கொண்டு நடிப்போராத லின் நடர்க்கும் பாத்திரங்கட்கு முள்ள வேறு பாடறிக. (எக)

82. அவர்தாம்,

அசுரர் தேவ ரரக்க ரோடு
முனிவர் யோகியர் மக்களு மாவர்.

அவர்தாம் - மேற்கூறிய நாடகபாத்திரங்கள், அசுரர் தேவர் அரக்க ரோடு—, முனிவர் யோகியர் மக்களும்—, ஆவர் - ஆவார்கள். (எஉ)

தலைமக்கள்

83. பாத்திரங் கட்கெலாம் பகர்முகஞ் செய்து
வலம்புரி சூழ்ந்த சலஞ்சல மென்னக்
காணப் படுபவர் தலைமக்க ளென்ப.

பாத்திரங்கட்கு எலாம்-நாடகபாத்திரங்களுக் கெல்லாம், பகர்-சிறப் பித்துச் சொல்லப்படுகின்ற, முகம் செய்து - பிரதானராகத்தோன்றி, வலம் புரி சூழ்ந்த சலஞ்சலம் என்ன - வலம்புரிச்சங்க மாயிரஞ் சூழ்ந்த சலஞ் சலம்போல, காணப்படுபவர் - தோன்றுபவர், தலைமக்கள் என்ப - தலைமக் கள் என்று சொல்லப்படுவார்கள்.

குறிப்பு:—இடம்புரிச்சங்கம் ஆயிரஞ்சூழ்ந்தது வலம்புரிச்சங்கமாம்; வலம்புரிச்சங்கம் ஆயிரஞ்சூழ்ந்தது சலஞ்சல மென்னுஞ் சங்கமாம். இவற் றிற்கேற்ப உபமேயத்தின் கண்ணும் விரித்துக்கொள்க. பல மக்கள் தலைமக் களைச் சூழ்ந்திருப்பாரென்பது உவமையாற் பெற்றாம். (எங)

84. ஒளிமிக்க பாத்திரந் தலைமக்க டாமவ
ராடவர் பெண்டிரென் றாயிரு வகையர்.

ஒளி மிக்க பாத்திரம் - நாடகபாத்திரங்களுள் முக்கியமான பாத்தி ரங்கள், தலைமக்கள்தாம் - தலைமக்களேயாவர், அவர்—, ஆடவர் பெண்டிர் என்று - ஆண்மக்கள் பெண்மக்கள் என்று, ஆய் இரண்டு வகையர்-ஆராயத் தக்க இருவகையின ராவார்கள்.

குறிப்பு:—ஆயிரு: 'அவ்விரு' என்பது தூக்கிற் சுட்டு நீண்டு யகரந் தோன்றிய தெனினும் அமையும். (எச)

தலைவர்

85. ஒளியு மலர்ச்சியு முயக்கமி லினிமையு
நிலைத்த குணனு நீண்ட வுறுதியு
மான முடைமையும் வாய்மொழி நயமு
மேதக வுடைமையு மிளிர்நலப் பண்பிவை
யோங்கி விளங்குந ருற்ற தலைவர்.

ஒளியும்-யாவர்க்கு மேம்பட்டு விளங்கும்விளக்கமும், மலர்ச்சியும்—, உயக்கம் இல் - வருத்தமற்ற, இனிமையும் - இனிமைக்குணமும், நிலைத்த

குணனும் - நிலைபெற்ற தன்மையும், நீண்ட உறுதியும்-நெடிதான மனவுறுதியும், மானம் உடைமையும் - மானத்தையுடைய தன்மையும், வாய்மொழி நயமும் - வாய்த்தமொழியின் நயமும், மேதகவு உடைமையும் - மேன்மையுடைமையும், மிளிர் - பிரகாசிக்கின்ற, நலம் பண்பு - நன்மை வாய்ந்தகுணங்களும், ஓங்கி விளங்குநர் - மிகுந்து பிரகாசிப்பவர், உற்ற தலைவர் - பொருந்திய தலைவர்களாவர்.

குறிப்பு:—ஈண்டுக்கூறிய தலைவர்கள் நாடகத் தலைவர்களென்க. ஒளியாவது தாமுளராயகாலத்து மிக்குத்தோன்றுதலுடைமையாம். மானமாவது எஞ்ஞான்றும் தந்நிலையிற்றாழாமையும், தெய்வத்தாற் றாழ்வுவந்துழி உயிர் வாழாமையும். வாய்மொழி: வாயினது மொழியுமாம். (எரு)

தலைவர்வகை

86 தீரோ தாத்தன் றீர சாந்தன்
றீரோத் ததனொடு தீர லலிதனென்
றீரிரு திறத்தின ரியம்பிய தலைவர்.

தீரோதாத்தன்—, தீரசாந்தன்—, தீரோத்ததனொடு—,தீரலலிதன்—, என்று—, இயம்பிய தலைவர் - மேற்சூத்திரத்திற் கூறிய இலக்கணங்களையுடைய தலைவர், இரண்டு இரண்டுதிறத்தினர் - நான்கு பிரிவினராவர். (எசு)

தீரோதாத்தன்

87. உருவு மொழுக்கமு முயர்பே ரறிவும்
வீரமுந் தீரமு மேன்மையுங் கல்வியு
மன்புட னருளு மின்பமும் புகழுந்
திகழ்தரு கிற்போன் றீரோ தாத்த
னிராம பிரானதற் கிலக்கிய மாவன்.

உருவும் - வடிவழகும், ஒழுக்கமும்—, உயர் பெருமைஅறிவும் - மேலான பெருமை வாய்ந்த அறிவும், வீரமும்—, தீரமும் - தைரியமும், மேன்மையும் - பெருமையும், கல்வியும்—, அன்புடன் அருளும் - அன்புங் கருணையும், இன்பமும் - இன்பம் நிறைந்த மனமும், புகழும் - கீர்த்தியும், திகழ்தருகிற்போன் - விளங்குவோன், தீரோதாத்தன் - தீரோதாத்தனுவான்; இராமபிரான் அதற்கு இலக்கியம்ஆவன் - இராமபிரான் அவ்வகையினுக்கு உதாரணமாவான்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சிதாநந்தன் தீரோதாத்தனும். அன்பாவது தொடர்புபற்றிச் சிலர் மாட்டே யுளதாவது;

"அன்பெனப் படுவது தன்கிளை செறாமை"

யென்றார் நெய்தற்கலியினும். அருளாவது தொடர்பு பற்றாதே வருத்த முற்றார் மேற்செல்வது. அன்பு முதிர்ந்தேயருள்தோன்றுவது.

"அருளென்னு மன்பீன்குழவி"

என்றார் திருக்குறளினும். (எஎ)

தீரசாந்தன்

88. நிலனிகர் பொறையு நின்மல குணனு
நனியமை வுற்றவன் றீர சாந்தன்
முனிவருள் வசிட்டனே முன்னிய வுதாரணம்.

நிலன் நிகர் பொறையும் - பூமியை நிகர்த்த பொறுமையும், நின்மலம் குணனும்-குற்றமற்ற குணமும், நனி அமைவு உற்றவன் - நன்முகப் பொருந்தப் பெற்றவன், தீரசாந்தன் - தீரசாந்தனும் ; முனிவருள் வசிட்டனே-மகர்ஷிகளுக்குள் ஒருவராய வசிட்டரே, முன் இயல் உதாரணம் - இவ்வகையினுக்கு முதன்மையாக அமைந்த காட்டாவார்.

குறிப்பு:—மானவிஜயம் என்னும் அங்கத்தின் தலைவன ப சேரமான் கணைக்காலிரும்பொறை யிதற்குதாரணமாவன்.

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை "

என்னுங் குறளை யீண்டறிக.

"பொறையெனப் படுவது போற்முரைப் பொறுத்தல்"

என்முர் கலித்தொகையினும். (எஅ)

தீரோத்ததன்

89. மற்றைய குணத்தினும் வாய்ந்தபே ரறிவினு
மிக்க வெகுளியும் விளைந்த மூர்க்கமு
மொக்க வுடையவ னுற்றதீ ரோத்தத
னைவருள் வீமனே யதன்காட் டாவன்.

மற்றைய குணத்தினும் - பின் விதந்து கூறப்படுவன வொழிந்த நற்குணங்களைக் காட்டினும், வாய்ந்த பெருமை அறிவினும் - பொருந்திய பெருமை வாய்ந்த அறிவைக் காட்டினும், மிக்க வெகுளியும் - மிகுந்த கோபமும், விளைந்த - (கோபத்தினல்) விளைந்த, மூர்க்கமும் - மூர்க்க குணமும், ஒக்க உடையவன் - ஒருங்குபெற்றவன், தீரோத்ததன் - தீரோத்ததனுவான் ; ஐவருள் வீமனே - பஞ்சபாண்டவர்களுள் வீமசேனனே, அதன் காட்டு ஆவான்-அவ்வகைக் குதாரணமாவான்.

குறிப்பு:— 'ஐவர்' என்னுந்தொகை, பின்னர்வரும் வீமன் என்னுங் குறிப்பாற் பாண்டவரை யுணர்த்திற்று. இருடிகளுள் விசுவாமித்திரர் இதற் குதாரணமாவர். (எக)

தீரலலிதன்

90. உரனும் வீரமு முயர்வுட னருளு
மியைந்தவ னுயினு மெவ்வகை யானுங்
காமந் துய்த்தலே கருத்தாக் கோடல்
செறிந்த நாயகன் றீர லலித
னறிந்திடி னிந்திர னதன்றிருட் டாந்தம்.

உரனும் - வலிமையும், வீரமும்—, உயர்வுடன் அருளும் - மேன்மையுடன் கருணையும், இயைந்தவன் ஆயினும் - பொருந்தியவனுயினும், எவ்வகையானும் - எவ்விதத்தினுனும், காமம் துய்த்தலே - சிற்றின்ப மனுபவித்தலேயே, கருத்தா கோடல் செறிந்த நாயகன் - தனது எண்ணத்திற் குறிப்பாய்க் கொண்ட நாயகன், தீரலலிதன் - தீரலலிதனுவான்; அறிந்திடின் - ஆராயின், இந்திரன் அதன் திருட்டாந்தம்-இந்திரன் அவ்வகைக் குதாரணமாவான்.

குறிப்பு:—சுகுண சுகேசர் நாடகத்திற் சுகேசன் ஓராற்றால் தீரலலிதநாயகனு யமைவான். (அ0)

பிறதலைவர்

91. புகன்றநாற் றலைவரு ளொருவன் போந்துழி
யுபநா யகனும் பீட மர்த்த
நாயகன் ருனு நண்ண லு முண்டு.

புகன்ற நான்கு தலைவருள் - மேற்கூறிய நால்வகைத் தலைவருள், ஒருவன் போந்துழி - ஒருவன் நாடகத் தலைவனுக வந்தவிடத்து, உபநாயகனும்—, பீடமர்த்த நாயகனும்—, நண்ணலும் உண்டு - நாடகத்தின்கட் பொருந்துதலும் வழக்காம். (அக)

உபநாயகன்

92. உபநா யகன்ரு னுதவித் தலைவ
னிலக்குவ னுற்ற விலக்கிய மாகும்.

உபநாயகன்தான் - உபநாயகன் யாரோவெனின், உதவித்தலைவன் - உதவித்தலைவனும்; இலக்குவன் உற்ற இலக்கியம் ஆகும் - (இராமாயணத்தில்) இலக்குமணன் பொருந்திய உதாரணமாவான்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சத்தியப்பிரியன் உபநாயகற் குதாரணமாவான். (அஉ)

பீடமர்த்தநாயகன்

93. இராமற் குற்ற சுக்கிரீ வன்போற்
றலைவனிற் சிறிது தாழ்ந்ததன் மையனுய்த்
தலைவனைச் சார்ந்த வினைபல வற்றினும்
வருவோன் பீட மர்த்த னென்ப.

இராமற்கு - இராமனுக்கு, உற்ற சுக்கிரீவன் போல் - பொருந்திய துணைவனுகிய சுக்கிரீவனைப் போல, தலைவனில் சிறிது தாழ்ந்த தன்மையனுய் - தலைவனைக் காட்டினுஞ் சிறிது குறைந்த பண்பினையுடையவனுய், தலைவனை சார்ந்த வினை பலவற்றினும் வருவோன் - நாயகனைச் சேர்ந்த தொழில் பல வற்றிலும் வருபவன், பீடமர்த்தன் என்ப - பீடமர்த்தநாயகன் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—உதாரணம் வந்துழிக் காண்க. (அங)

நலைவற்குற்றார்

94. தலைவற் குற்றார் தம்மைச் சாற்றுழி
யரசாள் வினையி லுதவு மமைச்சனுங்
கலைவலா சானுங் குலகுரு முனிவரும்
விந்தைப் பேச்சுறு விதூடகன் றானும்
பணிவியல் விடனும் பற்றிய சேடனுந்
தண்டத் தலைவனுந் தூதரும் பிறருமாஞ்
சொற்றிறம் வாய்ந்து தூய்மை மேவித்
தலைவன்மாட் டன்பு தலைநின் றோரே.

தலைவற்கு உற்றார் தம்மை - தலைவனுக்கு அங்கங்களாய்ப் பொருந்தி நிற்பவர்கள் தம்மை, சாற்றுழி - கூறுமிடத்து, (அவர்கள்) அரசு ஆள் வினையில் உதவும் அமைச்சனும் - அரசாட்சித் தொழிலில் உற்றவிடத் துதவும் மந்திரியும், கலை வல் ஆசானும் - பல கலைகளையும் மறுவறவுணர்ந்த ஆசிரியனும், குலகுரு முனிவரும் - குலத்திற்குரிய குருவாகிய முனிவரும், விந்தை பேச்சு உறு விதூடகன் தானும் - விநோதப் பேச்சினையுடைய விதூடகனும், பணிவு இயல் விடனும் - அரசனுக்குப் பணிந்து நடக்குந் தன்மை யினையுடைய விடனும், பற்றிய சேடனும் - பொருந்திய சேடனும், தண்டத்தலைவனும் - சேனாபதியும், தூதரும் - தூதர்களும், பிறரும் ஆம் - பிறருமாகிய, சொல் திறம் வாய்ந்து தூய்மை மேவி - சொல்லில் திறமை பொருந்திப் பரிசுத்தமான குணம் படைத்து, தலைவன் மாட்டு அன்பு தலைநின்றோர் - தலைவனிடத்து அன்புமிகுந்து நிற்பவர்களாவார்.

குறிப்பு:— *ஏகாரம்: ஈற்றசை. இன்னோரதியல்பினை ஆசிரியர் பின்வருஞ் சூத்திரங்களான் நிரலே விளக்குதலை யுணர்க.* (அச)

95. அரண்மனைக் காவ லாளருங் குழைமுகப்
புரிசைகா வலரும் போலிமைத் துனருங்
குறளுஞ் சிந்துங் கூனு மாகிய
மாக்களுந் தலைவனை வளைந்து நிற்ப.

அரண்மனை காவல் ஆளரும் - அரண்மனையினைக் காப்போரும், குழைமுகப் புரிசை காவலரும் - அந்தப்புரக் காவலாளரும், போலி மைத்துனரும் - வெறும் போலிகளாய மைத்துனன் முதலியவர்களும், குறளும் சிந்தும் கூனும் ஆகிய மாக்களும் - குறுகிய வுடலினரும் உறுப்பறைகளும் உடல் வளைந்தவர்களுமாகிய மாந்தர்களும், தலைவனை வளைந்து நிற்ப - தலைவனைச் சூழ்ந்து நிற்பார்கள்.

குறிப்பு:—குழைமுகப்புரிசை: *அந்தப்புரம்; குண்டலமணிந்த முகத்தினையுடைய மகளிர் காக்கும் அந்தப்புரம். சிந்தாமணி நாமகளிலம்பகம், "குழைமுகப்புரிசையுள்" என்றமையுங் காண்க. போலிமைத்துனர்.* Left-

handed brothers-in-law. குறள்: Dwarfs. சிந்து: Lame persons. (அ௫)

விதூடகன்

96. கதைநிகழ்ச் சியினிற் பயன்படு வோனய்த்
தராதிபர் சபையைச் சார்கன வானய்ச்
சுதந்திர யூகமு மிதந்தரு சூழ்ச்சியும்
படைத்துரை யாற்றலும் பாரியல் பறிதலு
முடையவ னகி யுண்மைதேர் வதன்க
ணுவமையில் லோனய் நவநவ மாகச்
சதுர வசனஞ் சாற்று வோனய்க்
காணும் போதெலா நகைவிளைப் போனங்
குதூகல புருடன் விதூட னென்ப.

கதை நிகழ்ச்சியினில் - நாடகக் கதையின் நிகழ்ச்சியின்கண், பயன் படுவோன் ஆய் - இன்றியமையாத பிரயோசனத்தைத் தருபவனய், தாரதிபர் சபையை சார் கனவான் ஆய் - அரசர் அவையினைச் சார்ந்த மேலோனய், சுதந்திர யூகமும் - தனக்கென அமைந்த உட்புகுந்தறியும் அறிவும், இதம் தருசூழ்ச்சியும் - நன்மையினைத் தரும் ஆலோசனையும், படைத்துஉரை ஆற்றலும் - தானகவே புனைந்துரைக்குஞ் சக்தியும், பார் இயல்பு அறிதலும் - பூமியிலுள்ள மனிதரியல்பினை அறிந்து கோடலும், உடையவனகி—, உண்மை தேர்வதன்கண் - உண்மையினைக் கண்டு பிடிப்பதில், உவமை இல் லோனய் - சமானமற்றோனய், நவம் நவம் ஆக - புதிது புதிதாக, சதுர வசனம் சாற்றுவோன் ஆய் - சாதுரியமொழி உரைப்போனய், காணும் போது எலாம் - காணும்பொழுதின் எல்லாம், நகை விளைப்போன் ஆம் - சிரிப்பினை யுண்டாக்குபவனகிய, குதூகலம் புருடன் - விநோதமுடையவன், விதூட கன் என்ப - விதூடகன் என்றுரைப்பார்கள்.

குறிப்பு:—கலாவதி நாடகத்தின்கண் வரும் விகடவசன னென்பான் இவ்விலக்கண மமைந்த விதூடகனமாறுகாண்க. (அ௬)

97. வேறு பாத்திரம் விதூடகன் ரொழிலை
வியப்பச்செயினு நயப்பா டெய்தும்.

வேறு பாத்திரம் - (விதூடகனைத் தவிர) வேறு நாடக பாத்திரம், விதூடகன் தொழிலை - விதூடகனது தொழிலினை, வியப்ப செயினும் - யாவரும் வியக்குமாறு இயற்றினும், நயப்பாடு எய்தும்-நயத்தினையடையும்.

குறிப்பு:—சுகுணசுகேசர் நாடகத்தில் வரும் புஷ்பகன் என்பவன் சிற்சில விடங்களில் தன் வாய்மொழியால் விதூடகனகவும் விளங்குதலை யறிக. (அ௭)

98. ஈண்டுக் கூறிய மாண்டகு தன்மைவி
தூடக னின்றியு நாடக மியலும்.

ஈண்டு - இவ்விடத்து, கூறிய - உரைத்த, விதூடகன் இன்றியும் - விதூடகனில்லாமலும், நாடகம் இயலும் - நாடகம் வழங்கும்.

குறிப்பு:—தசரதன்தவறு என்னுமங்கம் விதூடகனின்றி யியலுமா றுணர்க. (அஅ)

விடன்

99. நற்கலைத் தேர்ச்சியு நயவுரை வழக்கு
மினிய நடையுடை யெய்திய வியல்பு
நுண்ணிய வறிவு நொய்ய செல்வமு
மேதக வுடைமையு மேவுநன் விடனே.

நன்மை கலை தேர்ச்சியும் - நற்கலைகளி னுணர்ச்சியும் நயம் உரை வழக்கும் - நயம் பொருந்திய சொற்களைக் கூறுந்தன்மையும், இனிய நடை உடை எய்திய இயல்பும் - (காண்போர்க்கு) இனிமையைப் பயக்கும் நடையினையும் உடையினையும் பெற்ற தன்மையும், நுண்ணிய அறிவும் - நுட்பமாய அறிவும், நொய்ய செல்வமும் - குறைபாடற்ற செல்வமும், மேதகவு உடைமையும் - மேம்பாடும், மேவுநன் - அடைந்தவன், விடன் - விடனென்னப்படுவோன்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. தசரதன்தவறு என்னுமங்கத்தில் வரும் ஏமநாதன் என்பான் விடனுதலறிக. நற்கலை: Fine Arts. அவையாவன:- சிற்பம், கானம் கவிதை, ஆடல், மதுரபாஷணம் முதலியனவாம். (அகூ)

சேடன்

100. பன்னிய சேடன் பணிவிடைக் காரன்.

பன்னிய சேடன் - மேற்போதச் சூத்திரத்துட் குறித்த சேடன், பணிவிடைக்காரன் - குற்றேவல் புரிவோனுவான்.

குறிப்பு:—சுகுணசுகேசர் நாடகத்தில்வரும் பிரதாபன் என்பான் சேடனுதலறிக. (கூ0)

தலைவியர்

101. நாலேழ் நலனு மேலோங் குறீஇத்
தலைவர்க் குரைத்த தகைமையிற் றக்கன
மலைவற மேவி வனப்பு மிளமையும்
பொங்கிக் கனிந்தொளிர் நங்கையர் தலைவியர்.

நான்கு ஏழ்நலனும்-இருபத்தெட்டு நலங்களும், மேல் ஓங்குஉறீஇ மிகுதியும் வளர்ந்து பொருந்தி, தலைவர்க்கு உரைத்த தகைமையில் தக்கன தலைவர்களுக்குக் கூறிய நற்குணங்களில் தகுதியாயவற்றை, மலைவு அற மேவி - மாறுபாடின்றிப் பொருந்தி, வனப்பும் இளமையும்-அழகும் வாலிபமும், பொங்கி கனிந்து ஒளிர் - மிகுந்து முதிர்ந்து விளங்குகின்ற, நங்கையர் - சிறந்த மங்கையர்கள், தலைவியர் - தலைவியர்களாவார்.

குறிப்பு:—இவையிற்றினுக் குதாரணங்களைப் பின்னர் வருஞ்சூத்திர வுரைகளிற் காண்க. உரீஇ: சொல்லிசை யளபெடை யீண்டுச் செய்யு ளிசையையும் நிறைக்குமாறு காண்க. (கக)

நாலேழ் நலன்

102. இயற்கை நிலையு மெடுத்த நிலையு
முற்றுணர் நிலையுமா முடலியக் கத்தி
னுண்டா குநவு மொளியு மழகுந்
தேசு மினிமையுந் துணிவு முதாரமுந்
தீரமு மாகிய வியல்பெழு பண்பு
மிலீலையு மலர்ச்சியு மெளிய வுடையு
மடமு மகிழ்வுந் தன்னறி யாதெழு
காதன் மொழிகளு மூடல்விப் பிரமமே
யிலலித மதநிறை யேக்கமும் வெட்கமும்
வேற்றுமை வியப்பு நகையு நடுக்கமுங்
கேளியு மென்னு நாலேழ் நலனுந்
தலைவிய ரிடத்தி னிலகணி போலும்.

இயற்கை நிலையும் - சுபாவ நிலையும், எடுத்த நிலையும் - (இயற்கை நிலையினின்றும் சிறிது அதிகப்பட்ட) எடுத்தநிலையும், உற்று உணர் நிலையும் - உற்றுணர் நிலையும், ஆம்-ஆகிய, உடல் இயக்கத்தின் உண்டாகுநவும்-சரீர அசைவினால் உண்டாகின்றவைகளும், ஒளியும்—, அழகும்—, தேசும்—, இனிமையும்—, துணிவும்—, உதாரமும்—, தீரமும்—, ஆகிய—, இயல்பு எழு பண்பும்-முயற்சியின்றி யியல்பாகவே யுண்டாகுங் குணங்களும், இலீலையும்—, மலர்ச்சியும்—, எளிய உடையும்—, மடமும்—, மகிழ்வும்—, தன் அறியாது எழு காதல் மொழிகளும் – தன்னை யறியாமலெழு மாசை மொழிகளும், ஊடல்-பிரணய கலகமும், விப்பிரமம்—, இலலிதம்—, மதம்—, நிறை—, ஏக்கம்—, வெட்கம்—, வேற்றுமை-வேறுபாடும், வியப்பு—, நகை—, நடுக்கம்—, கேளி—, என்னும் என்று சொல்லப்பெற்ற, நான்கு ஏழ் நலனும்-இருபத்தெட்டு நலனும், தலைவியர் இடத்தின் – நாடகத் தலைவியரிடத்தில், இலகு அணிபோலும்-விளங்கும் ஆபரணங்கள் போலாம்.

குறிப்பு:-(1) இயற்கைநிலை: இதனைப் 'பாவம்' என்ப வடநூலார். இதற்குமுன் சிறிதுஞ் சலனமற்ற நெஞ்சில் முதன்முதல் உண்டாகும் விகாரமே பாவமாம். (Bhava is the first alteration in a mind previously unaltered.) இயற்கையாக நெஞ்சிற்றோன்றும் மன வெழுச்சியினாற் சரீரத்திற்புலப்படுந் தோற்றமாதலின் (the slight personal indication of natural emotion) இஃது இயற்கைநிலை யென்னும் பெயர்த்தாயிற்று. (2) எடுத்த நிலை: முற்கூறிய இயற்கைநிலை முற்றியதாயின் எடுத்த

நிலையாம். இதனை வடநூலார் 'ஹாவம்' என்ப. இஃது இயற்கை நிலையைக் கடந்து புருவத்தை நெறித்தல் நோக்கக் குறிப்பு முதலியவற்றாற் புணர்ச்சி விருப்பத்தினைக் குறிக்குமாயின் எடுத்த நிலையாம். Bhava, where the alteration is Slightly modified so as to show, by alterations of the eye brows or eyes etc. the desire for mutual enjoyment, is called Hava. (3) உற்றுணர் நிலை: மேற்குறித்த எடுத்த நிலையையுங் கடந்து மனவெழுச்சி வெளிப்புலப்பட்டு மிகத் தோன்றுமாயின் அஃது உற்றுணர் நிலையாம். இதனை 'ஹேளம்' என்ப வடநூலார். When the change perceived is very great it is Hela. இம்மூன்றும் உடலியக்கத்தா னிகழ்வனவாம். (4) ஒளி: இதனைச் 'சோபை' (Brilliancy) என்ப வடநூலார். அழகினாலும், யௌவனத்தாலும், மனவெழுச்சியாலும் நல்லுணவாலும் உண்டாகும் அவயவ நலனே யொளியாம். (5) அழகு: இதனை வடநூலார் 'காந்தி' (Loveliness) என்ப. மேற்கூறிய சோபைமிக்கு விரும்பிய தலைவியின் காமக்குறிப்பால் அவடன் அழகினை நனிவிளக்குமாயின் அழகென்னப்படும். (6) தேசு: இதனை வடநூலார் 'தீப்தி' (Radiancy) என்பார்கள். மேற்கூறிய அழகு இன்னும் நனிநிகழ்ந்து விளங்குமாயின் தேசு என்னப் படும். இது 'தேஜஸ்' என்னும் வடமொழிச்சிதைவு. (7) இனிமை: இதனை 'மாதுரியம்' (Sweetness) என்ப வடநூலார். நோய் கொண்டிருப்பினும் உடையின்றியிருப்பினும், நாட்டைவிட்டு நீக்கப்பட்டிருப்பினும் இன்னும் எத்தகைய நிலையினும் இன்பந்தரும் நலனே, இனிமையாம். (8) துணிவு: இதனைப் 'பிரகல்பதி' (Boldness) என்பர் வடநூலார். பயமற்றிருக்கும் நிலையே யிதுவாம். (9) உதாரம்: இதனை வடநூலார் 'ஔதார்யம்' (Meekness) என்று கூறுவர். எல்லாக் காலத்தும் பொறுமை பூண்டிருப்பதே யிந்நலனும். (10)தீரம்:இதனை வடநூலார் 'தைரியம்' (Constancy) என்ப. தற்புகழ்ச்சியின்றி யிலகும் மனவுறுதிப்பாட்டினையே யீண்டுத் தீரம் என்ப. நான்காவது முதல் இதுகாறுங் கூறிய ஏழும் முயற்சியின்றித் தாமாகவே யெழுவனவாம். எனவே பின்னர்க்கூறும் ஈரொன்பான் வகைக்கும் முயற்சி காரணமென்றறிக. (11) இலீலை: இதனை வடநூலார் 'லீலை' (Fun) என்ப. அன்பின் மேலீட்டாற் றலைவன் பேசிய காதன் மொழிகளையும் செய்த செய்கைகளையும் தான் அவன்பாற் பயில்வதுடன் அவன்போல் உடையுடுத்தலும் அணியணிதலும் இலீலையாம். (12) மலர்ச்சி: இதனை வடநூலார் 'விலாசம்' (Flutter of delight) என்று கூறுப. தான் விரும்பிய தலைவனைக்கண்டக்கால் தலைவியினது நிற்குநிலையினும் இருக்கு நிலையினும் உண்டாகுஞ் செவ்விய தோற்றமும் மந்தகாசமும் மதர்த்தபார்வையும் மலர்ச்சியாம். (13) எளியவுடை: இதனை வட நூலார் 'விச்சித்தி' (Simplicity in dress) என்ப. ஆடம்பரமின்றிச் சாதாரண உடையுடுத்தல் எளியவுடையாம். இதனு லியற்கையழகின் தன்மை வெளிப்பட்டு நயப்படுமென்றறிக. (14) மடம்: இதனை 'விவ்வோகம்' (Affe

ctation of indifference) என்ப வடநூலார். இஃது அகங்கார மேலீட்டால் தான் விரும்பிய தலைவன்மாட்டும் அன்பு இல்லாததுபோல் நடித்து வரம்புகடந்து ஒழுகலாம். (15) மகிழ்வு: இதனை வடநூலார் 'கிலகிஞ்சிதம்' (Hysterical delight) என்ப. தனது இன்னுளங் கொள்ளை கொண்ட தலைவன் எதிர்ப்பட்ட ஞான்று தலைவியின்பால் உண்டாகும் புன்னகையுடன் சேர்ந்த கண்ணீர் வாராப் பொய்யழுகையும், வெளிநகையும், அச்சமும், கோபமும், சோகமும் இவைபோற் களிப்பான் மிகும் வேறு பலவும் மகிழ்வின்பாலவாம். (16) தன்னறியாதெழுகாதன்மொழிகள்: இவையிற்றினை வடநூலார் 'மோட்டாயிதம்' (The mute involuntary expression of affection) என்ப. தனது நாயகனைப்பற்றி யாரேனும் பேசுங்கால் ஆசை மிகுதியாற் றன்னையு மறந்து தலைவியினை அல்லது காதினைச் சொறிதல் ஆதியவற்றோ டியல்பானே பெழுமாசைமொழிகளாம் சண்டிக்கூறியநலன். (17) ஊடல்: இதனை வடநூலார் 'குட்டமிதம்'(The affected repulse of a lover's endearments) என்ப. இதனையே பிரணயகலகமென் றுங் கூறுப. நாயகன்மேற் பொய்யாகக் கோபங்கொள்ளலும் அவன் இதஞ் செய்துழி நாணத்தால் அவையிற்றினை யேலாது மறுத்தலும் வேண்டுகோட்கிணங்காது தலையசைத்தலானுங் கைவிதிர்த்தலானும் பொய்க்கோபம் பாராட்டுதலும் ஊடலாம். இஃதே காமவின்பத்தை மிகுப்பதாம்.

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்"

என்றார் திருவள்ளுவனாரும். (18) விப்பிரமம். (Fluster) தான் விரும்பிய நாயகன்றன் வரவு எதிர்பாராமனேர்ந்தபொழுது உண்டாகும் வியப்பினாலும் காணவேண்டிய அவாவினாலும் உடைகளை மாறியுடுத்தலும் அணிகளை அலங்கோலமாக அணிதலும் விப்பிரமத்தின் பாலவாம். (19) இலலிதம்: (Voluptuous gracefulness) தன்வயப்படுத்த வல்லதோர் காமக்குறிப்புடைய இனிமை பயக்கும்மென்மையுடன்சாயல்வாய்ந்த அவயவநலனே இலலிதமாம். (20) மதம்: (Arrogance) செல்வம் இளமை யாதிய காரணமாக உண்டாகும் அகங்காரமே மதமென்னப்படும். இதற்கு அடி இராஜச குணமென்க. (21) நிறை: இதனைவடநூலார் 'விகிருதம்' (The suppression of the sentiments of the heart through bashfulness) என்ப. தலைவி தன் மனத்தடக்கிய அரிய இரகசியங்களை நாணத்தால் வெளியிடாது உள்ளடக்கல் நிறையென்னப்படும்.

"நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை"

என்றார் கலித்தொகையினும். (22) ஏக்கம்: இதனை வடநூலார் 'தபனம்' (Pining) என்ப. இது தன்னின்னுயிர் நாயகன் தணந்தஞான்று காதன் மிக்குக் கையற்றுப் பிரிவாற்றாது ஏங்கலாம். (23) வெட்கம்: இதனை வடநூலார் 'மௌக்தியம்' (Simplicity verging on silliness) என்ப.

தான் நன்றாக இனிதறிந்த விடயமொன்றனை அறியாள் போன்று தன் தலைவனை 'இஃதியாது? எத்தன்மைத்து?' எனப்பலவினுதல் இந்நலனும். (24) வேற்றுமை: இதனை வடநூலார் 'விக்ஷேபம்' (Distractedness) என்ப. தனது காதலன் அருகிருக்கும் போழ்து ஏதேனும் ஒருகாரணம் பற்றித் தலைவி தன்னுடையணியாதியவை புனைந்தும் புனையாமல் நிற்றலும் நாற்புறமும் மருண்டு நோக்கலும் அகத்துட் பொதிந்த இரகசியங்களைச் சிறிது வெளிப்படுத்தலும் வேற்றுமையாம். (25) வியப்பு: இதனை வடநூலார் 'குதூகலம்' (Impetuous curiosity) என்ப. காட்சிக்கினிமை பயக்கும் பொருளெதனையுங் காணப்பேரவாக் கொள்ளல் வியப்பு என்னும் நலனும். (26) நகை: இதனை 'ஹஸிதம்' (Geggling) என்ப வடநூலார். இளமை காரணமாக ஒரு பயனுமின்றி யுண்டாவது இந்நகை நலன் என்க. (27) நடுக்கம் இதனைச் 'சகிதம்' (Trepidation) என்ப வடநூலார். இஃது ஏதேனுமொரு காரணத்தானுந் தனது காதலன் முன்னிலையிற் பயத்தால் உண்டாகுங்கம்பம் நடுக்கம்என்னும் நலனும். (28) கேளி: (Sportiveness) தனது இன்னுயிர்த் தலைவனுடன் றலைவிஉலாவரும்போழ்தே விளையாடுதலாம் இந்நலன். (கூஉ)

தலைவியர் வகை

103. தலைவியர் தாமுஞ் சுகுணை சாந்தை
யரக்கிகா மினியென் றந்நால் வகையர்.

தலைவியர்தாமும் - மேலைச்சூத்திரத்துட் கூறிய தலைவியர்களும், சுகுணை சாந்தை அரக்கி காமினி என்று—, அ நான்கு வகையர்-(தலைவர்களைப்போல்) அவ்விதமான நான்கு பகுப்பினை யுடையவர்களாவர்.

குறிப்பு:—'தாமும்' என்றதன்கணுள்ள இறந்ததுதழீஇய எச்சவும்மையானும் 'அ' என்னுஞ் சுட்டினானும், 'தலைவரைப்போல்' என்பது பெற்றாம். (கூ௩)

சுகுணை

104. சற்குணஞ் சான்ற தகைமைய ளாகி
யெல்லா விதத்தினுந் தீரோ தாத்தனை
யியையுந் தலைவியே யியம்பிய சுகுணை.

சற்குணம் சான்ற - நற்குணம் மிகுதியும் பொருந்திய, தகைமையள் ஆகி - தன்மையினை யுடையவளாய், எல்லா விதத்தினும் - எவ்விதத்தினும், தீரோதாத்தனை இயையும் தலைவியே இயம்பிய சுகுணை - தீரோதாத்தனை யொத்திருக்கும் தலைவியே மேலைச்சூத்திரத்து முதறக்கட்கூறிய சுகுணை நாயகியாம்.

குறிப்பு:—கலாவதி நாடகத்தின் தலைவியாகிய கலாவதி சுகுணை நாயிக்கி லக்கியமாவாள். (கூ௪)

சாந்தை

105. பொறுமை சான்ற பூவையே சாந்தையெத்
திறத்தினுந் தீர சாந்தனை நிகர்ப்பாள்.

பொறுமை சான்ற - பொறுமை மிகுதியுங் கொண்ட, பூவையே - மங்கையே, சாந்தை - சாந்தையாவாள், (அவள்) எ திறத்தினும் - எல்லா விதத்தினும், தீரசாந்தனை—, நிகர்ப்பாள் - ஒப்பாள்.

குறிப்பு:—வசிட்டர் மனைவியாகிய அருந்ததி யிவ்வகைக் குதாரணமாவாள். (கூரு)

அரக்கி

106. ஓவா மூர்க்க மொழியாப் போரொடு
கோவமார் தையலே குறித்திடு மரக்கி
யியம்புதீ ரோத்ததற் கிசைந்தா ளவளே.

ஓவா - குறைவுபடாத, மூர்க்கம் - மூர்க்க குணமும், ஒழியா போரொடு - நீங்காத யுத்தத்தோடு, கோவம் ஆர்தையலே - கோபம் மிகுந்த பெண்ணே, குறித்திடும் அரக்கி - மேற்கூறிய அரக்கியாம்; இயம்பு தீரோத்த தற்கு - முற் சூத்திரத்திற் கூறிய தீரோத்ததனை, இசைந்தாள் அவளே - ஒத்தவள் அவளே.

குறிப்பு:—ஏகாரம் : தேற்றம். சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்தின் றலைவியாகிய சூர்ப்பணகை யிதனுக் குதாரணமாவாள். (கூசு)

காமினி

107. எத்தகை யோரையு நித்தமுந் தோய்தரூஉம்
பரதம் பயிலுறு பாவைமார் போலச்
சுரத லீலையே விரதமாக் கொண்டவள்
காமினி யென்னு நாமம் பெறுவாள்.

எ தகையோரையும் - எத்திறத்தாரையும், நித்தமும் - நாடோறும், தோய்தரூஉம் - புணர்தரும், பரதம் பயிலுறும் - பரதசாஸ்திரப் பயிற்சி செய்யும், பாவைமார் போல - பொது மகளிரைப் போன்று, சுரதம் லீலையே - காம விளையாட்டினையே, விரதமா கொண்டவள் - நோன்பாகக் கொண்டிருப்பவள், காமினி என்னும் நாமம் பெறுவாள் - காமினியென்னும் பெயருடையளாவாள்.

குறிப்பு:—அந்தோனி கிளியோ பாத்திரையர் என்னும் ஆங்கில நாடகத்துத் தலைவியாய் கிளியோபாத்திரை யிதற்குதாரணமாவாள். தமிழின் கண் வந்துழி வந்துழிக் காண்க. தாரா சசாங்க மென்ற வடநூலினுட் போதருந் தாரையைக் காமினியாக் கூறுதலும் ஓராற்றான் ஒக்கும்.

மேற்கூறிய சுகுணை சாந்தை அரக்கி காமினி யென்ற நால்வகைத் தலைவியரும் முன்னர்ப் போந்த திரோதாத்தன் திரசாந்தன் திரோத்ததன் திரலலிதன் என்ற நால்வகைத் தலைவரையும் முறையே யொப்பர் என்ற துணையானே, முற்கூறிய நால்வகைத் தலைவியரும் பிற்கூறிய நால்வகைத் தலைவர்க்கும் முறையே மனைவியரென்றுவது, பிற்கூறிய நால்வகைத் தலைவரும் முற்கூறிய நால்வகைத் தலைவியர்க்கும் முறையே கணவரென்றுவது எண்ணற்க. தலைவர்களுள் நால்வகை கொண்டாற்போலத் தலைவியருள்ளும் நால்வகை கொண்டதேயன்றி வேறன்று. ஆதலின் நால்வகைத் தலைவருந் தலைவியரும் தத்தமக்கியைந்த வாழ்க்கைத் துணைகளைப் பெற்றுலும் பெறலாம், பெறுமற் போயினும் போகலாம்; தத்தமக்கியைந்த வாழ்க்கைத் துணைகளைப் பெறுதலுமுண்டு. இதனை மாணுக்கராயினுர் உற்றுநோக்கக் கடவர். (கள)

வேறு தலைவியர்வகை

108. மடந்தை தெரிவை யாட்டி யென்னுந்
தமக்குரி யோரு மனைமக ளாகிய
பிறர்க்குரி யோருஞ் சேரிப் பரத்தைய
ரிற்பரத் தையருமாம் பொதுமக ளிருமெனப்
புகலுந் தலைவியர் மூன்றிரண் டிரண்டா
வெடுத்துக் கூறு மிடனுமா ருண்டே.

மடந்தை தெரிவை ஆட்டி என்னும் தமக்கு உரியோரும் - தமக்குரியராய மடந்தை தெரிவை ஆட்டி யென்னும் மூவகையினரும், மனைமகள் ஆகிய பிறர்க்கு உரியோரும் - பிறர்க்குரியவராய பிறன் மனைவி புதல்வி யாகிய இருவரும், சேரி பரத்தையர் இல்பரத்தையரும் ஆம் பொது மகளிரும் - பொதுமகளிராகிய சேரிப்பரத்தையர் இற்பரத்தையர் என்னும் இருவரும், என புகலும் தலைவியர் - என்று சொல்லப்படும் தலைவியர், மூன்று இரண்டு இரண்டா - எழுவகையாக, எடுத்து கூறும் இடனும் - எடுத்துக் கூறப்படும் இடங்களும், உண்டு - சிறபான்மையுள்ளனவாம்.

குறிப்பு:—ஆர் - அசைநிலை. ஏகாரம் - ஈற்றசை. இச்சூத்திரத் தானே தமக்குரியோர் மூவரெனவும் பிறர்க்குரியோரிருவரெனவும் பொது மகளிர் இருவரெனவும் நிரலே கொள்க. தமக்குரியோரைச் சுவகீயை யென்றும், பிறர்க் குரியோரைப் பரகீயை யென்றும், பொதுமகளிரைச் சாமானியை யென்றும் வடநூலார் கூறுப. சுவகீயை யென்பாள் மானம் மெய்ம்மையாதிய நற்குணங்கட்கிருப்பிடனுய் இல்லின்கண் ஊக்கமுடையளாங் கற்பினளாவள். மடந்தை, தெரிவை, ஆட்டி யென்பாரை முத்தை, மத்தியை, பிரகல்பை என்று கூறுப வடநூலார். இவர்களினிலக்கணத் தைப் பின் வருவனவற்று னினிதுணர்க.

"ஆவல்கூர் சுவீயைபர கீயைசா மானியையென் றறிவிக் கின்ற
மூவரா நாயகிக ளவர்தமில் வேட் டவனிடத்தே முழுது மன்பா
யேவல்கோ ளுதவற்காற் றிடல்சீலம் பொறுமைவஞ்ச மின்மை யின்ன
மேவவாழ் கற்புடைய மெல்லியலே சுவீயைமற்றும் விரிப்பா மன்றே."

"மணம்புரிந்து கொண்டவனை மறந்துபர புருடர்களை மனத்தே வேண்டி
யிணங்குகின்ற குடிலநடை யேந்திழையே பரகீயை யிவர்போ லாது
பணங்கவர்ந்து சுகந்தருந்த படிபலர்க்குங் காட்டிமுறை யற்று நீதி
தணந்திருந்த பொதுமடந்தை தானேசா மானியையாஞ் சாற்றுங் காலே."

"எடுத்துரைத்த சுவீயைமுத்தை மத்தியைநற் பிரகற்பை யெனமுப் பேதம்
அடுத்துநிற்கு முத்தைபுதி தாகவரும் யவ்வனத்தாள்."

"கலவிதனிற் பிரியமும்வெட் கமுஞ்சமமா கப்படைத்த
கன்னி தானே நலனுயர் மத்தியை."

"தவனுருகக் கலவிசெயுஞ் சமர்த்திபிர
கற்பையெனத் தக்கபெண்."

இனி யிவையிற்றின் விரிவினை மாம்பழக்கவிச்சிங்க நாவலரியற்றிய சிங்கார ரசமஞ்சரி யென்னு நூலுட்காண்க. (௬௮)

கதாந்தம்

109. எடுத்துரை கதையி னீறே கதாந்தம்.

எடுத்து உரை கதையின் - எடுத்துச் சொல்லப்பட்ட கதையினது, ஈறே - முடிவே, கதாந்தம்-கதாந்த மென்னும் பெயரினதாம்.

குறிப்பு:—இற்றைநாட் புலவருட் பல்லோர் இக்கதாந்தத்தின் சிறப்பைக் கொண்டே நாடகத்திற்குஞ் சிறப்புக்கூறுவர். இதனை 'Denouement' என்பர் ஆங்கில நூலோர். (௯௯)

110. அதுதான்,
நற்பொரு ளிறுதி தீப்பொரு ளிறுதியென்
றிருவகைத் தாமென் றியம்பினர் மேலோர்.

அதுதான் - மேற்கூறிய கதாந்தம், நன்மை பொருள் இறுதி தீமை பொருள் இறுதி என்று - நற்பொருளிறுதி தீப்பொருளிறுதி என்ற, இரண்டு வகைத்து ஆம் என்று - இருவகையாமென்று, இயம்பினர் மேலோர் - மேற்புலப் புலவர் கூறினர்.

குறிப்பு: — இவையிற்றினைப் பின்வரும் இரண்டு சூத்திரங்களான் உணர்க. (௧௦௦)

நற்பொருளிறுதி

111. நாடகத் தலைவ னன்மணம் புணர்தலு
மாடக மணிமுடி யணிதலு மின்னன
பிறவு மாமிவை திறமுற முடிவது
நற்பொரு ளிறுதியா நயந்தனர் புலவர்.

நாடகம் தலைவன் நன்மை மணம் புணர்தலும் - நாடகத்தலைவன் தனக்கேற்ற தலைவியை மணஞ்செய்து கோடலும், ஆடகம் மணி முடி அணிதலும் - பொன்னானும் மணியானும் செய்யப்பட்ட கிரீடத்தைத் தரித்தலும், இன்னன பிறவும்ஆம் இவை திறம்உற முடிவது - இவைபோல்வன பிறவுமாகிய அனைத்தையுங் கொண்டு நன்கு முடிவதை, நன்மை பொருள் இறுதியா நயந்தனர் புலவர் - நற்பொருளிறுதி நாடகமெனக் கூறினர் கற்றறிந்தார்.

குறிப்பு:—கலாவதி ரூபாவதி முதலிய நாடகங்கள் இவ்விறுதியன வாம். காணாமற்போன மக்களைக் காண்டலும், அளவற்ற செல்வப்பேறு முதலாயினவும் இதன்பாற்படுமாதலான் 'இன்னன பிறவுமாம்' என்றார். நற்பொருளிறுதி நாடகம்: Comedy. (கoக)

தீப்பொருளிறுதி

112. தீப்பொரு ளிறுதி செப்புங் காலை
நாடகத் தலைவ னவிலருந் தீமை
யடைத லன்றி யாருயி ரிழத்தலு
மறைவதென் றுரைத்தன ராங்கில மொழியோர்.

தீமை பொருள் இறுதி செப்பும் காலை - தீப்பொருளிறுதி நாடகம் இன்னதென்பதைக் கூறுமிடத்து, நாடகம் தலைவன் - நாடகத்தின்றலைவன், நவில் அருமை தீமை - சொல்லுதற்கும் அச்சத்தைத் தரும்படியாய தீமையினை, அடைதல் அன்றி - அடைவதல்லாமல், அருமை உயிர் இழத்தலும் - அருமையான உயிரை யிழத்தலும், அறைவது - சொல்லுவதாம், என்று உரைத்தனர் ஆங்கிலம் மொழியோர் - என்று ஆங்கில மொழியில் வல்லுநர் கூறினர்கள்.

குறிப்பு:—சொல்லுதற்கும் அச்சத்தைத்தர வல்லதாதலின் 'நவிலரும்' என்றார். தசரதன் தவறு இவ்வகைக்குதாரணமாம். தீப்பொருளிறுதி நாடகம்: Tragedy. இம்முடிபுடைய நாடகங்கள் வடநூலார்க்கு ஒப்ப முடிந்தன வல்லவென்பதும், ஆங்கில நூலார் கொள்கையின்படி தமிழ் மொழியினுந் தழுவிக் கொள்ளப்பட்டன வென்பதும் இச்சூத்திரத்தான் அறியலாம். (கoஉ)

பதாகைநிலை

113. நாடகத் தெங்கணு நண்ணி வருவதாய்
நினைத்தெதிர் பார்த்த பொருளி னிடத்தி
லனைத்தகைப் பிறிதெதிர் பாரா வண்ணமாய்ப்
போதரச் செய்வது பதாகை நிலையே.

நாடகத்து எங்கணும் நண்ணி வருவதாய் - நாடகத்தின்கண் எவ்விடத்தும் பொருந்தி வருவதாய், நினைத்து - ஆலோசித்து, எதிர்பார்த்த பொருளின் இடத்தில் - தாம் எதிர்பார்த்த ஒரு விடயத்தில், அனைத்தகை பிறிது - அத்தன்மையான வேறொன்று, எதிர்பாரா வண்ணமாய் - எதிர் பாராத விதமாய், போதர செய்வது - வருமாறு இயற்றுவது, பதாகை நிலையே - பதாகைநிலை யென்று சொல்லப்படும்.

குறிப்பு: — ஈண்டுக்கூறிய பதாகைநிலை நாடக பாத்திரங்களின்பானிகழு மென்றறிக. பின்னர் வரும் பதாகைநிலைவகையின்கண் உதாரணங் காட்டுதும். நாடகக் கதைப் பொருத்தங்கள் நிகழுமிடத்தும் ஆசிகூறுமிடத்தும் இப்பதாகை நிலையினைக் காணலாம். நாடகவாசிரியன் வன்மைக்கேற்றபடி இஃது பல்கலைப்படு மென்பதறிக. (கoங)

பதாகைநிலைவகை

114. எதிர்பா ராவண மெண்ணிய பிறிதெணந்
திருந்திய வழியிற் பொருந்து முறையும்
பல்பொருட் சொற்றொடர் மல்கப் பெற்றுப்
பல்லடை மொழிகள் புல்லிய பண்பும்
பிறிதுபொருள் பற்றிய பிறர்தஞ் சொற்களைத்
தன்கருத் தின்பொருட் கேற்பக் கோடலுஞ்
செவ்விக் கேற்ற செம்பொரு ளொன்று
முடிவு சுட்டு முன்ன மொன்றுமாக்
கருதிய கவர்படு கிளவி யுடைமையும்
பதாகை நிலையின் பகுப்பென மொழிப.

எதிர்பாரா வணம் - எதிர்பாராத விதமாய், எண்ணியபிறிது எண்ணம்-தாம் நினைத்த வேறோர் எண்ணம், திருந்திய வழியில் பொருந்தும் முறையும் - செவ்விய வகையாக வுண்டாகும் முறைமையும், பல்பொருள் சொல்தொடர் மல்கபெற்று - பல பொருளினையுடைய சொற்றொடர்கள் நிரம்பப் பெற்று, பல் அடைமொழிகள் புல்லிய பண்பும் - பல அடைமொழிகள் பொருந்திய தன்மையும், பிறிது பொருள் பற்றிய பிறர் தம் சொற்களை - வேறு பொருள் கொண்ட மற்றவருடைய மொழிகளை, தன் கருத்தின் பொருட்கு ஏற்பகோடலும் - தனது எண்ணத்திற் பொருந்த

கிடக்கும் விடயத்தினுக்குப் பொருந்தப் பொருள்செய்து கொள்ளுதலும், செவ்விக்கு ஏற்ற செம்மை பொருள் ஒன்றும் - சமயத்தினுக்குப் பொருந்திய செவ்விய பொருள் ஒன்றும், முடிவு சுட்டும் முன்னம் ஒன்றுமா - இறுதியில் நடக்கும் விடயத்தினைச் சுட்டிக் குறிப்பிக்கும்பொருள் ஒன்றுமாக, கருதியகவர்படு கிளவி உடைமையும் - நாடகப்புலவனுற் கருதிச் செய்யப்பட்ட பலபொருள்தந்து ஐயத்தினை விளக்குஞ் சொற்களுடைமையும், பதாகை நிலையின் பகுப்பு எனமொழிப - பதாகை நிலையின் பாகுபாடு என்று கூறுவார்கள்.

குறிப்பு:—கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றுங் களத்திற் சிதாநந்தனுஞ் சத்திபப் பிரியனுஞ் சோணாட்டிற்குப்போத லொண்ணுதென்று வருமிடத்து எதிர்பாராவணமாய்ச் சோணாட்டின் தலைநகராகிய காஞ்சியினை யடைதலும் ஆண்டு,

"விருந்தும் வென்றியும் முருந்து முறுவலார் திருந்து போகமும்"

அவர்கட்குத் திருந்திய வழியில் அவை பொருந்திய முறையினைக் காண்க. இஃதே பதாகைநிலையின் முதல்வகைக் குதாரணமாம். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் இரண்டாங்களத்தில் விகடவசனன் சுகசரீரனைப் பற்றிக் கூறிய, "யார்க்குமிப் பெரியர் பார்க்கப் பூனையைப், போலிருந் தாலும்" என்னுந் தொடக்கத்த செய்யுள் பதாகைநிலையி னிரண்டாம் வகைக் குதாரணமாம். இச்செய்யுளை 44-ஆஞ் சூத்திரவுரையுட் கண்டுகொள்க. ஜோதிமாலை யென்னும் நாடிகையுட் பங்கஜம் என்பாள் ஜோதிமாலை கையிலுள்ள மாலையினைச் சுட்டி "இந்த மாலை மகாராஜாவுக்குத்தான் தகுதி! நன்று யமைந்திருக்கின்றது! மகாராஜா பார்த்தால் விடவேமாட்டார், உடனே கைக்கொள்வாரென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகம் இல்லை," என்று கூறிய போது ஜயபாலமன்னன் தன்கருத்திற்கேற்பப் பொருள்செய்து கொண்டது பதாகைநிலையின் மூன்றும்வகைக் குதாரணமாம். கலாவதி நாடகம் மூன்றுமங்கம் இரண்டாங்களத்தில் மநோமோகிநி யென்பாள் கலாவதியின்மீது கோபங் கொண்டு,

"கோவை வசப்படுத்திக் கொண்டமநோ மோகிநின்
ஞவை யறுத்தபினர் நன்குனக்குச் சொல்லுகிற்பாள்
பாவையவள் வல்லமையைப் பார்"

என்று கூறிய பாவில் 'மநோமோகினியாகிய பாவை சொற்லுகிற்பாள்' என்றும், 'மநோமோகினியே! கலாவதியாகியபாவை சொல்லுகிற்பாள்' என்றும் இருபொருள்பட்டு நிற்றலறிக. இன்னும் இதுபோலக் கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் ஐந்தாங்களத்திற் காளி பூசாரியின்மீது வெளிப்பட்டுக் குறிசொல்லும் பொழுது.

"உனது நாயகன் உந்தை வென்று
வாகைசூடி வருவான்"

என்று கூறியதன்கண்ணும இருபொருளுண்மை காண்க. இவ்விதம் வருவன பதாகைநிலையின் நான்காம் வகையாம்.

பாத்திரச்சிறப்பியல்பு

115. பாத்திரச் சிறப்பியல் பனைத்துந் தம்முண்
முன்பின் மலையாப் பண்புந் தனிப்படு
பெற்றியு மேற்கோள் வெற்றியு நன்ன
ருடையன வாகு நடையின வென்ப.

பாத்திரம் சிறப்பு இயல்பு அனைத்தும் - பாத்திரங்களின் சிறப்பியல்பு யாவையும், தம்முள் - தமக்குள், முன்பின் மலையா பண்பும் - முன்னொடுபின் மாறுபடாத தன்மையும், தனிப்படு பெற்றியும் - தத்தமக்குரியதெனக் கொண்ட தன்மையும், மேற்கோள் வெற்றியும் - நாடகப்புலவன் எவ்விதமானபண்பைப் பாத்திரவாயிலாக்கொண்டனனோ அவ்விதமானபண்பின் இனியமுடிவும், நன்னர் உடையன ஆகும் நடையின என்ப - தெளிவு பொருந்தக்கொண்ட தன்மையினவாகும் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—எனவே இம்மூன்றும் பற்றியே நாடகபாத்திரங்களின் சிறப்பியல்புகள் விளங்குவனவாம். முன்பின்மலையாப்பண்பாவது ஒரு பாத்திரத்தை முதற்கண் ஒருவிதமாகப் புனைந்து, பின்னர் மறவியானுதல் வேறெவ்வாற்றானுதல் வேறுபடப் புனைந்துவிடாது, ஒருதிறப்படவே புனைந்துவிடு மியல்பாம், இதனை Consistency என்பர் ஆங்கில நூலோர். தனிப்படுபெற்றியாவது ஒவ்வொரு பாத்திரமுந் தனக்கென வொரு சிறப்புத்தன்மை யுடையவ னாகுமாறு புனையு மியல்பாம். இதனை Individuality என்பர் மேற்புலவாணர். மேற்கோள்வெற்றியாவது நாடகபாத்திரமாகப் புகுந்து நடிப்பான் தான் மேற்கொண்டன கைகூடுமாறு நடிப்பதாகப் புனையு மியல்பாம்.　　　　(க0ரு)

நாடகமியற்றமிழாமாறு

116. உற்று நோக்குழிச் சொற்ற நாடகம்
"ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினு
முரையும் பாடையும் விரவியும் வரூஉம்"
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளென்
றுன்றோ ரனைவரு மன்பினிற் கொள்ப.

உற்று நோக்குழி - உற்றுப்பார்க்கு மிடத்து, சொற்றநாடகம்-மேலைச் சூத்திரங்களான் இனிது விளக்கிய நாடகம், ஒரு திறம் பாட்டினும் - ஒருவகைத்தாய பாட்டினுனும், பல திறம் பாட்டினும்-பலவகைத்தாய பாட்டினுனும், உரையும் பாடையும் - வசனமும் வேறுபாடைகளின் வாக்கியங்களும்,

விரவியும் - பொருந்தியும், வருஉம் - வரும், உரை இடை இட்ட பாட்டு உடை செய்யுள்-வசனம் இடையிடை வரப்பெற்ற செய்யுணூல், என்று ஆன்றோர் அனைவரும் அன்பினில் கொள்ப - என்று மேலோர் யாவரும் அன்புடன் கொள்ளுவார்கள்.

குறிப்பு:—

'ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே'

என்பது தண்டியலங்காரச் சூத்திரம். ஈண்டு மேற்கோளாக வெடுத்தாளப்பட்டது. வசனம் நாடகங்களுட் பயிலுதல் யாவர்க்கு மெளிது புலப்படும். வேறு பாடை தமிழ் நாடகத்துட் பயிலுமோவெனிற் பயிலும்: ரூபாவதி நாடகம் மூன்றுமங்கம் ஏழாங்களத்துள் ஞாநதீப முனிவர் கடவுளைத் துதித்துப் பாடிய,

"அதுலநித் யாநந்த ஐயநாத பவரகித சுகுணநிர் மலசுசி லப்ரபாவ
அத்புத சலக்ஷண மநோஹர சுகந்தமய ப்ரம்மாதி தேவவந் திதசித்பத
மதுராம்ருத வசநகவி தாப்ரசங் கப்ரிய மகாமேரு கைலாஸ சைலாஸந
மங்களாகரபரமசுத்தஸாத்குண்ய சிவமகிபால குருஸ்ரேஷ்டவர பாஹிமாம்,"

என்னு மடிகள் வடமொழியி லியன்றமை காண்க. இனி

'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்'

என்பது வசனத்தி னிடையிடை யமைந்த பாக்களாலயா நூல் என்றும் பொருள்படுமாறறிக. (கOசு)

போதுவியல்பு புறனடை

117. சிறந்தன சில்பொருள் செப்பில மெனினவை
யறைந்தன வற்று ளடக்கிக் கொளலே.

சிறந்தன சில் பொருள் - சிறப்புடையனவாய சிலபொருள்களை, செப்பிலம் எனின் - ஈண்டுக்கூறாமல் விடுத்திருப்போமாயின், அவை - அவையிற்றினை, அறைந்தனவற்றுள் அடக்கி கொளலே - மேற்கூறிய சூத்திரங்களில் அடக்கி யமைத்துக்கொள்க.

குறிப்பு:—சிறந்த பொருள்கள் எவையேனுங்கூறாமல் விடப்பட்டிருப்பின் அவையிற்றினை முற்கூறிய சூத்திரங்களில் உத்தியானும் உபலக்கணத்தானு மமைத்துக் கொள்ளுமாறு விதிக்கப்பட்டது இச்சூத்திரம். (கOஎ)

போதுவியல்பு முற்றிற்று

உ. சிறப்பியல்பு

118\. சிறப்பியல் பமைதி யுறப்புகல் கிற்புழிப்
பாடுறு நாலெழு நாடகச் சாதியின்
பெயர்முறை கிளந்து மயர்வற வவைதாந்
தமக்கெனக் கொண்ட சிறப்பிலக் கணங்களின்
பண்புக ளெல்லா மெண்பெற வாய்ந்து
கூறுத லென்ப குறிப்புணர்ந் தோரே.

சிறப்பு இயல்பு அமைதி உற புகல்கிற்புழி - சிறப்பியல்பினது இலக்கணத்தினை இற்றென்று தெளிவு பொருந்தக் கூறுமிடத்து, பாடு உறு - மேன்மைபொருந்திய, நான்கு எழுநாடகம் சாதியின் - இருபத்தெட்டு நாடக வகைகளின், பெயர் முறை கிளந்து - பெயர்களை முறைப்படி கூறி, அவை தாம் - அந்நாடகவகைகள்தாம், தமக்கு என மயர்வு அறகொண்ட - தத் தமக்கென்று ஒன்றோடொன்று தலைமயங்காமற்கொண்ட, சிறப்பு இலக்கணங்களின் -, பண்புகள் எல்லாம் - தன்மைகள் யாவற்றினையும், எண் பெற - மனத்தின்கட் பொருந்துமாறு, ஆய்ந்து - ஆராய்ந்து, கூறுதல் என்ப - கூறுவது என்றுரைப்பார்கள், குறிப்பு உணர்ந்தோர் - நாடக வியலின் குறிப்பினை யுணர்ந்த பெரியோர்கள்.

குறிப்பு:—நாடகச் சாதிவகை பத்தும் உபசாதிவகை யொன்பானிரட்டியுஞ் சேர்ந்துநாலேழ்வகையாதலைப் பின்னர் வருஞ் சூத்திரங்களானுணர்க. சிறப்பிலக்கணம்: பலவற்றிற்கும் பொதுவன்றித் தமக்கென்று சிறப்பா யுள்ளன. (க)

(க) சாதி

119\. சாதி யென்பது நாடக வகையிவை
யுருவக மென்ன வுரைக்கவும் படுமே.

சாதி என்பது - சாதியென்று நாடக விலக்கணங்களுட் கூறப்படுவது, நாடகம் வகை - நாடகவகைகளாம்; இவை - இந் நாடகவகைகள், உருவகம் என்ன உரைக்கவும் படும் - உருவகம் என்றும் கூறப்படும்.

குறிப்பு:—உருவகம்: ரூபகம், என்னும் வடசொற்றிரிபு. (உ)

120\. "உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டு முருவகம்" போல
நடிக்குந ரிடத்துப் பாத்திர வியல்பை
யேற்றி மொழிதலி னிப்பெயர்த் தாகும்.

உவமையும் - உபமானத்திற்கும், பொருளும் - உபமேயத்திற்கும், வேற்றுமை ஒழிவித்து - (உள்ள) வேறுபாட்டினை நீக்கி, ஒன்று என்னமாட்டும் - ஒன்றின் தன்மையினை யாரோபிக்கும், உருவகம் போல - உருவகவணி

யினைப்போல், நடிக்குநர் இடத்து பாத்திரம் இயல்பை - நடிப்போர்பால் நாடகபாத்திரங்களின் தன்மையினை, ஏற்றி மொழிதலின் - ஆரோபித்துக் கூறுந் தன்மையதாதலின், இ பெயர்த்து ஆகும் - (சாதி) உருவகமென்னும் இப்பெயர் பெற்றது.

குறிப்பு:—

'உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டின் அஃ துருவகமாகும்'

என்பது தண்டியலங்கார சூத்திரம். ஈண்டுமேற்கோளாக எடுத்தாளப்பட்டது. நடிக்குநர்: கு சாரியை, ந் பெயரிடைநிலை. அரங்கினிடை நடிக்குநரைப் பாத்திரங்களாகக்கருது மியல்பினால் நடிக்குநர்வேறு பாத்திரங்கள்வேறு என்றெண்ணாது அபேதமாகக் கருதுவதனால் இப்பெயர்த்தாயிற்றென்றனர். (௩)

121. அன்றியும்,

நாடக நடிப்பி னூடகத் தெய்து
மாடுந ரெல்லா மன்பிற் பிறருருக்
கோடலி னுருவகப் பெயர்கொடுத் தனரே.

அன்றியும் - மேற்கூறிய காரணமல்லாமலும், நாடகம் - நாடகத்தினை, நடிப்பின் ஊடு அகத்து - நடித்துக் காட்டுமிடத்து இடையே, எய்தும்- (அரங்கின்கட்) போதரும், ஆடுநர் எல்லாம் - நடித்துக் காட்டுபவர் யாவரும், அன்பின் - அன்புடன், பிறர் உரு கோடலின் - மற்றையோர் உருவங்களைத் தாம் மேற்கொள்வதனால், உருவகம் பெயர் கொடுத்தனர் - உருவகமென்னும் பெயரினை ஆன்றோர் கொடுத்தனர்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. உருவினைக்கோடலின் உருவகம் என்றார். 'அன்றியும்' என்றதனால் மேலைச்சூத்திரத்துட் கூறப்பட்ட காரணமேயன்றி மீண்டுக்குறித்ததும் ஆன்றோர் வழக்கென்பது பெறப்பட்டது. (௪)

சாதிவகை

122. அவைதாம்,

நாடகம் பிரக ரணமே பாணம்
வியாயோ கம்மே சமவ கார
மிடிம மீகா மிருக மங்கம்
வீதி பிரக சனமெனப் பத்தாம்.

அவை தாம் - மேற்கூறிய நாடகச்சாதி வகைகள், நாடகம்—, பிரகரணம்—, பாணம்—, வியாயோகம்—, சமவகாரம்—, இடிமம்—, ஈகாமிருகம்—, அங்கம்—, வீதி—, பிரகசனம்—, என பத்தாம் - என்று பத்து வகைப்படும்.

குறிப்பு:—ஈண்டுக் குறித்த சாதி வகைகளினியல்புகளைப்பின்னர்வருஞ் சூத்திரங்களான் ஆசிரியர் நிரலே விளக்குதலையுணர்க. (௫)

நாடகம்

123. ஐந்திற் குறையா வங்க முடைத்தா
யொன்பான் சுவையு மொருங்குடைத் தாயினு
மின்ப மாதல் பெருமித மாதல்
செவ்விதிற் றெரிக்குஞ் சீரிற் றாகி
வியப்புச் சுவையி னிறுவது நாடகம்.

ஐந்தில் குறையா - ஐந்து என்னும் தொகையுட் குறைவுபடாத, அங்கம் உடைத்தாய் - அங்கம் என்னும் பிரிவுகளையுடையதாய், ஒன்பான் சுவையும் - ஒன்பது சுவைகளும், ஒருங்கு உடைத்து ஆயினும்-முழுவதுந் தன்னகத்துடையதாயினும்; இன்பம் ஆதல் - உவகைச் சுவையினையாவது, பெருமிதம் ஆதல் - வீரச்சுவையினையாவது, செவ்விதில் தெரிக்கும் - செவ்வையாகத் தெரிவிக்கும், சீரிற்று ஆகி - சிறப்பினையுடையதாகி, வியப்பு சுவையின்-வியப்புச்சுவையோடு, இறுவது - முற்றுப்பெறுவது, நாடகம் - நாடகமென்று சொல்லப்படும்.

குறிப்பு:—உவகைச் சுவையும் பெருமிதச் சுவையும் பெரிது விளங்க இடையிடையே யேனைய சுவைகளும் விரவப்பெற்று இறுதியில் வியப்புச் சுவையினைக் கொண்டுமுடிந்த ஏழுங்கநாடகமாகிய கலாவதி நாடகம் இதற்குதாரணமாதல் காண்க. உவகை பெருமிதம் வியப்பாதிய சுவைகளைப்பொது வியலிற் கண்டுதெளிக. அங்கம்:

"நாடகப் பேருறுப் பங்க மதுதான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே''

என்னும் இந்நூல் உறுப்பியல்பு 14-ஆம் சூத்திரத்தானுணர்க. இச்சூத்திரத்தானே நாடகத்துள் ஒன்பான் சுவையும் பயின்று வருமென்பது புலப்பட்டது. (சு)

124. ஒன்பான் சுவையு முடைய துயர்வே
சிலகுறைந் தியலினுஞ் சீர்குன் றாவே.

ஒன்பான் சுவையும் உடையது உயர்வு - ஒன்பது சுவைகளையுமுடையது உயர்ந்த சாதி நாடகமாம்; சில குறைந்து இயலினும் - சில சுவைகள் வரப்பெறாது வழங்கப்படினும், சீர் குன்றா - (நாடகங்கள்) தமது சிறப்பிற் குறையாவாம்.

குறிப்பு:—இது மேலைச் சூத்திரத்திற்குப் புறனடையாம். 'சிலகுறைந் தியலினும்' என்ற விடத்து உவகை பெருமிதம் வியப்பு நீங்கியஏனைய சுவைகளுட் சிலவென்று கொள்க. ஏனெனில் அம்மூன்று சுவையும் நாடகத்தின் கட் பயின்றே வரல்வேண்டுமென்ப தொருதலையாதலின். ஏகாரம்: ஈற்றசை. (எ)

பிரகரணம்

125. அந்தணன் வணிக னமைச்ச னிவர்தமு
ளொருவன் றலைவனக் கற்பின ளாதல்
பரத்தை யாத லிருவரு மாத
றலைவிய ராக முதற்சாதி யளவி
னவைதீ ருவகைச் சுவையினி துரைக்கும்
பெற்றித் தாகும் பிரக ரணமே.

அந்தணன் வணிகன் அமைச்சன் இவர்தமுள் ஒருவன் - பிராம ணன் வைசியன் மந்திரி என்னு மூவகையினரு ளொருவன், தலைவன - நாடகத் தலைவனகப் பொருந்த, கற்பினள் ஆதல் - கற்புடையவளாவது, பரத்தை ஆதல் - பரத்தையாவது, இருவரும் ஆதல் - கற்பினள் பரத்தை யென்னு மிருவருமாவது, தலைவியர் ஆக - தலைவிகளாய்ப் பொருந்த, முதல் சாதி அளவில் - ஐந்திற்குறையாத அங்கமுடைய தன்மையில் நாடகமாகிய முதற்சாதியின் அளவினைக் கொண்டு, நவை தீர் - குற்றமற்ற, உவகை சுவை - உவகைச் சுவையினை, இனிது உரைக்கும் - நன்றாகப் புலப்படுத்தும், பெற்றித்து ஆகும் - தன்மையினை யுடையதாகும், பிரகரணம் - பிரகரணம் என்னும் நாடகச்சாதி.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. கற்பினள்: சுவகியை. பரத்தை: சாமானியை. இவர் தம்மியல்பினை 108-ஆஞ் சூத்திரவுரையுட் கண்டுகொள்க. அந்தணன் தலைவனகவும் கற்பினள் பரத்தையாகிய இருவரும் தலைவியராகவும் வரப்பெற்ற மிருச்சகடிகை என்னும் வடநூலும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பாகிய மண்ணியல் சிறுதேரும், அமைச்சன் தலைவனக வரப்பெற்ற மாலதீ மாதவமும், வணிகன் தலைவனும் கற்பினள் தலைவியுமாக வரப்பெற்ற புஷ்பபூஷிதம் என்பதும், பரத்தையினைத் தலைவியாகக் கொண்ட அரங்கதத்தம் என்னும் நூலும் பிரகரணசாதிக் குதாரணங்களாதல் காண்க. (அ)

பாணம்

126. ஓரங்க மேவி யோங்கிய காமமு
முயர்ந்த வீரமு முறக்காட் டுவதா
யொரேபாத் திரந்தா னுற்ற நுகர்ச்சியும்
பிறர்த நுகர்வும் பெரிதும் பேசிப்
பாடியா டுவதே பாண மாகும்.

ஒன்று அங்கம் மேவி - ஒரேயங்கத்தினை யுடையதாய், ஓங்கிய காமமும் - மிக்க காமத்தினையும், உயர்ந்த வீரமும் - மேலான வீரத்தினையும், உற காட்டுவதாய் - நன்கு பொருந்தக் காட்டுந் தன்மையதாய், ஒரே பாத்திரம் - ஒரே நாடக பாத்திரம், தான் உற்ற நுகர்ச்சியும் - தான் அனுபவித்த இன்பத்தையும், பிறர் தம் நுகர்வும் - மற்றையோருடைய அனுபவ

வின்பத்தையும், பெரிதும் பேசி - மிகவுங் கூறி, பாடி ஆடுவதே - பாடுதலோடு ஆடலுமுடையதே, பாணம் ஆகும் - பாணம் என்னும் சாதியாம்.

குறிப்பு:—இதன்கட் பெரிதும் பயின்று வருவன உவகைச் சுவையும் பெருமிதச் சுவையு மெனவறிக. லீலா மதுகரம் என்னும் வடமொழி நூலும் ஆமோதமோகனன் என்னும் தமிழ் நூலும் பாணத்திற் குதாரணங் களாம். ஏகாரம் தேற்றம். (கூ)

வியாயோகம்

127. உவகையு நகையு முயர்சம நிலையு
மொழிந்த சுவைத்தா யோரங் கத்தினுண்
மகளிர்கா ரணமலா வன்போர் தெரிப்பது
வியாயோக மென்ன விளம்பினர் புலவர்.

உவகையும் - உவகைச் சுவையும், நகையும் - நகைநிலைச் சுவையும், உயர் சமநிலையும் - மேலான சமநிலைச் சுவையும், ஒழிந்த சுவைத்து ஆய் - நீங்கிய சுவைகளையுடையதாய், ஒரு அங்கத்தினுள் - ஓரே யங்கத்தில், மகளிர் காரணம் அலா - ஸ்திரீகள் காரணமாக உண்டாகாத, வன்மை போர் தெரிப்பது - வலிய போரினைத் தெரிவிப்பது, வியாயோகம் என்ன புலவர் விளம்பினர் - வியாயோகசாதி என்று வடமொழிப் புலவர் கூறினர்கள்.

குறிப்பு:—'புலங்களிற் பற்றறப் பொலிந்த நன்னிலை' யாதலானும், 'தயைபொறை தயங்கு தன்மைத்தாத' லானுஞ் சமநிலைக்கு உயர் என்னும் அடைமொழி கொடுத்தார். சௌகந்திகாகரணம் என்னும் வடமொழிநூல் இதற்குதாரணமாதல் காண்க. புலவர்: ஈண்டு வடமொழிப் புலவராக வுணர்க. (க0)

சமவகாரம்

128. தனித்தனி வேறெணத் தலைவியர் பலர்கொண்
டனைத்துச் சுவையு மடைவினிற் காட்டி
வீரச் சுவையினை மிகுத்துத் தெரித்து
மூவங்க முற்று முதற்கட் காம
வின்பமும் பின்ன ரறத்தி னின்பமும்
பொருளி னின்பமும் பொலிவுறு வதுவே
சமவ காரமாச் சாற்றப் படுமே.

தனி தனி - தனித்தனியாக, வேறு எணம் - வேறுபட்ட எண்ணங்களையுடைய, தலைவியர் பலர் கொண்டு - பலவகைத் தலைவியர்களைத் தன்னகத்துக் கொண்டு, அனைத்து சுவையும் - எல்லாச் சுவையினையும், அடைவினில் காட்டி - முறைப்படி தெரித்து, வீரம் சுவையினை மிகுத்து தெரித்து - (அவ்வொன்பான் சுவையுள்ளும்) பெருமிதச் சுவையினையே பெரிதுந் தெரிவித்து, மூன்று அங்கம் உற்று - மூன்று அங்கங்களை யுடையதாய், முதற்

கண் காமம் இன்பமும் - முதல் அங்கத்தில் காமப்பகுதியி னின்பமும், பின்னர் - பின்னர்க் கூறும் இரண்டங்கங்களினும் (முறையே), அறத்தின் இன்பமும் - அறத்தின் பகுதியாலாய இன்பமும், பொருளின் இன்பமும் - பொருட் பகுதியாலாய இன்பமும், பொலிவுற வருவே - இனிது விளங்குவதே, சமவகாரமா சாற்றப் படும் - சமவகாரசாதி யென்று கூறப்படும்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. வெவ்வேறுவித எண்ணங்களைத் தனித் தனியுடைய தலைவியர் பலரையுடைய தென்பது இதன்கருத்து. அனைத்துச் சுவை: உவகையாதிய வொன்பான்சுவைகள். இச்சாதியிற் பெருமிதச்சுவையே பெரிதும் பயின்றுவரு மென்பது 'வீரச் சுவையினை மிகுத்துத்தெரித்து' என்னும் அடியாற்போதரும். இச்சூத்திரத்தானே யிச்சாதியில் வீட்டின் பகுதியை விளம்புமாறில்லை யென்பது மலையிலக்கே. இதற்கு உதாரணம் சமுத்திரமதனம் என்பவடநூலார். (கக)

இடிமம்

129. அங்கநான் கிற்றாய்ப் பொங்குவெகு ளித்தா
யிந்திர சாலமுந் தந்திர மாயையும்
வன்சினப் போரு மாபெருங் கலாமு
முற்பா தங்களும் பற்பல வியைந்து
பண்ணவ ரசுரர் பாத்திர மாக
வின்ப நகைசம மிவையொழி சுவைத்தா
யிசைக்கப் படுவ திடிம மென்ப.

அங்கம் நான்கிற்று ஆய் - நான்கு அங்கங்களையுடையதாய், பொங்கு வெகுளித்து ஆய் - மிக்குத் தோன்றும் வெகுளிச் சுவையினையுடையதாய், இந்திரசாலமும் - இந்திரஜால விஞ்சையும், தந்திரம் மாயையும் - பற்பல தந்திரங்கட்கிடனாய மாயவிஞ்சையும், வன்மை சினம் போரும் - வலிமிக்க கோபத்தினையுடைய போரும், மா பெருமை கலாமும் - மிகப்பெருங் கலகங்களும், உற்பாதங்களும் - தீநிமித்தங்களும், பற்பல இயைந்து - பலபலபொருந்தி, பண்ணவர் - தேவர்கள், அசுரர்—, (ஆகிய இவர்கள்) பாத்திரம் ஆக - நாடகபாத்திரங்களாக, இன்பம் நகை சமம் இவை ஒழி சுவைத்து ஆய் - உவகை நகை சமநிலைஆகிய இம் மூன்றும் நீங்கிய ஏனைய சுவைகளையுடையதாய், இசைக்கப்படுவது - (கற்றுவல்லோரால்) கூறப்படுவது, இடிமம் என்ப - இடிமசாதி யென்பார்கள் ஆன்றோர்.

குறிப்பு:—உவகை நகை சமநிலையென்னும் மூன்று நீங்கிய ஏனைய சுவைகள் பயின்று வருமேனும் இச்சாதிக்கட் பெரிதும் பயின்றுவருதல் வெகுளிச்சுவையாதலறிக. ஒன்றையொன்றாக மருட்டிக்காட்டுதலாதிய இந்திரசாலவித்தையும் மாவிகாஞ் சனமாதிய மாயவித்தைகளும் இதனுட் பொருந்துமென்றறிக. உற்பாதம்: பூமியதிரல், ஆகாயமிடித்தல், அரத்த

மழைபொழிதல், சூரியசந்திரர் தம் ஒளிமழுங்குதல், தேர்க்கம்பு முதலிட்ட விடத்துப் பாம்பு வாசஞ்செய்தல், ஆடவர்க்கு இடக்கணுதியவைகளும் மகளிர்க்கு வலக்கணுதியவைகளும் துடித்தல் முதலியனவாம். இவ்விடிமசாதிக்குதாரணம் திரிபுரதாகம் என்ப வடநூலார். (கஉ)

ஈகாமிருகம்

130. மானென மருளு மடவர லாகிய
விருப்பங் கொள்ளா விட்புல மாதினைக்
கவர்ந்து சென்றமை காட்டிப் பெரும்போர்த்
தொடக்க வினைபல தொடர்ந்து முற்றுரு
தின்பச் சுவையி னிழிவுபுலப் படுத்துத்
தம்மின் முரணிய தலைவர்க ளிருவ
ரேய்ந்துநா லங்கம் வாய்ந்த சாதி
யீகா மிருகமென் றியம்ப லாகும்.

(ஒருவன்), விருப்பம் கொளா - தன்மேல் விருப்பங்கொள்ளாத, மான் என மருளும் மடவரல் ஆகிய விண்புலம் மாதினை - மான் என்று சொல்லும்படி மருட்சியினையுடைய விண்ணுலகப் பெண்ணொருத்தியை கவர்ந்து சென்றமை காட்டிய - வலியக்கவர்ந்தேகின தன்மையினைத் தெரிந்துத், பெருமை போர் தொடக்கம் வினை - பெரியபோரைச் செய்வதற்குத் தொடக்கத்திற் செய்யற்பால தொழில்கள், பல தொடர்ந்து - பல ஒன்றன்பின் ஒன்றுகத் தொடர்ந்து சம்பவித்து, முற்று உருது - அவைகளுளொன்றும் முற்றுப்பெருமல், இன்பம் சுவையின் இழிவு புலப்படுத்து (இருவருடையுமொவ்வாக் காமத்தாலுண்டாய) உவகைச் சுவையின் இழிதகவினை அறிவுறுத்தி. தம்மின் முரணிய தலைவர்கள் இருவர் ஏய்ந்து - தமக்குள் மாறுபட்ட தலைவர்கள் இருவரைப்பெற்று, நான்கு அங்கம் வாய்ந்த பசாதி - நான்கு அங்கம் பெற்ற நாடகச்சாதி, ஈகாமிருகம் என்று இயம்பல் ஆகும் - ஈகாமிருகமென்று கூறப்படும்.

குறிப்பு:—'மானெனமருளும்' என்றதனல் அச்சமே தலையெடுத்த குணமாக்கொண்ட மடவரலென்றறிக. 'இழிவு' என்றதனல் அன்புடைக் காமமற்ற ஏனையவையென்பது பெறப்பட்டது. இதற்குதாரணம் குசுமசேகரவிஜயம் என்னும் வடநூலாம். (கங)

அங்கம்

131. அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்ருய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வேண்டும்.

அவலம் சுவைத்து ஆய் - அவலச்சுவை யொன்றனையே பெரிதுந் தெரிப்பதாய், அங்கம் ஒன்று உடைத்துஆய் - ஓரங்கத்தையுடையதாய, கவலை கொள் மகளிர் கசிந்து உளம் அழுங்க - உள்ளத்திற் பல்விதக் கவலைகளைக்கொண்ட ஸ்திரீகள் மனமிரங்கி வருந்த, அண்மினர் வாய் விடுத்து அரற்றும் மாண்பிற்று ஆய் - சமீபத்திலிருப்பவர்கள் வாய்விட்டுக் கதறுந் தன்மையினையுடையதாய், வாதம் விளைத்து - வாக்குவாதம் நடக்கப்பெற்று, வாய் போர் காட்டி - (அதனாற்) சொற்போரைத்தெரிவித்து, மக்கள் பாத்திரமா - மானுடமக்கள் நாடக பாத்திரங்களாக, வயங்குறுவதுவே - விளங்குவதே, அங்கம் என்ன அறிதல் வேண்டும் - அங்கம் என்னும் நாடகச்சாதியென அறிதல் வேண்டும்.

குறிப்பு:—பெரும்பாலும் அவலச்சுவை பயின்றுவரும் எனவே சிறுபான்மை ஏனையசுவைகளுட் சில வோரோ வொருவழி பயிலப் பெறுமென் றுணர்க. கைப்போரென்னது வாய்ப்போரென்றமையின் விற்போரும் மற்போரு மின்றிச் சொற்போரே யிருத்தல்வேண்டுமென்றறிக. அவதாரங்களையும் மக்களென நாடகநூலார் கருதுவாராதலின் அவர்களும் பயின்றுவரல் சாலுமென்க. நாமகள் சிலம்பின் ஐந்தாம் பரலாகிய தசரதன் தவறும், எட்டாம் பரலாகிய மானவிஜயமும் இச்சாதிக் குதாரணங்களாம். (கச)

132. உறுப்பி னின்றும் வேற்றுமை காணச்
சிறப்பங் கம்மெனச் செப்பலு முண்டே.

உறுப்பின் நின்றும் வேற்றுமை காண - நாடகப் பேருறுப்பாகிய அங்கத்தினின்றும் வேற்றுமையை யாவருமினிதினுணர, சிறப்பு அங்கம் என செப்பலும் உண்டு - சிறப்பங்கம் என்று இச்சாதியினைச் சொல்லுதலும் வழக்காம்.

குறிப்பு:—"நாடகப் பேருறுப் பங்க மததான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே"
என்னுஞ் சூத்திரத்தை யீண்டுணர்க. (கரு)

வீதி

133. ஒருபாத் திரமே யோரங் கத்தினுட்
கைசிகி விருத்தி மெய்திகழ் வுறுத்தி
யின்பச் சுவைநன் கியைய விரும்பு
தோங்கு மொழிபல வுவந்து பேசலும்
விட்புலக் கூற்று மேயது வீதி.

ஒன்று பாத்திரமே - ஓரே நாடக பாத்திரம், ஒன்று அங்கத்தினுள் - ஓரேயங்கத்துள், கைசிகி விருத்தி - கைசிகி யென்னும் விருத்தியினை,

மெய் திகழ்வு உறுத்தி - உண்மையாக விளங்குமாறு காட்டி, இன்பம் சுவை நன்கு இயைய - உவகைச்சுவை நன்றாகப் பொருந்த, இறும்பூது ஓங்கும் மொழி பல உவந்து பேசலும் - ஆச்சரியம் மிக்க மொழிகள் பலவற்றைக் களிப்புடன் பேசலும், விண் புலம் கூற்றும் - அசரீரி வாக்கும், மேயது - பொருந்தியது, வீதி - வீதியென்னும் நாடகச்சாதியாம்.

குறிப்பு:—நாடகத்திற்கு அழகினைத்தரும் தாய் போன்றும், உண்மையான உறுதிபயக்கும் பொருளினை இஃதென்று உணர்த்தி, இன்னார் தலைவரென்று தெரித்து, பற்பல சுவைகளின் அமைதியினை வெளிப்படுத்தும் சொற்றொடர்கள் பொருந்தியும் நிற்பதனை விருத்தியென்று கூறுவார்கள். இதனைப் பின்னர் வரும் 167-ஆம் சூத்திரத்தானுணர்க. நால்வகை விருத்தியு ளொன்றாகிய கைசிகியின் இலக்கணத்தை 171-ஆம் சூத்திரத்தா னுய்த்துணர்க. விட்புலக் கூற்று: ஆகாயவாணியின் கூற்று;

"கட்புல னின்றச ரீரி விண்ணின்றே
யொட்பமொ டுரைப்பது விட்புலக் கூற்றே". (சூத். 198)

வடநூலார் மாளவிகை யென்னும் நூலினை யுதாரணமாக வீண்டுக் காட்டுப. (கசு)

பிரகசனம்

134. முனிவர் தேவர் முதுமறை யந்தண
ரெனுமிவ ரிடைவர விழிவு நிந்தையும்
பெறவெறும் போலிக ளுறுதலை மக்களாச்
சாத்து வதியே கைசிகி தந்து
நகைச்சுவை தன்னை மிகுத்துக் காட்டி
யொன்றே யாத விரண்டே யாத
லங்கங் கொண்ட தரும்பிர கசனம்

முனிவர் - மகர்ஷிகளும், தேவர் - தேவதைகளும், முதுமை மறை அந்தணர் - பழமையான வேதங்களையுணர்ந்த வேதியர்களும், எனும் இவர் - என்று சொல்லப்பட்ட இவர்கள், இடை வர - நாடகபாத்திரங்களிடையிற் றுமொருவராக வர, இழிவும் நிந்தையும் - இழிதகவும் பழியும், பெற - பெற்றுநிற்க, வெறுமை போலிகள் - பயனற்ற மக்கட்ப தடிகள், உறு - பொருந்திய தலைமக்களா, - தலைமக்களாகவும், சாத்துவதியே - சாத்துவதியும், கைசிகி தந்து - கைசிகியும் ஆகிய இவ் விருத்திகளைக் காட்டி, நகை சுவை தன்னை மிகுத்து காட்டி - நகைச்சுவையினைப் பெரிதும் பொருந்தத் தெரித்து, ஒன்றே ஆதல் இரண்டே ஆதல் அங்கம் கொண்டது - ஒன்றல்லது இரண்டு என்னும் எண்ணுடைய அங்கம் பெற்றது, அருமை பிரகசனம் - எடுத்துரைப்பதற்கரிய பிரகசனம் என்னும் நாடகச்சாதியாம்.

குறிப்பு:—முனிவர்: கடவுளைத் தியானிப்பவர். அந்தணர்: வேதாந்தத்தினையே யணவுபவர்; பார்ப்பார். பெரிதும் நகைச்சுவையே பெற்றுவரத்

தொடுத்த லருமையாதலின் 'அரும்பிரகசனம்' என்று கூறினர். இனிக் காணுநராற் சிரியாமற் பார்த்த லருமையிற் கூறினர் எனனுமாம். இச்சாதிக்கு உதாரணமாக விளங்குவது நாமகள் சிலம்பின் ஏழாம் பரலாகிய சூர்ப்பணகை யென்னும் நூலாம். சாத்துவதிகைசிகி யென்னும் விருத்திகளி னிலக்கணங்களை 169, 171-ம் சூத்திரங்களானுணர்க. (கஎ)

சாதியின் பிறிதுவகை

135. சாதி வகையினு மோது மிடத்து
வீரங் கூச்ச மர்ப்பா யம்பேய்க்
காரம் வியோகம் பாணஞ்சல் லாபம்
வீழிணி யோடுத் தார மடங்கம்
பிராசன மென்னப் பிரிப்ப சிலரே.

சாதி வகை இனும் ஓதும் இடத்து - சாதி வகையினைப் பற்றி யின்னுஞ் சொல்லுமிடத்து, வீரம்–, கூச்சம்–, அர்ப்பாயம்–, பேய்க்காரம்–, வியோகம்–, பாணம்–, சல்லாபம்–, வீழிணி–, உத்தாரமடங்கம்–, பிராசனம்–, என்ன சிலர் பிரிப்ப - என்று சிலர் பிரிப்பார்கள்.

குறிப்பு:—ஈண்டுக் கூய பத்துவகையினைப் பெற்ற நாடகங்கள் காணப் பெறுமையானும் இவையிற்றின் இலக்கணங்களினும் முன்னர்க்கூறிய தசரூபங்களின் இலக்கணங்கள் செவ்வியுடைத்தா மாதலானும், சில முன்னை யவற்று ளடங்குதலானும், வழக்காறற் றொழிந்த இவ்வகைகளை முற்றும் விளக்கிக் கூறுத லியலாமையானும், முன்னர்க்கூறிய தசரூபகங்களையே யாவரு மெடுத்தாள வேண்டுமென்பது நமது ஆசிரியர் கருத்தாமாதலானும் இவைகளைப்பற்றி விரித்துரையாது வாளாவிடுத்தனர். இனி யிவையிற்றி னிலக்கணங்களை வீரசோழியவுரையாசிரியர் பெருந்தேவனர், "புகட்சி பாவல்" என்னுந் தொடக்கத்த கலித்துறையுரையின்கட் குறித்தவா றுரைக்குதும்.

"வீரமாவது, அங்க மிரண்டு முதலா வாறிரண்டு மெய்தப்பெற்றுச் சந்தியைந்து முடைத்தாய் வாரங்கண்டம் பெற்றும் பெறாதுந் தலைமக னொருவனவது. கூச்சமாவது, தலைவரிருவரை யிடையிட்டுப் பேசப்பட்டு வாரத்தோடிருக்கும். அர்ப்பாயமாவது, அருளில்லாதோர் தலை மக்களய்ப் பெண்ணுடைத்தாய் வாரம் போலியாவது. அர்ப்பீடமெனினும் ஒக்கும். பேய்க்காரமாவது, தலைமக்கள் தேவ காந்தர்வ பைசாசாதிய பதினறுவராய்ப் பெண்ணுடைத்தாய் முன்பின் மூன்றினு மொன்றின் பொருள் பெறுதலு மங்கமொன்றாதலுங் கண்ட மொன்றாதலுமாம். வியோகமாவது, தலைமக்க ளொருவரைத்தான் பல ரைத்தான் உடைத்தாய்ச் சந்தியைந்து முடைத் தாய்த் தலைமைக் கண்ட மொருகண்டம் பெறும். பாணமாவது, தூர்த்த னுதல் தலைவனுதல் தானுஞ் சொல்லி நின்றார் சொல்லையு மனுவதித்துச் சொல்லிய ஐவகைச் சந்தியுள்ளும் கடைக்கண் சந்தியங்கமொன்றுவது. சல்

லாபமாவது, ஒரு பொருண்மேற் பேசுவார் தலைமக்களிருவரா யோரங்கமாய் நிருபணைச் சந்தியொன்றுறு நில் ற சந்தி நான்குடைத்தாவது. வீழிணியாவது கூத்தன் றலைமகனைத் தன்மடந்தைக்கு விடாய் கண்டவாறும் மன்னகரங் கண்டவாறுஞ் சொல்லுதலாய் அங்கமொன்றாய் ஐவகைச்சந்தியுள்ளும் கடைச்சந்தியணையுசொல்லுவது. உத்தூரமடங்கமாவது, மக்கள் பலரைத் தலைவராகப் பெற்றுப் பெரும் பொல்லாத போருடைத்தாய்ப் பெண்களா லாற்றப்பட்டுச் சந்தியைந்து முடையது. பிராசனச் சாதியாவது சுத்தமுஞ் சங்கீரணமுமென விரண்டாம். சுத்தமாவது தக்காரை யிகழ்ந்துவருவது. சங்கீரணமாவது பாஷண்டன் தலைமகனைத் தோழியரே கணிகையரே தூதரே யவிகளே பேடியரே யென்றிவரை யுடைத்தாய்க் கடைக்கட் சந்தியின்றி யங்க மொன்றுவது. இனியிதனை வடநூலார் சுத்த வைகிருத சங்கீரணமென மூவகைப்படுத்துப". பின்னர்க்கூறிய விரண்டும் ஏனையவற்றைப் போலாது ஒன்பான் சுவையும் ஒருங்கே வரல்வேண்டு மாதலான் ஆசிரியர் இடையே யொடுக்கொடுத்துப் பிரித்தார். (கஅ)

(உ) உபசாதி

136. உபசாதி யாகிய நாடகந் தாமு
முண்டவை யொன்பா னிரட்டி யாகும்.

உபசாதி ஆகிய நாடகம் தாமும் உண்டு—உபசாதியென்பனவாகிய நாடகங்களும் உள; அவை ஒன்பான் இரட்டி ஆகும் – அவை பதினெண் வகைப் படுவனவாம்.

குறிப்பு:—உபசாதி: சாதிபோல் அத்துணைச் சிறப்பின்றி ஓரோவோரிடங்களிற் குறைந்து வருமாதலானும் அவைகளைப் போன்றும் பலவிடத்தும் பயின்றுவரு மாதலானும் உபசாதியென்னும் பெயரினவாயின. (கக)

உபசாதிவகை

137. நாடிகை துரோடகங் கோட்டி சட்டக
நாட்டிய ராசகம் பிரத்தா னத்தொடு
முல்லாப் பியமே காவியம் பிரேங்கண
மிராசகஞ் சமுலா பகந்திருக் கதிதஞ்
சிற்பகம் விலாசிகை துன்மல் லிகையே
பிரக ரணியல் லீசம் பாணிகை
யென்பன வாகு மவற்றின் பெயர்முறை.

அவற்றின் பெயர்முறை - அவ்வுபசாதிகளின் பெயர் வரிசை, நாடிகை—, துரோடகம்—, கோட்டி—, சட்டகம்—, நாட்டியராசகம்—, பிரத்தானம்—, உல்லாப்பியம்—, காவியம்—, பிரேங்கணம்—, இராசகம்—, சமுலாபகம்—, திருரகதிதம்—, சிற்பகம்—, விலாசிகை—, துன்மல்லிகை—, பிக்கரணி—, அல்லீசம்—, பாணிகை—, என்பன ஆகும் - என்று கூறப்படுவனவாம்.

குறிப்பு:—பின்னர்க்கூறியவற்றினும் முன்னர்க் கூறியன சிறப்புடைய வென்பார் இடையே யொடுக்கொடுத்துப் பிரித்தார். இவ்வுபசாதிகளின் இலக்கணத்தைப் பின்னர் வருஞ் சூத்திரங்களா னாசிரியர் கிரலே விளக்குத லறிக. (உ0)

நாடிகை

138. கைசிகி விருத்தி காட்டுவ தாகி
நாலங் கத்தி னாரியர் பலர்கொண்
டரசன் றலைவனா வன்னா னஞ்சு
மரசி யொருத்தியு மவன்கா தலிக்கு
மரசி யாட்சிக் கடங்கின ளாகு
மழகின ளொருத்தியு மாவிரு தலைவிய
ருடைய தாகி நாட்டிய மிசையொடு
நடைபெறு வதுவே நாடிகை யென்ப.

கைசிகி விருத்தி காட்டுவது ஆகி—கைசிகி விருத்தியினைத் தெளிவு பெறத் தெரிப்பதாகி, நான்கு அங்கத்தின் - நான்கு அங்கத்தினையுடைய தாய், நாரியர் பலர் கொண்டு-, அரசன் தலைவனா - அரசன் நாடகத்தலைவ னாக, அன்னான் அஞ்சும் அரசி ஒருத்தியும்—அவ்வரசன் பயப்படும் அரசி யொருத்தியும், அவன் காதலிக்கும் - அவ்வரசன் விரும்பும், அரசி ஆட்சிக்கு அடங்கினள் ஆகும் அழகினள் ஒருத்தியும் - அரசியின் ஆளுகைக் குட்டபட்டவளாகும் பேரழகினையுடையாள் ஒருத்தியும், ஆ இரண்டு தலைவியர் உடையது ஆகி - ஆக இரண்டு தலைவியர்களை உடையதாகி, நாட்டியம் இசையொடு நடைபெறுவதுவே - நாட்டியம் இசை இவைகளொடு நடத்தலைப் பெற்றிருப்பதே, நாடிகை என்ப - நாடிகையென்று கூறுவர் ஆன்றோர்.

குறிப்பு:—கைசிகி விருத்தியி னிலக்கணத்தைப் பின்னர்வரும் 171-ஆம் சூத்திரத்தானுணர்க. நாட்டியம்: பரதம். இசை: சங்கீதம். இவ்வுபசாதிக்கு ஜோதிமாலை யென்னும் நாமகள் சிலம்பின் பதினேழாம்பரல், தக்க உதாரணமாம் வடநூலார் இரத்நாவளி, பிரியதர்சிகை யென்பனவற்றை யுதாரணமாகக்காட்டுப. நாரியர் - மகளிர். (உக)

துரோடகம்

139. ஒவ்வொன் றின்கணும் விதூடகன் வருமா
றொன்பதே யெட்டே யேழே யாத
லைந்தே யாத லங்க முடைத்தாய்
மக்க டேவர் தொக்கபாத் திரமா
வுவகைச் சுவையி னேங்குந் துரோடகம்.

ஒன்பதே எட்டே ஏழே ஆதல் - ஒன்பது எட்டு அல்லது ஏழாவது, (அன்றி), ஐந்தே ஆதல் - ஐந்தாவது, அங்கம் உடைத்து ஆய் - அங்கங்களை

புடையதாய், ஒன்று ஒன்றின்கணும் விதூடகன் வருமாறு - ஒவ்வோரங்கத்தினும் விதூடகன் வந்தியலும்படி, மக்கள் தேவர் தொக்க பாத்திரமா-மானுடர் தேவர்கள் இவர்கள் கூடிய நாடக பாத்திரங்களாக, உவகை சுவையின் - உவகைச்சுவையினானே, ஓங்கும் - சிறப்புற்று நிற்கும், துரோடகம் - துரோடகம் என்னும் உபசாதி.

குறிப்பு:—இச்சூத்திரத்தானே ஒன்பானங்கமுடைய துரோடகமே சிறப்புடையதென்பதும், குறைந்தவளவு ஐயங்கமேயென்பதும் போதரும். இவ்வுபசாதிக்கு உவகைச்சுவையே பெரிதும் பயின்றுவரல் வேண்டுமெனல றிக. விக்கிர மோர்வசியம் என்னும் வடமொழி நாடகம் இவ்வகையினுக் குற்ற வுதாரணமாமாறுகாண்க. இஃது ஐயங்கமுடையதாம். (உஉ)

கோட்டி

140. அங்க மொன்றனு ளநேகசா மானியப்
புருடரும் பெண்டிரும் போதரக் கைசிகி
காம வின்பங் கட்டுரைப் பதுவே
கோட்டி யென்ன நாட்டப் படுமே.

அங்கம் ஒன்றனுள் - ஓரங்கத்தில், அநேக சாமானிய புருடரும் பெடிண்டிரும் போதர - பல சாதாரண ஆடவரும் மகளிரும் நாடகபாத்திரங்களாய் போந்து நிற்ப, கைசிகிகாமம் இன்பம்-கைசிகி விருத்தியினையும் அன்புடைக்காமத்தாலாகிய உவகைச் சுவையினையும், கட்டுரைப்பதுவே - எடுத்துக் கூறும் உபசாதியே, கோட்டி என்ன நாட்டப்படும் - கோட்டி யென்று நாடகநூலாரா னுலகில் நாட்டப்படுவது.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. கைசிகி காமவின்பம்: உம்மைத்தொகை. இவ்வகையினுக் குதாரணம் இரைவதமதனிகை என்னும் வடநூலாம். (உங)

சட்டகம்

141. சவனிகைப் பெயரிய வங்க நான்கனுள்
வியப்புச் சுவையினை மிகுத்துக் காட்டி
யிழிசினர் மொழியி னியற்றப் பெற்று
மற்றைய வெல்லாஞ் சொற்றநா டிகைபோற்
பெட்டிசைக் கப்படுஞ் சட்டக மென்ப.

சவனிகை பெயரிய அங்கம் நான்கனுள்—ஜவனிகை யென்னும் பெயர் வாய்ந்த அங்கம் நான்கு பெற்று அவையிற்றினுள், வியப்பு சுவையினை மிகுத்து காட்டி - வியப்புச்சுவையினைப் பெரிதுந்தெரித்து, இழிசினர் மொழியின் இயற்ற பெற்று - தாழ்ந்தோர்தம் மொழியினு னியற்றப்பட்டு, மற்றைய எல்லாம் - ஏனைய தன்மைகளிலெல்லாம், சொற்ற நாடிகைபோல் - முன்னர்க் கூறிய நாடிகையென்னும் உபசாதியினைப்போல், பெட்டு இசைக்கப்படும் - விரும்பிப் புலவராற் கூறப்படும், சட்டகம் என்ப - சட்டகம் என்று நாடக வாசிரியர் கூறுவர்.

குறிப்பு:— சட்டகம் இசைக்கப்படும் என்ப என்று முடிபு கூறுக. சவனிகை: திரை. ஒருமுறை சுருட்டப்பட்ட திரை மறுமுறை வீழுமுன் இச்சட்டகத்திலுள்ள ஒவ்வோரங்கமும் முற்றப்பெறுதலின் 'ஜவனிகை' யென்பது அங்கத்திற்கே பெயராயிற்று. இழிசினர்: கீழ்மக்கள். இழிசினர் மொழியினை தியல்பை இழிசினர் வழக்குரைவரையறை யென்னும் நூலிற் பரக்கக்காண்க. 'மற்றைய' வென்பதென்னையோவெனின் கைசிகிவிருத்தியி னும் தலைவன் தலைவியர் தம்மியல்பினு மென்றறிக. இவ்வகையினுக்கு உதார ணம் கற்பூரமஞ்சரி யென்ப வடநூலார். (உச)

நாட்டியராசகம்

142. இன்னிசைப் பாட்டு மன்னிய தாகி
யழகினு முடையினு மன்புறு தலைவியுந்
தீரோ தாத்தச் செவ்விய தலைவனும்
பீட மர்த்தநா யகனுப நாயக
னிவர்களு முடைத்தா யின்பமு நகையுங்
கொண்ட சுவைத்தாய்க் கோலமீ ரைந்துங்
காட்டியியல்வது நாட்டிய ராசகம்.

இனிமை இசை பாட்டு மன்னியது ஆகி - இனிய இசைப்பாட்டுக் கள் பொருந்தியதாகி, அழகினும் உடையினும் அன்பு உறு தலைவியும் - அழகு செய்து கொள்வதினும் நல்லுடை தரிப்பதினும் அன்பினையுடைய தலைவியும், தீரோதாத்தன் செவ்விய தலைவனும் - தீரோதாத்தனின் தன்மை வாய்ந்த தலைவனும், பீடமர்த்தநாயகன் உபநாயகன் இவர்களும் உடைத்து ஆய் - பீடமர்த்த நாயகன் உபநாயகன் என்னும் இவர்களையும் உடையதாய், இன் பமும் நகையுங்கொண்ட சுவைத்துஆய் - உவகைச்சுவையும் நகைச்சுவை யும் பொருந்தியதாய், கோலம் இரண்டு ஐந்தும் காட்டி இயல்வது - பதின் வகைக் கோலங்களையும் காட்டி நடப்பது, நாட்டியராசகம் - நாட்டியராசக மென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—அழகு: ஈண்டுத் தான் அழகுசெய்துகொள்வதும், அழ குள்ளவிடத்து ஆர்வமுண்டாதலுமாம். அழகையும், உடையையுங் கூறின மையால், அணியையு முபலக்கணத்தாற் கொள்க. தீரோதாத்தன், உபநாய கன், பீடமர்த்த நாயகன் இவர்களின் இலக்கணத்தைப் பொதுவியல்பிற் கண்டு கொள்க. இவ்வுபசாதிக்கு ஏற்ற சுவைகள் உவகையும் நகையுமாம். ஈரைங்கோலம் :

"இருந்திசைக் கோலம் நின்றிசைக் கோலம்
வெறுங்கோ லம்மே யாப்பிசைக் கோலம்
வெறுப்பிசைக் கோலங் கரந்தாடு கோலம்
ஏங்கிசைக் கோல மிரட்டிசைக் கோலஞ்
சிறந்திசைக் கோல மிணங்கிசைக் கோல

மென்னக் கோல மீரைந் தாகும்;"
"இவற்றை யிலாசியமென் றுரைப்ப"

என்னுஞ் சூத்திரங்களானறிக. இருந்திசைக்கோலம்: இருக்கையில் வீற்றிருந்தவண்ணம் யாழினின்னிசைக் கிணங்கப்பாடுதலாம். நின்றிசைக்கோலம்: நின்றவண்ணமிசைத்தலாம். வெறுங்கோலம்: துக்க மேலீட்டால் அணியாதியவற்றைக் களைந்து இசைக்கருவிகளுமின்றி யோரிடத்திருந்து இரங்கியிசைத்தலாம். யாப்பிசைக்கோலம்: இசைக் கருவிகளின் ஒலிக்கிணங்க இசைகூட்டிப் பற்பல யாப்பின் விகற்பங்களைத் தெரிப்ப இசைத்து ஆடவரும் பெண்டிருந் தத்தம் இயற்கைக்குமாறாய் நடத்தலாம். வெறுப்பிசைக்கோலம்: தலைவன் மற்றொருத்திபால் விருப்புற்றன னென்றுணர்ந்த தலைவி தலைவன்பாற் றான்கொண்ட அன்பினை வெறுத்தவளாய் யாழிசைக் கிணங்க இன்குரலெழுப்பி யிரங்கிப்பாடுதலாம். கரந்தாடுகோலம்: ஆடவர் பெண்டிர் தம் உடைபுனைந்து கரந்து நின்றொழுகுதலாம். இக்கோலத்திற்குச் செவ்வியவுதாரணஞ் ஜோதிமாலை யென்னும் நாடிகையில் மன்னன் ஜயபாலன் மாறுவேடம் புனைதலாம். ஏங்கிசைக்கோலம்: ஓரிடத்துக் குறித்தநேரத்துத் தலைவன் வாராது காலநீட்டித்தமையின் தலைவி யின்னிசைப்பண்ணை யினிதெழுப்பி யிரங்கியிசைத்தலாம். இரட்டிசைக் கோலம்: வாதஞ்செய்ந் நிலையுடன் மனவெழுச்சியையுங் கவர்ச்சியையுமுடைய இனிய பாடல்களை யிசைத்தலாம். சிறந்திசைக்கோலம்: இன்னிசை பொருந்திய வரிப்பாடல்களை வெகுளிச் சுவையாலாதல் இன்பச் சுவையாலாதல் ஆழ்ந்த கருத்துடனும் பற்பல இசை வேறுபாட்டுடனும் எடுத்த நிலையும் உற்றுணர் நிலையுமாகிய இருநலன் விளங்க இசைத்தலாம். இணங்கிசைக்கோலம்: உல்லாசத்தொடு கூடிப் போலிக் கண்டனங்களும் இயைந்து பாட்டினிசைக்கப்படும் சம்பாஷணையாம். இவ் வீரைங்கோலமும் பெரும்பாலும் மகளிர்க்கென்றுணர்க. இவையிற்றினுக் குதாரணங்கள் வந்துழிவந்துழிக்காண்க. நாமகள் சிலம்பின் ஒன்பதாம் பரலாகிய உஷாபரிணயம் இவ்வகையினுக் குதாரணமாம். இனி நிருமவதி, விலாசவதி என்பவற்றை யுதாரணமாகக் காட்டுப வடநூலார். (உரு)

பிரத்தானம்

143. பல்வகைப் பட்ட பாடலா டற்றாய்ப்
பாரதி விருத்தி யேருறக் காட்டித்
தலைவனுந் தலைவியு மடிமைய ராக
வுதவித் தலைவனு முற்றீ ரங்கத்
தோங்குகட் குடியிற் றூங்கொள் கருத்தைப்
பாங்குற முடிப்பது பகர்பிரத் தானம்.

பல்வகைப்பட்ட - பல்வேறுவிதமான, பாடல் ஆடற்று ஆய் - பாடல் ஆடல்களையுடையதாய், பாரதி விருத்தி - பாரதி என்னும் விருத்தியினை, ஏர் உற காட்டி - அழகு பொருந்தத் தெரித்து, தலைவனும் தலைவியும்—,

அடிமையர் ஆக - அடிமைத்தொழில் செய்யும் மக்களாகி, உதவி தலைவனும் உற்று - உபநாயகனையும் பெற்று, இரண்டு அங்கத்து - இரண்டு அங்கங்களையுடையதாய், ஒக்கு கள் குடியில் தாம் கொள் கருத்தை - மிக்க கட்குடியின் கண் நாடகபாத்திரங்கள் தாம்கொண்ட கருத்தினை, பாங்கு உற முடிப்பது - செவ்விவாய்ப்ப முடிப்பது, பகர் பிரத்தானம் - நாடகவாசிரியராற் கூறப்பெற்ற பிரத்தானம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—பாரதிவிருத்தி: இவ்விருத்தியின் இலக்கணத்தை 171-ஆம் சூத்திரத்தானுணர்க. தலைவனும் தலைவியும் அடிமையர் எனவே அவர்தம் மொழியும் இழிசினர் வழக்குரையுமாமென்று துணிக. சிங்காரதிலகம் என்னும் வடநூல் இவ்வகைத்தாம். (உசு)

உல்லாப்பியம்

144. தலைவன் றீரோ தாத்தனத் தலைவியர்
நால்வரா வுவகை நகையவ லச்சுவை
மேவப் பெற்று மூவகை யிசைப்பாட்
டுடைத்தாப் போர்செறி நடைத்தா வங்க
மொன்றனு ளியலு முல்லாப் பியமே.

தலைவன் தீரோதாத்தன - தலைவன் தீரோதாத்தனாகவும், தலைவியர் - தலைவியர்கள், நால்வரா - நான்கு பேர்களாகவும், உவகை நகை அவலம் சுவை மேவ பெற்று - உவகை நகை அவலமென்னுஞ் சுவைகள் பொருந்தப் பெற்று, மூன்றுவகை இசைப்பாட்டு உடைத்தா - மூன்று வகைப்பட்ட இசைப்பாட்டினைப் பெற்றதாய், போர் செறி நடைத்தா - போரினைத் தெரிக்கும் ஒழுக்கத்தினையுடையதாய், அங்கம் ஒன்றனுள் - ஓரங்கத்தினுள், இயலும் - நடைபெறும், உல்லாப்பியம் - உல்லாப்பியமென்னும் உபசாதி.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. மூவகை இசைப்பாட்டு: கீதவுரு, கீர்த்தனம், வரிப்பாட்டு. இனிச் சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மியென்றுரைப்பாருமுளர். இவ்வுபசாதிக்குதாரணம் தேவீமகாதேவம் என்ப வடநூலார். (உஎ)

145. நால்வர் தலைவியர் நயந்துபோர் களிகொளு
மூவங் கத்ததா மொழிநரு முளரே.

நால்வர்தலைவியர் நயந்து - நான்கு தலைவியர்களையுடையதாய், போர் களி கொளும் - போரினையுங் கட்களிப்பினையுங் கொண்டு, மூன்று அங்கத்ததா - மூன்று அங்கத்தினையுடையதாக, மொழிநரும் - கூறும் நாடகவாசிரியரும், உளர் - சிலர் உளர்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. மொழிநர்: ந் பெயரிடை நிலை. உம்மை: இழிவு சிறப்பும்மையாம். (உஅ)

காவியம்

146. கருணை தலைவியு மகிணன் றீரோ
தாத்தனு மாகி மீத்தகை யின்ப

நுகர்ச்சி பற்றிய பகர்ச்சி மலிதர
விசைவழாப் பாட்டு நசைவரக் காட்டி
நகைச்சுவை நிறைந்து நடப்பது காவியம்.

சுகுணை தலைவியும் - சுகுணைநாயகி தலைவியும், மகிணன் - தலைவன், தீரோதாத்தனும் ஆகி - தீரோதாத்தனுமாகப் பொருந்தி, மீ தகை இன்பம் நுகர்ச்சி பற்றிய - மேலான இன்ப அநுபவத்தைக் குறித்த, பகர்ச்சி - சொற்கள், மலிதர - மிக்குத்தோன்ற, இசை வழா பாட்டு - இன்னிசையின்கட் குறைவுதோன்றாப் பாடல்களை, நசை வரகாட்டி - அன்புபொருந்தத் தெரித்து, நகை சுவை நிறைந்து - நகைச்சுவை மிகுதியும் பொருந்தி, நடப்பது காவியம் - ஒழுகுவது காவியம் என்னு முபசாதியாம்.

குறிப்பு:—சுகுணை தீரோதாத்தன் இவர்தம் மிலக்கணங்களைப் பொது வியல்பிற் கண்டுகொள்க. மகிணன்: மகிழ்நன்; "மெய்ம்மாண்ப தாநவ் வரின் முன் னழிந்துபின் மிக்கணவ்வாம்" —(வீரசோழியம் - சந்திப்படலம்.) இவ் வகையினுக்கு யாதவோதயம் என்னும் வடநூல் உதாரணமாம். (உசு)

பிரேங்கணம்

147. மற்போர் விற்போர் பொற்புறக் காட்டி
நால்வகை விருத்தியு மேல்வகை தெரித்து
முன்னுரை கூத்து நண்ணல தாகி
யிழிந்தபாத் திரமே மொழிந்த தலைவனு
நயந்தோ ரங்கத் தியைந்தது பிரேங்கணம்.

மல்போர் வில்போர் பொற்பு உற காட்டி - மல்ல யுத்தம் தநுர்யுத்தம் இவையிற்றினைச் செவ்விதிற் றெரித்து, நான்குவகை விருத்தியும் - சாத்துவதி ஆரபடி கைசிகி பாரதி என்னும் நால்வகைப்பட்ட விருத்தியினையும், மேன்மை வகை தெரித்து - மேலான விதமாகக் காட்டி, முன்னுரை கூத்து நண்ணலது ஆகி - முன்னுரையும் கூத்தும் பொருந்தாததாகி, இழிந்த பாத்திரமே - இழிதகவுடைய நாடக பாத்திரமே, மொழிந்த தலைவனு - நாடக நூலாசிரியராற் றெரிக்கப்பெற்ற தலைவனுகை, நயந்து - விரும்பி, ஒன்று அங்கத்து இயைந்தது - ஓரேயங்கத்திற் பொருந்தி யொழுகுவது, பிரேங்கணம் - பிரேங்கணம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—"ஏல்வகை" யெனப் பிரித்துப் பொருந்துமாற்றால் என்று பொருளுரைத்தலுமாம். முன்னுரை: பிரஸ்தாவனை; இதனிலக்கணத்தினை

"முற்படக் கிளத்து முன்னுரை யதுதான்
சூத்திரதாரன் சூழ்சபை வணங்கித்
துணைவரை விளித்தவர் தம்மொடுங் கூடி
நாடகப் புலவ னல்லிய னவின்று
கதைநிகழ் பருவ காலம் புணைதர்

திதமுறு பாடலி னியம்புவித் தின்புறத்
தெடுத்த நாடகந் தொடங்குமு னிசைப்பதாம்.''
என்னுஞ் சூத்திரத்தானுணர்க. கூத்து:
"குதித்தா டுறுவது கூத்தெனப் படுமதிற்
பரத நாட்டியங் குரவை நகைவரி
முதலிடை கடையென விதமே மூகும்.''
இவையிற்றின் விரிவினை 201, 202 ஆதிய உறுப்பியல்புச் சூத்திரங்களாலறிக. 'நயத்தல்' நாடக நூலாசிரியர் தந் தொழிலெனக் கொள்க. இதற்கு வாலிவதம் என்பது உதாரணமென்ப வடநூலார். (கூ0)

இராசகம்

148. ஐந்தே பாத்திர மமையப் பெற்று
மொழிவலர் வழக்கு மிழிசினர் வழக்குஞ்
சாரநற் சூத்திர தார னின்றிப்
பாரதி கைசிகி பண்புறத் தெரித்துத்
தலைவியுள் ளாளாத் தலைவன் மூர்க்கனு
வுயர்சுவைப் புணைவு நயமுறப் பெறீஇ
யொன்றே யங்க மொன்றுவ திராசகம்.

ஐந்தே பாத்திரம் அமைய பெற்று - ஐந்து நாடகபாத்திரங்களே பொருந்தப்பெற்று, மொழிவலர் வழக்கும் இழிசினர் வழக்கும் சார - கற்றுவல்லார்தம் மொழிவழக்கும் இழிசினர்தம் வழக்குரையும் பொருந்தி நிற்ப, நன்மை சூத்திரதாரன் இன்றி - நாடகத்தின்கண் நன்மையே பயக்கும் சூத்திரதாரனின்றியும், பாரதி கைசிகி பண்பு உற தெரித்து - பாரதி கைசிகி யென்னும் விருத்திகளை நன்கு பொருந்த விளக்கி, தலைவி உள்ளாளா தலைவன் மூர்க்கனு - தலைவி படைத்திட்டுக் கூறப்படாது நிஜமானவளாகவும் தலைவன் மூர்க்கனகவும் பொருந்த, உயர் சுவை புணைவு நயம் உற பெறீஇ - ஒன்பான் சுவையினையும் உயர்வாகப் புணையுந் தன்மை இனிது பொருந்தப் பெற்று, ஒன்றே அங்கம் ஒன்றுவது இராசகம் - ஒரே யங்கத்தினைப் பொருந்துவது இராசகம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—

" பாவைக் கூத்தினுட் சூத்திர மிழுப்போன்
போலவிந் நாடகத் தின்கணு மெதற்கு
முதல்வனுய் நின்று வினைமுடிப் பவனே
சூத்திர தாரனுஞ் சொல்லுங் காலே''

என்னும் உறுப்பியல்புச் சூத்திரத்தை யீண்டுணர்க. பாரதி கைசிகி யென்னும் விருத்திகளினிலக்கணத்தைப் பின்னர்க்காண்க. பெறீஇ: பெற்று: சொல்லிசையளபெடை செய்யுளிசையையும் நிறைத்தது. இவ்வுபசாதியினுக் குதாரணம் மேனகாகிதம் என்னும் வடநூலாம். (கூக)

திதமுறு பாடலி னியம்புவித் திங்புறத்
தெடுத்த நாடகந் தொடங்குமு னிசைப்பதாம்.''

என்னுஞ் சூத்திரத்தானுணர்க. கூத்து:

"சுதித்தா டுறுவது கூத்தெனப் படுமதிற்
பரத நாட்டியங் குரவை நகைவரி
முதலிடை கடையென விதமே மூாகும்.''

இவையிற்றின் விரிவினை 201, 202 ஆதிய உறுப்பியல்புச் சூத்தி
'நயத்தல்' நாடக நூலாசிரியர் தந் தொழிலெனக் கொள்க. இதற்
என்பது உதாரணமென்ப வடநூலார்.

இராசகம்

148. ஐந்தே பாத்திர மமையப் பெற்று
மொழிவலர் வழக்கு மிழிசினர் வழக்குஞ்
சாரநற் சூத்திர தார னின்றிப்
பாரதி கைசிகி பண்புறத் தெரித்துத்
தலைவியுள் ளாளாத் தலைவன் மூர்க்கனு
வுயர்சுவைப் புனைவு நயமுறப் பெறீஇ
யொன்றே யங்க மொன்றுவ திராசகம்.

ஐந்தே பாத்திரம் அமைய பெற்று - ஐந்து நாடகட
பொருந்தப்பெற்று, மொழிவலர் வழக்கும் இழிசினர் வழக்
கற்றுவல்லார்தம் மொழிவழக்கும் இழிசினர்தம் வழக்குரையு
நிற்ப, நன்மை சூத்திரதாரன் இன்றி - நாடகத்தின்கண் நன்மை
சூத்திரதாரனின்றியும், பாரதி கைசிகி பண்பு உற தெரித்து - ட
யென்னும் விருத்திகளை நன்கு பொருந்த விளக்கி, தலைவி உள்ள
மூர்க்கனு - தலைவி படைத்திட்டுக் கூறப்படாது நிஜமானவளாக
மூர்க்கனுகவும் பொருந்த, உயர் சுவை புனைவு நயம் உற பெ
பான் சுவையினையும் உயர்வாகப் புனையுந் தன்மை இனிது
பெற்று, ஒன்றே அங்கம் ஒன்றுவது இராசகம் - ஓரே
பொருந்துவது இராசகம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—

"பாவைக் கூத்தினுட் சூத்திர மிழுப்போன்
போலவிந் நாடகத் தின்கணு மெதற்கு
முதல்வனுய் நின்று வினைமுடிப் பவனே
சூத்திர தாரனுஞ் சொல்லுங் காலே''

என்னும் உறுப்பியல்புச் சூத்திரத்தை யீண்டுணர்க. பா
யென்னும் விருத்திகளினிலக்கணத்தைப் பின்னர்க்காண்க. பெற
சொல்லிசையளபெடை செய்யுளிசையையும் நிறைத்தது. இவ்வு
குதாரணம் மேனகாகிதம் என்னும் வடநூலாம்.

திருக்கதிதம்

150. கதைமெய் யுரையாக் கழறியோ ரங்கத்
துயர்ந்தோர் தலைவனுந் தலைவியு மாகப்
பாரதி விருத்தி பரிவிற் றொடுத்துச்
செந்தா மரைக்கட் டிருமகள் போந்து
நந்தா வின்ப நறும்பாட் டிசைப்ப
வழங்குறு வதுவே வளர்திருக் கதிதம்.

கதை மெய்யுரையா கழறி - நாடகக் கதையினை மெய் யுரைக் கதைய தாகக் கூறி, ஒன்று அங்கத்து - ஓரங்கத்தில், உயர்ந்தோர் தலைவனும் தலைவியுமாக - உயர்ந்த சாதியோர் தலைவனும் தலைவியுமாகப் பொருந்தியிருப்ப, பாரதிவிருத்தி பரிவில் தொடுத்து - பாரதிவிருத்தியினை யன்புடன் சேர்த்து, செம்மை தாமரைக்கண் திருமகள்-செய்ய தாமரையில் வதியும் இலக்குமி, போந்து - எதிர்வந்து, நந்தா இன்பம் நறும் பாட்டு இசைப்ப வழங்குறுவதுவே - கெடுலாத இன்பமுடைய இனிய பாடல்களைப் பாடுமாறு நடைபெறக் கூறுவதே, வளர் திருக்கதிதம்-மேன்மேலும் சுவை வளர்ச்சியினையுடைய திருக்கதிதம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—மெய்யுரைக்கதையி னிலக்கணத்தை முன்னர்ப்பொதுவியலிற் காண்க. பரிவு: சண்டைத் தக்கவாதியைத்தலாம். செந்தாமரை: பிறிதினியைபு நீக்கிய விசேடணம். (கூக)

151. திருமொழி யெடுத்து மருவுறப் பெரிதுந்
தொடுப்பது வேயெனத் துணிகரு முளரே.

திருமொழி எடுத்து மருவு உற பெரிதும் தொடுப்பதே-'திரு' என்ற அச்சொல்லையே பலகாலும் பொருந்தச் சேர்த் திசைப்பதே, என - (அத் திருக்கதிதம் என்னுமுபசாதி) யென, துணிகுரும் உளர் - துணிந்து கூறுபவரும் உளர்.

குறிப்பு:-இவ்வாறு கூறுதல் நகைச்சுவைமட்டில் விளக்கத்தக்கதேயன்றி வேறு பொருணலஞ்சிறந்து பொலிவுபெறுமையின் இழிவுசிறப்பும்மையாற் றழீஇயினர். முற்சூத்திரத்திற்கும் இச்சூத்திரத்திற்கும் உள்ள வேற்றுமை யென்னை யோவெனின், முன்னர்ச் சூத்திரப்படி யமைந்த சாதியுள் இலக்குமி யுருக்கொடு தோன்றிப் பாடுவதும் பேசுவதுமாக, இதன்படி யமைந்தசாதியுள் அன்னணமின்றித் 'திரு' என்ற அவ்வொருமொழியையே பலகாலும் பலவேறு சொற்களோடும் எடுத்து மொழிதல் எனக்கொள்க. இதனை, 'ஸ்ரீகதிதம்' என்ப வடநூலார். திருமொழி: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கிரீடாரஸாதலம் என்னும் வடநூல் இவ்வுபசாதிக்குதாரணமாம். (கூச)

சிற்பகம்

152. சமநிலை நகையிவை தவிர்ந்த சுவைத்தா
யந்தணன் றலைவனு வங்கநான் கிற்று
யுபநா யகனு முடன்கொளப் பெற்று
நன்காட்டு நிலையை நன்கு புனைந்து
தெரித்து நிற்பது சிற்பக மெமன்.

சமநிலை நகை இவை தவிர்ந்த சுவைத்து ஆய் - சமநிலை நகையென்னுஞ் சுவைகள் நீங்கிய ஏனைய சுவைகளைப்பெற்றதாய், அந்தணன் தலைவனு - பார்ப்பான் தலைமகனாக, அங்கம் நான்கிற்று - நான்கு அங்கங்களைப்பெற்றதாய், உபநாயகனும் உடன் கொள பெற்று - உபநாயகனையுந் தன்னகத்துப் பொருந்தக்கொண்டு, நன்காட்டு நிலையை நன்கு புனைந்து தெரித்து நிற்பது, இடுகாட்டினது நிலைமையை நன்றாக விளக்கியுரைத்து நிற்பது, சிற்பகம் என்ப- சிற்பகம் என்று சொல்லுவார்கள் வடமொழி நாடக நூலோர்.

குறிப்பு:—நன்காடு: மயானம். உபநாயகன்றன் இலக்கணத்தை முன்னர்ப் பொதுவியல்பிற் கண்டு கொள்க. இவ் வுபசாதிக்குக் கனகவதீமாதவம் என்பதை யுதாரணமாகக் காட்டுப வடநூலார். (௩௫)

விலாசிகை

153. இன்பச் சுவைமுழு தினிது புனைந்து
பதின்வகைக் கோலமும் பண்புறக் காட்டி
யங்கமொன் றிற்களி பொங்குறு விடனும்
பீட மர்த்தனும் பேண்விது டகனு
மிழிதக வுடைய வெழின்மிகு தலைவியும்
வளர்நலஞ் சான்ற களநிலைப் பொலிவுங்
குலாவி யொளிர்வது விலாசிகை யாகும்.

இன்பம் சுவை முழுது இனிது புனைந்து - உவகைச்சுவை முழுவதையுஞ் செவ்விதாகப் புனைந்து கூறி, பதின் வகை கோலமும் பண்பு உற காட்டி — பத்துவகைப்பட்ட கோலங்களையுஞ் செவ்வனே யெடுத்துக்காட்டி, அங்கம் ஒன்றில் - ஓரேயங்கத்தில், களி பொங்குறு விடனும் — களிப்புமிக்க விடனும், பீடமர்த்தனும் - பீடமர்த்தநாயகனும், பேண் விதூடகனும் - யாவரானும் விரும்பப்படும் விதூடகனும், இழி தகவு உடைய - இழிந்த தன்மையினையுடைய, எழில்மிகு தலைவியும் - அழகு மிக்க தலைவியும், வளர் நலம் சான்ற - மேன்மேலும் வளர்ச்சியினையுடைய நன்மை மிக்க, களம் நிலை பொலிவும் - களங்களிற் பலவகையான நிலைபெற்ற காட்சியின் விளக்கமும், குலாவி — பொருந்தி, ஒளிர்வது - இனிது விளங்குவது, விலாசிகை ஆகும் — விலாசிகை யென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—பதின்வகைக் கோலம் இன்னவென முன்னர் 142—ஆஞ் சூத்திரவுரையுட் கூறினும். விடன் பீடமர்த்தன் விதூடகன் என்பவர்தம்

இயல்பினை முன்னர்ப் பொதுவியல்பிற் காண்க. பெண் விதூடகன்: தலைமக்கடம்மாற் பேணப்பெற்ற விதூடகன் எனக் கூறுமமையும். ளாம் :

"பகருமோ ரிடத்தினை நிகழ்ந்திடு காட்சியைக்
களமென மொழிப மிளிர்மேற் றிசையோர்."

இதனிலக்கணத்தை 191-ஆஞ் சூத்திர முதலியவற்றுட் காண்க. நாமகள் சிலம்பின் இருபதாம் பரலாகிய 'மஞ்சு பாஷிணி' என்பது இவ்வுபசாதிக் குதாரணமாம். (௫௬)

துன்மல்லிகை

154. விடன்ற னிலீலை விளம்புமுத லங்கமும்
விதூடகன் வினைசொலு மிரண்டா மங்கமும்
பீட மர்த்தன் பெருஞ்செயல் பேசு
மூன்ற மங்கமு மிழிதலை வன்றொழி
லாடல்கள் சொல்லு நான்கா மங்கமு
மேவிக் காமுக ராவலிற் போதரக்
கைசிகி பாரதி காட்டு நெறித்தாத்
தொடுத்துப் புனைவது துன்மல் லிகையே.

விடன்தன் இலீலை விளம்பு முதல் அங்கமும் - விடனுடைய விளையாட்டினை யெடுத்துக்கூறும் முதல் அங்கமும், விதூடகன் வினை சொலும் இரண்டாம் அங்கமும் - விதூடகனுடைய செயலினைக்கூறும் இரண்டாமங்கமும், பீடமர்த்தன் பெருமை செயல் பேசும் மூன்றும் அங்கமும் பீடமர்த்த நாயகனது பெருமை வாய்ந்த செய்கையினை யெடுத்துரைக்கும் மூன்றும் அங்கமும், இழி தலைவன் தொழில் ஆடல்கள் சொல்லும் நான்காம் அங்கமும் - இழிதகவினையுடைய தலைவனது தொழில்களையும் விளையாடல்களையு மெடுத்துக்கூறும் நான்காம் அங்கமும், மேவி - பொருந்தி, காமுகர் - விரகிகள், ஆவலில் போதர - மிக்க ஆவலினையுடையராய் நடைபெற, கைசிகி பாரதி காட்டும் நெறித்தா - கைசிகி பாரதி யென்னும் விருத்திகளைக் காட்டும் நெறியினை யுடையதாய், தொடுத்து புனைவது துன்மல்லிகை- நாடக வாசிரியராற் தொடுக்கப்பெற்று விளங்குவது துன்மல்லிகை யென்னும் உபசாதியாகும்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. இச்சூத்திரத்தானே யிச்சாதி நாலங்க முடைத்தென்பது பெறப்படும். இதற்கு விந்துமதி என்பதை யுதாரணமாகக் காட்டுப. முன்னர் விடவிதூடகரிவர்களது செயல்களும் பின்னர் இழிதலைவன் தொழில் முதலியனவுங்கூறுதலின் நடுவட் 'பெருஞ்செயல்' என்பது மிகைபட்ட செயல் என்பதாம். (௫௭)

பிரகரணி

155. நாட கத்தி னுடிகை வேறு
படுமள வாகப் பிரக ரணத்திற்

றன்வேறு படூஉந் தலைவனுந் தலைவியும்
வணிகர்க ளாக மற்றைய வெல்லா
நாடிகை போற்பொலி வதுபிர கரணி.

நாடகத்தின் - நாடகத்தினின்றும், நாடிகை வேறுபடும் அளவாக - நாடிகை யெத்துணை வேறுபாடுறுமோ அத்துணை, பிரகரணத்தில் - பிரகரணத்தினின்றும், தான் வேறு படூஉ - தான் வேறுபட்டு, தலைவனும் தலைவியும் வணிகர்களாக—, மற்றைய எல்லாம் - ஏனையயாவும், நாடிகைபோல் பொலிவது - நாடிகையினைப் போல விளங்குவது பிரகரணி - பிரகரணியென்னு முபசாதியாம்.

குறிப்பு:—படூஉ: சொல்லிசை யளபெடை யீண்டைச் செய்யுளிசையையும் நிறைத்தது. இச்சாதிக்குதாரணம் நாமகள் சிலம்பின் 19 - ஆம் பாலாகிய குமுதமாலினி என்பதாம். (௫அ)

அல்லீசம்

156. தொழில்பிறி தாக மொழிவகை தன்னிற்
றீரோ தாத்த வோராத் தலைவனு
மேழே யெட்டே பத்தே யென்னு
மெண்ணுடை மகளிரு நண்ணி யின்னிசைப்
பாட்டுப் பற்பல தீட்டப் பெறீஇ
விருத்தி கைசிகி யருத்தியிற் காட்டு
மங்க மொன்றுறு மறைந்தவல் லீசம்.

தொழில் பிறிது ஆக - (தீரோதாத்தனுடைய) தொழில் மாத்திரையின் வேறுபட்டுநின்று, மொழி வகை தன்னில் - பேச்சு விகற்பங்களில் எல்லாம், தீரோதாத்தன் - தீரோதாத்தனது தன்மை வாய்ந்த, ஓரா தலைவனும் - ஆராய்ந்தறிதல் இல்லாத தலைமகனும், ஏழே எட்டே பத்தே என்னும் எண்ணுடை மகளிரும் - ஏழு எட்டு அல்லது பத்து என்னும் அளவினையுடைய மகளிரும், நண்ணி - பொருந்தி, இனிமை இசை பாட்டு பற்பல தீட்ட பெறீஇ - இனிய இசை வாய்ந்த பாடல்கள் பல எழுதப் பெற்று, கைசிகி விருத்தி அருத்தியில் காட்டும் - கைசிகி யென்னும் விருத்தியினை அன்புறத் தெரிக்கும், அங்கம் ஒன்று உறும் - அங்கம் ஒன்றினைப் பொருந்தி நிற்கும், அறைந்த அல்லீசம் - ஈரொன்பான் உபசாதியுள் ஒன்றெனக் கூறிய அல்லீசம் என்னும் உபசாதி.

குறிப்பு:—'ஏழே எட்டே பத்தே' யென்றமையால் இடையிலுள்ள ஒன்பதினையுங் கொள்க வென்பாருமுளர். பெறீஇ - சொல்லிசை யளபெடை யீண்டுச் செய்யுளிசையையும் நிறைத்தது. இவ்வகையினுக்குக் கேளீரைவதகம் என்பதை யுதாரணமாகக் காட்டுப வடநூலார். (௫௯)

பாணிகை

157. தகவறு தலைவனுஞ் சுகுணைத் தலைவியு
முற்றுடை நலமினி தொளிரக் காட்டிப்
பாரதி கைசிகி யாரப் புணர்ந்தோ
ரங்கத் தியல்வ தரும்பா ணிகையே.

தகவு அறு தலைவனும் - தகுதிக்குணம் அற்றதலைவனும், சுகுணை தலைவியும்-சுகுணையாகிய தலைவியும், உற்று -பொருந்தி, உடை நலம் இனிது ஒளிர காட்டி - உடையினது நயம் நன்கு விளங்கத் தெரித்து, பாரதி கைசிகி ஆரபுணர்ந்து - பாரதி கைசிகியென்னும் விருத்திகளைப் பொருந்துமாறு கொண்டு, ஒன்று அங்கத்து இயல்வது - ஒரே யங்கத்தில் நடைபெறுவது, அருமை பாணிகை - காணுநரால் மனவெழுச்சியின்றிப் பார்த்தற்கரிய பாணிகையென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. உடைநலன் காட்டலாவது: பற்பல விதமான உடைகளைத் தத்தஞ்செவ்வி தோன்றஉடுத்து நின்றியங்குதலாம். உடையைக் கூறினமையால் ஒற்றுமைபற்றி அணியினையுங் கொள்க. இவ் வகைக்குகாரணம் காமதந்தையென்று வடநூலார் கூறுப. (௪0)

சாதிப்புறனடை

158. பகர்ந்த சாதியுட் படாஅ தனவு
மொருவகைச் சாதியின் மருவு மிலக்கணம்
பிறிது சாதியி னுறுமிய லோடு
கலந்து வருநவும் வலந்த வியல்புகள்
குறைந்துஞ் சிறிது கூடியும் வருநவும்
பொதுப்பட நாடக மென்று புகலுப.

பகர்ந்த சாதியுள் படாஅதனவும் - மேற்கூறிய சாதிஉபசாதி வகைகளுள் அகப்படாதனவும், ஒன்று வகை சாதியின் மருவும் இலக்கணம் - ஒருவகைச் சாதியின்கட் பொருந்துமிலக்கணம், பிறிது சாதியின் உறும் இயலோடு - மற்றைச் சாதியின்கட் பொருந்துமிலக்கணத்துடன், கலந்து வருநவும் - சேர்ந்து வருவனவும், வலந்த இயல்புகள் குறைந்தும்-சொல்லிய விலக்கணங்களுட் சில குறைந்தும், சிறிதுகூடியும் - சிலவியல்புகள் சேர்ந்தும், வருநவும் - வருவனவும், நாடகம் என்று - நாடகமென்னும் பெயர்பட, பொதுப்பட புகலுப - யாவற்றிற்கும் பொதுவாகப் புகலுவார்கள்.

குறிப்பு:—படாஅதன: செய்யுளிசையளபெடை. மேற்குறித்த பல சாதி உபசாதிகளுட் படாதனவற்றையும், ஒருசாதியினிலக்கணம் மற்றைய சாதியினிலக்கணத்துடன் கலந்து வருவனவற்றையும், ஒன்றன்கண்ணேயே சில வியல்புகள் குறைந்தும் சில வியல்புகள் மிக்கும் வருவனவற்றையும், நாடகமென்று பொதுவகாச் சொல்லுவார்கள் என்பதேயிதன் கருத்தாம்.

இவ்வாறு புறனடையான் அமைக்கவேண்டிய நாடகங்கள் பலவுளவாதல் கண்டு இன்னனஞ் சூத்திரம் வகுத்தார்போலும். (சுக)

(ங) ஒழிபு

நயநிலைப்படலம்

159. பெரியோர் தலைவரா மெய்ப்பொருள் பற்றிச்
செயலுறு நாடக நயநிலைப் படலம்.

பெரியோர் தலைவரா - ஆன்றோர் நாடகத் தலைவராகப் (போந்து), மெய்ம்மை பொருள் பற்றி - உண்மைப் பொருளைத் தெரிக்குமாறு, செயல் உறு நாடகம் - செய்யப்பெறு நாடகம், நயநிலைப்படலம் - நயநிலைப்படலமாகும்.

குறிப்பு :—“நயநிலைப்படலமாவது நாடகம்; சூத்திமார்க்கமென்பது மது; அது பெரியோரைத் தலைமக்கள் மேவச்செய்யப்பட்ட மெய்ப்பொருள் பற்றிவருதல்” என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றினையு மீண்டுய்த்துணர்க. மெய்ப்பொருள்பற்றி வருதலாவது மெய்யுரைக்கதைத்தாக வருதலெனப் பொருள்கூறுதலும் ஏற்புடைத்தாம். (சஉ)

உண்ணாடகம்

160. ஒருநா டகத்தி னுள்ளே மற்றொரு
நாடகம் போந்து நண்ணலு முண்டஃ
துண்ணா டகமென வுரைக்கப் படுமே.

ஒன்று நாடகத்தின் உள்ளே மற்று ஒன்று நாடகம்போந்து நண்ணலும் உண்டு - ஒரு நாடகத்தி னுட்புறத்தேயே மற்றொரு நாடகம் பொருந்தி நிற்றலுமுண்டு; அஃது உண்ணாடகம் என உரைக்கப்படும்-அஃது உண்ணாடகமென்று சொல்லப்படும்.

குறிப்பு :—உள் + நாடகம்: உண்ணாடகம். இதற்குச் சேகப்பிரியரா லியற்றப்பெற்ற ஆங்கில நாடகமாகிய ஹாம்லெத் (Hamlet), நடுவேனிற் கனவு (Midsummer Night's Dream) என்னு நூல்களும் உண்ணாடகம் பொருந்தி நிற்றலையுதாரணமாகக் கொள்க. பவபூதியா லியற்றப்பெற்ற உத்தரராம சரித்திரத்தி னிறுதியின் ஏழாமங்கம் உண்ணாடகமாதலறிக. இதனை 'அந்தர் நாடகம்' என்பர் வடநூலார். (சங)

மாநாடகம்

161. நால்வகைப் பதாகை நிலைகளு நயந்து
நாடகச் சிறப்பு முழுவது நண்ணி
யுவகை பெருமித வுயர்வு தெரித்துப்
பத்தங் கத்திற் பண்புற வியல்வது
மாநா டகமா வகுத்தனர்
மேனாட் புலவ ரினோர்க் கெனவே.

நான்கு வகை பதாகை நிலைகளும் - நான்கு விதமானபதாகைநிலைகளும், நயந்து - நன்குபொருந்தி, நாடகம் சிறப்புமுழுவதும் நண்ணி - நாடகத்திற்கு வேண்டிய சிறப்புக்கள்முழுவதும் பொருந்தி, உவகை பெருமிதம் உயர்வு தெரித்து-உவகைச்சுவை வீரச்சுவை யென்னுமிவையிற்றின் மேம்பாட்டினைக் காட்டி, பத்து அங்கத்தின் பண்பு உற இயல்வது - பத்து அங்கத்துடன் அழகுபொருந்த நடைபெறுவது, மாநாடகம் என-மாநாடகமென்று, மேல்நாள் புலவர்-முற்காலத்து நாடகநூற்புலமையோர் ஈண்டோர்க்கு என - இவ்வுலகத்துள்ளவர்க்கென்று, வகுத்தனர் - வகுத்துக்கூறினர்.

குறிப்பு :—நால்வகைப் பதாகைநிலைகளை முன்னர் 114-ஆஞ் சூத்திரத்துட் காண்க. உவகை பெருமித வுயர்வு தெரித்தலாவது: உவகைபெருமிதமென்னு மிச்சுவைகளைப்பெரிதும் பொருந்தக் கூறல். இதற்குப் பாலராமாயணம் என்னும் வடநூல் உதாரணமென்ப. (சச)

முந்நாடகம்

162. ஒருபெரு விடயத் துற்றிடு நல்ல
முதலிடை கடையெனு மூன்று பகுதியுந்
தனித்தனி மூன்று நாடக மாகக்
கோவைப் படுத்துக் கூறலு முண்டதை
முந்நா டகமென மொழிந்தனர் மேலையோர்.

ஒன்று பெருமை விடயத்து - ஒரு பெரிய விடயத்தின்கண், உற்றிடும் - பொருந்தும், முதல் இடை கடை எனும்-ஆதி மத்தியம் அந்தமென்று சொல்லப்படும், மூன்று நல்ல பகுதியும் - மூன்று நன்றாய்த் தெளிவு பொருந்திய பாகங்களையும், தனி தனி மூன்று நாடகம் ஆக - தனித்தனியாக மூன்று நாடகங்களாக முடித்து, கோவை படுத்து - அவற்றை ஒரு தொடர்ச்சியாகச் சேர்த்து, கூறலும் உண்டு - நாடகப்புலவர் சொல்லுதலும் வழக்காம், அதை மேலையோர் முந்நாடகம் என மொழிந்தனர் - அதனை மேலைத்திக்கிலுள்ள நாடகவாசிரியர் முந்நாடகமென்று கூறினர்.

குறிப்பு:—முந்நாடகம்: Trilogy. இனி 'மேலையோர்' என்பதற்கு வேறுபடப் பொருள்கோடலுமாம். சேகப்பிரியர் தம் நாடகத்துள் ஒன்றாகிய ஹேன்றி ஆறுவன் (Henry VI) இவ்வகைக்கு உதாரணமாம். உரோம கிரேக்க நாடகங்களுட் பல இவ்வகைக் குதாரணமாம். (சரு)

நாடகநூல்

163. நடித்துக் காட்டு நலமில வாகுந
நாடக நூலென ஞாலத் தியலும்.

நடித்து காட்டும் நலம் இல ஆகுந - (நாடகத்திற்குரிய இயல்புகள் யாவும் பொருந்தி நிற்பினும்) நடித்துக் காட்டுந்தன்மை நீங்கியவை, நாடகம் நூல் என ஞாலத்து இயலும் - நாடகநூலென்று உலகின்கண் வழங்கப் பெறும்.

குறிப்பு:—இதற்கு மனோன்மணீயம் உதாரணமாமாறுகாண்க. இக் கருத்தே ஆங்கில நூலார்க்கும் ஒப்பமுடிந்ததாமாறு தெளிக. (சசு)

நாடகக்காப்பியம்

164. புலவன் கூற்றிற் பொலிவ தாகி
நல்லிசைப் பாவொடு நாடக வுறுப்பிடை
நண்ணி நடப்பது நாடகக் காப்பியம்.

புலவன் கூற்றில் பொலிவது ஆகி - நூலாசிரியனது கூற்றாகவே விளங்குவதாய், நன்மை இசை பாவொடு - நல்லிசைவாய்ந்த பாடல்களோடு, நாடகம் உறுப்பு இடை நண்ணிநடப்பது - நாடகத்திற்கு வேண்டிய இலக்கணங்களுட் சில இடையிடையே பொருந்தி நடப்பது, நாடகக் காப்பியம் - நாடகக் காப்பியம் என்னும் பெயரினையுடையதாம்.

குறிப்பு:—உறுப்பு: அவயவம். ஐம்பெருங்காப்பியங்களுளொன்றாகிய சிலப்பதிகாரம் இதற்குதாரணமாம். கோவைகளெல்லாம் நாடகக்காப்பியங்களாமாறு காண்க. இதுவே சொக்கப்பநாவலர் கருத்துமா மென்பதறிக. (சஎ)

கூத்து நூல்

165. கவிகூற் றிடையே நவிலப் பெறீஇ
யிழிசினர் நடிக்கு மியல்பிற் றாகிக்
கூத்தும் பாட்டுங் கொண்டியல் வதனைக்
கூத்துநூ லென்னக் கோடுங் குறித்தே.

கவி கூற்று - கவிஞனது கூற்று, இடையே - நடுவில், நவில பெறீஇ - சொல்லப்பெற்று, இழிசினர் நடிக்கும் இயல்பிற்று ஆகி - கீழ்மக்கள் நடித்துக்காட்டும் தன்மையினையுடையதாய், கூத்தும் பாட்டும் கொண்டு இயல்வதனை - கூத்தும் பாட்டும் தன்னகத்துப் பொருந்தி நடப்பதனை, கூத்து நூல் என்ன குறித்து கோடும் - கூத்துநூல் என்று ஆய்ந்துகொள்ளுவாம்.

குறிப்பு:—கவிகூற்று: நூலாசிரியர்தங்கூற்று. இச்சாதிநூற்கு இராம நாடகம் ஏற்ற உதாரணமாம். (சஅ)

166. குறமும் பள்ளுங் கூத்து நூல்களாம்.

குறமும் பள்ளும் கூத்து நூல்கள் ஆம் - குறமும் பள்ளும் கூத்து நூல்களுள் அடங்கும்.

குறிப்பு:—குறம்: மீனாட்சியம்மை குறம், குற்றாலக் குறவஞ்சி முதலிய தக்கவுதாரணங்களாம். பள்: முக்கூடற்பள், பறாளை விநாயகர்பள் முதலிய ஏற்ற வுதாரணங்களாம். (சகூ)

விருத்தி

167. நாடகத் திற்கெழு னல்குந் தாயா
யுறுதிப் பொருடா னிஃதென வுரைத்துந்
தலைவ ராவா ரிவரெனச் சாற்றியுஞ்

சுவையி னமைதி தெரிக்குஞ் சொற்றொடை
மேவியு நிற்பது விருத்தி யாகும்.

நாடகத்திற்கு எழில் நல்கும் தாய் ஆய் - நாடகத்தினுக்கு அழகினைத் தரும் தாய்போன்றதாய், உறுதி பொருள்தான் இஃது என உரைத்தும் - உண்மைப் பொருள் இன்னதுதான் என்று தெளிவு பொருந்தக் கூறியும், தலைவர் ஆவார் இவர் என சாற்றியும் - தலைவர் ஆகியவர் இன்னார் என்று கூறியும், சுவையின் அமைதி தெரிக்கும் சொல் தொடை - சுவையினது பொருத்தத்தினைத் தெரிவிக்குஞ்சொற்றொடர்கள், மேவியும் நிற்பது விருத்தி ஆகும்-பொருந்தியுமிருப்பது விருத்தியாகும்.

குறிப்பு:—உருவகவணி. வடமொழியில் விருத்திக்கு இலக்கணங் கூறிய ஆசிரியர் பலருடைய கருத்துக்களையும் நம் நாடகத் தமிழாசிரியர் இதன்கண் ஒருங்கு தொகுத்துக் கூறுமாறு காண்க. (௬0)

விருத்திவகை

168. அவைதாம்,

சாத்து வதியே யார படியே
கைசிகி பாரதி யெனநான் கென்ப.

அவைதாம்—, சாத்துவதியே—, ஆரபடியே—, கைசிகி—, பாரதி—, என - என்று, நான்கு என்ப - நான்காம் என்று சொல்லுவார்கள்.

குறிப்பு:—இவையிற்றினை முறையே பின்னர் விள்க்கி யிருத்தல் காண்க. (௬க)

சாத்துவதி

169. அறம்பொரு ளாக வரிய கடவுளர்
தலைவ ராகச் சற்று மென்பொருள்
பிறங்குசொற் றொடைத்தாய்ப் பெருமித வியப்புச்
சுவைத்தாய் வருவது சொற்றசாத் துவதி.

அறம் பொருள்ஆக - அறம் பொருந்திய பொருளாக, அரிய கடவுளர் - அருமையான கடவுளர்கள், தலைவர்ஆக-நாடகத் தலைவராகவும், சற்று மென்மை பொருள் பிறங்கு சொல் தொடைத்து ஆய் - சிறிது மெல்லிய பொருள் விளங்குகின்ற சொற்றொடைகளையுடையதாய், பெருமிதம் வியப்பு சுவைத்து ஆய் - வீரம் வியப்பு என்னுஞ் சுவைகளை யுடையதாய், வருவது வந்து பொருந்துவது, சொற்ற சாத்துவதி - நான்கனுள் ஒன்றெனக்கூறிய சாத்துவதி யென்னும் விருத்தியாம்.

குறிப்பு:—மென்பொருள்: மிருதுவானவிடயம். இதன்கண் வீரம் சௌரியம், கருணை, தயை, பெருமையாதிய குணங்கள் பொருந்தி நிற்குமே யொழிய காமச்சுவை சிறிதும் பயிலாதாம். எனினும் களிப்புமிக்கதே. சிறிதும் துக்கமற்ற தாயினும் வியப்பின்பாலதாம். இதனை வடநூலார், உத்தாபகம் சாங்காத்தியம், சல்லாபம், பரிவர்த்தகம் என நான்காகப் பிரித்திருக்கின்ற

னர், பகைவனை வீராவேசங்கொள்ளுமாறியற்றுங்கூற்று உத்தாபகமாம். செவியறிவுறாஉவினுதல் செல்வத்தினுதல் அதிர்ஷ்டத்தினுதல் நட்பிற்கிடையூறு விளைத்தல் சாங்காத்திய மென்னப்படும். பல்விதமான உணர்ச்சிகளையும் தன்னகத்துக்கொண்டு இயலும் மேம்பாடுற்ற சம்பாஷணை சல்லாபம் என்னப்படும். செய்யவெண்ணித் தொடங்கிய கருமத்தினை விடுத்துப் பிறிதொன்றினைச் செய்தல் பரிவர்த்தகம் என்னும் பெயரினையுடையதாம். இவைகட்குதாரணங்கள் நாடகங்களுட் பயின்றுவருதலை யாங்காங்குக் காண்க. (௯உ)

ஆரபடி

170. பொருள்பொரு ளாகப் பொங்கிய வீரர்
தலைவ ராக வன்பொருண் மிகவு
மேவுசொற் றொடைத்தாய் வெகுளிச் சுவையினி
தடைந்து வருவ தார படியே.

பொருள் பொருள் ஆக- பொருளே பொருந்திய பொருளாக, பொங்கிய வீரர் தலைவர் ஆக - மேலோங்குகின்ற வீரத்தன்மையுடைய சூரர் நாடகத்தலைவராக, வன்மை பொருள் மிகவும் மேவு சொல் தொடைத்து ஆய் - வலிய பொருள் மிகுதியும்பொதிந்த சொற்றொடைகளையுடையதாய், வெகுளி சுவை இனிது அடைந்து வருவது - கோபச்சுவை செவ்வனே பொருந்தி வருவது, ஆரபடி - ஆரபடியென்னும் விருத்தியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. இவ்வாரபடி விருத்தியின்கண் இந்திரசாலம் மந்திரவாதம், சண்டை, வெகுளி, அவலம், சிறைப்படல், கொலை முதலிய செயல்கள் பொருந்தி நிற்கும். இவ்வாரபடி விருத்தியும் வஸ்தூத்தாபனம் சம்பேடம், சம்க்ஷிப்தி, அவபாதனம் என நான்கு வகைப்படும். இந்திரசால மகேந்திரசால மந்திரவாதவிஞ்சைகளாற் பற்பல தோற்ற முண்டாவதற்கு வஸ்தூத்தாபனம் என்பது பெயர். மிக்க கோபமுடையாருங் கலக்கமுடையாரு மொருவரை யொருவர் சந்திக்குமாறு நேரின் அது சம்பேடமாம். யுக்தியானுதல் தந்திரத்தினுலாதல் சிலவிடயங்களைச் சுருக்கமாய் ஒழுங்குபடுத்தலும் ஒன்று தன்னிலையிற் பிறழ்ந்து நீங்க மற்றொன்றினை அந்நிலையிற் பொருத்தலும் சம்க்ஷிப்தி யென்னப்படும். வஞ்சகம், பயம், உடன்போக்கு, களிப்பு, தப்பியோடுதலாதியவற்றின் கலப்பினுலாய குழப்பத்தினை அவபாதனம் என்ப. உதாரணங்கள் வந்துழிக் காண்க. (௯௩)

கைசிகி

171. ஆடல் பாட லணியுடை மேவிக்
காமம் பொருளாக் கழிபெருங் காமுகர்
தலைவ ராக மென்பொரு டனைத்தவ
வுரைசொற் றொடைத்தா யுவகைச் சுவையி
னினிமை பூத்துநன் கெழிலன் பரும்பிக்

காதன் மலர்ந்து கரவினிற் கோடல்
காட்டி நிற்பது கைசிகி யாகும்.

ஆடல் பாடல் அணி உடை மேவி - ஆடுதலும் பாடுதலும் ஆபரணங்களும் நல்லுடைகளும் பொருந்தி, காமம் பொருளா - காமப்பொருளே தன்னகத்துக் கூறும் பொருளாகக் கொண்டு, கழி பெருமை காமுகர் - மிக்க காமத்தினை யுடையோர், தலைவர் ஆக - தலைவராய்ப் பொருந்தி நிற்க, மென்மை பொருள் தனை தவ உரை சொல் தொடைத்துஆய் - மெல்லியபொருளை மிகுதியுங்கூறுஞ் சொற்றொடைகளை யுடையதாய், உவகை சுவையின் இனிமை பூத்து - உவகைச் சுவையின் இன்பம் பொருந்தி, நன்கு - நன்றாக, எழில் அன்பு அரும்பி - அழகும் அன்பும் பொருந்தி, காதல் மலர்ந்து - காதலானது இனிதுவிளங்கத் தோன்றி, கரவினில் கோடல் காட்டி - களவு வழியாகக் காமந் துய்த்துக் கோடலை யினிது தெரித்து, நிற்பது - பொருந்தி யிருப்பது, கைசிகியாகும்—.

குறிப்பு:—தவ: உரிச்சொல், மிகுதிப் பொருளைக் காட்டுவது. எழில் அன்பு: அழகிய அன்பு என்று கூறலுமாம். கோடல்: முதனீண்ட தொழிற்பெயர். இதுவும் நருமம், நருமஸ்பஞ்சம், நருமஸ்போடம், நரும கருப்பம் என நால்வகைப்படும். காதலியின் மனத்தை வசீகரிக்கும்படி அசதியாடிப் பேசுதல் நருமமெனப்படும். இதுவும் விநோத வார்த்தையென்றும், சாதுரிய வாசைமொழியென்றும், சாதுரிய பயமொழியென்றும் மூவகைப்படும். முதலிற் களிப்பினையும் பின்னர்ப் பயத்தினையுந் தரற்பாலதாய அன்புடைத்தலைவன் றலைவியராகிய இருவர்தம் முதற்கலப்பினை நருமஸ்பஞ்சம் அல்லது நர்மஸ்பூர்ஜம் என்று சொல்ப. காமக்குறிகள் சிறிது புலப்பட்டுத் தோன்ற நிற்றல் நருமஸ்போடம் என்னப்படும். காமமிக்க தலைவன் கரவினிற் பலதொழில் புரிதல் நருமகருப்பம். இவையிற்றினுக் குதாரணங்கள் நாடகங்களுள் ஆங்காங்கு வந்தழிக்காண்க. உருவகவணி. (நிச)

பாரதி

172. முன்னை மூன்றும் போலா தாகி
முன்னுரைக் கண்ணே முதன்மையி னியன்று
கூத்தன் றலைவனு நடிநடர் பொருளாக்
காட்டியு முரைத்துஞ் சற்று வன்பொரு
ளெய்துசொற் றொடைத்தா யிழிப்பு மச்சமும்
பரந்து வருவது பாரதி யென்ப.

முன்னை மூன்றும் போலாதுஆகி - முதற்குறித்த மூன்றினையும் போலாததாகி, முன்னுரைக் கண்ணே - முன்னுரையின்கண், முதன்மையின் இயன்று - முதன்மைத் தன்மை பெற நடைபெற்று, கூத்தன் தலைவனு - கூத்தன் நாடகத் தலைவனுக, நடி நடர் பொருளா - நடியும் நடர்களும் கூறப்படும் பொருள்களாக, காட்டியும் - குறிப்பாகக் காட்டியும், உரைத்தும் -

வெளிப்படையாக எடுத்துக் கூறியும், சற்று வன்மை பொருள் எய்து - சிறிது வலிய பொருள் பொருந்திய, சொல் தொடைத்து ஆய் - சொற்றொடையினை யுடையதாய், இழிப்பும் அச்சமும் பரந்து வருவது - இழிப்புச் சுவையும் அச்சச் சுவையும் நிரம்பி வருவது, பாரதி என்ப - பாரதி விருத்தி யென்று சொல்லுவார்கள் நாடகநூ லுணர்ந்தோர்.

குறிப்பு:—முன்னை மூன்று: ஆரபடி, சாத்துவதி, கைசிகி. முன்னுரை: பிரஸ்தாவனை; இதனிலக்கணத்தினை 147 ஆஞ் சூத்திரவுரையிலுரைத்தாம். மேற்குறித்த சூத்திரங்களானே ஆரபடி மிக வன்பொருளுடைத்தென்பதும், பாரதி சற்று வன்பொருளுடைய தென்பதும், கைசிகி மிக மென்பொருள் உடைத்தென்பதும் இனிது புலப்படும். (௧௭௨)

சிறப்பியல்புபுறனடை

173. இதித னியல்பென் றோதுபு முற்றும்
விதிப்பள வின்மையின் மதிப்புல வாணர்
கூறின கொண்டு கூறு கொளலே.

ஈது இதன் இயல்பு என்று ஓதுபு முற்றும் விதிப்பு - இஃது இன்ன தன் இயல்பு என்றுகூறி முழுதையும் விதி கூறி விளக்குதற்கு, அளவின்மையின் - (நாடக நூலின் இலக்கணங்களுள்) வரையறையின்மையால், மதி புலம் வாணர் - ஆராய்ந்தறியும் அறிவினையுடைய ஆன்றோர், கூறினகொண்டு- கூறின விடயங்களைக்கொண்டு, கூறு கொளல் - கூறுதவற்றைச் சேர்த்தியைத் துக் கொள்ளுக.

குறிப்பு:—ஓதுபு: வினையெச்சம். விதிப்பு: தொழிற்பெயர். மதி: முதனிலைத் தொழிற்பெயர். கூறின, கூறு: வினையாலணையும் பெயர்கள். ஏகாரம்: ஈற்றசை. (௧௭௩)

சிறப்பியல்பு முற்றிற்று

---

௩. உறுப்பியல்பு

174. உறுப்பியல் பென்ப துணர்த்துங் காலைச்
சிறப்புறு நாடகஞ் செறிந்த பகுதியின்
றன்மையா மவைதாம் வாழ்த்து நடாத்துநர்
முன்னுரை குறிப்பங் கங்களங் கூற்றுக்
கூத்துக் குணநவில் பின்னுரை யின்னன
பிறவுமா மென்னப் பேசினர் பெரியோர்.

உறுப்பு இயல்பு என்பது உணர்த்தும் காலை சிறப்புஉறு நாடகம் செறிந்த பகுதியின் தன்மையாம் - உறுப்பியல்பு இன்னதென்பதைக் கூறுமிடத்து அஃது சிறப்பு வாய்ந்த நாடகத்தின்கட் பொருந்திய பகுதிகளின் பண்பாம். அவைதாம் - அப்பகுதிகள், வாழ்த்து—, நடாத்துநர்—, முன்னுரை—, குறிப்பு—, அங்கம்—, களம்—, கூற்று—, கூத்து—, குணம் நவில்

பின்னுரை - நாடகத்தின் நீதியாதிய குணங்களை யெடுத்துக் கூறும் பின்னுரை, இன்னன பிறவும் ஆம் - இவைபோன்ற பிறவும் ஆகும், என்ன பேசினர் பெரியோர் - என்று நாடக விலக்கணமுணர்ந்த அறிவான் மிக்கோர் கூறினர்.

குறிப்பு:—மேற்கூறிய வாழ்த்து முதலிய பகுதிகளின் இலக்கணத்தைப் பின்னர் வருஞ் சூத்திரங்களால் ஆசிரியர் நிரலே விளக்குதலை யுணர்க. குணம் 'நேவில்' என விசேடித்தமையான் பின்னுரையின்கண் பரதவாக்கியமும் அடங்கு மெனலை யுய்த்துணரவைத்தனர். (க)

(க) வாழ்த்து

175. ஏல்லாந் தானு யிலகு மிறைவனை
வணங்கிடு முகத்தா னிணங்கிய நாடகத்
தலைமக்க டம்மையு நலமுற வணங்குதல்
வாழ்த்தென வகுத்தனர் வடமொழி வல்லுநர்.

எல்லாம் தானய் இலகும் இறைவனை வணங்கிடும் முகத்தான் - எப்பொருளுந் தானக விளங்கும் கடவுளை வணங்குமுகமாக, இணங்கிய நாடகம் தலைமக்கள் தம்மையும் - எடுத்துக்கொண்ட நாடகத்திற் பொருந்திய தலைவன் தலைவியாகிய தலைமக்களையும், நலம் உற வணங்குதல் - நன்மை பொருந்த வணங்குதல், வாழ்த்து என - வாழ்த்து என்று, வடமொழி வல்லுநர் - வடமொழி நாடக விலக்கணம் நன்குணர்ந்தோர், வகுத்தனர் - கூறினர்.

குறிப்பு:—இறைவன் - எல்லாப் பொருளினுந் தங்குபவன்; இறுத்தல் - தங்குதல். இவ்வாழ்த்தினை வடநூலார் 'நாந்தி' என்ப. நாந்தி அரங்க வழிபாடாகும். இஃது அரங்கத்தின் அதிதேவதையாகிய நந்திதேவரைப்பற்றி நிகழ்தலின் நாந்தியென்னும் பெயர்த்தாயது. படைப்புக் காலத்தில் இறைவன் அருட்கூத்து நிகழ்த்துங்கால் அப்பெருமானது சங்கற்ப மாத்திரையால் நந்திதேவர் அரங்கமாந் தன்மை யெய்தினரென்ப. ஆதலின் அரங்கவழிபாடு நாந்தியென வழங்கலாயிற்று. இக்காரணம்பற்றி முற்காலத்திய நாடக அரங்கங்களில் நந்திதேவரின் உருவமைத்து வைப்பதும் நாடக நடிக்கத் தொடங்குமுன் சூத்திரதாரன் முதலியோர் அதற்கு வழிபாடு செய்தலும் மரபாய் நிகழ்ந்துவந்தன. சுத்தானந்தப் பிரகாச முடையார் நாடக அரங்கின் இலக்கணங் கூறுமிடத்து,

"அரங்கி னுயரமு மகலமு நீளமும்
பொருந்த நாடி யுரைக்குங் காலைப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமு மமைத்து......" எனக்

கூறியது ஈண்டறியற்பாலது. வல்லுநர் - ந் பெயரிடை நிலை. ஆசிரியர் தமது கலாவதி நாடகத்தில்,

"மலர்மணம் போலெங்கு முறுபவனை மாவின்ப
வாரிபுடை சூழுமுத்தி
யுலகினைப் பொதுநீக்கி யரசாளு மொருகோவை
யொளிர்சுயஞ் சோதிதன்னை
யிலகுறு கலாவதி பராசத்தி யொடுமிளிரு
மீசனை யிறைஞ்சிவாழ்வாம்
அலகிறிரு விளையாட லயர்சிதா நந்தனையெ
மையனைப் பன்முறையுமே,"

என்னும் வாழ்த்துச் செய்யுளிற் கடவுளை வணங்கு முகத்தானே நாடகத் தலைமக்களாகிய கலாவதி சிதர்நந்தரையு நலமுறக் குறிப்பான் வணங்குதல் காண்க. (உ)

176. வாழ்த்துக் கூறுவோன் சூத்திர தாரனே.

வாழ்த்து கூறுவான் சூத்திரதாரனே — மேற்கூறிய நாந்தியாகிய வாழ்த்தினை யரங்கிற் சொல்லுபவன் சூத்திரதாரனுவன்.

குறிப்பு:—'சூத்திரதாரனே' எனத் தேற்றேகாரங் கொடுத்தமையின் அன்னோன் கூறுதல் மரபாமென்பது போதரும். (ந)

(உ) நடாத்துநர்

177. நாடகந் தன்னை நடித்துக் காட்டுதற்
கேதுவாய் நிற்போ ரியம்பிய நடாத்துநர்.

நாடகம் தன்னை நடித்துக் காட்டுதற்கு - நாடகத்தினை யரங்கின்கண் நடித்துக் காட்டுதற்கு, ஏதுவாய் நிற்போர் — காரணமாய் இருப்பவர், இயம்பிய நடாத்துநர் - மேற்கூறிய நடாத்துநரென்னும் பெயரினையுடையோராவர்.

குறிப்பு:—நடாத்துநராவர் இவர் என்பதை வருஞ் சூத்திரத்திலோது வார். (ச)

178. அவர்தாஞ் சூத்திர தாரனு மவனைச்
சார்ந்தமாந் தருமெனச் சாற்றிட லாமே.

உரை:—அவர் தாம் — அந்நடாத்துநர், சூத்திரதாரனும்—, அவனை சார்ந்த மாந்தரும் என சாற்றிடல் ஆமே — அச் சூத்திரதாரனைச் சேர்ந்த மக்களுமாவார் எனக்கூறுதல் பொருந்தும்.

குறிப்பு:—'சார்ந்த மாந்த'ரை வருஞ் சூத்திரத்திற் காண்க. (ரு)

179. நடியு நடனு நண்ணிய துணைவர்.

நடியும் நடனும் நண்ணிய துணைவர் - நடி நடன் எனப்படுபவர் சூத்திரதாரனுக்குப் பொருந்திய துணைவராவர்.

குறிப்பு:—நடி யின்னளென்பதை 182-ஞ் சூத்திரத்தாலறிக, நடன்: சூத்திரதாரதன் மாட்டு நட்புரிமை வாய்ந்தவனும் அவனியற்றும் வினைக்குத் துணைபுரிபவனுமவன். 'நண்ணிய' என்று விசேடித்தமையால் இவரேயன்றி

விதூடகனும் ஒரோவிடங்களிற் சூத்திரதாரற்குத் துணைவனாயமைவன் என்பதாயிற்று. (௬)

சூத்திரதாரன்

180. பாவைக் கூத்தினுட் சூத்திர மிழுப்போன்
போலவிந் நாடகத் தின்கணு மெதற்கு
முதல்வனாய் நின்று வினைமுடிப் பவனே
சூத்திர தாரனாஞ் சொல்லுங் காலே.

பாவை கூத்தினுள் – அரங்கிற் பாவைகளைவைத்து ஆட்டும் கூத்தின் கண், சூத்திரம் இழுப்போன் போல – பாவைகளிற் பிணித்துள்ள கயிறுகளைக் கையிற்பற்றி யிழுத்து அவைகளை ஆட்டுபவன்போல, இ நாடகத்தின் கணும் - மக்கள் நடர்களாக நடிக்கும் இந்த நாடகத்திலும், எதற்கும் முதல்வன் ஆய்நின்று வினை முடிப்பவனே-எல்லாத் தொழிற்கும் தலைவனாக அமைந்து நாடகத் தொழிலினை முற்றச்செய்பவனே, சொல்லுங்கால் - அவன் இலக்கணத்தைச் சொல்லுமிடத்து, சூத்திரதாரன் ஆம் - சூத்திரதாரனாவான்.

குறிப்பு:—பாவைக்கூத்து: அறுவகைப்பட்ட விநோதக்கூத்தினுள் ஒன்று; இஃது தோல் முதலியவற்றானியன்ற பாவைகளை நாடக அரங்கில் நிறுத்தி அவையிற்றிற் பிணித்துள்ள கயிறுகளைப் பற்றித் திரையின் பின் நின்று இழுத்து இயக்குவித்து ஆட்டுவிக்கும் கூத்தாம். சூத்திரம் - கயிறு; தாரன் - தரிப்பவன்; பற்றியிருப்பவன். இப்பாவைக் கூத்தில் சூத்திரம் பற்றிநின்று பாவைகளை யியக்குநன்போல நாடகத்தில் நடர்களைத் தத்தம் தொழின்மேல் இயக்குவிக்குந் தலைவற்கும் இப்பெயர் அமைந்து நின்றது. ஏகாரம்: முறையே தேற்றமும் ஈற்றசையுமாம். (எ)

181. நாடகந் தன்னை நன்னிலை நிறுவலிற்
றாபக னென்னச் சாற்றவும் படுவன்.

நாடகம் தன்னை நன்மை நிலை நிறுவலில் - நாடகத்தினைநன்கு நடித்து நல்ல நிலையில் நிற்கச் செய்யும் காரணத்தால், தாபகன் என்ன சாற்றவும் படுவன் - ஸ்தாபகன் என்னும் பெயரானும் அவன் அழைக்கப்படுவன்.

குறிப்பு:—சூத்திரதாரனுக்கு ஸ்தாபகன் என்னும் பெயருண்மையும் அப்பெயர்க் காரணமும் இச் சூத்திரத்தான் விளக்கினர். (அ)

நடி

182. சொற்ற நடியே சூத்திர தாரன்
கற்றறி வுடைய காதலி யாகும்.

சொற்ற நடியே - முற்கூறப்பட்ட நடியென்பாள், சூத்திரதாரன் கற்று அறிவு உடைய காதலி ஆகும் - சூத்திரதாரனுடைய கல்வி அறிவிற் சிறந்த மனைவியாவள்.

குறிப்பு:—இதனானே நடி கல்வியறிவிற் சிறந்தவளாகவும் தலைவன் விழையும் அவன்மாட்டன்புடைய தலைவியாகவும் இருத்தல் வேண்டுமென்பது பெற்றும். (கூ)

(ங) முன்னுரை

183. முற்படக் கிளத்து முன்னுரை யதுதான்
சூத்திர தாரன் சூழ்சபை வணங்கித்
துணைவரை விளித்தவர் தம்மொடுங் கூடி
நாடகப் புலவ னல்லிய னவின்று
கதைநிகழ் பருவ காலம் புனைதந்
திதமுறு பாடலி னியம்புவித் தின்புறுத்
தெடுத்த நாடகந் தொடங்குமு னிசைப்பதாம்.

முன் பட கிளத்தும் முன்னுரை அதுதான் - நாடகத்தினை நடிக்கப் புகும் முன்னர்க் கூறப்படும் முன்னுரை, சூத்திரதாரன் சூழ் சபை வணங்கி - சூத்திரதாரன் அரங்கிற் சுற்றிலும் அமர்ந்துள்ள சபையோரை வணங்கி, துணைவரை விளித்து - தனது துணைவரை அழைத்து, அவர் தம்மொடும் கூடி - அவர்களோடு சேர்ந்து, நாடகம் புலவன் நன்மை இயல் நவின்று - நாடக வாசிரியனது நல்ல பண்புகளை யெடுத்துக்கூறி, கதை நிகழ் பருவம் காலம் புனைதந்து - நாடகக் கதை நிகழும் பருவகாலத்தை வருணித்து, இதம் உறு பாடலின் இயம்புவித்து - இனிய பாடலானே கூறச்செய்து, இன்பு உறுத்து - சபையோர்க்குக் களிப்பினையுண்டாக்கி, எடுத்த நாடகம் தொடங்கும் முன் இசைப்பது ஆம் - நடிப்பதற்கு எடுத்துக்கொண்ட நாடகம் தொடங்குதற்கு முன்பு கூறப்படுவதாம்.

குறிப்பு:—முன்னர்க் கூறப்படுதலின் முன்னுரையாயிற்று. இதனை ஆமுகம் எனவும், பிரஸ்தாவனை எனவும் வடநூலார் கூறுவர்; ஆங்கிலத்தில் Prologue என்பதும் இதுவே. சூழ்சபை: நாடகவரங்கிய சூழவிருக்கும் சபையோர், என்றது காணுநரை. துணைவர்: நடி நடன் விதூடகன்; 179-ஞ் சூத்திரம் நோக்குக. நல்லியல்: நாடக வாசிரியனது ஊர், பெயர், குலம், கோத்திரம், கல்வி, நலன் ஆதிய பண்புகள். நூன்முகத்தில் ஆக்கியோன் பெயர் முதலியன கூறுதல் ஒரு தலையாய் வேண்டப்படுவது போல, நாடக வாசிரியனது பண்புகளை நாடக நடிக்கப்படு முன்னர்க் கூறுவது இன்றியமையாது வேண்டற்பாலதொன்றும். கலாவதி நாடகப் பிரஸ்தாவனையில் ஆசிரியரைப்பற்றி,

பேரியன் மாநக ரான்சாம வேதியன் பீடேருஞ் "பாண்டியன்
சூரிய நாரா யணசூரி சொற்ற கலாவதியே" [றென்மதுரைப்

என்றும்; மத்தவிலாசப்பிரகசனப் பிரஸ்தாவனையில் அதன் ஆசிரியனைப் பற்றி, "பல்லவராஜ குலமாகிய பூமண்டலத்தில் மேருபர்வதம்போல் விளங்குபவனும் எல்லாக் குறுநில மன்னரையும் நீதியால் வென்றவனும் பலபராக்

கிரமத்தில் இந்திரனையும், செல்வத்திற் குபேரனையும் வென்றோனுமான ஸ்ரீ ஸிம்ம விஷ்ணு வர்ம மகாராஜாவின் புதல்வன்; காமக்ரோத லோப மோக மத மாத்ஸர்யமென்னும் அறுபகையை அறுபகையாக்கினவன்; பரோபகாரத்திற் சிறந்தவன்; மகா ராஜ ராஜபூஜித ஸ்ரீ மகேந்திர விக்கிரம வர்மனே இந்த நாடகத்தை இயற்றினவன்.

உலகினின் உயிர்கள் யாவும் ஒருவனே இறுதிக் காலத்
தலகில வனுகு மாபோ லருளறம் பெருமை யீகை
குலவிய காந்தி வீரம் குசலம் ஸத்திய முன்னுன
அலகிலாக் குணங்க ளெல்லா மவனிடைப் புகுந்த வம்மா.
பொருளி னன்மினிர் மணிநிகர் பதங்களைப் பொழியுந்
திருவி னனிடைச் செல்வம்வேட் டணுகிய புலவர்
மருவு சொற்பொருண் மாட்சியிற் குறைபவ ரெனினும்
தருநி கர்த்தவன் தருபொருள் பொறுத்துமீள் குவரால்."

என்றும், மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்) நாடகப் பிரஸ்தாவனையில் அதன் ஆசிரியனாகிய சூத்திரகனைப்பற்றி,

"தந்தியி னடையுஞ் சகோரநேர் விழியும்
இந்துநேர் வதனமும் எழில்நிறை யாக்கையும்
புலமையும் புகழும் அலகிலா வன்மையும்
இகறெறு மூக்கமும் பகர்சோர் வின்மையும்
மறையுணர் திறனும் நிறைதவப் பொருளும்
நேரலர் களிறெலாம் போரி னடக்குஞ்
செய்கையின் மிக்க கைவன் மையும்
உடையவ னிருக்கோ டடைதரு சாமமும்
எண்ணும் இன்பமுந் திண்ணிய வேழமும்
பற்றிய கலைகளும் முற்ற வுணர்ந்தோன்
அரனரு ளாலே யிருளகன் றொளிரும்
நாட்டமும் பெற்றோ னீட்டு பல்பொருட்
பரிமகம் புரிந்து பார்முழு தாண்டோன்
அரசர்தங் குலத்து விரசு சூடாமணி
உரிமையி னரசுதன் னொருமகற் கீந்துபின்
ஒருபது நாளுட னொங்கு நூருண்டு
மருவியிவ் வுலகில் வாழ்ந்துமா வேள்வியிற்
பூத்தரு மங்கியிற் புகுந்த
சூத்திர கன்னென வேத்துமன் னவனே,"

என்றுங் கூறியுள்ளமை காண்க.

கலாவதி நாடகப் பிரஸ்தாவனையில், "இது வசந்தகால மன்றோ? இனி இக்காலத்தைத் தவிர வேறெக்காலம் உலகத்திலுள்ளது. ஆன்மகோடி

களுக்கு ஆனந்தம் விளைக்கப் போகின்றது? இக்காலந்தானே மன்மதனுக்கு மிகவுந் துணைசெய்யுங் காலம்! இதோ பார்!

'தேமா வெதிர்கொண்டு நிற்பச் சிறுகுயில் போற்றிசைப்பத்
தூமா னிளங்கொடி தந்தளிர்க் கையாற் றொழுதசைய
வாமான் மகிழ மலர்மணம் வீசவசந்த னெனுங்
கோமா னணைந்தனன் காணுதி யென்றன் குலக்கொடியே!'

'கானுறு பூவின் ஞிமிறிசை பாடக் கடிகமழத்
தேனமர் முல்லை நகைத்திடத் தென்றலஞ் சேடியொடும்
வானுறு மாலங் கவரி யசைத ரவந்தனனல்
வேனி லெனப்பகர் கிற்கும் வனப்புறு மெல்லியலே!'

'பூந்தளிர்க் குழையும் செய்ய பொன்மலர்க் கலனும் பூண்டு
மாந்துகட் பருகிப் பின்சேர் வண்டராம் பாண ரோடு
மாந்தர்தாங் கண்டு சால மகிழ்ந்தர வாடுகிற்பான்
போந்தனன் வசந்த மென்னும் பொற்புறு மாத ரசே!'

என்று கூறியது, 'கதைநிகழ் பருவகாலம் புனைதந் திதமுறுபாடலே னியம்' பியதாகும். (௯௦)

(ச) குறிப்பு

184. கதையினை யாதல் கழறுவித் தாத
லாதியிற் றொடங்கு மருவினை யாதல்
நலமிக் கிலங்குந் தலைமக்க டமது
வரவினை யாதல் வருமு னெவ்வகைக்
குறிப்பினா லேனுங் கூறுதல் குறிப்பே.

கதையினை ஆதல் - நாடகக் கதையினையாவது, கழறுவித்து ஆதல் - மேற் பொதுவியலின்கண் கூறப்பட்ட விதையினையாவது, ஆதியில் தொடங்கும் அருமை வினை ஆதல் - நாடகத்தின் முதலிற் றொடங்கும் அரிய தொழிலினையாவது, நலம் மிக்கு இலங்கு தலைமக்கள் தமது வரவின ஆதல் - நற்பண்புகள் மிகுந்து விளங்கும் நாடகத் தலைவன் தலைவியாது வருகையினை யாவது, வரும் முன் - அவை நிகழு முன்பு, எ வகை குறிப்பினால் ஏனும் - எவ்விதக் குறிப்புக்களினாலேனும், கூறுதல் - வெளியிட்டுணர்த்தல், குறிப்பு - குறிப்பாகும்.

குறிப்பு:—'விந்து' எனவும் பாடம்; விந்து - 'பிந்து' என்னும் வடசொல்லின் றிரிபு; 'விந்து' எனினும் 'விதை' யெனினும் ஒக்கும். 'கலம் மிக்கு இலங்கும் தலைமக்கள்' என்பதூஉம் பாடம்; கலம் - பாத்திரம்; நாடக பாத்திரங்களுண்மிக்கு விளங்கும் தலைமக்கள் என்பது பொருளாம். இனிக் 'கலம் மிக்கு இலங்கும்' என்பதற்கு அணிகலன்களால் எழில்மிக்கு இலங்கும் என்பதும் ஆம். ஏனும் - எனினும் என்பதன் மரூஉ. 'எவ் வகைக் குறிப்பினாலேனும்' என்றதனால், குறிப்பு மொழிகளேயன்றி அவி

நயக் குறிப்பானும் இஃதமையும் என்பது பெறப்படும். கலாவதி நாடகப் பிரஸ்தாவனை யிறுதியில்,

"காம
விந்தை சேர்மநோ மோகினி வலையினில் வீழ்ந்து
புந்தி மாழ்கிய சயதுங்க சோழனைப் போன்றே,"

என்றது கதையினைக் குறிப்பித்தவாறாதல் காண்க. தசரதன்தவறு என்னும் நாடகத்தின் பாயிரத்தில்,

"உலகெலா நின்படைப் புயிரெலா நின்படைப்
புவைசெயுந் தொழில்களெல்லா
மூழ்வினைப் பயனென வுருத்துவந் துறுமென்ற
வுண்மையுரை யென்றுணர்ந்தேம்
அலகிலாக் கலைதேர்ந்து பலதுறைக ளிற்பயின்
றறிவுநிறை யோர்ப் பினுடனே
யருங்கடைப் பிடிமேவு மரசருஞ் சிலவேளை
யையபிழை போவர்"

என்றது 'கழறு வித்' தினைக் குறிப்பித்ததாகும். முத்திரா ராட்சச நாடகப்பிரஸ்தாவனையில், பிறைத்திங்களைத் துஷ்டக்கிரகமாகிய கேது முற்றிலுங் கிரகணஞ் செய்ய முயற்சிப்பதாகிய சந்திரக் கிரகணத்தை வருணிப்பது போலச் சமீப காலத்தில் மன்னனாக வெளிப்போந்த சந்திரகுப்தனை மலயகேது பற்ற முயற்சிக்கும் அருவினையினைக் குறிக்குமாறு கூறிய,

"சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேதுவோ டீஇத்
தாழ்மைய வலிகொடு தாக்குவோ னெவன்"

என்ற அடிகள் ஆதியிற்றொடங்கும் அருவினையினைக் குறிப்பனவாகும். மத்தவிலாசப் பிரகசனப் பிரஸ்தாவனை யிறுதியில்,

"கவிதை யேபொரு ளெனக்கருது காட்சியினிலேக்
கவிஞ ரேறனையன் காதையினி லீடுபடுவேன்
யுவதி யோடுகையி லோடுபொரு ளாகவருமிவ்
யோகி கள்ளுணவி னுள்ளழிவு கொள்ளுமதுபோல்,"

என்றது நலமிக்கிலங்குந் தலைமக்கடமது வரவினைக் கூறியதாகும். (கக)

185. தோற்றுவாய் செய்தலாச் சொல்லலு முண்டு.

தோற்றுவாய் செய்து அலா சொல்லலும் உண்டு - நாடகக் குறிப்பு முன்னர்த் தோன்றாமல் நாடகத்தைச் சொல்லலும் உண்டு.

குறிப்பு:—நாடகக் குறிப்பு முன்னர்க் கூறப்படாமல் கதை யாரம்பிக்கப்படுவது வடமொழி மகா நாடகத்திற் காண்க. (கஉ)

186. வாழ்த்து நடாத்துநர் முன்னுரை குறிப்பெனப்
பாத்துரை விகற்பம் பயிலா சிலவுள.

வாழ்த்து —, நடாத்துநர் —, முன்னுரை —,

என பாத்து உரை விகற்பம் பயிலா சில உள - என்று பகுத்து உரைக்கப்பட்ட வேறுபாடுகள் பொருந்தாத நாடகங்களும் சில வுண்டு.

குறிப்பு:—'வல்லீபரிணயம்' முதலிய தமிழ் நாடகங்களும் 'வெனிஸ் வணிகன்' முதலிய ஆங்கில நாடகங்களும் இவற்றிற்குதாரணமாம். (கரு)

(ரு) அங்கம்

187. நாடகப் பேருறுப் பங்க மதுதான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே.

நாடகம் பெருமை உறுப்பு அங்கம் - நாடகத்தின் பெரும்பகுதி அங்கம் என்னப்படும்; அதுதான் - அவ்வங்கம், இசைக்குங்கால் - இலக்கணம் சொல்லுமிடத்து, பலகளம் உடைத்து ஆய் - பலகளங்களைத் தன்னகத்துடையதாகி, பண்பு உறு முடிவு கொண்டு இலகுறுவது ஆம் - செவ்விதாகப் புலப்படும் முடிவினைப் பெற்று விளங்குவதாகும்.

குறிப்பு:—காவியங்களில் பெரும்பகுதிகளைக் காண்டமென்று வழங்குவதுபோல நாடகங்களில் பெரும்பகுதிகளை அங்கமென்பர். அங்கம்: உறுப்பு. ஒவ்வோரங்கமும் தனித் தனி யொருபகுதியின் முடிவுடன் நிற்கும் என்பதிதனாற் பெறப்பட்டது. ஏகாரம்: ஈற்றசை. ஆங்கிலத்தில் அங்கத்தினை Act என்ப. (கச)

கதைநிறைகளம்

188. அங்கந் தொடங்குமு னாரியப் புலவோர்
சிற்சில விடத்துக் கதைநிறை களமென
விழிபாத் திரங்க ளெய்தும் பொருளை
மொழிபாக் குறுத்தலு முன்னர்க் கொள்ப.

ஆரியம் புலவர் - வடமொழி நாடகப் புலவர்கள், அங்கம் தொடங்கும் முன் - நாடகப் பேருறுப்பாகிய அங்கத்தினை யாரம்பிப்பதற்கு முன், சில சில இடத்து - சிலவிடங்களில், இழி பாத்திரங்கள் - நீச பாத்திரங்கள், எய்தும் பொருளை - நாடகத்தை விளக்குதற்கு இன்றியமையாது பொருந்தும் விடயத்தினை, மொழிபாக்கு — எடுத்துக்கூறுமாறு, கதை நிறை களம் என - கதைநிறை களம் என்னும் பெயரினையுடையதாக, உறுத்தலும் - அமைத்தலையும், முன்னர் கொள்ப - முதலில் மேற்கொள்வர்.

குறிப்பு:—அங்கந் தொடங்குமுன் கதா சந்தர்ப்பம் விளங்குதற்கு இன்றியமையாத விடயங்களை நீசபாத்திரங்கள்வாயிலாக வெளியிட்டுக் கூறும் பகுதிக்குக் கதை நிறைகளமெனப் பெயராம். இதனை வடமொழி நாடக விலக்கண வாசிரியர்கள் விஷ்கம்பம், பிரவேசம் என்பர். (கரு)

189. ஒன்று முதலாப் பத்துக் காறு
மங்க மடைந்திடு மரிய நாடகம்.

ஒன்று முதல் ஆ பத்து காறும் அங்கம் அடைந்திடும் அரிய நாடகம் - கூறற்கரிய இலக்கணம் அமைந்த நாடகம் ஓரங்க முதல் பத்தங்கம் அளவும் பெறும்.

குறிப்பு:—அங்கம், பாணம் முதலிய நாடகச் சாதிகள் ஓரங்க நாடகங்களாம். மாலதீமாதவம் முதலிய பத்தங்கங்களையுடையன. பத்தங்கத்தினியன்ற நாடகத்தினை மாநாடகமென்பர்.

"பத்தங் கத்திற் பண்புற வியல்வது
மாநா டகமா வகுத்தனர்" (சூத். 161)

என ஆசிரியர் முன்னர்க் கூறிப் போந்தது காண்க. 'அரிய நாடகம்' என விசேடித்தமையால் பத்தங்கங்கட்கு மேலும் சில மா நாடகம் பெறும் என்பது போதரும். ஹநுமாந் நாடகமாகிய மகாநாடகம் பதினான்கு அங்கங்கள் பெற்றுளது. (கசு)

190. இதனை,

நாடகச் சாதியி னவையறு மிலக்கணங்
கூறுழி விரித்துக் கூறினங் காண்க.

இதனை - நாடகங்கள் ஒன்று முதற் பத்தங்கமளவும்பெறுமியல்பினை, நாடகம் சாதியின் நவை அறும் இலக்கணம் கூறுழி - நாடகத்தின் சாதி உபசாதி வகைகளின்குற்றமற்ற இலக்கணம் கூறுமிடத்து, விரித்து கூறினம் காண்க - எடுத்துப் பாக்கக் கூறியுள்ளாம் ஆண்டு நோக்குக.

குறிப்பு:—நாடகச்சாதியி னிலக்கணம், இந்நூற் சிறப்பியல்பிற் கூறியுள்ளது. (கஎ)

(சு) களம்

191. பகருமோ ரிடத்தினே நிகழ்ந்திடு காட்சியைக்
களமென மொழிப மிளிர்மேற் றிசையோர்.

பகரும் ஒரு இடத்தினே - கதை நிகழிடமாகச் சொல்லப்பட்ட ஓரிடத்தின்கண்ணே, நிகழ்ந்திடு காட்சியை-காணக்கிடக்குமாறு நிகழும் காட்சியினை, மிளிர் மேற்கு திசையோர்-விளங்குதலுற்ற மேற்றிசைப்புலவர்கள், களம் என மொழிப - களமென்று கூறுவர்.

குறிப்பு:—இதனையே களத்தினைக் காட்சி யென்றும் வழங்குதல் பெறப்படும். ஆங்கிலத்தில் இதனை Scene என்க் கூறுவர். மேற்றிசையோர் அங்கத்தின் உட்பகுப்பாகிய இக்களத்தினைச் செவ்விதில் வகுத்துக் காட்டுந் திறமுடையராதலின் 'மிளிர் மேற்றிசையோர்' என விசேடிக்கப்பட்டனர். (கஅ)

192. களவிறு தியினெலாங் கவின்ற திரைவிழும்.

களம் இறுதியின் எலாம் - களம் முடிவுபெறும் இடங்களெங்கும், கவின்ற திரை விழும் - நாடக அரங்கில் அழகுடன் விளங்கும் கர்ந்துவரலெழினியாகிய திரைவிழும்.

குறிப்பு:—'விழும்' என்றமையால் மேலே கட்டுண்டிருந்து கீழே விழுந்திரை யென்பது பெறப்படும். இதனைக் கரந்து வரலெழினி யென்பது.

'மேலசைத் திழிந்து நாலுறுந் திரையாங்
கரந்து வரலெழினி' (சூத். 267)

என்பதனான் விளங்கும். 'திரைவிழுதல்' ஔபசாரிகத்தான் 'திரையான் மறைத்தலைக் குறித்தலின், ஏனைய உருவுதிரையாகிய 'ஒரு முகவெழினி' 'பொருமுகவெழினி' மறைத்தலையும் கொள்க. (கக)

193. ஒரேதொடைப் பட்ட காட்சிக டாமே
யடுத்தடுத் துரைக்கப் படாவென் றறைகுப.

ஒரே தொடைப்பட்ட காட்சிகள் தாமே - ஓரிடத்தின் கண்ணேயே நிகழ்வனவாகத் தொடுக்கப்பட்ட காட்சிகள், அடுத்து அடுத்து உரைக்கப் படா என்று அறைகுப - ஒன்றையொன்றடுத்து வருவனவாகக் கூறப்படுவன வாகா என்று நாடகப் புலவர் கூறுவர்.

குறிப்பு:—ஓரே யிடத்தில் நிகழ்ச்சிபெறுந் தொடர்புடைய வெனி னும் வெவ்வேறமயங்களில் நிகழ்வன வாதலின் வெவ்வேறு களங்களாக அமையவேண்டியவற்றை நாடகக்கதை நன்கு புலனுமாறு தொழிற்பொருத் தஞ்செறிய உரிய இடங்களில் அமைக்காமல் அடுத்து அடுத்து வைப்பின் கதைத் தொடர்ச்சி யழிந்து சிதையுமாதலின் அங்ஙனம் உரைக்கப்படா என்றனர். மேலும் அங்ஙனம் அடுத்துக்கூறின் களவிறுதியி லெழினி வீழ்ச்சியாற் பயனின்றாதலுங் காண்க. (உ0)

(எ) கூற்று

194. கூற்றெனப் படுவது கூறுங் காலைத்
தற்கூற் றுப்புறக் கூற்று முன்னிலைக்
கூற்று விட்புலக் கூற்றென நான்காம்.

கூறும் காலை - எடுத்துக் கூறுமிடத்து, கூற்று எனப்படுவது - கூறப்படும் பேச்சு என்று சொல்லப்படுவது, தற்கூற்று—, புறக்கூற்று—, முன்னிலைக் கூற்று—, விட்புலக் கூற்று—, என நான்கு ஆம் - என நான்கு வகைப்படுவ தாகும்.

குறிப்பு:—கூறப்படுவது கூற்று. இந்நான்கு வகைகளின் இலக்கணங் களை ஆசிரியர் நிரலே மேற்கூறுவர். (உக)

தற்கூற்று

195. தானே தனக்குரை செய்யுந் தனிமொழி
தற்கூற் றுமெனச் சாற்றினர் புலவர்.

தானே தனக்கு உரை செய்யும் தனிமை மொழி - நாடக பாத்திர ருள் ஒருவன் அரங்கின்கண் தானே தனக்குள்ளாகப் பேசிக்கொள்ளும் தனிமொழி; தன் கூற்று ஆம்என சாற்றினர் புலவர்—தற்கூற்றெனப் பெயர் பெறுமென்று புலவர் கூறினர்.

குறிப்பு:—தற்கூற்று - கேட்பாரின்றித் தனக்குள்ளே பேசிக்கொள்ளும் பேச்சாம்; ஆதலின் 'தனிமொழி' என்றும் பெயர்பெறும். இதனை வடநூலார் ஸ்வகதம் என்றும் ஆத்மகதம் என்றுங் கூறுப. ஆங்கிலத்தில் Soliloquy என்பது இஃதாம். (உஉ)

புறக்கூற்று

196. புறக்கூற் றென்றது புகலப் புகினொரு
களத்துறு பலருட் சிலர்தமக் குள்ளே
பிறரறி யாவணம் பேசுத லென்ப.

புறம் கூற்று என்றது புகல புகின் - புறக்கூற்று இன்னதென்பதைக் கூறப்புகுமிடத்து, ஒன்று களத்து உறு பலருள் - நாடக வுறுப்பாகிய களம் ஒன்றன்கட் பொருந்திய நாடக பாத்திரங்கள் பலருள்ளும், சிலர் தமக்கு உள்ளே - சிலர் தமக்குள்ளாகவே, பிறர் அறியா வணம் - ஏனையோர் கேளா விதமாக, பேசுதல் என்ப - பேசிக்கொள்வது என்று கூறுவர்.

குறிப்பு:-இப்புறக்கூற்றுக் குறைந்தது இருவர்க்குள்ளேனும் இருத்தல் வேண்டும். இதனை வடநூலார் அபவாரிதம் என்ப. இஃது ஆங்கிலத்தில் Aside Speech எனப்படும். மேற்கூறிய தற்கூற்றும் புறக்கூற்றும் முறையே ஒருவன் தனக்குள்ளும் ஒரு சிலர் தமக்குள்ளும் பேசிக்கொள்வதாயினும் நாடகங்காணுநர்க்குச் செவிப்புலனாதல் வேண்டுவதொருதலை. (உந)

முன்னிலைக்கூற்று

197. களத்துறு பலரு மறியுமா கழறன்
முன்னிலைக் கூற்றென முன்னப் படுமே.

களத்து உறு பலரும் அறியும் ஆ கழறல் - களத்தின்கட் பொருந்திய நாடகபாத்திரங்கள் அனைவரும் கேட்கும் விதமாகப் பேசுதல், முன்னிலை கூற்று என முன்னப்படும் - முன்னிலைக்கூற்றென்று கருதப்படும்.

குறிப்பு:—'ஆறு' 'ஆ' வெனக்குறைந்து நின்றது. நாடக பாத்திரங்களுள் ஒருவன் மற்றொருவனை முன்னிலைப்படுத்திப் பேசுவதாயினும் அக்கூற்றுக் களத்தில் உற்றார் பலருக்குஞ் செவிப் புலனாதல் வேண்டுமென்பதை வலியுறுத்த ஆசிரியர் 'கூற்றும்' என்னாது 'கூற்றென முன்னப்படு' மென்றனர். இதனைப் பிரகாசம் என்ப வடநூலார். ஆங்கிலத்தில் Open Speech என்ப. (உச)

விட்புலக்கூற்று

198. கட்புல னின்றச ரீரிவின் னின்றே
யொட்பமொ டுரைப்பது விட்புலக் கூற்றே.

கண் புலன் இன்று - கண்ணுக்குப் புலனாகாமல், அசரீரிவின் நின்று - மெய்யும் உருவமு மில்லாததோர் தெய்வம் ஆகாயத்தின்கணிருந்து, ஒட்பமொடு உரைப்பது விண் புலம் கூற்று - யாவர்க்குந் தெளிவாய்த் தெரியக் கூறுவது விட்புலக்கூற்றாகும்.

குறிப்பு:—'இன்றி' என்னும் வினையெச்சம் 'இன்று' எனத் திரிந்து நின்றது. இவ்வசரீரியை யாகாயவாணி என்றும் வழங்குவர். வடநூலார் விட்புலக்கூற்றினை ஆகாசபாஷிதம் என்று கூறுப. (உரு)

சொல்வகை

199. வியப்பு மொழிநிலை நகைமொழி நிலையென
நயப்படு சொல்வகை நாட்டுது மிரண்டே.

நயம் படு சொல் வகை - பொருளழகு செறிந்த சொல்வகை, வியப்பு மொழி நிலை—, நகை மொழி நிலை—; என - என்று, இரண்டே நாட்டுதும் - இரண்டு வகையாகவே தாபிப்போம்.

குறிப்பு:—சொல்வகை : சொல்லின் கூறுபாடு. ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலிற் குறித்த 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொரு'ளாகிய, முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்ப விளையாட்டினுட் டோன்றிய முப்பத்திரண்டு பொருட்கும் இன்றியமையாத விளையாட்டுப் பொருட்டாகிய நகைச் சுவைமொழிநிலை யொன்றாகவும், எல்லாச் சுவைகட்கும் அடிப்படையாய் உயிர்போன்ற வியப்புச்சுவை மொழி நிலை யொன்றாகவும் சொல்வகை யிரண்டாயடங்குதலின், ஆசிரியர் இவ்விரு வகையினையே 'நயப்படு சொல்வகை'யாகக் கொண்டனர். சுவையின்இலக்கணங் கூறப்புகுந்த ஆசிரியர்,

"மற்
றதற்குயிர் போல்வது வியப்பெனமொழிப
முந்தை நூலின் மொழியுணர்ந் தோரே," [சூத். 38]

என்றுரைத்ததனை மீண்டு நோக்குக. இப் பெருமைபற்றியே வியப்பு மொழி நிலையினை முன்வைத் தோதியதூஉ மென்க. சிலப்பதிகார வுரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், "சொல்வகை நான்கு வகைப்படும்:—சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என. சுண்ணம் : நான்கடியான் வருவது; சுரிதகம்: எட்டடியான் வருவது; வண்ணம்: நானான் கடியான் வருவது; வரிதகம் : முப்பத்திரண்டடியாய் வருவது. என்னை ?

'சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி
வண்ண நானான்கு வரிதக மெண்ணான்கென்
றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே,'

என்றாராகலின்," என்று கூறியுள்ளார். எனினும், இக்கூறிய சொல்வகையினும் சூத்திரத்திற் குறித்த வகையே சிறப்புடைத்தாமாதலின், ஆசிரியர் பிறிதொடு படாஅன் றன்மதங் கோட லென்னு மிலக்கணத்தினாற் புதியன புகுதலாக இங்ஙன மமைத்தன ராதலின், 'நாட்டுது மிரண்டே' எனத் தேற்றேகாரத்தொடு வலியுற ஆணைதந்தோதினா ரென்பதறிக. (உசு)

(அ) கூத்து

200. குதித்தா டுறுவது கூத்தெனப் படுமதிற்
பரத நாட்டியங் குரவை நகைவரி
முதலிடை கடையென விதமே ழாகும்.

குதித்து ஆடுறுவது கூத்து எனப்படும் - ஒருவன் தாளச் சதிக்கேற்பக் குதித்து ஆடும் ஆட்டம் கூத்து என்று சொல்லப்படும்; அதில் - அதன்கண், பரத நாட்டியம்—, குரவை—, நகை—, வரி—, முதல் - முதற்கூத்து, இடை - இடைக்கூத்து, கடை - கடைக்கூத்து, என - என்று சொல்லப்பட்ட, ஏழ் விதம் ஆகும் - ஏழு விதங்கள் உண்டு.

குறிப்பு:—குதித்தாடுதலிற் கூத்தெனப்படும் என்று பெயர்க்காரணங் கூறியவாறும். பரத நாட்டியம் முதலியவற்றின் இலக்கணத்தைப் பின்னர் வருஞ் சூத்திரங்களான் நிரலே கூறுப. கூத்து இருவகைத்தென்றும், அவை வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து; சாந்திக் கூத்து, விநோதக் கூத்து; ஆரியக்கூத்து, தமிழ்க் கூத்து; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து என்று பலவகையாகப் பிரித்துக் கூறுவாருமுளர் என்றும், அவை யிற்றினை விரிந்த நூல்களிற் காண்க என்றும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் கூறியது ஈண்டு நோக்கற்பாலது. கதை தழுவிவரும் நாடகத்திற்கேற்றனவாகிய கூத்துக்களையே ஈண்டு ஆசிரியர் மேற்கொண்டனர். (உஎ)

பரதநாட்டியம்

201. பாவனை சான்ற பல்வகை யாடலு
மிராகஞ் சான்ற வினிய பாடலுங்
காண்போர் நெஞ்சங் கவர்ந்திடு வனப்புமா
மூன்றனு ளொன்றுங் குறைவின் றிலங்குங்
கரவுறு காமக் கணிகைய ராட்டமே
பரதநாட் டியமெனப் பகர்ந்தனர் புலவர்.

பாவனை சான்ற பல வகை ஆடலும் - உள்ளக்குறிப்பு வெளியிட்டுத் தோன்றுமாறு அபிநயம் அமைந்த பலவகையான ஆடல்களும், இராகம் சான்ற இனிய பாடலும் - இராகம் நன்கமைந்த கேட்போர்க்கு இன்பத்தைத் தரும் பாடல்களும், காண்போர் நெஞ்சம் கவர்ந்திடும் வனப்பும் ஆம் - பார்ப்போர் மனத்தினைக் கவரும் அழகும் ஆகிய, மூன்றனுள் ஒன்றும் குறைவு இன்று இலங்கும் - முப்பகுதியுள்ளும் ஒரு சிறிதுங் குறைபாடின்றி விளங்கும், கரவு உறு காமம் கணிகையர் ஆட்டமே - வஞ்சகம் பொருந்திய பரத்தை மாதரின் நடனமே, பரத நாட்டியம்—, என - என்று, புலவர் பகர்ந்தனர் - நாடகவறிஞர் கூறினர்.

குறிப்பு:—மனத்தின்கட் டோன்றுஞ் சுவையும், சுவையதன்கட் டோன்றுவதாய குறிப்பும், அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகிய சத்

துவமும், அச் சத்துவத்தை வெளிப்படுத்தும் அவிநயமும் ஆகிய இவை யாவும் அமைந்த ஆடல் என்பார், 'பாவனை சான்ற ஆடல்' என்றனர். இராகம்-இசை. ஆடல் பாடல் வனப்பு ஆகிய மூன்றும் இன்றியமையாதன என்பதை வலி யுறுத்த இம் 'மூன்றனு ளொன்றுங் குறைவின்றிலங்கும்' எனக் கூறினர். சிலப் பதிகாரம் அரங்கேற்றுகாதை 'இலைப்பூங் கோதை யியல்பினின் வழாஅது' என்ற அடிக்கு 'இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்கும் தக்க படி' என்று அரும்பதவுரைகாரரும், 'இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக் கும் அழகுக்குமேற்ற முறைமையினால் ஒன்றும் வழுவாமல்' என்று அடி யார்க்கு நல்லாரும் கூறிய உரை மேற்கூறியதனை வலியுறுத்தும். 'காவுறுகா மக்கணிகையர்' - இயைபின்மை நீக்கிய விசேடணம். காமக்கணிகையர் - காமத்தை யுண்டாக்குங் கணிகையர்; காமம் - விருப்பம். பரத நாட்டியம் - பரத முனிவர் கூறிய நாட்டிய சாத்திர இலக்கண மமைந்த கூத்து. 'பரதம்' எனப் பெயரிய பண்டைய தமிழ் நாடக விலக்கண நூலொன்றிருந்ததாகச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை கூறும். (உஅ)

குரவைக்கூத்து

202. எழுவரே யெண்மரே யொன்ப தின்மரே
யென்றெணு மெழிலுடை மாதரா ரிணைந்து
காமமும் வென்றியுங் கட்டுரை பாட
லேமம் விளைக்குமா றினிமையிற் பாடிக்
கைகோத் தாடுதல் கருதுங் குரவையே.

எழுவரே எண்மரே ஒன்பதின்மரே என்று எணும் எழில் உடை மாதரார் – எழுவர் எண்மர் ஒன்பதின்மர் என்ற எண்ணிக்கைகொண்ட அழகுடைய மாதர்கள், இணைந்து–ஒருவர் பக்கலிலொருவராகச்சேர்ந்து, காம மும் வென்றியும் கட்டுரை பாடல் – இன்பமும் வெற்றியும் பொதிந்த பொரு ளாகப் பாடும் பாடல்களை, ஏமம் விளைக்கும் ஆறு – கேட்போர்க்கு இன்பம் பயக்கும் விதமாக, இனிமையில் பாடி – இனிய சங்கீதத்தோடு பாடி, கை கோத்து ஆடுதல் – ஒருவர் கையினை யொருவர் கோத்துப் பற்றி நின்று சுற்றி யாடுதல், கருதும் குரவையே – நயமுடையதாகப்புலவரால் கருதப்பட்ட குர வைக்கூத்தாம்.

குறிப்பு:—எழுவர்க்குக் குறையினும் ஒன்பதின்மர்க்கு அதிகப்படி னும் கூத்து நலம் பயவாதாதலின் இங்ஙனம் எண்ணிக்கைகூறினர். இக்குர வைக் கூத்து விநோதக் கூத்து அறுவகைகளுளொன்றென்ப. என்னை?

"பரவிய சாந்தி யன்றியும் பரதம்
விரவிய விநோதம் விரிக்குங் காலைக்
குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய
கரண நோக்குத் தோற்பா வைக்கூத்

தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும்
வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப''

என்ற சூத்திரத்தானுணர்க.

'குரவை யென்பது கூறுங்காலைச்,
செய்தோர் செய்த காமமும் விறலும்,
எய்தவுரைக்கு மியல்பிற்றென்ப';
'குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் றாட லாகும்';
'குரவைக் கூத்தே கைகோத்தாடல்

என்ற பழைய சூத்திரங்களும், 'காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனுங் கைபிணைந்தாடுவது' என்ற சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியும் ஈண்டு நோக்கற்பாலன. (உக)

நகைக்கூத்து

203. எவரை யேனு மிசைபட வாயினும்
வசைபட வாயினும் வகுப்பான் வேண்டி
விதூடக னரச வவைக்கண் மிகுந்த
நகைத்திறம் விளைத்தா டுதனகைக் கூத்து.

எவரை ஏனும் - யாவராயினு மொருவரை, இசை பட ஆயினும் - புகழ்ச்சி பொருந்தவேனும், வசை பட ஆயினும் - இகழ்ச்சி பொருந்தவேனும், வகுப்பான் வேண்டி - வகுத்துக் கூறுதற்கு விரும்பி, விதூடகன் - விதூஷகன், அரச அவைக்கண் - இராஜ சபையினிடத்து, மிகுந்த நகை திறம் விளைத்து ஆடுதல் - மிக்க நகைச்சுவை தோன்ற ஆடுதல், நகைக்கூத்து - நகைக் கூத்தெனப் பெயர்பெறும்.

குறிப்பு:—இதனை விதூடகக்கூத்தென்றுங் கூறுப. இசைபட ஆடும் நகைக்கூத்தினை வென்றிக்கூத் தென்பாருமுளர்.

'வென்றி வசையே விநோத மாகும்';
'அவற்றுள்,
மாற்று னெடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே';
'பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
வல்லவ னாதல் வசையெனப் படுமே;'

என்ற சூத்திரங்களினல் 'இசைபடவாயினும் வசைபடவாயினும்' ஆடு நகைக்கூத்தி னியல்பு விளங்கும். சூளாமணிக்காப்பியம் சுயம்வரச் சருக்கத்திற் கூறப்பட்ட திவிட்டராஜன் முன்பு விதூடகன் ஆடிய கூத்து இந் நகைக் கூத்தின் பாலதாம்.

"காதுபெய் குழையுஞ் செம்பொற் சுருளையும் கலந்துமின்னப்
போதலர் குஞ்சி யாங்கோர் பூந்துணர் வடத்தின் வீக்கி
யோதிய மருங்குற் றன்மே லொருகைவைத் தொருகை தன்னான்
மீதியல் வடகம் பற்றி வெண்ணகை நக்கு நின்றான்."

"மூடிய புகழி னூற்கு முகிழ்நகை பயந்து காட்டுங்
கோடிய நிலையின் முன்னாற் குஞ்சித்த வடிவ னாகிப்
பாடிய சாதிப் பாடல் பாணியோ டிலயங் கொள்ள
வாடிய லெடுத்துக் கொண்டாங் கந்தண னாடு கின்றான்."

"பாடு பாணி யிலயம்பல தோற்றி
யாடி யாடி யசதித்தொழில் செய்ய
நாடி நாடி நனிநன்றென நக்கா
னீடு நீடு முடியா னெடியானே."

என்ற செய்யுட்களான் நகைக்கூத்தாடிய விதூடகன தியல்பு நன்கு புலனாம். (உ௦)

204. தாள வியல்பொடு தழுவி நின்றுங்
குயிலுவர் முதலோர் தம்மொடு கூடியு
மியலுமிக் கூத்தென் றியம்பினர் புலவர்.

தாளம் இயல்பொடு தழுவி நின்றும் - உரிய தாளங்களின் இயல்பொடு பொருந்தி நின்றும், குயிலுவர் முதலோர் தம்மொடு கூடியும் - இடக்கை தண்ணுமையாதிய கருவிகளை வாசிப்போர் முதலியவரோடு சேர்ந்தும், இ கூத்து இயலும் - இந்நகைக் கூத்து நடைபெறும், என்று புலவர் இயம்பினர் - என்று நாடக விலக்கண வறிஞர் கூறினர்.

குறிப்பு:—தாள வியல்பின் வகைகளை யிந்நூல் 71-ஞ் சூத்திர வுரையிற் கூறினோம்; ஆண்டுக் காண்க. குயிலுவர் - தோற் கருவி, தொளைக் கருவி, நரப்புக் கருவி, கஞ்சக்கருவி யென்னும் வாத்தியங்களை வாசிப்பவர். 'முதலோர்' என்றமையான் 'வாரம் பாடுந் தோரிய மடந்தை'யரும் ஒரோ விடங்களிற் பொருந்தி நிற்றலுமாம் என்பது பெறப்படும். வென்றிக் கூத்தும் வசைக் கூத்தும் தாள இயல்புடையன.

"எனவிவை தாளத்தி னியல்பின வாகும்"

என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோட் சூத்திரத்தானும் இஃதுணரப்படும். நின்றுங் கூடியும் இயலும் என்ற உம்மையான் இக்கூத்துச் சில வமயங்களில் இவையின்றியும் நடை பெறுதலுங் கூடும் என்பதும் பெறப்படும். (உக)

வரிக்கூத்து

205. வரியெனப் படுவது தெரிவுறக் கிளப்பி
னவரவர் தாந்தா மன்பின்மேற் கொண்ட

கோலக் கேற்ற குறிப்புந் தொழிலுந்
தோன்ற நடிக்கும் விநோதக் கூத்தாம்.

வரி எனப்படுவது - வரிக் கூத்து என்று சொல்லப்படுவது இன்ன தென்று, தெரிவு உற கிளப்பின் - நன்கு விளங்கக் கூறுமிடத்து, அவர் அவர் தாம் தாம் அன்பின் மேல்கொண்ட - நாடக நடிக்கும் அவ்வவர் தாந்தாம் விரும்பி நடித்தற்கு மேற்கொண்டுள்ள, கோலக்கு ஏற்ற - கோலத்திற்குப் பொருந்தும், குறிப்பும் தொழிலும் - மனோபாவமும் செய்வினையும், தோன்ற - காணுநர்க்குப் புலனாக, நடிக்கும் விநோதம் கூத்து ஆம் - ஆடும் விநோதக் கூத்தாகும்.

குறிப்பு:—இதனானே வரிக்கூத்துக்களும் விநோதக் கூத்தின்பாற்படு மென்பதாயிற்று. கோலக்கு - நான்கனுருபு அத்துச் சாரியை பெறாது வந்தது.

"வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்"

என்னுஞ் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோட் சூத்திரமும் 'அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையுந் தோன்ற நடித்தல்' என்ற உரைப்பகுதியும் ஈண்டு நோக்கற்பாலன. (கூ௨)

வரிவகை

206. கண்கூடு வரியே காண்வரி யுள்வரி
புறவரி கிளர்வரி தேர்ச்சி வரியொடு
காட்சி வரியே யெடுத்துக் கோள்வரி
யெனவெண் வகைப்படு மியம்பிய வரியே.

கண்கூடுவரி—, காண்வரி—, உள்வரி—, கிளர்வரி—, புறவரி—, தேர்ச்சிவரி—, காட்சிவரி—, எடுத்துக்கோள்வரி—, என இயம்பிய வரி எட்டு வகைப்படும் - என்று, மேல் எடுத்துக் கூறிய வரிக் கூத்து எட்டு வகைப் படும்.

குறிப்பு:—எண்ணேகாரத்தை ஏனைய விடங்களிலுங்கூட்டுக. கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி என்னு மைந்தும் ஒருவாறு உடனுறை யின்பத்தின் பாலவாயும், தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி என்னு மூன்றும் பிரிந்துறை யின்பத்தின்பாலவாயும் அமைந்து நிற்றலின் 'ஓடு' வினைப்பிரித்து 'கிளர்வரி' யென்பதனோடுகூட்டுக. இதுவே முதனூலார்க்குங் கருத்தாதலைப் பின்னர் வருஞ்சூத்திரத்தானுணர்க.

"கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி
கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற்
காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென
மாட்சியின் வரூஉ மெண்வகை நெறித்தே"

(சிலப். அரங். அடியார். உரை மேற்கோள்). மேலும் ஆசிரியர்,

" கண்கூடு வரியே காண்வரி யுள்வரி
புறவரி கிளர்வரி யொடுதேர்ச்சி வரியே
காட்சிவரி யெடுத்துக் கோள்வரி யென்ன
வெண்வகைப் படுமா வியம்பிய வரியே,"

என்ற பாடமு மோதியுள்ளார். இவ்வெண்வகை வரிக் கூத்தி னிலக்கணங் களைப் பின்வருஞ் சூத்திரங்களா னிரலேகூறுப. இறுதி யேகார மீற் றசை. (௩௩)

கண்கூடுவரி

207. காதலிற் றோன்றுங் கண்கூடு வரியே
யொருவர் கூட்ட மருவ வாராது
தான்றனி வந்து தலைப்பெய்து நிற்குந்
தன்மைத் தென்னச் சாற்றினர் புலவர்.

காதலில் தோன்றும் கண்கூடுவரியே-தலைவன் தலைவியர்க் கிடையுள்ள அன்பினடியாக உண்டாகும் கண்கூடுவரி என்பது, ஒருவர் கூட்ட மருவ வாராது - ஒருவர் நடு நின்று கூட்டுவிக்க வொருவரை யொருவர் பொருந்த வராமல், தான் தனி வந்து தலைப்பெய்து நிற்கும் தன்மைத்து - தலைவன் றலைவியருள் ஒருவர் தாமே தனியாக மற்றொருவர்பாற் போய்க் கூடிநிற்கும் தன்மையை யுடையது, என்ன புலவர் சாற்றினர் - என்று நாடக இலக் கண அறிஞர் கூறினர்.

குறிப்பு:—ஏகாரம்: பிரிநிலை. "கண்கூடு என்பது பிரிய தரிசனம். அஃதாவது காட்சி; அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிற்கு நிலைமை. என்னை?

"கண்கூ டென்பது கருதுங்காலை
யிசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப,"

என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை. ஒருவர் முன் ஒருவர் எதிர்முகமாக நின்று இருவர் கண்ணுங் கூடுதலின் இஃது கண்கூடா யிற்று. (௩௪)

காண்வரி

208. வருகென வந்து போகெனப் போமியற்
காண்வரிக் கூத்து மாண்புறக் கூறி
னுற்ற பின்ன ருளமகிழ் வுறுப்பன
முற்றத் தந்தொழி மொய்ம்பிற் றாகும்.

வருக என வந்து போக என் போம் இயல் காண்வரி கூத்து - ஒரு வர் வருக என அழைப்ப வந்து போவென்ப் போகுந்தன்மையுடைய காண் வரிக்கூத்தி னிலக்கணத்தை, மாண்பு உற கூறின் - சிறப்புப் பொருந்தக்

கூறுமிடத்து, உற்ற பின்னர் - தலைவன் தலைவியர் தம்முள் ஒருவரை யொருவர் அணுகிய பிறகு, உளம் மகிழ்வு உறுப்பன முற்ற - அவர் மனம் மகிழத் தக்கன யாவற்றையும், தந்து ஒழி மொய்ம்பிற்று ஆகும் - கொடுத்து நீங்கும் வன்மையை உடையதாகும்.

குறிப்பு:—வருகென, போகென: தொகுத்தல் விகாரம். இயல்-இலக்கணம். வருகென வந்து போகெனப் போவது இதன் இலக்கணமாதலின் ஈது ஒருவர் கூட்டக் கூடியதாயிற்று.

"காண்வரி யென்பது காணுங் காலை
வந்த பின்னர் மனமகிழ் வுறுப்பன
தந்து நீங்குந் தன்மைய தாகும்"

என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோள்.

உள்வரி

209. அரச மரபின ராகு மக்க
ளூற்றெழு மன்பின் வேற்றுருக் கொண்டுங்
கொள்ளாது மாடு மெள்ளாத கூத்தே
யுள்வரி யென்ப வுணர்ந்திசி னோரே.

அரசர் மரபினர் ஆகும் மக்கள் - அரச குலத்தினராகிய தலைமக்கள், ஊற்று எழும் அன்பின் - உள்ளிருந்து ஊற்றுப் புறப்படுவதுபோல வெளிப்படும் அன்பினடியாக, வேறு உருகொண்டும் - மாறு வேடம் பூண்டும், கொள்ளாதும் - மாறுவேடம் புனையாதும், ஆடும் எள்ளாத கூத்தே-நடிக்கும் இகழ்ச்சியற்ற கூத்தே, உணர்ந்திசினோர் - நாடக நூலறிஞர், உள்வரி என்ப - உள்வரிக் கூத்தென்று கூறுப.

குறிப்பு:—'அரச மரபினராகும்' என விசேடித்தமையால் இவ்வுள்வரிக்கூத்துப் பெரும்பாலும் அன்னோர்க் குரியதெனக் கூறியதாயிற்று. உள்வரி - வடிவு மறைத்தல், வேற்றுருக்கொண்டு நடித்தல். 'உள்வரியாவது பாண்டவர் விராட நகரத்துப் பிறிதுருவங் கொண்டாற் போல்வது' என்று சிலப்பதிகார அடியார்க்கு நல்லாரும், 'கிருத்திரிமவேடம்' என்று அரும்பதவுரைகாரரும் கூறுவர்.

"உறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட;"
"தோட்டலர் குழலி யுள்வரி நீங்கி;"
"உள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள்" (மணிமேகலை.)
"உள்வரிக் கோலத் துறுதுணை தேடி" (சிலப். 8. 89).
"உள்வரி யென்பது துணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவங்
கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே,"

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். மண்டல மாக்கள் - அரசர். (௩௯)

புறவரி

210. இசைப்பப் போதந் தின்புற வேட்குந்
தலைமக்க ளணையார் தாம்புற நின்று
விளையா டுறுவது விளம்பும் புறவரி.

இசைப்ப போதந்து - வருகவென்று கூறப்போந்து, இன்பு உற வேட்கும் தலைமக்கள் - இன்பம் பொருந்த விரும்பும் தலைமக்கள், அணையார் தாம் புறம் நின்று விளையாடு உறுவது - தலைவனுடனணையாது புறத்து நின்று விளையாடுவது, விளம்பும் புறவரி - மேற்கூறப்பட்ட புறவரிக்கூத்தாம்.

குறிப்பு:—

"புறவரி யென்பது புணர்க்குங் காலை
யிசைப்ப வந்து தலைவன்முற் படாது,
புறத்துநின் றாடி விடைபெறு வதுவே"

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். (நள)

கிளர்வரி

211. ஒருவ ருய்ப்ப மருவித் தோன்றி
நாப்ப ணிருவர் நாப்பணி சொற்கள்
கேட்டிரு புறமொழிப் பொருளாக் கொண்டு
கிளர்ந்துவே றாகுங் கிளர்வரிக் கூத்தே.

ஒருவர் உய்ப்ப - ஒருவர் உடன்கொண்டு செலுத்த, மருவி தோன்றி - அவரொடு பொருந்தித்தோன்றி, நாப்பண் இருவர் நா பணி சொற்கள் - நடுவிற் சந்துபேசும் இருவர் தம்முடைய நாவினுற் கூறுஞ் சொற்களை, கேட்டு - சொல்லக் கேட்டு, இரண்டு புறம் மொழி பொருள் ஆ கொண்டு - உபயார்த்த வாசகப் பொருளாகக் கிரகித்துக்கொண்டு, கிளர்ந்து வேறு ஆகும் கிளர்வரி கூத்து - புலந்துபோகும் மனக்கிளர்ச்சியோடு பிரிந்துபோவதாகும் கிளர்வரிக் கூத்தென்பது.

குறிப்பு :—"கிளர்வரியென்றது நடுநின்றார் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது: என்னை?

'கிளர்வரி யென்பது கிளக்குங் காலை,
யொரு வருய்ப்பத் தோன்றி யவர்வா
யிருபுற மொழிப்பொருள் கேட்டு நிற்பதுவே,' என்றாராகலின்."

என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரைப் பகுதி யீண்டொப்பு நோக்குதற்பாலது. நாப்பண் - நடுவிடம். 'இருவர்' என்றது இருபாலார்க்கும் நடுநின்று சந்து செய்விப்பார் தம்மை. அவர் தம் நாவினைப் பணிகொண்டமையின் அவர்தங் கூற்று நாப்பணி சொற்களாயின. இருபுறமொழிப் பொருள் - இருபாற்பட்ட மொழியின் கவர்படு பொருள். கிளர்தல் - கோபித்தெழுதல்; ஈண்டுப் புலத்தல். கிளர்ந்து வேறுதலின் இஃதிப் பெயர்த்தாயிற்று. (நஅ)

நேர்ச்சிவரி

212. பிரிந்துறை பொழ்திற் பரிந்தாற் ருது
வருந்துறு மக்கள் பொருந்திய தந்துயர்
தம்பிரிந் தோர்கிளை தமைக்கண் டவர்க்குப்
பட்டது முற்றதும் படர்ந்து தம்முளந்
தேர்ந்துரைத் தாடுத றேர்ச்சி வரியே.

பிரிந்து உறை பொழ்தில் - தலைவரை விட்டுப் பிரிந்துறையுங் காலத்தில், பரிந்து - வருந்தி, ஆற்றுது - பிரிவாற்ருது, வருந்து உறும் மக்கள் - வருத்தமுற்ற தலைவியர், தம் பிரிந்தோர் கிளைதமை கண்டு - தம்மைப்பிரிந்த தலைவர்தம் சுற்றத்தாரைக்கண்டு, அவர்க்கு - அச்சுற்றத்தார்க்கு, பொருந்திய - தம்பாலுற்ற, தம் துயர் - தமது துன்பத்தை, பட்டதும் - உண்டானதும், உற்றதும் - நேர்ந்ததும், படர்ந்து - நினைந்து, தம் உளம் தேர்ந்து உரைத்து ஆடுதல் - தமது உள்ளத்தால் ஆராய்ந்து தேடித் தேடிக் கூறியாடுதல், தேர்ச்சிவரி - தேர்ச்சி வரியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. பட்டதும் உற்றதுமாகிய தம் துயரினை உளத்தாற் படர்ந்து தேர்ந்து உரைத்து ஆடுதல் எனக் கூட்டுக.

"தேர்ச்சி வரியாவது நாயகனுடைய கிளைகட்குத் தனது துன்பங்களைத் தேடித் தேடிச் சொல்லுதல். என்னை ?

'தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்
கெட்ட மக்கள் கிளைகண் டவர்முன்
பட்டது முற்றது நினைஇ யிருந்து
தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்,'

என்ருராகலின்,'' என்பது அடியார்க்கு நல்லாருரை. இனிப் 'பட்டதும்'— தலைவன் முன் தலைப்பட்டதும், 'உற்றதும்' — அங்ஙனம் தலைப்படலால் நேர்ந்ததும், எனப் பொருளுரைத்தலுமாம். படர்தல் - நினைத்தல். உளம் தேர்ந்து - உள்ளத்தாற் றேர்ந்து. (௩௬)

காட்சிவரி

213. அன்புகா ரணமாத் துன்புறு மக்கள்
கிளைஞர்க் காணுபு விளைவுறு தந்துயர்
பலருங் கண்டு பரியுமா ருடுதல்
காட்சி வரியெனு மாட்சித் தாகும்.

அன்பு காரணம் ஆ - தலைவர்மாட்டுள்ள அன்பு காரணமாக, துன்பு உறும் மக்கள் - துன்பத்தையடையும் தலைவியர், கிளைஞர் காணுபு - தலைவருடைய சுற்றத்தாரைக் கண்டு, விளைவு உற தம் துயர் - உண்டாகிய தமது துன்பத்தினை, பலரும் கண்டு பரியும் ஆறு - கண்டோரெவரும் பார்த்து வருந்தும் வண்ணம், ஆடுதல் - அவர்க்குக்கூறி யாடுதல், காட்சி

வரி எனும் மாட்சித்து ஆகும் - காட்சிவரி என்னும் பெருமையுடைய கூத்தாகும்.

குறிப்பு:—ஆடுதல் - இரட்டுறமொழிதலான் ஆடுதலோடு சொல்லாடுதலையும் உடன்கொள்க. கிளைஞர் எனப் பொதுப்படக் கூறினமையான், தம்தமர் தலைவர்தமர் ஆகிய இருதிறத்தினரையும் உளப்படுத்தியதாக் கோடலுமாம்.

"காட்சிவரி யென்பது தன் வருத்தத்தை தப்பலரும்
காணும்படி நடித்தல். என்னை ?
'காட்சிவரி யென்பது கருதுங்காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே' என்றாராகலின்;"

என்பது அடியார்க்கு நல்லாருரை: காட்சிவரி : தன் வருத்தம் பலருங்காணும்படி நடித்தல். (௯0)

எடுத்துக்கோள்வரி

214. கையா றெய்துபு மெய்யா வீழ்ந்தனர்
போல வீழ்ந்து புறத்துள பிறர்தா
மேலப் போந்துத மெடுத்துக் கொண்மார்
நடித்துக் காட்டுத லெடுத்துக் கோள்வரி.

கையாறு எய்துபு மெய் ஆ வீழ்ந்தனர் போல வீழ்ந்து - கையறவு அடைந்து உண்மையாகக் கீழே வீழ்ந்தனர்போல விழுந்து, புறத்து உள பிறர்தாம் - (கிளைஞரல்லாத) புறம்பேயுள்ள அயலவர், ஏல போந்து - பொருந்தச் சார்ந்து, தம் எடுத்துக்கொண்மார் - தம்மை எடுத்துக்கொள்ளும்படி, நடித்து காட்டுதல் - ஆடுதலைப்புரிதல், எடுத்துக்கோள் வரி எடுத்துக்கோள் வரிக் கூத்தாம்.

குறிப்பு:—கையாறு - கையறவு; செயலறுகை. புறத்துள பிறர்: மேலே கிளைஞர் என்றமையான் அவர் புறம் பாய பிறர், எனவே அயலோர் என்பதாயிற்று. எய்துபு - எய்தி; கொண்மார் - கொள்ள. வீழ்ந்தனர் போல- விழுந்தனர் என்று சொல்லும்படி.

"எடுத்துக்கோள்வரி யென்றது தான் கைபற வெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக் கொள்ளும்படி நடித்தல்; என்னை?

"எடுத்துக் கோளை யிசைக்குங் காலை
அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவ
ரெடுத்துக்கோள் புரிந்த தெடுத்துக் கோளே"

என்றாராகலின்," என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை. மேற்கூறிய வரிக்கூத்து வகைகள் யாவும் பெரும்பாலுந் தலைவிக்கே யுரியவாமாறு அவற்றி னிலக்கணங்க ளானே விளங்கும். வரிப்பாட்டு வகைகளைத் தலைவிக்கே யன்றித் தலைவற்கும் அகப்புறத் திணைத்தாகிய நாடகத்தின்பாற்

கோடல் அமைவுடைத் தாதல்போல, இவ் வரிக்கூத்துவகைகளையும் ஏற்பன வறிந்து தலைவற்குக்கோடல் பொருந்தும். இவ்வரிக்கூத்து வகைகட்கு இலக்கியம் நாடகங்களில் வந்துழி வந்துழிக்காண்க. நாடகக் காப்பியமாகிய சிலப்பதி காரத்தில் வேனிற்காதைக்கண் மாதவியாடியவாகக் கூறும் எண்வகை வரிக்கூத்தும் இவைகட் கிலக்கியமாக் கோடல் பொருந்தும்.

"திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையுங்
குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றோன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்துநிலா வுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமு
மந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையுங்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவே னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலுஞ்
சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
கலம்பெறு நகைப்பினள் காத னோக்கமொடு
திறத்துவே றாயவென் சிறுமை நோக்கியும்
புறத்துநின் றாடிய புன்புற வரியுங்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமு
மொருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமு
மின்னிடை வருத்த நன்னுத றோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியி
னிருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்துவே றாகிய கிளர்வரிக் கோலமும்
பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும்
வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்

கண்டவர்க் குரைத்த காட்சி வரியு
மடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்க
மெடுத்தவர் தீர்த்த வேடுத்துக்கோள் வரியும்.''

என்ற சிலப்பதிகார வேனிற்காதையடிகள் இவ் வரிக்கூத்து வகைகளி னியல்பை விளக்குதல் காண்க. (சகூ)

முதலிடைகடைக்கூத்துக்கள்

215. முதலிடை கடையெனு மூவகைக் கூத்துங்
காலந் தேயங் கரும மென்ற
முத்திறம் புணர்ந்து மொழிவா னமைந்த
மூவரு ளொருவர் முனைந்து மேனின்
றேன்ற நீதிக ளின்னிசைப் பாட்டி
னெடுத்து வகுக்கு மியல்பின வாகும்.

முதல் இடை கடை எனும் மூன்று வகை கூத்தும் - முதற்கூத்து இடைக்கூத்து கடைக்கூத்தென்று சொல்லப்படும் மூன்று பகுதியவாய கூத்துக்களும், காலம்-, தேயம் - இடம், கருமம் - தொழில், என்ற-, முத்திறம் - மூன்றன் றன்மைகளையும், புணர்ந்து மொழிவான் அமைந்த - வருணித்துக் கூறும் வன்மை பொருந்திய, மூவருள் ஒருவர் - மூவர் தம்முள் ஒருவர், முனைந்து -முன்வந்து, மேல் நின்று - அரங்கத்தினிடம் நின்று, ஏன்ற நீதிகள் - எடுத்துக்கொண்ட நாடகத்திற்கூற அமைந்த நீதிகளை, இனிமை இசை பாட்டின் - இனிய இசைப்பாடல்களான், எடுத்து வகுக்கும் இயல்பின ஆகும் - செவ்விதிற் புலனுக விரித்து வகுத்துக்கூறும் இயல்பினை யுடையனவாகும்.

குறிப்பு:—நாடகத்தின் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் இவை நிகழ்த்தப்படுதலின் இப்பெயர் பெற்றன. நாடகக்கதை நிகழுங் காலத்தினையாதல் இடத்தினையாதல் அன்றிச் செயலினையாதல் கூத்து முகத்தாற் புனைந்து கூற அமைந்த மூவருள் ஒருவர், நாடகத்தின் முதல் இடைகடையென்னு மூவயின் ஓரிடத்து, அமயத்துக் கேற்ற நீதிகளை இனிய இசைப் பாடல்களின் வாயிலாகப் பாடியாடல் இவற்றின் றன்மையென்பது விளங்கும். நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்து முதற்கண் மங்கல வாழ்த்துப் பாடலும், இடைக்கண் குன்றக் குரவையும் ஆய்ச்சியர் குரவையும், கடைக்கண் வாழ்த்துக் காதையும் முறையே முதலிடை கடைக் கூத்துக்களாய் ஓராற்றான் அமைதல் உற்று நோக்கு நர்க்குப் புலனும். ஷேக்ஸ்பியராதிய மேற்புல ஆசிரியர்தம் நாடகங்கள் சிலவற்றுள் இவையிற்றினுக்கு இலக்கியங் காணலாம். இம்மூவகைக் கூத்தும் ஒரே நாடகத்தின்கண் அமைதல் வேண்டுமென்னும் நியதியின்றி, ஒன்றோ இரண்டோ வருதலுமுண்டு. இலக்கியம் வந்துழிக் காண்க. (சஉ)

216. கூத்துக் கூறு நாடகஞ் சிலவே.

கூத்து கூறு நாடகம் சிலவே - எவ்வகைக் கூத்தும் நிகழாத நாடகங் களுஞ் சிலவுள.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. தசரதன் றவறு கூத்தின்றி யமைந்ததற் குதாரணமாம். (உகூ)

(கூ) பின்னுரை

217. நாடக நீதியை நனிபுலப் படுத்து
நாடக விறுதியிற் பாடுபெற் றோங்கும்
பாத்திர மொருவ னுத்திறம் விளங்கப்
பகர்ந்து கடவுளைப் பண்ணுற வினிது
பாடி யவைக்குப் பரிந்து முகமன்
கூறிப் போவது குறித்த பின்னுரை.

நாடகம் நீதியை நனி புலப்படுத்து - நாடகத்தினுற்புலப்படும் நீதியை நன்கு எடுத்துக் காட்டி, நாடகம் இறுதியில் - நாடகத்தின் முடிவில், பாடு பெற்று ஓங்கும் பாத்திரம் ஒருவன் - நாடக பாத்திரங்களுட் பெருமையுற்று விளங்கும் தலைமக்களுள் ஒருவன், நா திறம் விளங்க - சொல்வன்மை திகழ, பகர்ந்து - பேசி, கடவுளை - தெய்வத்தை, பண் உற இனிது பாடி - இராகம் பொருந்த இனிமையாகப் பாடி, அவைக்கு பரிந்து முகமன் கூறி - சபை யோர்க்கு அன்பு பாராட்டி உபசார வார்த்தை சொல்லி, போவது - அரங் கினின்று நீங்கிப் போவது, குறித்த பின்னுரை - உறுப்பியல்பு முதற் சூத்தி ரத்தின்கட் 'குணநவில்' என்று விசேடித்துக் குறித்த பின்னுரையாகும்.

குறிப்பு:—நாடகத் தலைவன் நாடக நீதியை யினிது எடுத்தியம்பிச் சபையோர்க்கு முகமன் கூறிக் கடவுளை வணங்கிப்போவது பின்னுரையின் இலக்கணமாமென்றவாறு. ஆங்கிலத்தில் இதனை Epilogue என்று கூறு வர். சேகப்பிரியர் நாடகங்களில் ஒன்றாகிய 'நீ விரும்பிய விதமே' (As you like it) என்பது இத்தகைய பின்னுரை பெற்றுள்ளது காண்க. மால தீமா தவ நாடகத்தினிறுதியில் மாதவன் கூறியது பின்னுரைக் குதாரணமாம். கலாவதி நாடகவிறுதியாகிய ஏழாமங்கம் நான்காங்களமே பின்னுரையாய் நிற்றலுணரற்பாலது. தசரதன்றவறு நாடகத்தில் இறுதிக் கூற்றாகத் தசரதன் பேசியது பின்னுரையின்பாற்படும். கடவுளை வாழ்த்துதல் கூறவே, அற முறை வாழ்த்துக் கூறலும் பெறப்பட்டது. (சச)

218. சூத்திரதாரனுஞ் சொல்லும் பின்னுரை.

சூத்திரதாரனும் சொல்லும் பின்னுரை - சில நாடகங்களிற் சூத்தி ரதாரனும் பின்னுரை கூறுவன்.

குறிப்பு:—தலைவனேயன்றிச் சூத்திரதாரன் பின்னுரை கூறுதல் இத னானே அமைக்கப்பட்டது. சூத்திரதாரனும்: உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. உதாரணம்வந்துழிக்காண்க. (சரு)

219. பின்னுரை யெடுத்துப் பன்னல வாகு
நாடகஞ் சிலவுள நாடுங் காலே.

பின்னுரை எடுத்து பன்னல ஆகும் நாடகம் - பின்னுரை என்னும் நாடகப் பகுதியினை அமைத்துக் கூறாத நாடகங்கள், நாடுங்கால் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, சில உள - சில உண்டு.

குறிப்பு:—ஆங்கிலத்தில் 'ஒதெல்லோ' முதலிய நாடகங்களும் தமிழில் மனோன்மணீயம் முதலிய நாடகங்களும் பின்னுரை பெறாதன. (சசு)

பரதவாக்கியம்

220. நாடக முடிவி னண்ணித் தலைவ
னூலையு நூலா சிரியன் றன்னையு
மவற்கறி வுறுத்த வாசான் றனையுந்
தமிழ்மொழி யினையுந் தமிழ்ப்புல வோரையும்
பாட்டினில் வாழ்த்துதல் பரதவாக் கியமே.

நாடகம் முடிவில் - நாடகத்தின் இறுதியில், தலைவன் நண்ணி - நாடகத் தலைவன் அரங்கிற்போந்து, நூலையும் - எடுத்துக்கொண்ட நாடக நூலினையும், நூல் ஆசிரியன் தன்னையும் - அந்நாடக நூலினை உண்டாக்கிய ஆசிரியனையும், அவற்கு அறிவுறுத்த ஆசான் தன்னையும் - அவனுக்குக் கல்வி யறிவு கொளுத்திய ஆசிரியனையும், தமிழ் மொழியினையும், தமிழ் புலவோரையும் - தமிழ் வித்துவான்களையும், பாட்டினில் வாழ்த்துதல் - பாட்டால் வாழ்த்துக்கூறுதல், பரத வாக்கியமே-பரதவாக்கிய மென்று சொல்லப்படும்.

குறிப்பு:—பின்னுரையிற் கூறவேண்டிய கடவுள்வாழ்த்து அறமுறை வாழ்த்து முதலியவற்றை யிப் பரதவாக்கியத்துள் அமைத்துஞ் சிலவாசிரியர் கூறுவர். தசரதன்றவறு நாடகத்தின் இறுதியிலுள்ள,

"பனவர்குல முப்பொழுதும் பரவா நிற்பப்
பன்னரிய நாடகத்தென் கலைவி ரித்தென்
மனமெனுமம் புயமலர்த்தி மகிழ்ந்து கற்கு
மாணாக்க ருளத்தினில்வா னமுதம் வாக்குங்
கனைகழற்சூ ரியநாரா யணனெ னும்பேர்க்
காமர்தமிழ் முகிலுலகில் வாழ்க நாளும்
புனைவுறுமிவ் வங்கமுநற் றமிழும் போற்றும்
புலவர்களும் பொலிந்தினிது வாழ்க மாதோ"

என்ற செய்யுள் பரதவாக்கியத்திற் குதாரணமாம். மத்த விலாசப் பிர சனத்தின் ஈற்றிலுள்ள,

"மன்னுயிர்கள் மகிழ்சிறக்க வழிவ ழாது
வன்னியவி யேற்றிடுக வந்த ணாளர்
பன்னுமறை யொலிபயில்க பசுக்கள் மல்கிப்
பல்குகவில் வுலகுபிறப் பொழுக்க மேவித்

தன்னுகநன் முயற்சிசசி யுடிக்க ருள்ள
துணையுமிடர் தவிர்கபகை யடக்கி நாளும்
நன்னரர சாட்சிபுரி சத்ரு மல்லன்
நலங்குலவிப் புகழ்நிலவி வாழ்க மாதோ;''

என்னுங் கவி பரதவாக்கியத்துள் அறுமுறைவாழ்த்து மடக்கிக் கூறியதற் குதாரணமாம்.

"வான்முகில்கள் காலமுறப் பொழிக பைங்கூழ்
வளம்பெருக்கி நிலஞ்சிறக்க வழாது நீம்பால்
ஆனினங்க ளனிசுரக்க வுயிர்கள் யாவும்
அன்புடைய வாயுவகை யடைக வென்றும்
மேன்மைதரும் அந்தணர்க ளல்லோ ராக
வீசுகமென் காவின்ப மிகுவித் தெங்கும்
பான்மைதரு திருவினொடு தருமம் பற்றிப்
பகைமையொழித் தரசர்நிலம் புரித்து வாழ்க,'

என்பது மண்ணியல் சிறுதேர்ப் பரதவாக்கியம். (௨௭)

(௧௦) ஒழிபு

பெயரீடு

221. தலைமக்க டமது நலமிக்க பெயரினுங்
கதையினிற் பாற்கடற் சுதையெனச் சிறந்த
விடயத் தினும்பெய ரிடலுயர் வென்க.

தலைமக்கள் தமது நலம் மிக்க பெயரினும் - தலைமக்களுடைய சிறப்பு மிகுந்த பெயரினும், கதையினில் - நாடகக் கதையின்கண், பால் கடல் சுதை என சிறந்த - திருப்பாற்கடலினுண்டான அமிர்தம் போலச் சிறப்பு வாய்ந்த, விடயத்தினும் - விஷயத்தினும், பெயர் இடல் உயர்வு என்க - நாடக நூற்குப் பெயரிடுதல் சிறந்த தென்று கூறுக.

குறிப்பு:—கலாவதி, ஹாம்லெத், மனோன்மணீயம் இவை தலைமக்க ளாற் பெயரமைந்தன. தலைமக்கள் எனப் பொதுப்படக் கூறினமையால் தலைவன் தலைவி யிருவர் பெயராலும் நாடகத்திற்குப் பெயரமைதலுண்டு; விக்கிரமோர்வசீயம், மாலதீ மாதவம் முதலியன உதாரணங்களாம். 'பாற் கடற் சுதையென' என்ற உவமையால் நாடகக் கதைக்குத் திருப்பாற்கட லும், அதனுட் சிறந்த விடயத்திற்கு அமுதமும் உபமானமாகி நின்றன. தச்ரதன்றவறு, மண்ணியல் சிறுதேர், முத்திராராட்சசம் இவை விடயத்தாற் பெயரமைந்தன. தலைமக்கடம்மாலும் விடயத்தாலும் நாடகத்திற்குப் பெய ரிடல் 'உயர் வென்க' என்ற மையானே வேறு விதமாகப் பெயரமைதல் அத்துணைச் சிறப்பின்மை யறிக. வடமொழி அநர்க்கராகவ நாடகத்திற்கு முராரி நாடக மென்று ஆசிரியராற் பெயரமைந்ததும், நகைச் சுவையே பெரிதும் விளங்கும் வடமொழி நாடக மொன்றினுக்கு ஹாஸ்யார்ணவம்

என்று சுவையாற் பெயர் பெற்றதும் இவைபோல்வன பிறவும் பிறகாரணங் களாற் பெயரமைந்தனவாம். (௨௮)

புனைவுமுறை

222. இம்மையிற் பாத்திர மியற்றிடு வினைகட்
கேற்ப நன்மையு மின்னாத் தீமையும்
பாற்பட் டுறுவான் கதையினைப் பகர்தல்
புனைவு முறையாம் புகலுங் காலே.

இம்மையில் - இப்பிறப்பின்கண், பாத்திரம் - பாத்திரங்களுள் ஒருவன், இயற்றிடு வினைகட்கு ஏற்ப - செய்யுஞ் செயலுக்குப் பொருந்த, நன்மையும் - நல்லன செய்யின் நன்மையும், இன்னா தீமையும் - தீயனபுரியின் வெறுக்கத் தக்க தீங்கும், பால் பட்டு உறுவான் - பகுதிப்பட்டுப் பொருந்துமாறு, கதையினை பகர்தல் - நாடகக் கதையினைக் கூறுதல், புகலுங்கால் - எடுத்துச் சொல்லுமிடத்து, புனைவுமுறை ஆம் - நாடகத்தைப் புனையும் முறைமையாகும்.

குறிப்பு:—நல்லொழுக்கம் உளார் நன்மை யெய்தலும் தீயொழுக்கம் உளார் தீமையெய்தலும் அறமாதலின் (பொதுவியல் சூத். - 12 நோக்குக), அவரவர் இயற்றிடு வினைகட்கு ஏற்ப நன்மையுந் தீமையும் பாற்பட்டுறுமாறு கதையினைக் கூறல் புனைவுமுறை யாயிற்று. இங்ஙன முறுதலை Poetic-Justice என்று ஆங்கிலத்திற் கூறுப. இயற்றும் வினைக்குத் தக்கவாறு நற்பயனும் தீப்பயனும் அடைய அமைத்தலின் அருமை தோன்றப் 'புகலுங் காலே' என்றனர். ஏகாரம்: ஈற்றசை. (௨௯)

உறுப்பியல்பு புறனடை

223. குறையுற வெளியேங் கூறின மெனினு
மறிவுடை யோரதை யகற்றுதல் கடனே

எளியேம் - அறிவிற் சிறியேமாகிய யாம், குறை உறகூறினம் எனினும் - முன்னர்க் கூறிய இலக்கணங்களுட் குறைபாடுண்டாகக் கூறியுள்ளேமாயினும், அறிவு உடையோர் அதை அகற்றுதல் கடனே - நாடகவிலக்கண அறிஞர்கள் அக்குறைபாட்டினை நீக்கி நிறைந்த இலக்கணங்களை உரிய இடங்களிற் றந்துரைத்துக் கோடல் அறிவானமைந் தார்க்குக் கடமையாம்.

குறிப்பு:—குற்றங்கணிக்கிக் குறைபெய்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடனாதலின் இங்ஙனம் புறனடையமைத்தார். ஏகாரம்:ஈற்றசை. (௩0)

உறுப்பியல்பு முற்றிற்று

(சு) நடிப்பியல்பு

224\. காண்போர் மனத்தைக் களிப்பிக் குந்தகை
நடிப்பியல் பதனை நாட்டுறுங் காலை
மெய்ப்பாட் டின்னியன் மேதக விளக்கி
விறல்புலப் படுத்திட் டொற்றுமை மேவிச்
சாற்று மவிநயம் போற்றுஞ் சுவைக்குத்
தக்க சால்புட னொக்கக் காட்டி
யறுவகை நிலையு மறுவறத் தெரித்து
நாடக சாலையை நண்ணுவித் தழகொடு
நாடும் பாவனை யோடு நடித்தலே.

காண்போர் மனத்தை - நாடகம் பார்ப்பவர் மனத்திற்கு, களிப்பிக்கும் தகை - மகிழ்வினையளிக்கும் தகைமையினையுடைய, நடிப்பு இயல்பு அதனை நாட்டுறும் காலை - நடிப்பு இயல்பு இன்னதென்பதனை எடுத்துக் கூறுமிடத்து, மெய்ப்பாடு இனிமை இயல் - மெய்ப்பாடுகளின் இனிய இயல்பு, மேதக விளக்கி-நன்கு புலப்படுமாறுசெய்து, விறல் புலப்படுத்திட்டு - விறல் காண்போர்க்குப் புலனுமாறு காட்டி, ஒற்றுமை மேவி - நடிப்பான் மேற்கொண்ட நாடக பாத்திரத்தோடு தான் ஒன்றுபடுதலைப் பொருந்தி, சாற்றும் அவிநயம் போற்றும் சுவைக்கு தக்க சால்புடன் ஒக்க காட்டி - சுவைக்குத் தக்கனவாகச் சொல்லப்படும் அபிநயங்களை அமையுமாறு பொருந்தத் தெரித்து, ஆறு வகை நிலையும்மறு அற தெரித்து - அறுவகைப்பட்ட நிலைகளையும் குற்றமற விளங்கக்காட்டி, நாடக சாலையை அழகொடு நண்ணுவித்து - நாடகசாலையினை அழகு பொருந்தச் செய்து, நாடும் பாவனையோடு நடித்தல் - ஆராயத்தக்க பாவனைகளோடு நடித்தலாகும்.

குறிப்பு:—நாடகம் காட்சிநூலாதலானும், காணுநர் மனங்களிப்படைவது நடிக்குநர் வன்மையானுதலானும், நடிப்பியல்பின் சிறப்போன நாடகஞ் சிறப்படையுமாதலானும், 'காண்போர் மனத்தைக் களிப்பிக்குந் தகை'மையினை 'நடிப்பியல்'பிற்குச் சிறப்படையாகக் கூறினர். நாட்டுதல் : ஈண்டு எடுத்துக் கூறுதல், நாடகவிலக்கணமாய்குநர் மனத்தில் நன்கு பதியச் செய்வது அதுவாதலின். மெய்ப்பாடு, விறல், அவிநயம் இவற்றின் இலக்கணங்களைப் பின்னர் விளக்கிக் கூறுவர். அறுவகைநிலை :

'நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தல்
வருதல் போதலென் றிருமூ வகைத்தாம்'

என மேற்கூறுவர். நிலையினிலக்கணமும் வகையும் இவ்வியல்பு ஐந்தாவது பகுதியான் விளங்கும். அணிபெறவமைத்த நாடகசாலையும் நடிப்பியல்பு சிறவாதேல் அழகு பெறுதொழிவதும் அது சிறக்குமேல் அழகுற்றொளிர்வதும் உண்மையாதலின்,

'நாடக சாலையை நன்னுவித் தழகொடு'

எனக்கூறினர். இலக்கணஞ் சான்ற பாவனையினை யாப்புருபவனே நடிப்போன் குறிப்பினை அறிபவனுதலின் 'நாடும் பாவனை' என விசேடித்தனர். ஏகாரம்: ஈற்றசை. (க)

(க) மெய்ப்பாடு

225. மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றமு
முய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பொரு ணேரிற் கண்டது போலத்
தோன்றுங் கருத்துஞ் சொற்றமெய்ப் பாடாம்.

மெய்க்கண் பட்டு தோன்றிய தோற்றமும் - உடம்பினிடத்துண்டாகிக் காண்போர்க்குப் புலனுக வெளிப்பட்டுத் தோன்றிய தோற்றமும், உய்த்து உணர்வு இன்றி - செலுத்திக் காணும் அறிவில்லாமேல, தலைவரு பொருளின் - எதிர்ப்பட்ட பொருளின் தன்மையாலே, மெய்ம்மை பொருள் நேரில் கண்டது போல தோன்றும் கருத்தும் - உள்ள பொருளினைக் கண்ணுக்கு எதிரிற் பார்த்ததுபோலத் தோன்றும் கருத்தும், சொற்ற மெய்ப்பாடு ஆம் - மேற்சூத்திரத்திற் கூறிய மெய்ப்பாடாகும்.

குறிப்பு:—மெய்ப்பாடு - மெய்யின்கட்படுவது, உடம்பிற் றேன்றுவது. மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றமென்றது கண்ணீரரும்பல் மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலாக உடம்பின்க ணுண்டாகும் வேறுபாடுகளை, பாம்புக் காட்டிற் சென்றுனெருவன் ஆண்டுக்கிடந்த பழுதையைக் கண்டு அஞ்சி யோடினுன்; ஆண்டுக்கிடந்த பழுதை தலைவரு பொருளாயிற்று; அதனை யுய்த்துணர்வின்றி மெய்யான அராவெனக் கருதியது ;உய்த்துணர்வின்றித் தலைவருபொருளின் மெய்ப்பொரு ணேரிற் கண்டது போலத் தோன்றுங் கருத்தாயிற்று. வேம்பு சுவைத்த ஒருவனை மற்றெருவன் கண்டான்; வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்புணர்வினை நாவுணர்வினுனே அம்மற்றையோன் உணரானெனினும், இவன் கைப்புச் சுவைத்தான் எனக் கண்ணுணர்வானே யறிதலும், அச்சத்துக் கேதுவாகிய ஒருபொருள் கண்டு அஞ்சியோடி வருகின்ற ஒருவனை மற்றெருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா வாள்வரி வேங்கை முள்ளெயிற்றரவே முழங்கழற் செந்தீ முதலாய அஞ்சத்தக்கன கண்டஞ்சினுன் என்றறிவதும் இதன்பாற் படும். (உ)

226. அதுதான்,
நிலையும் பொதுவுமென் றிருவகைத் தாகும்.

அதுதான் - அம் மெய்ப்பாடுதான், நிலையும் பொதுவும் என்று இரண்டு வகைத்து ஆகும் - நிலைமெய்ப்பாடு பொது மெய்ப்பாடு என்னும் இரண்டு வகையினை யுடையதாகும்.

குறிப்பு:—நிலை பொது என்றவற்றின் பெயர்க் காரணம் பின்னர் வருஞ் சூத்திரங்களானே விளக்குவர். (ௌ)

நிலைமெய்ப்பாடு

227. நுகர்ச்சியுள் ளளவு நிலைத்திருப் பதனு
லொன்பான் சுவையு முறுமுத லாக
நிகழுந வெல்லா நிலைமெய்ப் பாடாம்.

நுகர்ச்சி உள்ள அளவும் - சுவைகளின் அநுபவம் பொருந்தியிருக்கும் அளவும், நிலைத்து இருப்பதனுல் - நிலைபெற்று இருக்குந் தன்மையானே, ஒன்பான் சுவையும் உறும்முதல் ஆ - ஒன்பதுவகைச் சுவையும் பொருந்திய அடிப்படையாக, நிகழுந எல்லாம் - உண்டாகும் மெய்ப்பாடுகள் யாவும், நிலைமெய்ப்பாடு ஆம் - நிலைமெய்ப்பாடு என்று சொல்லப்படும்.

குறிப்பு:—ஒன்பான் சுவை: உவகை பெருமிதம் நகை சமம் வெகுளி வியப்பு இழிப்பு அவலம் அச்சம் என்பனவாம். இவற்றினிலக்கணங்களை யிந்நூல் 40 முதல் 53 வரையுள்ள சூத்திரங்களானறிக. 'நுகர்ச்சி' என்றது சண்டிச்சுவையின் அநுபவத்தினை. முதல் - முதற் காரணம். சுவையினை அடிப்படையாகக் கொண்டு தோன்றி அச்சுவையின் அநுபவம் பொருந்தி நிற்குமளவும் நிலைபெற நிகழும் மெய்ப்பாடுகள் யாவும் நிலைமெய்ப்பாடென்னப்படும். ஒவ்வொரு சுவைக்குந் தனித்தனியாக அஃததனுக் கென்றே நிகழ்பவை யிம்மெய்ப்பாடா மென்பதிதனுனே போதரும். ஸ்தாயீபாவ மென வடநூலார் கூறுவதும் இதுபற்றியேயாம். (ச)

பொதுமெய்ப்பாடு

228. பல்வகைச் சுவையினும் பரந்து நிற்குந
பொதுமெய்ப் பாடெனப் புகன்றனர் புலவர்.

பல வகை சுவையினும் பரந்து நிற்குந - ஒரு சுவைக்கேயுரியனவாதலின்றிப் பலவகைப்பட்ட சுவைகளின்கண்ணும் பொருந்தி நிற்கும் பண்புடைய மெய்ப்பாடுகள், பொது மெய்ப்பாடு என புகன்றனர் புலவர் - பொது மெய்ப்பாடாகும் என்று நாடக நூலறிஞர் கூறினர்.

குறிப்பு:—பல சுவைக்கும் பொதுவாய் நிற்றலின் இவையிற்றிற்கு இப்பெயர் வாய்ந்தது. மடித்தவாயும் கடித்த விதழும் சிவந்த கண்ணும் வெகுளிச் சுவைக்கே யன்றி, பெருமிதச் சுவைக்கும் வருதலின் இவை பொது மெய்ப்பாடாம்.

(உ) விறல்

229. நுகரத் தகுவ பொருள்பல நுகர்ந்த
பொறியுணர் வாகிய சுவைகா ரணமா
வுளத்தி னிகழுங் குறிப்புப் பற்றி
யிச்சையி னன்றித் தாமே யெழுந்து
புறத்திற் றோன்றுஞ் சத்துவ மேவிறல்.

நுகர தருவ பொருள் பல நுகர்ந்த - அநுபவ யோக்கியமான பல பொருள்களை அநுபவித்த, பொறி உணர்வுஆகிய சுவை காரணம் ஆ - இந்திரிய உணர்ச்சியாகிய சுவையினடியாக, உளத்தில் நிகழும் - மனத்தின்கணுண்டாகும், குறிப்பு பற்றி - குறிப்பினை யாதாரமாகக் கொண்டு, இச்சையின் அன்றி - வெளிப்படுத்த வேண்டும் என்னும் விருப்பம் இல்லாமலே, தாமே எழுந்து புறத்தில் தோன்றும் சத்துவமே விறல் - தாமாகவே உண்டாகிப் புறம்பே வெளிப்பட்டுத் தோன்றும் சத்துவமே விறலாகும்.

குறிப்பு:—விறல் சத்துவம் என்பன ஒரு பொருட்கிளவிகள். குறிப் பென்பது கைப்பின் சுவை யுணர்வு பிறந்தவழி வெறுப்பு முதலாயின உள்ள நிகழ்ச்சி போல அஞ்சுதக்கன கண்ட வழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி. விற லென்பன, அவ்வுள்ள நிகழ்ச்சி பிறந்தவழி வேம்பு தின்றார்க்குத் தலை நடுங்குவது போலத் தாமே தோன்றும் நடுக்க முதலாயின வாம். எனவே, குறிப்பாவது சுவையின்கட் டோன்றுவதாம். ஸத்துவமாவது அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகும். தருவ - தருவன. சுவைக் கப்படும் பொருளும் அதனை நுகர்ந்த பொறி யுணர்வும் அது மனத்துப் பட்ட வழி உள்ளத்து நிகழுங் குறிப்பும் குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீ ரரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலுமாகிய உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களும் வேற்றுமை நயங்கருதியவழிவெவ்வேறு யிருப்பவும், வேம்பு முதலாயின பொருளும் அதனோடு நாமுதலாயினபொறியும் வேறுவேறு நின்றவழிச் சுவையென்று சொல்வதே பிறவாமையானும் அவ்விரண்டும் கூடியவழிச் சுவையென்பது பிறத்தலானும் ஒற்றுமை நயம் பற்றி 'பொறியுணர்வாகிய சுவை' என்று கூறினர். இச்சையா னெழுவது Voluntary Action என்றும், இச்சையினன்றி யெழுவது Involuntary Action என்றும் ஆங்கிலத்திற் கூறுப. "சத்துவமாவது - குறிப்புவரையறை: ஆவது, சுத்தச்சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக் கொள்க. என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங் காட்டாதேஅதுதான் இறைவனுக்கு மெய்யின் கண் வருவது. கருணையென்றுற் பாவித்துக் காட்டுவதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்தழுவது. அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும் இப்படி ஒட்டிக் கண்டுகொள்க. அவைதாம் அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்று முடம்பில்; உடம்பின்மிகத் தோற்றும்முகத்து; முகத்தின் மிகத்தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத்தோற்றும் கண்ணின் கடையகத் தென்றவாறு" என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை ஈண்டு நோக்கற்பாலது. (சு)

விறல்வகை

230. அதுதான்,
மெய்ம்மயிர் சிலிர்த்தல் விழிநீர் வார்த
னடுக்க மடுத்தல் வியர்த்த றேற்றறங்

களித்தல் விழித்தல் வெதும்பல்சாக் காடு
குரற்சிதை வென்னக் கொள்பதின் வகைத்தே.

அதுதான் - அவ்விறலெனப்படுவதுதான், மெய் மயிர்சிலிர்த்தல் - ரோமாஞ்சிதங்கொள்ளல், விழி நீர் வார்தல் - கண்ணீர் சொரிதல், நடுக்கம் அடுத்தல் - நடுக்கம் உண்டாதல், வியர்த்தல் - வியர்வை தோன்றல், தேற்றம்-தெளிதல், களித்தல் - மகிழ்தல், விழித்தல்-விழித்து நோக்குதல், வதும்பல்-மனம் புழுங்கல், சாக்காடு - உணர்வின்மை, குரல் சிதைவு - குரல் கம்முதல், என்ன கொள் பத்துவகைத்து - என்று ஆன்றோரான் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்து வகையினையுடையதாகும்.

குறிப்பு:—சாக்காடு - இறந்துபடுதல்; ஈண்டு உணர்வின்மைமே னின்றது; சாக்காடென்பதற்கு மடலேறுதலும் வரை பாய்தலும் போல்வன கூறல் என்று,

"வேட்கை யொருதலை யுள்ளுதல்"

என்னும் தோல்காப்பியக் களவியற் சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதும் இதனை வலியுறுத்தும். நாடகம் அகப்புறத் திணைத்தாதலின் சாக்காடென்பதற்கு மரணமென்று பொருள் கோடலுமாம். "அச் சத்து வந்தான் பத்துவகைப்படும். என்னை? மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு எனவிவை" என்பது அடியார்க்கு நல்லாருரை. (எ)

231. பொருளும் பொறியுந் தலைப்பெய் தன்றி
யொருவகைச் சுவையு முற்றெழ லின்மையின்
"இருவகை நிலத்தி னியல்வது சுவையே"
யென்று நாடக நூலோ ரியம்பினர்.

பொருளும் - சுவைக்கப்படு பொருளும், பொறியும் - சுவைக்கும் பொறியும், தலைப்பெய்து அன்றி-ஒன்று கூடின் அல்லாமல், ஒன்று வகை சுவையும் உற்று எழல் இன்மையின்-எவ்விதமான சுவையும் பொருந்தி யுண்டாகாதாதலின், இரண்டு வகை நிலத்தின் இயல்வது சுவையே-சுவைக்கப்படு பொருள் சுவைக்கும் பொறி யென்னுமிரண்டிடத்தும் கூடி நடைபெறுவது சுவையாம், என்று நாடகம் நூலோர் இயம்பினர் - என்று. நாடக விலக்கண ஆசிரியர் கூறினர்.

குறிப்பு:—"இருவகை நிலத்தினியல்வது சுவையே" என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் பேராசிரியருரை மேற்கோட் சூத்திரம். (தொல். பொருள். 249 - உரை). "சுவைப் பொரு ளென்பன, அறுசுவைக்கு முதலாகிய வேம்புங்கடுவும் உப்பும் புளியும் பாக்கும் கரும்பும் போல்வன. அவை யாமாறு: நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழும், குருட

ரும் முடவருஞ் செல்லுஞ்செலவும், பித்தருங் களியருஞ் சுற்றத்தாரை இகழ்ந்தாருங் குழவி கூறும் மழலையும் போல்வன. அச்சப் பொருளாவன,

'வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ
யிற்று மதமா வேக பாதங்
கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்,'

என்று சொல்லப்பட்டன போல்வன. இவற்றைச் சுவை கோடலென்ப தென்னையெனின், நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உல கியலான் அறிவான் ஒருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்ட வழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவை யெனப்படும். வேம்பென் னும் பொருளும் நாவென்பொறியுந் தலைப்பெய்துழி யல்லது கைப்புச் சுவை பிறவாததுபோல், அப்பொருள் கண்டவழி யல்லது நகையும் அச்சமுந் தோன்று. ஒழிந்த காமமுதலியனவும் அன்ன. இக்கருத்தே பற்றிப் பிற் காலத்து நாடக நூல் செய்த ஆசிரியரும், 'இருவகை நிலத்தினியல்வது சுவையே,' என்றாரென்பது. இனி இருவகை நிலனென்பன உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதலன்றோ வெனின் சுவை யென்பது ஒப்பி னுடைய பெயராகலான், வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவு ணர்வினுற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர் வினன் உணர்வதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சியோடி வருகின்றானொருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலாயின கண்டு அஞ்சினானென் றறிவதல்லது வள்ளெ யிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானாயின், அதுவுஞ் சுவையெனவே படும். ஆகவே அஞ்சினானைக் கண்டு நகுதலுங் கருணை செய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாத காலின் இருவகை நிலமெனப்படுவன சுவைப் பொருளுஞ் சுவைத்தோனு மென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது" என்னுந் தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதற் சூத்திரவுரையிற் பேராசிரியர் கூறியது ஈண்டு நோக்கற்பாலது. (அ)

232. சுவையே குறிப்பு விறலே யென்னக்
காரண முறையாக் காண்டக வெழூஉம்
'எண்ணிய மூன்று மொருங்கு பெறுமெனா
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றனரென்ப';

சுவையே குறிப்பு விறலே என்ன - சுவை குறிப்பு விறல் என்று, காரணம் முறை ஆ காண் தக எழூஉம் - காரணகாரிய முறையாகக் காண்பதற்குப் பொருந்த உண்டாகும், எண்ணிய மூன்றும் - எண்ணப்பட்ட மூன்றும், ஒருங்கு பெறும் என - அம்மெய்ப்பாடு ஒருங்கே பெறும் என்று, நுண்ணி

தின் உணர்ந்தோர் நுவன்றனர் என்ப - நாடக இலக்கணத்தை நுணுகி ஆராய்ந்தறிந்தோர் கூறினர் என்று பெரியோர் சொல்லுவார்.

குறிப்பு:—ஏகாரம் எண்ணேகாரம்; ஏகாரத்தைக் குறிப்பொடுங் கூட்டுக. சுவை யடியாகக் குறிப்பும், குறிப்பினடியாக விறலும் உண்டாதலிற் காரண முறையாக் காண்டக வெழூஉம்' என்றனர். எழூஉம்: இவ் விசையளபெடை செய்யுளிசையும் நிறைத்தது. "எண்ணிய மூன்றும்" என்னுந்தொடக்கத்த அடிகள் செயிற்றியனார் சூத்திரம். "பொருளதிகாரத்துக்கூறுகின்ற வழக்கியலே அவையும் என்பது கூறி, அச்சுவைக்கு ஏதுவாய பொருளினை அரங்கினுள் நிறீஇ, அது கண்டு குறிப்புஞ் சத்துவமும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் அரங்கிற்றந்து, பின்னர் அவையினோர் அவன் செய்கின்ற மெய்ப்பாட்டினை உணர்வாராக வருகின்ற முறைமையெல்லாம் நாடக வழக்கிற்கே உரிய பகுதியெனவும், அப்பகுதி யெல்லாம் ஈண்டுணர்த்தல் வேண்டுவதன்றெனவுங் கூறியவாறு. இங்ஙனம் அடங்கு மென்பது நாடகநூலுள்ளுஞ் சொல்லுபவோவெனின், சொல்லுபவாகலினன்றே அதன் வழிநூல் செய்த ஆசிரியர் செயிற்றியனார் சுவையுணர்வும் பொருளும் ஒன்றாக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றாக்கி வேறுவே றிலக்கணங்கூறி, அவற்றை

'எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப,"

என்றோதினாராயிற் றென்பது," என்னுந் தோல்காப்பிய மெய்ப்பாட்டியல் 2-ஞ் சூத்திரவுரையிற் பேராசிரியர் கூறிய நீண்டு நோக்குக. (கூ)

(ரு) ஒற்றுமை

233. நாடக சாலையு ணடிக்கப் புகுந்தோ
னெடுத்துக் கொண்ட பாத்திரந் தன்னிற்
றான்வே றென்னுந் தனிநினை வின்றி
"அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி" யியைந்திடு முடையு
மொன்றி யிலங்குவ தொற்றுமை யாகும்.

நாடகம் சாலையுள் நடிக்க புகுந்தோன் - நாடகசாலையரங்கின்கண் நடிப்பதற்குப் புகுந்த வொருவன், எடுத்து கொண்டபாத்திரம் தன்னில் - நடிப்பதற்கு மேற்கொண்ட நாடகபாத்திரந் தன்னொடு, தான் வேறு என்னும் தனி நினைவு இன்றி - தான் வேறுவன் என்னும் தனிப்பட்ட எண்ணம் இல்லாமல், அவனே தானே ஆகிய அ நெறி - அந்நாடக பாத்திரமே தானாகப் பாவித்த அவ்வழியானே, ஏகனாகி - ஒருமையுற்றவனாகி, இயைந்திடும் உடையும் ஒன்றி - பொருத்தமான உடையும் வாய்ந்து, இலங்குவது - விளங்குவது, ஒற்றுமை ஆகும் - நடிப்பியல்பிற் கூறப்படும் ஒற்றுமை என்பதாகும்.

குறிப்பு:—
"அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி"
என்பது, சிவஞானபோதப் பத்தாஞ் சூத்திரப் பகுதி; இஃது ஈண்டைச் சந்தர்ப்பத்துக்கேற்ற பொருடந்து அமையப் பொன்னேபோற்போற்றி மேற்கோளா யெடுத்தாளப்பட்ட நயம் உய்த்து நோக்கற்பாலது. ஆகி ஒன்றி இலங்குவது ஆகும் எனக் கூட்டி வினைமுடிவு செய்க. (௧0)

சுவைநிலைக்களன்

234. கதையின் றலைவனும் பாத்திரத் தலைவனும்
பின்னவ னடிப்புஞ் சுவைநிலைக் களனல
நடிக்குந் தலைவ னயமினி துணர்ந்து
காணுநன் போலக் கனியு முளமெனி
லவனே நிலைக்கள னாகு மென்ப.

கதையின் தலைவனும் - நாடகக் கதைக்குத் தலைவனும், பாத்திரம் தலைவனும் - நாடக பாத்திரங்கட்குட் சிறந்து விளங்கும் தலைவனும், பின்னவன் நடிப்பும் - நாடகத் தலைவனது நடிக்குந் தொழிலும், சுவை நிலைக்களன் அல - சுவை நிலைக்களனாகக் கருதப்படா; நடிக்கும் தலைவன் - நாடகத் தலைவனாக நடிக்கப் புகுந்தோன், நயம் இனிது உணர்ந்து - நடிக்குமியல்பின் நற்பண்பினைச் செவ்விதின் அறிந்து, காணுநன் போல - அந் நற்பண்பினைக் கண்டு மகிழுஞ் சுவையினுள்ளான்போல, கனியும் உளம் எனில் - சுவைக்கண் ஈடுபட்டு மனமிளகுவானென்றால், அவனே நிலைக்களன் ஆகும் என்ப-அவனே சுவைநிலைக்களனாவான் என்று அறிஞர் கூறுவர்.

குறிப்பு:—இராமாயணத்தின் கதைத் தலைவன் இராமபிரான்; சுந்தர காண்டச் செய்தி கூறும் 'மாருதி விஜயம்' என்னும் நாடகத்தலைவன் ஹநுமான். சூர்ப்பணகை என்னும் பிரகசனத்தில் இராமபிரான் கதைத் தலைவனாகவும் சீதாபிராட்டி தலைவியாகவும் அமைந்திருப்பினும் சூர்ப்பணகை நாடகபாத்திரத் தலைவியாக வருதல் காண்க. சுவை நிலைக்களன்: சுவை நிலை பெற்றிருக்கும் இடம் என்பது பொருளாம். நடிக்குந் தலைவன்: தலைவனாக நடிக்கப் புகுந்தோன். காணுநன்: நாடகங் காண்போன். கனிதல்: ஈண்டுச் சுவை க்கு ஈடுபடுதல். (௧௧)

(ச) அவிநயம்

235. எடுத்த தன்மைக் கியைந்த பாவக
மடுத்துக் காட்டுத லவிநய மெனலே.

எடுத்த தன்மைக்கு - சுவைக்கட்டோன்றும் உள்ளக் குறிப்பினை வெளியிட்டுக் காட்டும் பண்பிற்கு, இயைந்த பாவகம் - பொருத்தமான பாவகத்தினை, அடுத்து காட்டுதல் - பொருந்துமாறு காண்பித்தல், அவிநயம் எனல் - அவிநயமென்று கூறுக.

குறிப்பு:—ஏகாரம், ஈற்றசை. சுவைக்கேற்ற குறிப்பினை வெளியிட்டுக் காட்டும் முக்காரணங்களின் தொழிலினை சண்டி அவிநயமென்றனர். அவிநயம், பாவகம் இவை யொருபொருட் கிளவிகள். (கஉ)

அவிநயவகை

236. அஃதே,

ஆங்கிகம் வாசிக மாகா ரியத்தொடுஞ்
சாத்து விகமெனச் சாற்றுநால் வகைத்தாம்.

அஃதே-அவ்வவிநயம், ஆங்கிகம்—, வாசிகம்—, ஆகாரியத்தொடும் - ஆகாரியம் என்பதனோடும் --, சாத்துவிகம்—, எனசாற்றும் நான்கு வகைத்து ஆம் - என்று சொல்லப்படும் நான்கு வகையினையுடையதாம்.

குறிப்பு:—இந்நான்கு வகைகளின் இலக்கணமும் பெயர்க்காரணமும் கீழ்வருஞ் சூத்திரங்களான் விளக்குவர். ஏகாரம்: ஈற்றசை. (கங)

ஆங்கிகம்

237. உடலைப் பற்றி யுறுமவி நயங்க
ளாங்கிக மென்ன வறையப் படுமே.

உடலை பற்றி உறும் அவிநயங்கள் - உடம்பினைப்பற்றி யுண்டாகும் அவிநயங்கள், ஆங்கிகம் என்ன அறையப்படும் - ஆங்கிகம் என்று சொல்லப்படும்.

குறிப்பு:—அங்க ஸம்பந்தம் நிகழ்தலின் ஆங்கிகம் எனப்பட்டது. அங்கம் - தேகம். உடற்றொழிலானுண்டாம் அவிநயங்கட்கு ஆங்கிகம் என்பது பெயராம் என்றவாறு. (கச)

வாசிகம்

238. ஒலிவேறு பாட்டினுங் குரல்வேறு பாட்டினு
மொழிவேறு பாட்டினும் விளையு மவிநயம்
வாசிக மென்ன வழங்க லாகும்.

ஒலி வேறுபாட்டினும் - வாயாற் செய்யும் சப்த வேற்றுமையானும், குரல் வேறு பாட்டினும் - கண்டத்தொனியின் வேறு பாட்டானும், மொழி வேறு பாட்டினும் - வார்த்தைகளின் உச்சரிப்பு வேறு பாட்டானும், விளையும் அவிநயம் - உண்டாம் அவிநயங்கள், வாசிகம் என்ன வழங்கல் ஆகும் - வாசிகம் என்னும் வகையனவாகக் கூறப்படுவனவாம்.

குறிப்பு:—சண்டிக்கூறிய மூவகை வேறுபாடும் வாக்கின்கண் நிகழ்வன வாதலின் வாசிகமெனப்பட்டன. வாக்கு ஸம்பந்தமானது வாசிகம். எடுத்தும் படுத்தும் ஒலித்தல் முதலாயின ஒலிவேறுபாடாம்; குரல் கம்முதல் முதலாயின குரல் வேறுபாடாம்; தழுதழுத்துப் பேசுதல் முதலாயின மொழி வேறுபாடாம். (கரு)

ஆகாரியம்

239. உடைவேற் றுமையி னொங்கு மவிநய
நடைபெறு மாகா ரியமென நவில்ப.

உடை வேற்றுமையின் ஒங்கும் அவிநயம் - உடுக்கும் உடையின் வேறுபாட்டானே மிக்குத் தோன்றும் அவிநயம், நடைபெறும் ஆகாரியம் என நவில்ப - அவிநயவகையுள் ஒன்று வழங்கலுறும் ஆகாரியம் என்று கூறுப.

குறிப்பு:—'நடைபெறும்' என்று விசேடித்தமையானே இவ் வுடை வேறுபாட்டான் உண்டாகும் அவிநயம் மற்றைய ஆங்கிகம் முதலான வற்றைச் சிறப்பிக்கும் என்பது பெறப்பட்டது. இஃது கைவினைத் தொழிற் பாற் பட்டமையின் ஆகாரியம் எனப்பட்டது. (கசு)

சாத்துவிகம்

240. மனவேறு பாட்டின் வழங்கு மவிநயஞ்
சாத்து விகமெனப் போற்றினர் கொளலே.

மனம் வேறுபாட்டின் - மனத்தின் வேறுபாட்டானே, வழங்கும் அவிநயம்-உண்டாகும் அவிநயம், சாத்துவிகம் என்ன போற்றினர் கொளல்-ஸாத்துவிகம் என்னும் அவிநயவகை யென்று போற்றிக் கொள்க.

குறிப்பு:—ஸத்துவத்தாற் பெறப்படுதலின் ஸாத்விகம் எனப்பட்டது. மனவேறுபாட்டான் நிகழ்வன: கன்றுதல், கலங்குதல், விரும்பல், வெறுத்தல், வெகுளல், மகிழ்தல், முனிவு, செருக்கு, உணர்தல், உணரா நிலைமை முதலிய பலவாம். இம் மனவேறுபாடுகள் உடம்பின்கட் டோன்றுங்கால் மிகத் தோற்றும் முகத்தின்கண்; முகத்தின்மிகத் தோற்றுங் கண்ணின்கண்; கண்ணின் மிகத்தோற்றுங் கண்ணின் கடையகத்தென் றுணர்க. (கஎ)

241. இந்நால் வகைய வவிநய மெல்லாஞ்
சுவைதொறும் பயின்று தோன்று மென்க.

இ நான்கு வகைய அவிநயம் எல்லாம்-ஈண்டுக் கூறிய நான்கு வகைப் பட்ட அவிநயம் யாவும், சுவை தொறும் பயின்று தோன்றும் என்க - ஒன்பான் வகைப்பட்ட சுவைகள் தோறும் பொருந்தித் தோன்றும் என்று கூறுக.

குறிப்பு:—மேற்கூறிய ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், ஸாத்விகம் என்னும் நால்வகை அவிநயங்களும் வடநூலார் கூறிய பாகுபாடாம். சுவை வகைகளைப் பொதுவியல்பு பத்தொன்பதாஞ் சூத்திரத்தா னுணர்க. (கஅ)

சுவையவிநயம்

242. ஒன்பான் சுவையினு மோங்கவி நயம்பல
வன்பான் மேற்கோ ளாவெடுத் தறைவாம்

ஒன்பான் சுவையினும் ஒங்கு அவிநயம் பல - ஒன்பது வகைச் சுவைகளினும் மிக்குத் தோன்றும் பல அவிநயங்களையும், அன்பான்

மேற்கோள் ஆ எடுத்து அறைவாம் - பண்டையாசிரியர் தஞ் சூத்திரமுகமாக மேற்கோளாக எடுத்து அன்பொடு கூறுவாம்.

குறிப்பு:—ஒன்பான் சுவை: உவகை, பெருமிதம், நகை, சமநிலை, வெகுளி, வியப்பு, இழிப்பு, அவலம், அச்சம் என்பனவாம். இச்சுவைக ளின் இலக்கணம் பொதுவியல்பில் விரித்துக் கூறப்பட்டுளது; ஆண்டு நோக் குக. ஆசிரியர் இவற்றிற்குரிய அவிநயங்களைப் பின்னர் வருஞ் சூத்திரங்க ளின் நிரலே யெடுத்துக் கூறுவர். சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோளான சுவை அவிநயச் சூத்திரங்களை இவ்வாசிரியர் பொன்னே போற் போற்றிக் கூறுவராதலின் 'அன்பான் மேற்கோ ளாவெடுத் தறை வாம்' என்றனர். அன்பான்: அப்பண்டையோர் சூத்திரங்களின் மாட் டுள்ள அன்பு பற்றி என்றவாறு. (கக)

உவகையவிநயம்

243. உவகைச் சுவையி னவிநய முரைப்பின்
"தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங்
காரிகை கலந்தக டைக்கணுங் கவின்பெறு
முறுவன் மூரற் சிறுநில வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே."

உவகை சுவையின் அவிநயம் உரைப்பின் - உவகைச் சுவையினது அவிநயத்தைக் கூறுமிடத்து, தூ உள் உறுத்த வடிவும் தொழிலும் - கள் ளங்கபடமற்ற வடிவமும் செய்கையும், காரிகை கலந்த கடைக்கணும் - அழகு பொருந்திய கடைக்கண்ணும், கவின் பெறும் முறுவல் மூரல் சிறுமை நிலவு அரும்பலும் - அழகுபொருந்திய புன்னகையின் சிறிய நிலவுபோலு மொளி தோன்றலும், மலர்ந்த முகனும் - மலர்ச்சி பொருந்திய முகமும், மன் இரந்த கிளவியும் - பெரிதும் ஒன்றை இரப்பான் மொழிவதுபோலும் இனிய மொழி யும், கலந்தன பிறவும் - இவற்றிற்குப் பொருத்தமாகக் கலந்த பிற அவிநயங் களும், கடைப்பிடித்தனர் - அவ்வுவகைச் சுவையின் அவிநயங்களென உறு தியாகக் கொண்டனர் நாடக விலக்கண வாசிரியர்.

குறிப்பு:—நாடக விலக்கண வாசிரியர் என்பது தோன்றா எழுவாய். தூ: வெண்மை, பரிசுத்தம்; ஈண்டுக் களங்க மின்மைமே னின்றது. தூவுள் ளுறுத்த வடிவாவது, நெஞ்சத்திற் களங்க மின்மையைக் காட்டும் வடிவமாம்; உள் - ஈண்டு நெஞ்சினைக் குறித்தது; ஆகுபெயர். 'தூவுள்ளுறுத்த' என்பதைத் 'தொழி'லோடுங் கூட்டுக. முறுவல் மூரல்: ஒருபொருட் பன்மொழி. முகன்: முகம்; போலி. மன் இரந்த என மாற்றுக; மன் - இடைச்சொல், மிகுதிப் பொருளைக் காட்டிற்று. காரிகை கலந்த கடைக்கண்: காரிகை என்னும் அழகு கண்ணிற்கே சிறந்ததுபோலும்.

"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது." (திருக்குறள் 1272)
"கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு." (திருக்குறள் 571)

என்னுங் குறள்களை நோக்குக. 'கலந்தன பிறவும்' என்றமையான், பிறரைத் தழுவிக்கோடல், யாவர்மாட்டும் அன்பு பாராட்டுதல் முதலியனவுங் கொள்க. ஏகாரம்: ஈற்றசை. (௨௦)

பெருமிதத்தவிநயம்

244. பெருமிதத் தவிநயம் பேசுங் காலை
"முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறு
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலுந்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவு
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

பெருமிதத்து அவிநயம் பேசும் காலை - பெருமிதம் என்னும் வீரச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறுமிடத்து, முரிந்த புருவமும் - வளைந்த புருவமும், சிவந்த கண்ணும் - சிவப்பேறிய கண்ணும், பிடித்த வாளும் - கையிற் பற்றியவாளும், கடித்த எயிறும் - நெறுநெறென்று கடித்த பல்லும், மடித்த உதடும் - கௌவிய உதடும், சுருட்டிய நுதலும் - புருவம் மேலேறுதலானும் ஒன்றையொன்று நெருங்குவதானும் தோலின் சுருக்கம் விழுந்த நெற்றியும், திண்மை என உற்ற சொல்லும் - திட்பமமைந்த சொல்லும், பகைவரை எண்ணல் செல்லா இகழ்ச்சியும் - பகைவரைப் பொருட்படுத்தா இகழ்ச்சியும், பிறவும் - இவற்றிற்கேற்ற பிற அவிநயங்களும், நண்ணும் என்ப நன்கு உணர்ந்தோர் - அவ்வீரச் சுவை அவிநயமாகப் பொருந்தும் என்று கூறுவர் நாடக விலக்கணத்தை நன்றாக அறிந்தோர்.

குறிப்பு:—பிடித்தவாள், கடித்த எயிறு என்று கூறினரேனும் வாள் பிடித்தலும் எயிறு கடித்தலும் என்பதே பொருளாம். இகழ்ச்சி - இகழ்தல். பிறவும் என்றமையானே ஏக்கழுத்தம், இறுமாந்த நடை முதலியனவுங் கொள்க. (௨௧)

நகையவிநயம்

245. நகைச்சுவை அவிநய நவிலு மிடத்து
"மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது சுரிந்த கவுளது
விட்டுமுரி புருவமொடு வில்லாவுறுப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன ரென்ப."

நகை சுவை அவிநயம் நவிலும் இடத்து - நகைச்சுவை அவிநயம் இத்தன்மைத்தெனப் பேசுமிடத்து, மிகைபடுநகையது - அளவுகடந்த சிரிப்புடையது, பிறர் நகை உடையது - பிறர் பார்த்து நகைக்குந் தன்மை வாய்ந்தது, கோட்டிய முகத்தது - கோணிய முகத்தினையுடையது, சுரிந்த கவுளது - சுருங்கிய கன்னமுடையது, விட்டு முரி புருவமொடு விலாஉறப்பு உடையது - இடைவிட்டு வளைந்த புருவத்தோடு அங்ஙனமான விலா உறப்பினையுமுடையது, செய்வது பிறிது ஆய் வேறு சேதிப்பது - செய்யுந் தொழில் வேறுபட்டதாகி அதனை வேறாகக் கெடுப்பது, என்று ஐயம் இல் புலவர் ஆய்ந்தனர் என்ப - என்று நாடக விலக்கணத்தை ஐயமற உணர்ந்த அறிஞர் ஆராய்ந்து கூறினர் என்று கூறுப.

குறிப்பு:—மிகைபடுநகை - பெருநகை. கோடுதல் - கோணுதல். கவுள் - கன்னம். 'விட்டுமுரி' தலை விலாவுறப்பிற்கும் கூட்டுக. செய்வது பிறிதாய் வேறு சேதிப்பது: செய்யுந்தொழில் இடையிடு பட்டுவேறுவதோடு அமையாது முன்னர்ச் செய்ததனையும் சிதைத்தலாம். (உஉ)

சமநிலையவிநயம்

246. சமநிலை யவிநயஞ் சாற்றப் புக்குழிக்
"கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு
மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையுங்
குறிப்பின் றாகலுந் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையு
மளத்தற் கருமையு மன்பொடு புணர்தலுங்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்."

சமநிலை அவிநயம் சாற்ற புக்குழி - சமநிலைச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறப்புகுமிடத்து, கோட்பாடு அறியா கொள்கையும் - பிறருள்ளத்தின் கோட்பாட்டினை அறிய விரும்பாத் கொள்கையும், மாட்சியும் - பெருமையும், அறம் தரும் நெஞ்சமும் - தருமம் நிலைபெற்ற மனமும், ஆறிய விழியும் - சாந்தம் பொருந்திய கண்களும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும் - உண்மைக்குமாறான அறிவு நீங்கப்பெற்ற நிலைமையும், குறிப்பு இன்று ஆகலும் - ஒன்றினையடைய விரும்புங் குறிப்பு இல்லாதிருத்தலும், துணுக்கம் இல்லா தகை மிக உடைமையும் - அச்சம் நீங்கப்பெற்றபெருமை மிகுதியும் உளதாதலும், தண் என உடைமையும் - குளிர்ந்த பண்புடைமையும், அளத்தற்கு அருமையும் - பிறரான் அளவிட்டு மதித்தற்கொண்ணா அருமைப்பாடும், அன்பொடு புணர்தலும் - பிறர்மாட்டு உள்ளன்பொடு கலத்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்கும் - சலனம் பொருந்திய பார்வையும், கதிர்ப்பும் - ஒளியுடைமையும்; விலக்கார் என்பவேண்டும் மொழி புலவர் - உள்

ளக் குறிப்பினை அறிய விரும்பும் வாக்குவல்லபமுடைய அறிஞர் இவற்றைச் சமநிலையவிநயங்களாக விலக்காமற் கொள்வர் என்றுகூறுவர்.

குறிப்பு:—கோட்பாடறியாக்கொள்கை: பிறர்தங்கொள்கை எதுவாயிருப்பினும் அதனை யறிதல் வேண்டாவென்னுங் கோட்பாடு. ஆறிய விழி - கோபம் முதலியன நீங்கினவிழி, எனவே சாந்தங் குடிகொண்ட விழி. ஆறிய விழிக்கு எதிர்மறை சீறிய விழியாம். காட்சி: அறிவு; பிறழ்ந்த காட்சி: உண்மைக்குமாறான காட்சி. சமநிலையுடையான் வேண்டுதல் வேண்டாமையிலானாதலின் ஒன்றன் கண்ணுங் குறிப்பிலனாவான். துணுக்கம்: அச்சம். தண்ணெனவுடைமை:

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்,
செந்தண்மை பூண்டொழுக லான்,"

என்னுங் குறளானுணர்க. ஒன்றன்கண்ணுங் குறிப்பிலனாகவே "கலக்கமொடு புணர்ந்த நோக்கும்' பொருந்துவதாயிற்று. மொழிப்புலவர்: மொழிவன்மையுடையார். 'விலக்கார்' எனவே வேண்டுவரென்பதாயிற்று. (உ௩)

வெகுளியவிநயம்

247. வெகுளி யவிநயம் விளம்புங் காலைப்
பிசைந்த கையுங் குலைந்த மெய்யு
மடித்த வாயுங் கடித்த விதழுஞ்
சிவந்த கண்ணும் வெய்ய வுயிர்ப்பு
மிக்க வேர்வு மொக்க வுடைத்தாம்.

வெகுளி அவிநயம் விளம்பும் காலை - கோபச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறுமிடத்து, பிசைந்த கையும் - கைகளைப் பிசைதலும், குலைந்த மெய்யும் - மெய் குலைதலும், மடித்த வாயும் - வாய்மடித்தலும், கடித்த இதழும் - இதழ்கௌவுதலும், சிவந்த கண்ணும் - கண் சிவத்தலும், வெய்ய உயிர்ப்பும் - வெப்பமாகப் பெருமூச்சு விடுதலும், மிக்க வேர்வும் - மிகுதியாக வேர்த்தலும், ஒக்க உடைத்தாம் - அவிநயங்களாகப் பொருந்துவதாம்.

குறிப்பு:—வெகுளி, கோபம், உருத்திரம் ஒரு பொருட்கிளவிகள். இச்சூத்திரம்,

"கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்த போது"

என்ற தண்டியலங்கார உருத்திரச்சுவை யுதாரணச்செய்யுளைப் பின்பற்றி யெழுந்தது. (உ௪)

வியப்பவிநயம்

248. வியப்பி னவிநயம் மேவரக் கூறிற்
"சொற்சோர் வுடையது சோர்ந்த கையது

மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய திமைப்பும் விழிப்புமிக வாதென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப."

வியப்பின் அபிநயம் மேவக் கூறில் - வியப்புச் சுவையின் அபிநயத்தைப் பொருந்தக் கூறுமிடத்து அது, சொல்சோர்வு உடையது - சோர்வுற்றுச் சொல்லும் சொல்லினை உடையது, சோர்ந்த கையது - சோர்ந்த ஒழுக்கத்தினையுடையது, மெய் மயிர் குளிர்ப்பது உடம்பின் மயிர்க் கூச்செறிவது, விய தகவு உடையது-பிறரானே வியக்குந்தன்மையுடையது, எய்தியது இமைப்பும் விழிப்பும் இகவாது - வியப்பிற்கு ஏதுவாக எய்திய பொருளை நோக்குமிடத்து கண் இமைத்தலையும் விழித்தலையும் நீங்காதிருப்பது, என்று ஐயம் இல் புலவர் அறைந்தனர் என்ப - என்று நாடக விலக்கணத்தைச்சந்தேகமற வுணர்ந்த அறிஞர் கூறுவரென்று சாற்றுவர்.

குறிப்பு:—வியப்பு, அற்புதம், ஆச்சரியம் என்பன ஒரு பொருட்கிளவிகள். சோர்ந்த கையது: கை சோர்ந்தது என்றுமாம்; இனிச் சோருந்தகையது எனக்கொண்டு சோருந்தன்மையினையுடையது எனவுமாம்; இப்பொருட்குச் 'சோரும்' என்பது 'சோர்ம்' எனச் செய்யும் என்னும் வாய்பாட்டெச்சவும்மை யுகரங்கெட்டு நின்றதாகக் கொள்க. மெய்ம்மயிர்குளிர்த்தல் - உடல் புளகித்தல். இனி, இமைப்பும் எய்தியது விழிப்பும் இகவாது என்று மாற்றிப் பொருள்கோடலுமாம். 'எய்தியதிமைத்தலும் விழித்தலுமிகவாத' தென்ற பாடமுமுண்டு. (உரு)

இழிப்பவிநயம்

249. "இழிப்பி னவிநய மியம்புங் காலை
யிடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலு
மொடுங்கிய முகமு முகுற்றுக் காலுஞ்
சேர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையு
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே."

இழிப்பின் அவிநயம் இயம்பும் காலை-இழிப்புச் சுவையின் அவிநயங்களைக் கூறுமிடத்து அவை, இடுங்கிய கண்ணும் - சுருங்கி நெருங்கிய கண்களும், எயிறு புறம் போதலும் - பற்கள் வெளியே தோன்றுதலும், ஒடுங்கிய முகமும்-கூம்பிய முகமும், உகுற்று காலும் - தொழில் புரியாத கால்களும், சோர்ந்த யாக்கையும் - சோர்வடைந்த மெய்யும், சொல் நிரம்பாமையும் - சொற் குழறலும், நேர்ந்தன என்ப - அவிநயங்களாகப் பொருந்தின என்று கூறுவர், நெறி அறிந்தோர் - நாடகவிலக்கண நெறியினை யுணர்ந்தோர்.

குறிப்பு:—இடுகுதல் - ஒடுங்குதல், சுருங்குதல். இழிப்பு, இளிவரல், அருவருப்பு, பீபத்ஸம் என்பன ஒரு பொருட் சொற்கள். (உசு)

அவலத்தவிநயம்

250. "அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லு
நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும்
பொறையின் றாகலும் புணர்த்தினர் புலவர்."

அவலத்து அவிநயம் அறிவர கிளப்பில் - சோகரஸமாகிய அவலச் சுவையின் அவிநயத்தை அறியுமாறு விளங்கக் கூறுமிடத்து, கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும் - மனக்கவலையோடு சேர்ந்த கண்ணீர்ப் பெருக்கமும், வாடிய நீர்மையும் - வாட்டமுற்ற தன்மையும், வருந்திய செலவும் - வருத்தமுற்ற நடையும், பீடு அழி இடும்பையும் - பெருமையை அழிக்குந் துன்பமும், பிதற்றிய சொல்லும் - அழித்தழித்துப் பேசும் பேச்சும், நிறைகை அழிதலும் - நிறை கெடுதலும், நீர்மை இல் கிளவி யும் - பண்மொழியும், பொறை இன்று ஆகலும் - பொறுமை கெடுதலும், புணர்த்தினர் புலவர் - அறிவுடையார் அவலச் சுவையின் அவிநயங்களாகச் சேர்த்துக் கூறினர்.

குறிப்பு:—கண்ணீர் மாரி - மிகுந்த கண்ணீர்; உருவகம். பீடு அழியிடும்பை-பீடு அழிதற்குக் காரணமான இடும்பையுமாம். பிதற்றுதல் - பலகாற் பேசுதல்; குழறுதலுமாம். கைஅழிதல்: கை உபசர்க்கம். இனிக் 'கை' ஒழுக்கமெனக் கொண்டு, நிறையும் ஒழுக்கமுமழிதல் எனப்பொருள் கூறுதலுமாம். இப்பொருட்கு 'நிறை கை' உம்மைத்தொகை. பண்பில் மொழி - பொருத்தமற்ற மொழி. (உஎ)

அச்சவவிநயம்

251. "அச்ச வவிநய மாயுங் காலை
பொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுளனுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே."

அச்சம் அவிநயம் ஆயும் காலை - அச்சச்சுவையின் அவிநயத்தை ஆராயுமிடத்து, ஒடுங்கிய உடம்பும்—, நடுங்கிய நிலையும் - நடுக்கமுற்ற நிலைமையும், மலங்கிய கண்ணும் - கலக்கமுற்ற கண்களும், கலங்கிய உளனும் - கலக்கமடைந்த மனமும், கரந்துவரல் உடைமையும் - ஒளிந்து வருதலும், கை எதிர் மறுத்தலும் - கைகளான் எதிரில் மறுத்து விதிர்த்தலும், பரந்த நோக்கமும் - நாற்புறமும் பரவிய பார்வையும், இசை பண்பினவே - பொருந்திய அச்ச அவியங்களின் தன்மைகளாம்.

குறிப்பு:—உடம்பு ஒடுங்குதல் - உடம்பு குன்றுதல். அச்சம், பயானகம் ஒரு பொருட் சொற்கள். (உஅ)

252. இன்னும் விரிப்பிற் பன்னிய வவிநயம்
மெண்ணா றென்ன வெண்ணவும் படுமே.

இன்னும் விரிப்பில் - அவிநயங்களை இன்னும் விரித்துக் கூறப்புகின், பன்னிய அவிநயம் - பல வேறுவிதமாகச் சொல்லப்பட்ட அவிநயங்கள், எட்டு ஆறு என்ன எண்ணவும் படும் - நாற்பத்தெட்டு என்னும் எண்ணிக்கையுடையன என்று கருதவும்படும்.

குறிப்பு:—எண்ணவும்படும் என்ற எச்ச உம்மையானே அவிநயங்களை இருபத்து நான்காகப் பிரித்தாரும் உளர் என்பது பெறப்பட்டது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இருபத்து நான்கு அவிநயங் கூறியுள்ளார். இவ்வாசிரியர் நாற்பத்தெட்டாக விரித்தனர். (உசு)

அவிநயவிரி

253. அவைதாம்,

அகந்தை யுற்றோ னழற்பட் டோனழுக்
கறுப்போ னழுவோ னாலோ சிப்போ
னிரப்போ னிறந்தோ னின்ப மெய்தினோ
னுடன்ன் பட்டோ னுவந்தோ னெழுதுவோ
னைய முற்றோன் கண்ணோ வுற்றோன்
களித்தோன் கள்வன் கனவு காண்போன்
கொலைவினை செய்வோன் கொள்பொரு ளிழந்தோன்
சூஞ்சை யுற்றோ னஞ்சை யொறுப்போன்
றண்ட முற்றோன் றலைநோ வாளன்
றுதிப்போன் றுயில்வோன் றுயிலுணர்வோன்பொய்யன்
றெய்வ முற்றோ னனைந்தோ னைவோன்
பசித்தோன் பைத்தியக் காரன் காமுகன்
பொருவோன் வென்றோன் வெருவி யோடுநன்
பனிப்பட் டோன்மடி துனிப்பட் டோனெடும்
யோகி வீழ்ந்தோ னெள்ளிட முண்டோன்
விலைமக டூதுவன் வெட்க முற்றோன்
வெப்ப முற்றோன் வேட்டை யாடுநன்
கவினு னிவர்த மவிநய மாம்பிற.

அவைதாம் - மேற்சூத்திரத்தில் எண்ணாறென்னக் கூறிய அவிநயங்கள் தாம், அகந்தை உற்றோன் - செருக்குக்கொண்டவன், அழல் பட்டோன் - நெருப்பில் வீழ்ந்தோன், அழுக்கறுப்போன் - பொறாமை கொண்டவன், அழுவோன் —, ஆலோசிப்போன் —, இரப்போன் - யாசிப்போன், இறந்தோன் - செத்தோன், இன்பம் எய்தினோன் - சுகமடைந்தவன், உடன் பட்டோன் - இணங்கினோன், உவந்தோன் - மகிழ்ந்தோன், எழுதுவோன் —,

ஐயம் உற்றோன் - சந்தேகம் அடைந்தவன், கண் நோவு உற்றோன்—, களித்தோன் - கள்ளுண்டோன், கள்வன் - திருடன், கனவு காண்போன்—, கொலை வினை செய்வோன் - கொலைத்தொழில் புரிபவன், கொள் பொருள் இழந்தோன் - கையிலுள்ள பொருளை யிழந்தவன், ஞஞ்ஞை உற்றோன் - மயக்கமடைந்தோன், அஞ்ஞை - அறிவில்லாதவன், ஒறுப்போன் - தண்டிப்போன், தண்டம் உற்றோன் - தண்டிக்கப்பட்டோன், தலை நோவு ஆளன் - தலை நோயுற்றோன், துதிப்போன் - தோத்திரம் செய்வோன், துயில்வோன் - தூங்குபவன், துயில் உணர்வோன் - தூங்கி விழித்தெழுபவன், பொய்யன் - பொய்கூறுவோன், தெய்வம் உற்றோன் - தெய்வம் ஏறினோன், நனைந்தோன் - மழை பெய்யப்பட்டோன், நைவோன் - உடல் வருந்துபவன், பசித்தோன்—, பைத்தியக்காரன்—, காமுகன் - காமமுற்றோன், பொருவோன் - போர் செய்வோன், வென்றோன் - வெற்றியடைந்தோன், வெருவி ஓடுநன் - அஞ்சி யோடுபவன், பனிப்பட்டோன் - பனியில் நனைந்தோன், மடி - சோம்பலுற்றோன், துனிப்பட்டோன் - துன்பமுற்றோன், யோகி - யோகம் பயில்வோன், வீழ்ந்தோன் - மேலிருந்து கீழ்விழுந்தவன், ஒண்மைவிடம் உண்டோன் - படுவிஷமுண்டவன், விலை மகள் - பரத்தை, தூதுவன் - தூதன், வெட்கம் உற்றோன் - நாணம் உற்றவன், வெப்பம் உற்றோன் - வெம்மை அடைந்தவன், வேட்டை ஆடுநன் - வேட்டையாடுபவன், கவிஞன் - கவிபாடும்புலவன், இவர் தம் அவிநயம் ஆம் - என்ற இவர்கள்தம் அவிநயங்களாம்.

குறிப்பு:—உடன் 'ன்' பட்டோன் - ஒற்றளபெடை. ஞஞ்ஞை: மம்மர் நோய், மயக்கம். அஞ்ஞை - அறிவிலி. இன்பம் எய்தினோன் - புணர்ச்சியான் வரும் இன்பம் அநுபவித்தவன். தெய்வம் உற்றோன் - தெய்வ ஆவேச மடைந்தவன். பனிப்பட்டோன் - குளிரடைந்தோன் எனினுமாம்; சீதமுற்றோனுமிவனே. முன்னாசிரியர் வேறாகக் கூறிய சீதமுற்றோனவிநயத்தினைப் பனித்தலைப்பட்டோன் அவிநயத்தினும், வெயிற்றலைப்பட்டோன் அவிநயத்தினை வெப்ப முற்றோனவிநயத்தினும் இவ்வாசிரியர் அடக்கினர்; அவர் தனியாகக் கூறிய வெகுண்டோன் அவிநயம் வெகுளிச் சுவை அவிநயத்திலடங்குதலானும், அதனைச் சுவைவகை அவிநயத்துள் முன்னர்க் கூறிவிட்டமையானும் இவர் ஈண்டுக்கூறாராயினர். எனவே, முன்னோர் கூறிய இருபத்துநான்குவகை யவிநயத்துள் சீதமுற்றோன், வெயிற்றலைப்பட்டோன், வெகுண்டோன் இவர்தம் அவிநயம் நீங்கலாக இருபத்தொன்றனையும் மேற்கொண்டு புதியன புகுதலாக இருபத்தேழவிநயங்களையுடன் கூட்டி இவ்வாசிரியர் நாற்பத்தெட்டாக்கினர். 'பிற' என்ற மிகையானே ஈண்டுக் கூறப்பட்டனவேயன்றி, இவற்றின் வேறாய் வருவனவாகிய சோதிடஞ் சொல்வோன், வாதஞ்செய்வோன், வைத்தியம் வல்லோன், இரசவாதி, கழைக்கூத்தாடி, பாம்பாட்டி, சித்திரம் வரைவோன், இசைப்புலவோனாதியர்தம் அபிநயங்களும் ஈண்டடக்குக என்பதமைந்தது. அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக்

காட்டிய முன்னுசிரியர்தம் இருபத்து நான்குவகை அவிநய விலக்கண சூத்திரங்கள் ஈண்டறியற்பாலன. அவை பின்வருமாறு:—

வெகுண்டோனவிநயம்

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்புந்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலுங்
கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலு
மன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே."

ஐயமுற்றோனவிநயம்

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
வைய முற்றோ னவிநய முரைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீட்ழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலு
மறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே."

சோம்பினோனவிநயம்

"மடியி னவிநயம் வருக்குங் காலை
கொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு
மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலுங்
காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

களித்தோனவிநயம்

"களித்தோ னவிநயங் கழறுங் காலை
யொளித்தவை யொளியா னுரைத்த லின்மையுங்
கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலுங்
களிகைக் கவர்ந்த கடைக்கணூக் குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே."

உவந்தோனவிநயம்

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு
மினிதி னியன்ற வுள்ள முடைமையு
முனிவினைகன்ற முறுவன்கை யுடைமை
மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவு
மொருங்குட னமைந்த குறிப்பிற்றென்புரே.

அழுக்காறுடையோனவிநயம்

"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி
னிழுக்கொடு புணர்ந்த விசைப்பொரு ளுடைமையுங்
கூம்பிய வாயுங் கோடிய வுரையு
மோம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையு
மாரணங் காகிய வெகுளி யுடைமையுங்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையு
மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவரப்
பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

இன்பமுற்றோனவிநயம்

"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற்
றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையுந்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு
மயங்கி வந்த செலவுநனி யுடைமையு
மழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையு
மெழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையுங்
கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடைமையு
நலங்கெழு புலவர் நாடின ரென்ப."

தெய்வமுற்றோனவிநயம்

"தெய்வ முற்றோ னவிநயஞ் செப்பிற்
கைவிட் டெறிந்த கலக்க முடைமையு
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையுந்
துடித்த புருவமுந் துளங்கிய நிலையுஞ்
செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கு
மெய்து மென்ப வியல்புணர்ந் தோரே."

ஞஞ்ஞையுற்றோனவிநயம்

"ஞஞ்ஞை யுற்றோ னவிநய நாடிற்
பன்மென் றிறுகிய நாவழி வுடைமையு
நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க்
குரைப்போன் போல வுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவு
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்.

இஃதேமுறுமாக்க ளவிநயம்

உடன்பட்டோனவிநயம்

"சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின்
முந்தை யாயினு முணரா நிலைமையும்
பிடித்த கைம்மே லடைத்த கவினு
முடித்த லுறுத கரும நிலைமையுஞ்
சொல்லுவதை யாது முணரா நிலைமையும்
புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

உறங்கினோனவிநயம்

" துஞ்சா நின்றோ னவிநயந் துணியி
னெஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு
மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றிய
மலர்ந்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்."

துயிலுணர்ந்தோனவிநயம்

"இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பி
னொன்றிய குறுங்கொட் டாவியு முயிர்ப்புந்
தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பு
மோங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே."

செத்தோனவிநயம்

"செத்தோ னவிநயஞ் செப்புங் காலை
யத்தக வச்சமு மழிப்பு மாக்கலுங்
கடித்த நிரைப்பலின் வெடித்துப் பொடித்துப்
போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுப்பு
மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும்
வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலு
முண்மையிற் புலவ ருணர்ந்த வாறே."

மழைபெய்யப்பட்டோனவிநயம்

"மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கி
னிழிதக வுடைய் வியல்புகனி யுடைமையு
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்த்தலு
மொளிப்படு மன்னி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்று னெழுந்தலு முண்டே."

பனித்தலைப்பட்டோனவிநயம்

"பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி
னடுக்க முடைமையு நகைபடு நிலைமையுஞ்
சொற்றளர்ந் திசைத்தலு மற்றமி லவதியும்
போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும்
நீராம் விழியுஞ் சேறு முனிதலு
மின்னவை பிறவு மிசைந்தனர் கொளலே."

வெயிற்றலைப்பட்டோனவிநயம்

"உச்சிப் பொழுதின் வந்தோ னவிநய
மெச்ச மின்றி யியம்புங் காலைச்
சொரியா நின்ற பெருந்துய ருழந்து
தெரியா நின்ற வுடம்பெரி யென்னச்
சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும்
பயந்த தென்ப பண்புணர்ந் தோரே."

நாணமுற்றோனவிநயம்

"நாண முற்றோ னவிநய நாடி
னிறைஞ்சிய தலையு மறைந்த செய்கையும்
வாடிய முகமுங் கோடிய வுடம்புங்
கெட்ட வொளியுங் கீழ்க்க ணோக்கமு
மொட்டின ரென்ப வுணர்ந்திசி னோரே."

வருத்தமுற்றோனவிநயம்

"வருத்த முற்றோ னவிநயம் வகுப்பிற்
பொருத்த மில்லாப் புன்க ணுடைமையுஞ்
சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியுங்
கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயாவும்
வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பு
முற்ற தென்ப வுணர்ந்திசி னோரே."

கண்ணோவுற்றோனவிநயம்

"கண்ணோ வுற்றோ னவிநயங் காட்டி
னண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும்
வளைந்த புருவத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கில் விழிதரு மச்சமுந்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே."

தலைநோவுற்றோனவிநயம்

"தலைநோ வுற்றோ னவிநயஞ் சாற்றி
னிலைமை யின்றித் தலையாட் டுடைமையுங்

கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு
பெருவிர லிடுக்கிய நுதலும் வருந்தி
யொடுங்கிய கண்ணொடு பிறவுந்
திருந்து மென்ப செந்நெறிப் புலவர்."

அழற்றிறம்பட்டோனவிநயம்

"அழற்றிறம் பட்டோ னவிநய முரைப்பி
னிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பு
மழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலு
நிழலு நீருஞ் சேறு முவத்தலும்
பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலு
நுனிவிர லீர மருநெறி யாக்கலும்
புக்க துன்பொடு புலர்ந்த யாக்கையுந்
தொக்க தென்ப துணிவறிந் தோரே."

சீதமுற்றோனவிநயம்

"சீத முற்றோ னவிநயஞ் செப்பி
னோதிய பருவர லுள்ளமோ டுழத்தலு
மீர மாகிய போர்வை யுறுத்தலு
மார வெயிலுழந் தழலும் வேண்டலு
முரசியு முரன்று முயிர்த்து முரைத்தலுந்
தக்கன பிறவுஞ் சாற்றினர் புலவர்."

வெப்பமுற்றோனவிநயம்

"வெப்பி னவிநயம் விரிக்குங் காலைத்
தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமு
மெரியி னன்ன வெம்மையோ டியைவும்
வெருவரு மியக்கமும் வெம்பிய விழியும்
நீருண் வேட்கையு நிரம்பா வலியு
மோருங் காலை யுணர்ந்தனர் கொளலே."

நஞ்சுண்டோனவிநயம்

"கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயிற் பனிநிரை கூம்பலுந்
தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோ
ரின்சொ லியம்புவான் போலியம் பாமையும்
நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப."

ஈண்டுக் கூறிய இருபத்து நான்கு வகைக்குஞ் சொல்லிய அவிநயங்களேயன்றி வேறு அவிநயங்களும் வருவன வுளவெனில் அவற்றையுஞ் சேர்க்கவேண்டிய இடங்களிற் றக்கவாறறிந்து கூட்டிக் கொள்ளுதல் அமைவுடைத்தாம்.

"சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற்
புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப,"

என்பது புறனடையாம்.

இனி இவ்வாசிரியர் கூறிய நாற்பத்தெட்டு வகை அவிநயவிரியுள், மேற் பண்டையாசிரியர் கூற்றுயெடுத்தோதிய அவிநய விலக்கணங்களுள் அடங்கும் இருபத்தொரு வகையும் நீங்க, ஏனைய இருபத்தேழு வகைக்கும் உரிய அவிநயங்களைப் பொருந்துமாற்று னறிந்து கொள்க. (௩0)

254. இவ்விவ ரவிநய மவ்வப் போழ்தி
னடிக்குந ரினிதி னெடுத்துக் காட்டுப.

இ இவர் அவிநயம் - ஈண்டு மேற்சூத்திரத்திற்கூறிய நாற்பத்தெண் மர்தம் அவிநயங்களை, நடிக்குநர் - நாடக பாத்திரங்களை மேற்கொண்டு நடிப்பவர்கள், அ அ போழ்தின்- அந்த அந்தச் சமயங்களில், இனிதின் - ஏற்றவாறு செவ்விதாக, எடுத்துக் காட்டுப - எடுத்துக் காட்டுவர்.

குறிப்பு:—இந்நாற்பத்தெண்வகை யொவ்வொன்றற்கும்உள்ள அவிநயங்கள் யாவற்றையும் முற்றக்கூறி முடியு மிலக்கணங் கடைபோகாதாதலின் நடிக்கும் வல்லபமுடையார் அமயத்துக்கேற்றவாறு செவ்விதின் எடுத்துக் காட்டும் அவிநயங்களே இலக்கணமாக அமைவனவாதலின் ஆசிரியர் இங் ஙனம்கூறினர். (௩க)

255. இன்னிதழ் சுவைத்த லிணைவிழைச் சோடு
மெண்ணெ யாட்டுமற் றிடக்க ரெல்லா
மெடுத்துக் காட்டும் வழக்கா றில்லை.

இனிமை இதழ் சுவைத்தல் - அதரபானஞ் செய்தல், இணை விழைச்சு - சம்போகஞ் செய்தல், எண்ணெய் ஆட்டு - எண்ணெய் தேய்த்து முழுகுதல், மற்று இடக்கர் எல்லாம் - இவைபோன்றபிற இடக்கரான வற்றை யெல்லாம் எடுத்து காட்டும் வழக்காறு இல்லை - அரங்கின்கண் அவிநயங்களாக எடுத்துக் காட்டும் வழக்கம் இல்லை.

குறிப்பு:—இவை இடக்கர் ஆனவையாதலின் அறிவுடையார் காட்டல் அடாதென வொதுக்கினர். பிற்காலத்தினர் நாடக மேடையில் தாராசசாங்கம் முதலிய நாடக நடிப்புழி இதழ் சுவைத்தலும் எண்ணெ யாட்டுங் காட்டுவது நிகழினும் அஃது மரபறியார் செய்கை என்பது கருதியே ஆசிரியர் 'வழக்காறில்லை' என்றனர். (௩உ)

256. "கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரு
முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே."

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் - கண்ணனுஞ் செவியானும் செவ்விதின் அறியும், உணர்வு உடை மாந்தர்க்கு அல்லது - அறிவுடைய மாந்தருக்கன்றி, தெரியின் - ஆராயுமிடத்து, நன்மை நயம்

பொருள் கோள் எண் அருங்குரைத்து - மெய்ப்பாட்டுப்பொருள் கோடல் எண்ணுதற்கு அருமையுடைத்து.

குறிப்பு:—இது மேற்கோட் சூத்திரம்; தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் புறனடைச் சூத்திரமாம். திண்ணிதின் உணர்தல் - யாப்புறவறிதல். மற்று மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணானுஞ் செவியானு முணர்தலென்ப தென்னையெனின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம் பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலு முடைமையின் அவை கண்ணானுஞ் செவியானு முணர்ந்து கோடல் அவ்வத்துறைபோயினரது ஆற்றலென்பது கருத்து. சத்துவம் அவிநயம் என்னுமிவற்றைக் கண்ணானுஞ் செவியானுந் திண்ணிதினுணரும் வன்மை யுடையார்க்குக் குறிப்பும் மெய்ப்பாடும் இனிது விளங்கும் என்றதனுல் அவற்றை யுணர்தற்கு இஃது கருவி கூறியதாம். அருங்குரைத்து: அரிது; 'குரை' என்பது அசைநிலை யிடைச்சொல், 'அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே' (புறம். 5) என்ற இடத்துப் போல. (௩௩)

(ரு) நிலை

257. நிலையெனப் படுவது நிகழ்த்துங் காலைப்
பலதிற மாகிய பாஅத் திரங்களின்
வினைமுறை யென்ப விளங்கிய காட்சிய
ரவிநய நிலையென் றறைநரு முளரே.

நிலை எனப்படுவது நிகழ்த்தும் காலை - நிலையென்று சொல்லப்படுவது இன்னதென்றுசொல்லுமிடத்து, பல திறம் ஆகிய - பலவகைப்பட்ட, பாஅத்திரங்களின் - நாடகபாத்திரங்களின், வினை முறை என்ப - தொழிலின் முறைமை என்று கூறுவர், விளங்கிய - விளக்கமுற்ற அறிவினையுடையார்; அவிநயம் நிலை என்று அறைநரும் உளர் - இதனை அவிநயநிலை என்று கூறுவாரும் உண்டு.

குறிப்பு:—பாஅத்திரங்கள் - செய்யுளிசை யளபெடை. நிலை: இதனை யாங்கிலத்தில் 'Posture' என்று கூறுப. (௩௪)

258. அதுவே,
நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தல்
வருதல் போதலென் றிருமூ வகைத்தாம்.

அதுவே - அந்நிலைதான், நிற்றல்—, இயங்கல் - சஞ்சரித்தல், இருத்தல் - உட்கார்ந்திருத்தல், கிடத்தல் - படுத்துக் கிடத்தல், வருதல்-போதல்—, என்று இரண்டு மூன்று வகைத்து ஆம் - என்று அறுவகைப்படும்.

குறிப்பு:—இவையே நாடகத்திற்குரிய அறுவகை நிலைகளாம்;
"அறுவகை நிலையு மைவகைப் பாதமு
மீரெண் வகைய வங்கக் கிரியையும்

வருத்தனே நான்கு நிருத்தக்கை முப்பது
மத்தகு தொழில வாகு மென்ப''
என்பதனை நிக. வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடமென்று கூறுவாருமுளர். (௩௫)

259. அவற்றுள்,
எல்லா நிலையும் விதூடகற் குரிய
வல்லார்க் கவரவர் பதமம யங்கட்
கேற்பக் கோட லியல்புணர்ந் தோரே.

அவற்றுள் - மேற் சொல்லிய அறுவகை நிலையுள், எல்லாம் நிலையும்--, விதூடகற்கு உரிய - விதூஷகனுக்குரியனவாம்; அல்லார்க்கு - ஏனைய நாடக பாத்திரங்கட்கு, அவர் அவர் பதம் அமயங்கட்கு ஏற்ப கோடல் - அவ்வவர் தம் நிலைமை சமயம் இவைகட்குப் பொருந்தக் கொள்க; இயல்பு உணர்ந் தோர் - நாடக விலக்கணம் உணர்ந்தோர்

குறிப்பு:—விதூடகன் யாவர் நிலையையும் மேற்கொள்ளு மியல்பின னாதலின் அவற்கு அறுவகை நிலையு முண்டென்றனர். பதம் - நிலைமை, பதவி. அமயம் - சமயம், சந்தர்ப்பம். இயல்புணர்ந்தோர் கோடல் என வினைமுடிவு செய்க. (௩௬)

260. ஓதிய நிலையை யோவிய நூலோ
ரொருவகை வகுப்ப வோங்கிய நாடகத்
தாதி நூலோ ரைம்ப தெனமுதல்
விரிவரை யறையான் விளம்பிய பின்னர்த்
தொகைவரை யறையாற் சொல்லுவா ரவற்றை
யொன்பதி னடக்கி யுரைத்தன ரென்ப.

ஓதிய நிலையை - மேற்சொல்லிய நிலையினை, ஓவியம் நூலோர் - ஓவிய நூலுணர்ந்தோர், ஒன்று வகை வகுப்ப - ஒரு வகையான் வகுத்துக் கூறுநிற்ப வும், ஓங்கிய நாடகத்து ஆதி நூலோர் - மிக்கநாடகவிலக்கணங் கூறும் பண் டையாசிரியர் - ஐம்பது என முதல் விரி வரையறையான் விளம்பிய பின்னர், முதற்கண் விரித்துக் கூறும் வகையானே ஐம்பது என்று வரையறை செய்து கூறியபின், தொகை வரையறையால் சொல்லுவார் - தொகுத்துக் கூறும் முறை யானே வரையறை செய்து கூறுவான் புகுந்து, ஒன்பதின் அடக்கி உரைத் தனர் என்ப - அவற்றை ஒன்பதென்னும் எண்ணிக்கைபட அடக்கி உரைத் தனர் என்று பெரியார் கூறுவர்.

குறிப்பு:—சொல்லுவார் - முற்றெச்சம். ஓவிய நூல் - ஓவியம் (சித்தி ரம்) வரைதற்கு இலக்கணங்கூறும் நூல்; இவ்விலக்கணம் கூறும் இப்பெய ரிய பண்டைய நூலொன்று உளதாகவும் பெரியார் கூறுவர். நாடக ஆதி நூலோர்- பண்டைய நாடகவிலக்கணங்கூறிய முதலாசிரியர்கள். ஈண்டுச் சிலப்பதிகார உரை

யாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தமது வேனிற்காதை உரையிற் கூறியுள்ளது ஆராயற்பாலது. "இதனுள் விருத்தியென்பது இருப்பு; ஓவியநூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதலென்னும் இவற்றின் விகற்பங்கள் பல வுள. அவற்றுள் இருத்தல், திரிதரவுடையனவும் திரிதர வில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன: யானை, தேர், புரவி, பூனை முதம் யன: திரிதர வில்லன ஒன்பது வகைப்படும். அவை: பதுமுகம், உற்கட்டி, தம் ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலவி, ஏகபாதம் எனவிவை; என்னை ?

"பதுமுக முற்கட் டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாத
முளப்பட வொன்பது மாகுந்
திரிதர வில்லா விருக்கை யென்ப,"

என்றாராகலானும்,

"பன்னாள் கழிந்த பின்னர் முன்னா
ளெண்மைப் பாட்டினு ளிரக்க மெய்ந்தூடி இறீ
யொண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுட்
டலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட
பாவை நோக்கத் தாரணங் கெய்தி,"

எனப் பெருங்கதையுட் கூறினமையானுங் கொள்க. இனி நாடக நூலார் இவ்விருப்பை ஐம்பதென விரிவரையறையாற் கூறித் தொகை வரையறை கூறுவார், அவற்றை ஒன்பதினடக்கின ரெனவுணர்க; என்னை ?

"ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோ
ரோதிக் கொண்டன ரொன்பான் விருத்தி"

என்றாராகலின். அவற்றுள் தலைக்கண் விருத்தியாவது பதுமாசனம்," என்பது அடியார்க்கு நல்லாருரை. (கஎ)

கோலம்

261. இருந்திசைக் கோல நின்றிசைக் கோலம்
வெறுங்கோ லம்மே யாப்பிசைக் கோலம்
வெறுப்பிசைக் கோலங் கரந்தாடு கோல
மேங்கிசைக் கோல மிரட்டிசைக் கோலஞ்
சிறந்திசைக் கோல மிணங்கிசைக் கோல
மென்னக் கோல மீரைந் தாகும்.

இருந்திசைக் கோலம்—, நின்றிசைக் கோலம்—, வெறுங்கோலம்—, யாப்பிசைக் கோலம் —, வெறுப்பிசைக்கோலம்-, கரந்தாடு கோலம்—, ஏங்கிசைக் கோலம்—, இரட்டிசைக் கோலம்—, சிறந்திசைக் கோலம்—, இணங்கி

சைக் கோலம்–, என்ன கோலம் இரண்டு ஐந்து ஆகும் - என்று கோலம் பத்து வகைப்படும்.

குறிப்பு:—இருந்திசைக்கோலம்: இருக்கையில் வீற்றிருந்தவண்ணம் யாழின் இன்னிசைக் கிணங்கப்பாடுதலாம் நின்றிசைக்கோலம்: நின்றவண்ண மிசைத்தலாம். வெறுங்கோலம்: துக்க மேலீட்டால் அணியாதியவற்றைக் களைந்து இசைக் கருவிகளுமின்றி யோரிடத்திருந்து இரங்கி யிசைத்தலாம். யாப்பிசைக்கோலம்: இசைக்கருவிகளின் ஒலிக்கிணங்க இசைகூட்டிப் பற்பல யாப்பின் விகற்பங்களைத் தெரிப்ப இசைத்து ஆடவரும் பெண்டிருந் தத்தம் இயற்கைக்கு மாறாய் நடத்தலாம். வெறுப்பிசைக்கோலம்: தலைவன் மற்றொருத்திபால் விருப்புற்றன னென்றுணர்ந்த தலைவி தலைவன்பாற் றான் கொண்ட அன்பினை வெறுத்தவளாய் யாழிசைக்கிணங்க இன்குரலெழுப்பி யிரங்கிப் பாடுதலாம். கரந்தாடுகோலம்: ஆடவர் பெண்டிர்தம் உடைபுனைந்து கரந்து நின்றொழுகுதலாம். இக்கோலத்திற்குச் செவ்வியவுதாரணஞ் ஜோதி மாலை யென்னு நாடிகையில் மன்னன் ஜயபாலன் மாறுவேடம் புனைதலாம். ஏங்கிசைக்கோலம்: ஓரிடத்துக் குறித்த நேரத்துத் தலைவன் வாராது காலநீட்டித் தமையின் தலைவியின்னிசைப்பண்ணை யினிதெழுப்பி யிரங்கி யிசைத்தலாம். இரட்டிசைக்கோலம்: வாதஞ் செய்நிலையுடன் மனவெழுச்சியையுங் கவர்ச்சியையுமுடைய இனிய பாடல்களை யிசைத்தலாம். சிறந்திசைக் கோலம்: இன்னிசை பொருந்திய வரிப்பாடல்களை வெகுளிச் சுவையாலாதல் இன்பச் சுவையாலாதல் ஆழ்ந்த கருத்துடனும் பற்பல இசைவேறு பாட்டுடனும் எடுத்தநிலையும் உற்றுணர்நிலையுமாகிய இருநலன் விளங்க இசைத்தலாம். எடுத்தநிலை - ஹாவம்; உற்றுணர்நிலை - ஹேளம்; இவற்றி னிலக்கணங்களைப் பொதுவியல்பு நாலேழ்நலன் கூறும் 92-ஞ் சூத்திர வுரையிற் காண்க. இணங்கிசைக் கோலம்: உல்லாசத்தொடு கூடிப் போலிக் கண்டனங்களும் இயைந்து பாட்டினிசைக்கப்படும் ஸம்பாஷணையாம். இவ்வீரைங் கோலத்தினையும் முறையே கேயபதம், ஸ்திதபாட்யம், ஆஸீநம், புஷ்ப கண்டிகா, ப்ரச்சேதகம், த்ரிகூடம், ஸைந்தவம், த்விகூடம், உத்த மோத்தமகம், உத்தப்ரத்யுக்தம் என்று கூறுப வட நூலார். இச்சூத்திரத் திற்கூறிய கோலங்களின் தமிழ்ப் பெயர்கள் சொல்லின் முடியு மிலக்கணத் தன்வாம் இயல்பினவாதலை யுய்த்துணர்க. (௩அ)

262. இவற்றை யிலாசிய மென்று முரைப்ப.

இவற்றை இலாசியம் என்றும் உரைப்ப - மேற்சூத்திரத்திற் கூறிய கோலங்களை இலாசியம் என்றும் அறிவுடையார் கூறுவார்கள்.

குறிப்பு:—வடநூலார் இக்கோலங்களை இலாசியமென்று கூறுவர். (௩௯)

(ச) நாடகசாலை

263. பருநகர் நாப்பட் பலர்குழூஉ மன்றத்
தெடுத்த நாடக நடித்திடற் கியைந்த

காவ லாளர் மேவிய தானமே
நாடக சாலையா நாடுறு மதுதான்
"தேவர் குழாமுஞ்செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைகூடஞ் சாராது
மாவின் பந்தியொடு மயங்கல்செய் யாது
செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்தி"
நேபத் தியமு மரங்குங் காணுந
ரிருக்கையு மென்ன வியன்மூ வகைய
விடனு முடைய திசைக்குங் காலே.

பருமை நகர் நாப்பண் - பெரிய நகரத்தின் நடுவில், பலர் குழூஉ மன்றத்து - பலர் கூடுஞ் சபையிடத்து, எடுத்த நாடகம் நடித்திடற்கு இயைந்த-ஆடுதற்கு எடுத்துக்கொண்ட நாடகத்தினை நடித்தற்குப் பொருந்திய, காவல் ஆளர் மேவிய தானமே - காவலைப் புரிபவர் கூடிய இடமே, நாடகம் சாலைஆம்—நாடகசாலை யென்னப்படும் நாடு உறும் அதுதான் - ஆராய்தற் குப் பொருந்திய அந்நாடகசாலை, தேவர் குழாமும் - தெய்வங்கள் கூடுமிட மும், செபித்த பள்ளியும் - முனிவர்கள் இருந்து மந்திரஞ் செபிக்கும் பள்ளி களும், புள்ளின் சேக்கை - பறவைகள் தங்கும் கூடுகள் அமைந்த இடங் களும், புற்றும் - பாம்பு முதலியவைகள் தங்கும் புற்றுக்களும், நீங்கி—, போர் களியானை புரை சாராது - போரினைச் செய்யும் மதக்களிப்பினையுடைய யானைகள் கட்டுங் கூடங்கள் சேராமல், மாவின் பந்தியொடு மயங்கல் செய் யாது - குதிரைகள் கட்டுஞ் சாலைகள் கலவாமல், செரு புகும் இடமும் சேரி யும் நீங்கி - போர் புரிவோர் போரினைப்பயிலும் இடங்களும் அன்னோர்தஞ் சேரிகளும் நீங்கியிருப்பதாய், நுண்மை உணர்ந்த திண்மைத்து ஆகி - நுட்ப மான மண் செறிந்த திட்பமான நிலப்பான்மை வாய்ந்ததாகி, மதுரம் சுவை மிகூஉம் மதுரம் நாறி - தித்திப்புச் சுவையும் இனிமை மிக்க நாற்றமும் உடையதுமாகி, தீரா மாட்சி நிலத்தொடு பொருந்தி - நீங்குதலில்லாத பெருமை வாய்ந்த நிலத்தின்கட் பொருந்தி யிருப்பதாய், நேபத்தியமும்—, அரங்கும் - நாடக மேடையும், காணுநர் இருக்கையும் - நாடகம் பார்ப்பவர் வீற்றிருக்கும் இடமும், என்ன இயல் மூன்று வகைய இடனும் உடையது - என்று சொல்லப்பட்ட மூவகை இடங்களையும் உடையதாம், இசைக்குங் கால் - சொல்லுமிடத்து.

குறிப்பு:—அதுதான் இசைக்குங்கால் நீங்கிச் சாராது செய்யாது நீங்கி ஆகி நாறி பொருந்தி உடையது எனக் கூட்டி வினைமுடிவு செய்க. மன்றத்தின்கண் எடுத்த தானம் என இயைத்தலும் அமையும். தேவர் குழாம் - ஈண்டு ஆகுபெயர்; தெய்வத் தானங்களைக் குறித்து நின்றது. காவலாளர் - காவல் புரிவோர். செபித்தபள்ளி - இடத்து நிகழ் பொருளின்றொழில் இடத்தின்மே லேற்றப்பட்டது.

'தேவர்குழாம்' முதலிய நான்கின் அணிமை நாடகசாலைக்கு இடையூறுவதோடு, இதனாலும் அவைகட்கு இடையூறுண்டாவதாற் பாவமுநேரிடுமாதலான் அவற்றின் நீங்குதல் ஒருதலையாய் வேண்டுவதாயிற்று. யானைப்புரை : யானைக்கூடம். மாவின்பந்தி : மந்துரை. சேரி : சேருமிடம்; உறையுள். நுண்மை யுணர்ந்த திண்மைத்தாகி : 'கனந் தோற்றிய திண்மைச் சுவடுடைத்தாய்' என்பதனோடு ஒப்பிடுக. தீராமாட்சி நிலம் - துவர் வரி வளை பொருக்கன் முதலிய குற்றங்கள் நீங்கின நிலம் என்பர் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அரங்கினமைதி கூறும்,

'எண்ணிய நூலோ ரியல்பினின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு,'

என்ற அடிகளுக்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் உரை ஈண்டு இன்றியமையாது நோக்கற்பாலது.

"எண்ணப்பட்ட சிற்ப நூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாத வகை அரங்கு செய்தற்கு நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம்வகுத்துக் கொண்டு'' என்க.

மண்ணகநிலமாவது :—

'தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை
யறனழித் தியற்று வழகுடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமுஞ் சுவையு மதரமு மாய்க்கனந்
தோற்றிய திண்மைச் சுவடுடைத் தா
யென்புமி கூர்ங்கல் களியுவ ரீளை
துன்ப நீறு துகளிவை யின்றி
யூரகத் தாகி யுளோமான் பூண்ட
தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டு மாடரங் கதுவே,'

என்பது. தந்திரவழி அரங்கு இவ்வுலகத்துச் செய்யுமிடத்துத் தெய்வத்தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமும் குளனும் காவு முதலாகவுடையன அழியாத இயல்பினை யுடைத்தாய் நிறைக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண் நாற்றமும் மதுரநாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய், என்பும் உமியும்பரலுஞ் சேர்ந்த நிலம் களித்

தரை உவர்த்தரை ஈளைத்தரை பொல்லாச் சாம்பற்றரை பொடித்தரை என்று சொல்லப்பட்டன ஒழிந்து, ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிக ளெதிர்முகமாக்கிக் கொள்ளல் வேண்டுமென்க. நிலந்தான் வன்பால் மென் பால் இடைப்பாலென்று மூன்று வகைப்படும். அவற்றுள், வன்பாலாவது: குழியின் மண்மிகுவது; மென்பாலாவது குறைவது; இடைப்பாலாவது ஒப்பு. ஈண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும். அதுவே யென்ற இலேசினானே துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்புப் பசி நீடுதலும், கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும் பண்ணுமாதலான் நீக்கப்பட்டன. என்னை ?

'உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின்வருங் கேடு
துவர்ப்பிற் பயமாஞ் சுவைக—ளவற்றிற்
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்
பளிபெருகு மாவ தரங்கு,'

என்றார் பரதசேனாபதியார். இதனுள் நாற்றமென்பன கொள்ளியிலும் செந் நெல்லும் சண்பகமும் சுரபுன்னையு மெனவிவை. ஒழிந்தன தீமைப்பால. இங்ஙனம் ஒரு வகையான் அரங்கிற்கு நிலம் வகுத்துக் கொண்டென்க,'' என்பது அடியார்க்கு நல்லாருரை.

'ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும்
நாடிய அரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைசா ராது
மாவின் பந்தியொடு மயங்கல் செல்லாது
செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்திய
வித்திறத்த தாகு மரங்கினுக் கிடமே,''

என்ற சுத்தானந்தப் பிரகாச சூத்திரத்தினடிகள் ஈண்டு இவ்வாசிரியரான் மேற்கோளாக எடுத்தாளப்பட்டன. நேபத்தியம், அரங்கு, காணுநரிருக்கை யென்பன மூன்றும் நாடகசாலையின் பகுதிகளாம். இவற்றின் இலக்கணங் களைப் பின்னர் வருஞ் சூத்திரங்களா னுணர்க. (௬௦)

நேபத்தியம்

264. நாடக சாலையின் புறனே பத்திய
மின்றி யமையா விசைக்கரு விகளு
மவற்றை யிசைக்கு மரிய பாணருங்
கானஞ் சான்ற காயகர் தாமும்

பாத்திரங் கட்கியை பணிகளு முடைகளும்
பாத்திர மினிதுறை பண்புறு மிடங்களுங்
கரந்துபோக் கிடனுங் கண்ணுளர் குடிஞையுங்
களங்கட் குரிய கவினுறு பொருள்களு
முடைய தாகி நடைபெறு வதுவாம்.

நாடகசாலையின் புறன் நேபத்தியம் - நாடகசாலையி னொருபுறத்துள்ள நேபத்தியம், இன்றி அமையா இசை கருவிகளும் - அவசியம் வேண்டுவன வாகிய வாத்தியங்களும், அவற்றை இசைக்கும் அரிய பாணரும் - அவ்வாத்தியங்களை வாசிக்கும் இசைப்புலமை சிறந்த வித்துவான்களும், கானம் சான்ற காயகர் தாமும் - இசை நன்கமைந்த பாடகர்களும், பாத்திரங்கட்கு இயை பணிகளும் உடைகளும் - நாடக பாத்திரங்கள் புனைதற்கு இயைந்தனவாய அணிகலன்களும் உடுக்கும் உடைகளும், பாத்திரம் இனிது உறை பண்பு உறும் இடங்களும் - நாடக பாத்திரங்களாக வருபவர் தங்குதற்குரிய பண்பு வாய்ந்த இடங்களும், கரந்து போக்கு இடனும் - ஒளிந்து செல்லுதற்குரிய இடங்களும், கண்ணுளர் குடிஞையும் - கூத்தர்கள் தங்கும் அறைகளும், களங்கட்கு உரிய கவின் உறு பொருள்களும் - நாடகக் காட்சிகளை யமைத்தற்கு வேண்டிய அழகு பொருந்திய பொருள்களும், உடையது ஆகி நடை பெறுவது ஆம் - பெற்றிருப்பதாகி அமைந்ததாம்.

குறிப்பு:—நேபத்தியம் நாடக சாலையின் ஓர் புறத்தே அமைக்கப்படும் இயல்பினதாதலின் 'புறனேபத்தியம்' என விசேடித்தனர்; அன்றிப் 'புறன்' ஏழனுருபெனக் கோடலுமாம். இசைக் கருவிகள் - மத்தளம், குழல் முதலிய வாத்தியங்கள். 'அரிய பாணர்':

"குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்"

என்ற சிலப்பதிகார அடிகளையும், "தோலைக்கருவியானும் நரப்புக்கருவியானுங் குரன் முதலாயுள்ள ஏழிசையினையும் சரிகமபதநி என்னும் ஏழெழுத்தினையும் மூவகை வங்கியத்தினும் நால்வகை யாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையுங் குற்றமின்றாக இசைத்துக் காட்டவல்ல பெறுதற்கு அரிய இசை மரபை யறிந்த குழல் பாணர் முதலாய பெரிய இசைக்காரரிருக்கு மிடங்களுமென்க" என்ற அடியார்க்கு நல்லாருரையினையும் ஈண்டு நோக்குக. காயகர் - பாடகர். பாத்திரங்கட்கியை பணிகளும் உடைகளும் - நாடக பாத்திரங்களாக வேடம் புனைதற்கு வேண்டிய அணிகலன்களும் உடைகளும். கண்ணுளர்: சாந்திக் கூத்தரென்பர் அடியார்க்கு நல்லார்; மதங்க ரென்பாரு முளர். சாந்திக் கூத்தாவது:

"வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து
பூசிய சுண்ண முகத்தெழுதித்—தேசுடனே

யேந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக்குஞ்
சாந்திக்கூத் தாடத் தரும்''

என்பதனை நோக்க. களங்கட்குரிய கவினுறு பொருள்கள் - களங்கோடித்தற் குரிய பொருள்கள். குடிஞை: 'குடிகை' என்பதன் சிதைவு போலும். (சுக)

265. இதனைப் பாசறை யென்மரு முளரே.

இதனை பாசறை என்மரும் உளரே - இந்நேபத்தியத் தினைப் 'பாசறை' என்று வழங்குவாரும் உளர்.

குறிப்பு:—இந்நேபத்தியத்தினை யாங்கில நாடக நூற் புலவர் "Green Room" என்று கூறுப. இவ்வாங்கிலப் பெயரின் மொழிபெயர்ப்பாக இதனைப் 'பாசறை' என வழங்கு நரும் உண்டு; பசுமை + அறை, பாசறை என்க. (சுஉ)

அரங்கு

266. நாடக சாலையின் முகனே யரங்கஃ
துயர்ந்த சமதல முடைத்தாய்ப் பல்வகைக்
களங்களுங் காட்டுங் கவினுறு திரைபல
வேண்டிய போது வீழுந் தகைத்தாய்க்
காண்பவர் நெஞ்ச மாண்பொடு கவரு
மோவியத் தொழினல மாவியப் புறுநவும்
தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சியுஞ் சான்றதாய்
பாயிருள் கடிந்து ஞாயி றெழுந்ததோ
வென்ன வொளிதவ மன்னி விளங்குந்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து
நிலவிளக் கேற்றியு நலமுறப் பாத்திர
நடிப்பிட மாகி நனியியல் வதுவே.

நாடகசாலையின் முகனே அரங்கு - நாடகசாலைக்கு முகம்போலமைந் துள்ளது அரங்காகும்; அஃது உயர்ந்த சமம் தலம் உடைத்து ஆய் - அவ் உயர்ந்த மேடையான சமதலத்தை உடையதாய், பலவகை களங்களும் காட்டும் கவின் உறு திரை பல வேண்டியபோது வீழும் தகைத்து ஆய் - பலவகை யான நாடகக் காட்சிகளையும் காட்டும் அழகுவாய்ந்த பலதிரைகளும் வேண்டியபொழுது விழும் தகுதியுடையதாய், காண்பவர் நெஞ்சம் மாண்பொடு கவரும் ஓவியம் தொழில் நலம் மா வியப்பு உறுநவும் - நாடகம் பார்ப்பவர் மனத்தைச் செவ்விதாகக் கவரும் சித்திரத் தொழிலின் பெரிதும் வியக்கத் தக்க அழகுவாய்ந்த உருவங்களும், தாழ்ச்சி இல் எந்திரம் சூழ்ச்சியும் சான்றது ஆய்-குறைவற்ற யந்திரோபாயங்களும் வாய்ந்ததாய், பாய் இருள் கடிந்து ஞாயிறு எழுந்ததோ என்ன - பரவிய இருளைக் கெடுத்துப்பகலவன் உதயமா யினனோ என்று கருதும்படி, ஒளி தவமன்னி விளங்கும் - மிக்க ஒளி அசை

வற நிலைபெற்று விளங்கும், தூண் நிழல் புறம் படா மாண் விளக்கு எடுத்தும்-தூண்களின் நிழல் வெளிப்பட்டு விழாதபடிப் பெருமை வாய்ந்த விளக்குக்கள் தூக்கப்பட்டும், நிலம் விளக்கு ஏற்றியும் - நிலத்தின்பாலமைத்த விளக்குக்கள் ஏற்றப்பட்டும், நலம் உற - அழகுபொருந்த, பாத்திரம் நடிப்பு இடம் ஆகி - நாடகபாத்திரராய்வரும் நடிகர்கள் நடிப்பதற்கு இடமாகி, நனி இயல்வது - நன்கு பொருந்துவதாம்.

குறிப்பு:—இயல்வதுவே: ஏகாரம் ஈற்றசை. முகன் - முன்னிடம். உயர்ந்த சமதலம் எனவே மேடையாயிற்று. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அரங்கமைதி கூறும் அடிகளும் அவற்றின் உரையும் ஈண்டு நோக்கற்பாலன. அவை பின்வருமாறு:—

"புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குங்
கோலள விருபத்து நால்விர லாக
வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றொழுதன ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து,"

என்பது சிலப்பதிகாரம்.

'புண்ணிய.......விரலாக' வென்றது - பொதியின் மலைமுதலாய புண்ணியவரைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணாக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லுகின்ற படியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன்கைப் பெருவிரலில் இருபத்துநாலு கொண்டது ஒரு கோலாக நறுக்கி யென்க. என்னை?

"ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கி
னுத்தமன் பெருவிர லிருபத்து நாலுள
கோலே கோடல் குறியறிந் தோரே."

என்றாராகலின்.

இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்து வருமாறு: அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி;

இம்மி எட்டுக் கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலெனக் கொள்க.

உத்தமராவார்: கழிய நெடுமையும் கழியக் குறுமையு மில்லோர்.

'எழுகோல்.........உறப்பினதாகி' என்றது - இக்கோலால் எழுகோலகலமும் எண்கோ னீளமும் ஒருகோற் குறட்டுயரமு முடையதா யென்க. என்னை ?

'அக்கோ லேழகன் றெட்டு நீண்டு
மொப்பா முயர்வு மொருகோ லாகு
நற்கோல் வேந்த னயக்குறு வாயின்
முக்கோ ருனு முயரவு முரித்தே,'

என்றார் சேயிற்றியனார்.

'அக்கோ லொருகோ லளவுறக் கல்வி
மிக்க கம்மியர் வடகலை விதிமுறைக்
கூறின ரன்றியுங் குறிவகைக் கேற்றன
வேற்கச்செய்க வியல்புணர்ந் தோரே.'

எனக் கூறினரு முளர்.

'உத்தரப் பலகை......அரங்கில்' என்றது - தூணத்துக்கு மீதுவைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத் தூக்கிட்ட பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயில் இரண்டினை யுடைத்தாகச் செய்யப்பட்ட அரங்கினிடத்து என்க.

'வாயிலிரண்டு' என்றது - அரங்கிற்கு உட்புகவும் புறப்படவுஞ் சமைத்த வாயில் எனக் கொள்க. 'ஏற்ற' என்றதனால் கரந்துபோக்கிடனும், கண்ணுளர் குடினைப் பள்ளியும், அரங்கமும், அதனெதிர் மன்னர் மாந்தரோ டிருக்கும் அவையரங்கமும், இவற்றினைச் சூழ்ந்த புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியும் முதலாயின கொள்க.

'தோற்றிய அரங்கு' என்றது - இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல் சொல்லுகின்றபடி யெல்லாந் தோற்றிய வரங்கு என்க.

'தொழுதன ரேத்த......மேனிலை வைத்து' என்றது - அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட நால்வகை வருணப் பூதரையும் எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்கவைத்து என்க.

என்னை? 'கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
காடுநர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை
வழுவில் பூத நான்கு முறைப்பட
வெழுதின ரியற்ற வியல்புணர்ந் தோரே,'

என்றாராகலின்.

இப்பூத நான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயல் முதலிய எல்லாம் அழற்படு காதைக்கண்ணே விரித்துக் கூறுதும்.

தூணிழற்... .....எடுத்து என்றது - தூண்களின் நிழல் நாயகப்பத்தியின் கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப் பட்ட நிலை விளக்கு நிறுத்தி என்க. என்னை? 'விளக்கியல் வனப்பும்' என்றாராகலின்," என்பது அடியார்க்கு நல்லாருரை.

" அரங்கி னுயரமு மகலமு நீளமும்
பொருந்த நாடி யுரைக்குங் காலைப்
பெருந்தண் மால்வரைச் சிறுகழை கண்ணிற்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டே
இருபத்து நால்விரற் கோலள வதனு
லெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாகப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமு மமைத்துத்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து
.. ..
கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும்
பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும்
யாவையு மெழுதி யிந்நிலம் விளங்கப்
பாவையர்க் கியற்றவ தரங்கெனப் படுமே,"

என்ற சுத்தானந்தப்பிரகாச சூத்திரம் ஈண்டு நோக்கற்பாலது. பண்டையாசிரியர் கூறியுள்ள அரங்கினிலக்கணத்தில் இறந்தது விலக்கலென்பதான் விலக்கற்பாலனவற்றை நீக்கி, எதிரது போற்ற லென்பதனுனே கொள்ளற்பாலனவற்றைக்கூட்டி நமது ஆசிரியர் இவ்வரங்கிலக்கணச் சூத்திரம் வகுத்துளார் என்பது இதனை யாராய்குநர்க்குப் புலனும். முற்கால அரங்கத்திற் காணப்பெறாது இக்கால நாடக அரங்கிற் காணக் கிடக்கும் வேறுபாடுகள் பலவற்றையும் இச்சூத்திரத்திலமைத்துக் கோடற் பொருட்டே ஆசிரியர் 'நனி இயல்வதுவே' என்று விசேடித்துக் கூறினர். 'தூணிழற்புறப்பட' என்று பாடங்கொள்பவர், 'புறப்பட' என்பதற்குப் புறம்பே விலக என்று பொருள் கூறுவர். தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சி: என்றது நீருண் மூழ்குதல், நெருப்பிற் பாய்தல், வானின்றிழிதல், ஆகாய கமநஞ் செய்தல் முதலிய பல வாய்விரிந்து கிடக்கும் செயல்கள்பலவற்றையுங் காட்டுதற்குஉபயோகமாகுங் கருவிகளின் அமைப்பினை. அரங்கு-நாடகமேடை. (சங)

எழினி

267. இவ்வயிற் கூறிய செவ்வி யரங்கி
னிடத்தூ ணிலையி னிடத்தி னின்று
முருவு திரையா மொருமுக மெழினியு
மிரண்டு வலத்தூ ணிடத்து மினிதி
னுருவு திரையாம் பொருமுக வெழினியு
மேலசைத் திழிந்து நாலுறுந் திரையாங்
கரந்துவர லெழினியும் பரிந்து வகுப்ப.

இ வயின் கூறிய செவ்வி அரங்கின்-ஈண்டு முற்சூத்திரத்தின்கட்கூறிய அழகிய அரங்கின், இடம் தூண் நிலையின் இடத்தில் நின்றும் - இடது பக்கத்து நிலையாகப் பொருந்திய தூணிடத்திலிருந்தும்,உருவு திரைஆம் ஒன்றுமுக எழினியும் - உருவி வாங்கும் திரையாகிய ஒரு முக வெழினியும்,இரண்டு வலம் தூண் இடத்தும் இனிதின் உருவு திரைஆம்பொருமுக எழினியும் - வலப்பக்கத்திலுள்ள இருதூணிடத்தும் இருந்து உருவி வாங்கும் பொருமுக எழினியும், மேல் அசைத்து இழிந்து நால் உறும் திரை ஆம் கரந்துவரல் எழினியும்-மேலே கட்டப்பெற்றிருந்து வேண்டுங்காற் கீழே இறங்கித் தொங்கற்பால திரையாகிய கரந்துவரலெழினியும், என்று) பரிந்து வகுப்ப -நாடக விலக்கண வறிஞர் விரும்பி வகுத்தமைப்பார்கள்.

குறிப்பு:—எனவே எழினி, ஒருமுகவெழினி பொருமுக வெழினி கரந்துவரலெழினி என மூவகைப்படும் என்பதாயிற்று. எழினி-திரை. அரங்கின் ஒரு புறத்தே நின்று அரங்கின்முன் மற்றோர்புறம் முற்றுஞ் செல்லும் ஒரு முகத்தையுடையதாதலின் ஒரு முக எழினி யென்றும்; இரு புறத்துமுள்ள திரையின் முகங்கள் நெருங்கி வந்து இடையே கூட அமைந்த வற்றைப் பொருமுகவெழினியென்றும், மேலே கரந்து நின்றிருந்து வேண்டும்போழ்து கீழே யிழிந்துவரும் இயல்பினதாகிய திரையினைக் கரந்து வரலெழினி யென்றும் பண்டையாசிரியர் காரணக் குறியான் வழங்குவது இதனானே விளங்கும்.

'ஆங்கு,
ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும்,
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்து,'

என்று சிலப்பதிகார அடிகளும்,

'ஒருமுக வெழினி... .....வகுத்து' என்றது - இடத்தூணிலையிடத்தே உருவு திரையாக ஒருமுக வெழினியும், இரண்டு வலத்தூணிடத்தும் உருவு திரையாகப் பொருமுக வெழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்துவர லெழினியும் செயற்பாட்டுடனே வகுத்து என்க.

மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க் கெனக் கொள்க; என்னை?

'முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்,'

என்றார் மதிவாணனார்,

'அரிதரங்கிற்,
செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையு,
மெய்த வெழுதி யியற்று,'

என்றார் பரதசேனாபதியாரும்,'' என்ற அவ்வடிகளின் அடியார்க்கு நல்லா ருரையும் ஈண்டு நோக்கற்பாலன. (சச)

காணுநரிருக்கை

268. அரங்கினி னிகழு மனைத்தையும் பலரு
மினிதி னிருந்து காண்டற் கேற்ற
வர்தனந் தரந்தர மாக வுடையது
காணுந ரிருக்கையாங் கருதுங் காலே.

அரங்கினில் நிகழும் அனைத்தையும் - நாடக அரங்கின்கண் நிகழ்ச்சி பெறும் செயல்கள் யாவற்றையும், இனிதின் இருந்து காண்டற்கு ஏற்ற ஆதனம் - செவ்வையாக வீற்றிருந்து பார்த்தற்குப் பொருத்தமான இருக் கைகள், தரம் தரம் ஆக உடையது - காண்பவர்தம் தரத்திற்கு ஏற்றவாறு பொருந்தியிருக்குமிடம், காணுநர் இருக்கை ஆம் கருதுங்கால் - ஆராயு மிடத்து நாடகம் பார்ப்போர் இருக்கும் இடமாம்.

குறிப்பு:—தரம் - தகுதி. ஏகாரம்: ஈற்றசை, இனிதின் இருத்தல்: இடர்ப்பாடின்றி வீற்றிருத்தல். (சரு)

269. உரிமையோ டரசருற் றெழூஉ மவையமுந்
தெரிவையர்க் கேற்ற பரிவமை பள்ளியும்
புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியுங்
கவினுற மேவுங் காணுந ரிருக்கை.

உரிமையோடு அரசர் உற்று எழூஉம் அவையமும் - தம் முரிமை மகளிரோடு அரசர்கள் பொருந்தி எழுந்தருளும் சபையையும், தெரிவை யர்க்கு ஏற்ற பரிவு அமை பள்ளியும் - மாதர்கள் இருந்து நாடகங் காண் டற்குப் பொருத்தமான அன்புடன் அமைத்த இடத்தையும், புவி நிறை மாந் தர் பொருந்திய கோட்டியும் - உலகத்துக் கல்வி கேள்விகளா னிறைந்த மக்கள் பொருந்தி வீற்றிருக்கும் இடப்பகுதியையும், கவின் உற மேவும் - அழகு பொருந்த உடையதாகும், காணுநர் இருக்கை—

குறிப்பு:—காணுநரிருக்கை கவினுறமேவும் எனமுடிக்க; அன்றிக் காணுநரிருக்கைக்கண் அவையமும் பள்ளியும் கோட்டியும் மேவும் என

முடித்தலுமாம். உரிமையோடரசர் உற்றெழூஉம் என்ற இடத்து உபலக் கணத்தால் அமைச்சர் சேனாதிபதியர் முதலிய அரசபரிவாரமுமடங்கு மென்க மன்னர் அமைச்சர் முதலியோர் உரிமை மகளிரொடும் இருக்கும் இவ்வவை நாடக வரங்கி னெதிருள்ள இடமாம். இவ்வவைக்கு ஓர்பால் மகளிரிருக்கும் பள்ளியும் மற்றோர்பால் 'புலிநிறைமாந்தர் பொருந்திய கோட்டி'யும் அமைத்தல் மரபாம். மாதர்கட்குத் தனியே இடம் வகுத்தும் அவர்களுக்கு இன்றியமையாத சில சௌகரியங்களும் அமைத்துள பண் பால் 'பரிவு அமை பள்ளி' என ஆசிரியர் விசேடித்தனர். எனவே காணு நரிருக்கை, அரசர் வீற்றிருக்கும் அவை மாதர்பள்ளி மாந்தர்கோட்டி யென் னும் மூன்று பெரும்பகுதியுடையதென்பதும், இப்பகுதி யொவ்வொன் றினும் தரத்திற்கேற்ற உட்பகுதிகளுண்டென்பதும் இதனானே போதரும்.

270. காணுநர் வேட்ட மாணியற் பொருளவண்
விற்றலு மியல்பெனச் சொற்றனர் புலவர்.

காணுநர் - நாடகம் பார்ப்பவர், வேட்ட - விரும்பின, மாண் இயல் பொருள் - பெருமை வாய்ந்த பொருள்களை, அவண் விற்றலும் இயல்பு என சொற்றனர் புலவர் - அங்கு விற்பதும் மரபாம் என நாடக நூற்புலவர் கூறினர்.

குறிப்பு:—மாண் இயற்பொருளாவன : சிற்றுண்டி தின்பண்டம் முத லிய உண்டி வகைகளும், பால் முதலிய பான வகைகளும், பூமாலை அத்தர் பனிநீ ராதிய வாசனைப் பொருள்களும், வெற்றிலை பாக்கு நறுஞ்சுதை முக வாச முதலியனவும், விளையாட்டுக்கருவிகளும் பிறவுமாம். (௬௭)

நடிப்பியல்பு புறனடை

271. "சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற்
புல்லுழிச் சேர்த்துப் பொருந்துழிப் புணர்ப்ப."

சொல்லிய அன்றியும் - இவ்வியல்பிற்கூறிய இலக்கணங்களன்றியும், வருவன உள எனில் - நடிப்பியல்பிற் சாரத்தக்கனவாகும் பிற இலக்கணங் களும் வருபவை யுளவேல் அவற்றினை, புல் உழி சேர்த்து - சேர்க்கத்தக்க இடங்களிற்சேர்த்து, பொருந்து உழி புணர்ப்ப - பொருந்து மாற்றான் உரிய இடங்களிற் புணர்த்துக் கூறுவர்.

குறிப்பு:—அறிவுடையார் புணர்ப்ப எனத்தோன்றா எழுவாய் வரு வித்து முடிக்க. புல்லுழிச்சேர்த்தல்: இவ்விலக்கணம் இப்பகுதியின்பாற்பட்ட தென்று சேர்த்துக்கோடல்; பொருந்துழிப்புணர்த்தல்: கூறுமல் விட்ட இலக் கணங்களை உரியசூத்திரங்களில் உத்தியானும் உபலக்கணத்தானுமமைத்துக் கோடல். 'புல்லுவழிச் சேர்த்துப் பொருந்தவழிப் புணர்ப்ப' என்பதூஉம் பாடம். இச்சூத்திரம் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோள்; சண்

டும் மேற்கோளாக நடிப்பியல்பின் புறனடையாப் பொன்னேபோற் போற்றி யாளப்பட்டது. (சஅ)

(எ) நூற்புறனடை

272. "பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

பழையன கழிதலும் - முற்காலத்து உள்ள இலக்கணங்களுட் சில பிற்காலத்து ஒழிதலும், புதியன புகுதலும் - முற்காலத்து இல்லாத சில பிற் காலத்து இலக்கணமாக வருதலும், வழு அல - குற்றமல்லவாம்; காலம் வகையினான் - அங்ஙனம் ஒழிதலும் வருதலும் கால வேறுபாடு பற்றியன வாதலான்.

குறிப்பு:—இஃது நன்னூற் சூத்திரம். இவையிற்றுக் குதாரணம் முன் வந்தவற்றுட்கண்டு கொள்க. ஏகாரம்: ஈற்றசை. இதனை,

'Old order changeth yielding place to new'

என்று ஆங்கிலக் கவிஞர்பெருமானாகிய Lord Tennyson (தெனிஸன் பிரபு) கூறிய பாவடியோடு ஒப்பிடுக. (சகூ)

நாடகவியல் முற்றிற்று

